நெய்தல்

Neithal

இழைத்தல், இணைத்தல், ஆக்கம் 2025 தொகுதி 16 எண் 02



கலை கலாசார பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

Faculty of Arts and Culture,
Eastern University, Sri Lanka

நெய்தல்

இலைழத்தல், இணைத்தல், ஆக்கம்

தொகுதி:16 எண்:02

வெளியீடு:

கலை கலைசார பீடம்,

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

2025

Neithal

A bi – annual peer reviewed journal of the Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka
Vol:16 No:02

Editorial Board

Chief Editor : Dr. M.B. Fowzul

Administrative Editor : Mr. M.L. Mohamed Helfan

Editorial Board Members : Dr. P. Pathmanandakumar

Mrs. Vithukshana Dilaxshan

Copy Right © : Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka

Publishing Year : July – December 2025

ISSN : 20126513

நெய்தல்

கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தினால் நெய்தல் என்னும் பெயரில் வருடம் இரண்டு தடவைகள் வெளியிடப்படும் ஆய்வுச் சஞ்சிகை - தொகுதி 16, எண் 02

பிரதம ஆசிரியர் : கலாநிதி M.B. பௌசுல்

நிருவாக ஆசிரியர் : திரு. M.L. முஹம்மட் ஹில்பான்

ஆசிரியர் குழு : கலாநிதி P. பத்மாநந்தக்குமார்

திருமதி விதுக்ஷனா டிலக்ஷன்

பதிப்புரிமை : கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

பதிப்பு ஆண்டு : ஜூலை – டிசம்பர் 2025

நெய்தல் தொகுதி 16, எண் 02 இல் வெளிவந்துள்ள ஆராய்ச்சிக் கட்டுரைகளில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் யாவும் ஆசிரியர்களுக்குரியதாகும். இவைகளுக்கு கலை கலாசார பீடமோ, கட்டுரை ஆசிரியர்களின் துறையோ, பதிப்பாசிரியர் குழுவோ எவ்வகையிலும் பொறுப்பல்ல.

பிரதம பதிப்பாசிரியரின் அறிமுக உரை

கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தின் கல்வி, ஆய்வு மற்றும் அறிவுத் தேடல் பணிகளின் ஒரு முக்கியமான அறிவியல் வெளிப்பாடாக நெய்தல் சஞ்சிகையின் இப்புதிய இதழ் வெளிவருவது பெருமகிழ்ச்சிக்குரியதாகும். பல்துறை ஆய்வுச் சிந்தனைகளின் ஆழத்தையும், அறிவியல் ஆய்வுகளின் தரத்தையும் பிரதிபலிக்கும் வகையில் 2025 ஆம் ஆண்டிற்கான நெய்தல் சஞ்சிகையின் பதினாறாம் இதழின் இரண்டாம் தொகுதி திட்டமிட்ட முறையில் தொகுக்கப்பட்டுள்ளது.

இவ்விதழில் தமிழ் கற்கைகள், மொழியியல், இலக்கியம், கலை, கலாசாரம், சமய, சமூக, கல்வியியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த கிழக்குப் பல்கலைக்கழக புலமையாளர்களின் ஆய்வுக் கட்டுரைகளோடு, ஏனைய பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த ஆய்வாளர்களின் அறிவார்ந்த பங்களிப்புகளும் இணைந்து மொத்தமாக பதினான்கு ஆய்வுக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இக்கட்டுரைகள் சமகால சமூகப் பிரச்சினைகளை விமர்சனப் பார்வையுடன் ஆராய்வதோடு, மரபுக்கும் நவீனத்துவத்திற்கும் இடையிலான கருத்தியல் தொடர்புகளை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன.

கல்வித் தரநிலைகள், ஆய்வு முறைமை, கருத்தாழம், தர்க்க ரீதியான அணுகுமுறை மற்றும் அறிவியல் பங்களிப்பு ஆகிய அம்சங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு ஆய்வுக் கட்டுரைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இதனால் மாணவர்கள், ஆய்வாளர்கள் மற்றும் சிந்தனையாளர்கள் உள்ளிட்ட கல்விச் சமூகத்தின் பல்வேறு தரப்பினருக்கும் இவ்விதழ் பயனளிக்கும் என நம்புகின்றோம்.

இச்சஞ்சிகை சிறப்பாக வெளிவருவதற்கு வழிகாட்டலும் நிர்வாக ஆதரவும் வழங்கிய கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்களுக்கும், கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி அவர்களுக்கும், ஆய்வுக் கட்டுரைகளை வழங்கிய ஆய்வாளர்களுக்கும், அவற்றை நுட்பமாக மதிப்பாய்வு செய்த மதிப்பாய்வாளர்களுக்கும், தொகுப்பு மற்றும் திருத்தப் பணிகளில் ஈடுபட்ட ஆசிரியர் குழுவினருக்கும், இதர நிர்வாக ஆதரவை வழங்கிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். நெய்தல் சஞ்சிகை எதிர்காலத்திலும் அறிவு வளர்ச்சிக்கும் ஆய்வு மேம்பாட்டிற்கும் ஒரு முக்கியமான அறிவியல் மேடையாகத் தொடர்ந்து விளங்கும் என்ற நம்பிக்கையுடன், இப்புதிய இதழை கல்விச் சமூகத்தின் முன் பணிவுடன் சமர்ப்பிக்கின்றோம்.

பிரதம பதிப்பாசிரியர்

கலாநிதி M.B. பௌசுல்

நெய்தல் சஞ்சிகை (தொகுதி 16, எண்: 02)

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

பீடாதிபதியின் செய்தி

"நெய்தல்"; சஞ்சிகையின் 2025ஆம் ஆண்டின் புதிய இதழ் வெளியீட்டின் இந்த மகிழ்ச்சியான தருணத்தில், கிழக்குப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் இணைந்து அர்ப்பணிப்புடன் உருவாக்கிய கட்டுரைகள் மற்றும் ஆய்வுப் பங்களிப்புக்களைப் பாராட்டி, எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இந்த இதழ் அறிவியல், கல்வி, கலாசாரம் மற்றும் சமூக நலனை மேம்படுத்தும் முயற்சிகளை வெளிப்படுத்துவதற்கான ஒரு மேடையாகும். கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பல்வேறு துறைகளின் ஆராய்ச்சி சாதனைகள், இதில் உள்ள கட்டுரைகள் மற்றும் ஆய்வுப் பங்களிப்புகள்; சமூகத்திற்கு நேரடியாக பயனளிக்கும் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்.

நெய்தல் இதழ், மாணவர்களுக்கும் ஆராய்ச்சியாளர்களுக்கும் ஊக்குவிப்பை வழங்கும், புதிய சிந்தனைகளைப் பிறக்கச் செய்யும் ஒரு சஞ்சிகையாகும். இதன் மூலம் பல்கலைக்கழக அறிவு சமூக நலனிற்காக வெளிப்படும் ஒரு பாலமாக அமையும். அறிவியல் கண்டுபிடிப்புகள், கல்வி முயற்சிகள் மற்றும் சமூக பங்களிப்புகள் அனைத்தும் இவ்விதழின் ஒவ்வொரு பக்கத்திலும் வெளிப்படும் என்பதால், இது கல்வி மற்றும் சமூக வளர்ச்சிக்கான ஒரு முக்கிய கருவியாகும்.

நெய்தல் இதழ் தொடர்ந்தும் படைப்பாற்றல், அறிவுத்திறன் மற்றும் சமூகச் சிறப்புகளை வெளிப்படுத்தும் வகையில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மற்றும் சமூகத்தின் வளங்களை உயர்த்தும் ஒரு முன்னணி மேடையாக அமைய வாழ்த்துகின்றேன். சிரமம் பாராது கருமமாற்றிய பிரதம பதிப்பாசிரியர் கலாநிதி எம்.பி. பௌசுல் மற்றும் ஏனைய பதிப்பாசிரிய உறுப்பினர்கள், பங்களிப்பாளர்கள், ஆய்வாளர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகள் மற்றும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி

பேராசிரியர் வ. குணபாலசிங்கம்

பீடாதிபதி,

கலை கலாசார பீடம்,

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

பொருளடக்கம்

1. ஈழத்தில் சிறுவர் இலக்கிய ஆய்வுகள் – ஓர் மதிப்பீடு 1

2. உளச் சிகிச்சையாகக் கதைக்கலை (சீர்மியக் கோட்பாட்டு நோக்கில் கோகிலா மகேந்திரனின் 'மனதையே கழுவி') 17

3. சங்க இலக்கியங்களில் விறலியின் சமூகப் பொருளாதார நிலை: கலை வெளிப்பாடுகளுடனான ஒரு பார்வை 36

4. "Embracing Uncertainty: Pyrrhonian Guidance for HumanWellbeing through the Suspension of Judgment" 49

5. சம்பந்தர் பாடல்களில் அறிவின் வாயில்கள் பற்றிய கையாளுகை –ஓர் அறிவாராய்ச்சியியல் ஆய்வு 69

6. வட இலங்கையின் வணிகப் பண்பாட்டு வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தியிருந்த புவியியல் காரணிகள் (கி.பி. 10ஆம் நூற்றாண்டு வரை) ஒரு வரலாற்றுப் பார்வை 83

7. இலங்கை சிகிரியா மற்றும் இந்திய அஜந்தா ஓவியங்களின் கலை நுட்பங்கள்: ஒப்பிட்டு ஆய்வு 102

8. கரையோர மீன்பிடி குடும்பங்களின் வறுமை மற்றும் சமூக – பொருளாதார நிலை: களுவான்கேணி பகுதியை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு 123

9. இஸ்லாத்தில் சர்வதேச உறவுகள்: அப்துல் ஹமீத் அபூ சுலைமானுடைய கட்டமைப்பின் சமகால பொருத்தப்பாடு குறித்த ஒரு மதிப்பீடு 152

10. சுவாமி விபுலாநந்தரின் இரசனைமுறை இலக்கியத் திறனாய்வு 177

11. கரவெட்டிப் பிரதேசத்தில் உள்ள வயற்பிரதேசத்து கிராமியத்தெய்வ வழிபாடு 187

12. ஈழத்துச் சைவசித்தாந்த வளர்ச்சியில் கண்டன மரபு 203

13. சைவசித்தாந்த அறிவாராய்ச்சியியலில் ஆகமப் பிரமாணம் 216

14. பாடசாலைகளில் ஆசிரியர்களின் தொழில்சார் மன அழுத்தத்தை வினைத்திறனாக முகாமை செய்வதில் அதிபர்களின் வகிபங்கு: மட்டக்களப்பு கல்வி வலய மண்முனை வடக்குக் கல்விக் கோட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு 227

ஈழத்தில் சிறுவர் இலக்கிய ஆய்வுகள் - ஓர் மதிப்பீடு

Studies on Children's Literature in Eelam

த.மேகராசா - தமிழ் கற்கைகள் துறை

கலை கலாசார பீடம் – கிழக்குப் பல்கலைக்கழகம்

megarajaht@esn.ac.lk

Abstract

This research, titled “Studies on Children's Literature in Eelam,” evaluates the studies conducted on children's literature in Eelam. A literary genre can experience meaningful development only when it undergoes rigorous critical examination. Children's literature in Eelam remains an underdeveloped field in this regard. Within this context, it is important to examine to what extent the studies conducted on children’s literature in Eelam have contributed to the growth of literary creation in this domain.

Accordingly, this study aims to evaluate the contribution of research on children's literature to the development of Eelam’s children’s literature. This is undertaken through analytical and critical research methodologies. The study finds that most research in this field has been conducted from a general perspective without considering the psychological aspects of children. Only a few studies have taken children’s psychology into account. Even among those studies that were undertaken with a critical perspective, the insights have not been properly understood or absorbed by literary creators. As a result, many works continue to be produced on weak foundational grounds under the label of children's literature. The study emphasizes that in order for Eelam’s children’s literature to advance, research should be conducted from a refined critical perspective that incorporates child psychology. It also stresses that creators of children’s literature should actively engage with critical perspectives on children’s literature and undertake a process of self-evaluation regarding the direction of their creative works.

Keywords: Children’s Literature, Research on Children’s Literature, child Psychology

ஆய்வுச் சுருக்கம்

ஈழத்தில் சிறுவர் இலக்கிய ஆய்வுகள் என்ற இவ்வாய்வானது சிறுவர் இலக்கியம் தொடர்பாக ஈழத்தில் வெளிவந்த ஆய்வுகளை மதிப்பீடுசெய்வதாக அமைகின்றது. இலக்கியப் படைப்புக் குறித்த காத்திரமானதொரு விமர்சன ஆய்வை மேற்கொள்கின்றபோதுதான் குறித்த இலக்கியப் படைப்பாக்கத் துறை சிறப்பாக வளர்ச்சியடையும். ஈழத்தில் வளர்ச்சியடையாத ஒரு துறையாகச் சிறுவர் இலக்கியம் காணப்படுகின்றது. இப்பின்புலத்தில் ஈழத்தில் வெளிவந்துள்ள சிறுவர் இலக்கியம் குறித்த ஆய்வுகள் எந்த அளவிற்கு சிறுவர் இலக்கியப் படைப்பாக்க வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்வனவாக உள்ளனவென்று நோக்குவது அவசியமானதாகும். அதனடிப்படையிலேயே ஈழத்துச் சிறுவர் இலக்கிய வளர்ச்சிக்கு ஈழத்துச் சிறுவர் இலக்கிய ஆய்வுகள் எந்தளவிற்குப் பங்களிப்புச் செய்துள்ளன என்பதை

எடுத்துக்கூறுவதை நோக்காகக்கொண்டு பகுப்பாய்வு மற்றும் விமர்சன ஆய்வு முறையியல்களுக்கு அமைய இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இதனூடாக சிறுவர் இலக்கியம் குறித்த ஆய்வுகளுள் பெரும்பாலானவை சிறுவர் உளவியலைக் கருத்திற்கொள்ளாமல், பொதுவான நோக்கில் மேற்கொள்ளப்பட்டனவாக உள்ளன என்பதும் சில ஆய்வுகளே சிறுவர்களின் உளவியல் நிலையைக் கருத்திற்கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளனவென்பதும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட விமர்சன நோக்கிலான ஆய்வுகள்கூட படைப்பாளர்களால் சரியாகப் புரிந்துகொள்ளப்படவில்லையென்பதும் அதன் காரணமாகவே தொடர்ந்தும் பலவீனமான தளத்தினூடாகச் சிறுவர் இலக்கியம் என்ற அடிப்படையில் பெருமளவிலான ஆக்கங்கள் வெளிவந்துகொண்டிருக்கின்றன என்பதும் இங்கு எடுத்துரைக்கப்படுகின்றது. குறிப்பாக ஈழத்துச் சிறுவர் இலக்கியம் வளர்ச்சிபெறுவதற்கு சிறுவர் உளவியலைக் கருத்திற்கொண்டு நுண்மையான அடிப்படையில் ஆய்வுகள் வெளிவரவேண்டும் என்பதும் சிறுவர் இலக்கியப்படைப்பாளர்கள் சிறுவர் இலக்கியம் குறித்த விமர்சனக் கருத்துக்களை உள்வாங்கிக்கொண்டும் அதேவேளை தமது படைப்பின் போக்குத் தொடர்பானதொரு சுயமதிப்பீட்டினை மேற்கொண்டும் படைப்பாக்க முயற்சிகளில் ஈடுபடவேண்டும் என்பதும் இவ்வாய்வில் பிரதானப்படுத்தப்படுகின்றது.

திறவுச் சொற்கள்*: சிறுவர் இலக்கியம், சிறுவர் இலக்கிய ஆய்வுகள், சிறுவர் உளவியல்*

ஆய்வு அறிமுகம்

இலக்கிய வளர்ச்சிக்கு இலக்கிய ஆய்வுகள் பெரிதும் பங்களிப்புச்செய்கின்றன. இலக்கியப் பிரதிகளை ஆய்வுக்குட்படுத்தி காத்திரமானதொரு விமர்சனத்தை முன்வைப்பது முக்கியமானதாகும். அப்போதுதான் இலக்கியப் படைப்பினை நேர்த்தியான நெல்நெறியை நோக்கி முன்னெடுக்கமுடியும். ஈழத்தில் கவிதை, நாவல், சிறுகதைகள் குறித்த ஆய்வுகள் குறிப்பிடத்தக்க அளவு இடம்பெற்றுள்ளன. அவற்றுடன் ஒப்பிடுகின்றபோது சிறுவர் இலக்கியங்கள் பற்றிய ஆய்வுகள் மிகக்குறைவாகவே நடைபெற்றுள்ளன. அதிலும் சிறுவர் இலக்கியங்களைச் சிறுவர்களின் உளவியலைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மிகக்குறைவே. அதேவேளைஇ அத்தகைய சிறுவர் இலக்கிய ஆய்வுகள் தொடர்பான ஆய்வுகளும் மிகமிகக் குறைவாகவே இடம்பெற்றுள்ளன. இங்கு, சிறுவர் இலக்கியம் குறித்து வெளிவந்த ஆய்வுகள் எந்தளவிற்கு சிறுவர் இலக்கியத்தை வளப்படுத்துவனவாக அமைந்துள்ளனவென்று சிந்திப்பது பயனுடையதாகும்.

ஆய்வுப் பிரச்சினை

ஈழத்துச் சிறுவர் இலக்கிய வளர்ச்சிக்கு சிறுவர் இலக்கியம் குறித்த ஆய்வுகள் எந்தளவிற்கு பங்களிப்புச்செய்துள்ளனவென்பது இவ்வாய்வின் பிரச்சினையாகும். ஈழத்தில் சிறுவர் இலக்கியம் என்பது வளர்த்தெடுக்கப்படவேண்டிய ஒரு பிரிவாகவே தற்போதுவரை காணப்படுகின்றது. இப்பின்புலத்திலேயே இவ்வாய்வுப் பிரச்சினை நோக்கப்படுகின்றது.

ஆய்வு நோக்கமும் முறையியலும்

ஈழத்துச் சிறுவர் இலக்கிய வளர்ச்சிக்கு ஈழத்துச் சிறுவர் இலக்கிய ஆய்வுகள் எந்தளவிற்குப் பங்களிப்புச் செய்துள்ளன என்பதை எடுத்துக்கூறுவதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். பகுப்பாய்வு மற்றும் விமர்சன ஆய்வு முறையியல்களை அடிப்படையாகக்கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

இலக்கிய மீளாய்வு

ஈழத்தில் சிறுவர் இலக்கியங்கள் குறித்து வெளிவந்த ஆய்வுகள் குறித்த ஆய்வுகள் மிகக் குறைவாகவே இடம்பெற்றுள்ளன. அவ்விதத்தில் பாஸ்கரன் சுமனின் 'இலங்கையில் சிறுவர் இலக்கிய ஆய்வுகள் *(பேராசிரியர் செ.யோகராசாவின் பங்களிப்பினை முன்வைத்துச் சில குறிப்புகள்)*' என்ற ஆய்வுக்கட்டுரை குறிப்பிடத்தக்கதாகும். ஈழத்தில் சிறுவர் இலக்கியங்கள் குறித்து வெளிவந்த ஆய்வுகளைக் குறிப்பிட்டு அத்தகைய ஆய்வுகளில் பேராசிரியர் செ.யோகராசாவின் பங்களிப்பினை மதிப்பிடுவதாக இக்கட்டுரை

அமைந்துள்ளது. சிறுவர் இலக்கியக் கருத்தரங்குகள் வழி வெளியான மதிப்பீடுகள், கட்டுரைகள், முன்னுரை, அணிந்துரைக் குறிப்புகள் என்ற அடிப்படையில் பகுத்து சிறுவர் இலக்கிய ஆய்வுகள் மதிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. செ.யோகராசா தொகுத்த 'ஈழத்துச் சிறுவர் இலக்கியக் களஞ்சியம்' என்ற நூலினையும் அவர் எழுதிய சிறுவர் இலக்கியம் குறித்த ஏனைய கட்டுரைகளையும் முன்வைத்து இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. விரிந்த ஆய்வுக்கான ஒரு முன்வரைவாகவே இவ்வாய்வு அமைந்துள்ளது.

சிறுவர் இலக்கியம் குறித்த ஆய்வுகள்

ஈழத்துச் சிறுவர் இலக்கியங்கள் பற்றிய ஆய்வு நூல்களுள் செ.யோகராசா தொகுத்த, ஈழத்துச் சிறுவர் இலக்கியக் களஞ்சியம் (2007) கவனிப்புக்குரியதாகும். இந்நூலில் சிறுவர் இலக்கியம் குறித்த பதினேழு கட்டுரைகளும் பதினொரு முன்னுரைகளும் இடம்பெற்றுள்ளன. ஈழத்துச் சிறுவர் இலக்கிய ஆய்வுகள் குறித்து வெளிவந்த நூல்களுள் இது முக்கியமானதொன்று. எனினும், இந்நூலிலுள்ள கட்டுரைகள் அனைத்தும் காத்திரமானவை என்பது இதன்பொருளன்று. காத்திரமான கட்டுரைகளும் மேலோட்டமான நோக்கில் எழுதப்பட்ட கட்டுரைகளும் இந்நூலில் உள்ளடங்கியுள்ளன. தொகுப்பு நூல்கள் என்ற வகையில் ஆய்வரங்கக் கட்டுரைகளும் நூலாக்கப்பட்டுள்ளன. அவ்வகையில் ஆய்வரங்கக் கட்டுரைகளின் தொகுப்பாக வெளிவந்த 'தமிழில் சிறுவர் இலக்கியம்' (2002) என்ற நூலில் எட்டுக் கட்டுரைகள் காணப்படுகின்றன. இவற்றுள் பல கட்டுரைகள் மேலோட்டமாக, சிறுவர் இலக்கியம் குறித்துப் பேசுகின்றன. சில கட்டுரைகளே ஆய்வுக்கட்டுரைகளுக்குரிய தன்மைகளோடு சிறுவர் இலக்கியம் குறித்து ஆராய்கின்றன. சபா ஜெயராசா, கலாமணி, கனக.செந்திநாதன், வானதி பகீரதன் ஆகியோரும் சிறுவர் இலக்கியம் குறித்து ஆய்வு நூல்களை வெளியிட்டுள்ளனர். இவற்றைத்தவிர ஜீவநதி சிறுவர் இலக்கியச் சிறப்பிதழ் ஒன்றினை வெளியிட்டுள்ளது. ஞானம் உள்ளிட்ட சஞ்சிகைகளிலும் சிறுவர் இலக்கியம் குறித்த கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. ஈழத்துச் சிறுவர் இலக்கியம் குறித்து மேற்கொள்ளப்பட்ட இத்தகைய ஆய்வுகள் சிறுவர் இலக்கியம் என்ற நோக்கில் மேற்கொள்ளப்பட்டவை, சிறுவர் பாடல்கள் என்ற நோக்கில் மேற்கொள்ளப்பட்டவை, சிறுவர் புனைகதைகள் என்ற நோக்கில் மேற்கொள்ளப்பட்டவை, சிறுவர் கதைப்பாடல்கள் என்ற நோக்கில் மேற்கொள்ளப்பட்டவை, சிறுவர் இலக்கிய ஆளுமைகள்ஃ முன்னோடிகள் என்ற நோக்கில் மேற்கொள்ளப்பட்டவை, சிறுவர்களின் கல்விச் சிந்தனை என்ற நோக்கில் மேற்கொள்ளப்பட்டவை, சிறுவர் நாடகங்கள் என்ற நோக்கில் மேற்கொள்ளப்பட்டவை என்ற வகையில் இங்கு நோக்கப்படுகின்றன.

சிறுவர் இலக்கியம் என்ற பொதுமை நோக்கில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்

கா.சிவத்தம்பியின் 'தமிழ்ப் பாரம்பரியத்தில் சிறுவர்களுக்கான இலக்கியம்' என்ற கட்டுரையில் சிறுவர் இலக்கியம் பற்றிய விளக்கம், பாரம்பரிய சிறுவர் கல்வி முறைமை, அதனூடாக, சிறுவர்களுக்கான அறிவூட்டல் எவ்வாறு நடைபெற்றது?, பத்தொன்பதாம் நூற்றாண்டில் கல்வி முறை மாற்றம், அதனடிப்படையில் சிறுவர் இலக்கியம் குறித்த நோக்கு மாற்றமடைதல், தமிழ்ச் சூழலில் சிறுவர் இலக்கியம் எத்தகைய நிலையில் உள்ளது? முதலானவை குறித்து எடுத்துக்கூறப்பட்டுள்ளன. முக்கியமாக, குழந்தைகளை நோக்கி அறிவூட்டுகின்ற வகையிலான இலக்கியப் பாரம்பரியம் தமிழ் மரபிலே நெடுங்காலமாக இருந்துவருகின்றதென்ற கருத்தினை இக்கட்டுரை அழுத்தமாகப் பதிவுசெய்துள்ளது. தமிழ்ப் பாரம்பரியத்தில் வாய்மொழியாக வழங்கி வந்த சிறுவர் பாடல்கள் சரியாக உள்வாங்கப்படவில்லை என்றும் சிறுவர் பாடல்கள் குறித்து ஆய்வு செய்யப்பட்ட அளவுக்கு சிறுவர் சஞ்சிகைகள் குறித்து கவனம்செலுத்தப்படவில்லையென்றும் இக்கட்டுரையாசிரியர் கருத்துரைத்துள்ளார். மேலும,; குழந்தைக் கவிஞர்கள் பற்றிய ஆய்வுகள் தமிழிலே வெளிவந்துள்ளபோதிலும் அவர்களின் கவிதைகள் குழந்தைகளை எவ்விதம் கவருகின்றன என்பது பற்றிய ஆய்வு முன்னெடுக்கப்படவில்லையென்றும் குறிப்பிடுகின்றார்.

குழந்தைக் கவிஞர்கள் பற்றிய ஆய்வுகள் பல உள்ளன. தேசிக விநாயகம்பிள்ளை, அழ.வள்ளியயப்பா, சோமசுந்தரப்புலவர், சத்தியசீலன் என வரும் குழந்தைப் பாடலாசிரியர்கள் பற்றி பல விடயங்கள் எழுதப்பட்டுள்ளனவெனினும் இவர்களுடைய கவிதைகள் சிறார்களின் மனதை எவ்வாறு கவருகின்றன

என்பது பற்றியோ, குறிப்பாக அவர்களது மொழிநடை (மொழித் தேர்வு) பற்றியோ நுண்ணிதான ஆய்வுகள் செய்யப்படவில்லையென்றே கூறல் வேண்டும். பெரும்பாலான குழந்தை இலக்கியம் பற்றிய வரலாறுகள், தரவுகளைத் தருவனவாகவே அமைகின்றன (சிவத்தம்பி,கா., 2007:19).

மேலுள்ள கூற்றில், சிறுவர் பாடல்களை உளவியல் அடிப்படையில் நோக்கி ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை என்ற கருத்து முக்கியத்துவப்படுத்தப்பட்டுள்ளமையைக் காணலாம். குறிப்பாக சிறுவர்களின் உள்ளத்தைக் கவரும் தன்மை, சிறுவர்களுக்கான நடை மொழி முதலானவற்றைக் கவனப்படுத்திய ஆய்வுகள் இடம்பெறவில்லையென்கிறார். சிறுவர் இலக்கியம் குறித்த மேற்படி கருத்து இன்றைய தமிழ்ச்சூழலுக்கும் ஏற்புடையதாகவே அமைகின்றது. சிறுவர் இலக்கியத்தின் போக்குக் குறித்த காத்திரமானதொரு மதிப்பீட்டினை இக்கட்டுரை முன்வைக்கின்றது.

க.நவசோதியின் 'சிறுவர் இலக்கியம்' என்ற கட்டுரை தமிழில் உரைநடைத் துறையில் சிறுவர் கதைகளின் முன்னோடி ஆறுமுகநாவலர் என்பதை வலியுறுத்துகின்றது. அத்தோடு ஈழத்தில் சிறுவர் கதைகள் பெற்றிராத முக்கியத்துவத்தைச் சிறுவர் பாடல்கள் பெற்றிருந்தன என்பதையும் 'பிள்ளைப் பாட்டுத் தொகுதி' முக்கியமானதொன்று என்பதையும் வலியுறுத்துகின்றது. கட்டுரையாசிரியர் சிறுவர் சஞ்சிகை பற்றிய தகவல்களையும் இக்கட்டுரையில் எடுத்துக்கூறியுள்ளார். சிறுவர் இலக்கியம் குறித்து மேலோட்டமாகத் தகவல்களை முன்வைக்கின்ற கட்டுரையாகவே இது அமைந்துள்ளது. ஆகவே, இதனையொரு புலமைத்துவத் தளத்தில் எழுதப்பட்ட ஒரு ஆய்வாகக் கருதமுடியாதுள்ளது. செ.கணேசலிங்கனின் 'சிறுவர் இலக்கியம்: சில சிந்தனைகள்' என்ற கட்டுரை கால மாற்றத்திற்கேற்ப சிறுவர்களின் சிந்தனையும் மாறுவது இயல்பு என்பதையும் அற்கேற்ப புதிய சமூகச் சூழலில் புதிய போக்குகளில் சிறுவர்களுக்கான இலக்கியங்களைப் படைக்கவேண்டியது அவசியம் என்பதையும் எடுத்துக்கூறுகின்றது. மேலும், பல தசாப்தங்களின் முன்னர் சோமசுந்தரப்புலவர் முதலானோரால் எழுதப்பட்ட பாடல்கள் இன்றைய சூழலில் காலவதியாகிவிட்டன என்ற கருத்தினையும் ஆசிரியர் முன்வைத்துள்ளார். ஏன் காலாவதியாகிவிட்டன என்பதற்கான நியாயப்பாடுகளையோ, எத்தகைய போக்குகளில் சிறுவர்களுக்கான இலக்கியம் படைக்கப்படவேண்டும் என்பதையோ கட்டுரையாசிரியர் அழுத்தமாக முன்வைக்கவில்லை. பண்பாட்டு நடைமுறைகள் சார்ந்து இன்று பல மாற்றங்கள் நிகழ்ந்திருப்பினும் சோமசுந்தரப் புலவர் உள்ளிட்டோரின் பாடல்கள் இன்றுவரையும் உணர்வோட்டம் மிக்கனவாகவும் எளிமையும் இனிமையும் மிக்கனவாகவும் சிறுவர் உளவியலுடன் ஏற்புடைமையுடையனவாகவும் காணப்படுகின்றன. ஆதலின் நியாயப்பாடுகளின்றி அன்றைய சிறுவர் பாடல்கள் காலாவதியாகிவிட்டன என்று கூறுவது ஏற்றுக்கொள்ளமுடியாததாகும்.

ஏ.இக்பாலின் 'சிறுவர் உளப்பண்பும் இலங்கையில் தமிழில் சிறுவர் இலக்கியமும்' என்ற கட்டுரை சிறுவர்களின் உளவியலைக் கருத்திற்கொண்டு சிறுவர்களுக்கான இலக்கியம் படைக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது. சிறுவர் என அடையாளப்படுத்தப்படுகின்றவர்களை உளவியலாளர்களின் உள வயது நிலைக்கேற்ப பிரித்து அவர்களின் இயல்புகளையும் ஏற்புடைமைகளையும் எடுத்துக்கூறி ஈழத்தில் எழுந்த சிறுவர் இலக்கியங்களை ஆராய்வதாக இக்கட்டுரை உள்ளது. சிறுவர் இலக்கிய வளர்ச்சிக்கு சஞ்சிகைகள் ஆற்றிய பங்களிப்பு, சிறுவர் இலக்கியத்தின் போதாமைகள் எனப் பல விடயங்களை இக்கட்டுரை முன்நிறுத்துகின்றது. எனினும் பெரும்பாலான இடங்களில் பொதுமையான முன்வைப்பே காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக:

க.வீரகத்தியின் தங்கக்கடையல், அம்பியின் அம்பியின் பாடல்கள், துரைசிங்கத்தின் கதைப்பாடல், ச.அருளானந்தனின் காட்டில் கலவரம், காகமும் தம்பியும், கல்வயல் குமாசுவாமியின் பாப்பாப்பாடல்கள் என்பன குறிப்பிடத்தக்கப் படைப்புக்களாகும் (2007:90).

என்று கூறுகிறார். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சிறுவர் இலக்கியப் படைப்பாளர்களின் படைப்புக்களை நுணுகி ஆராய்ந்து அவ்விலக்கியப் படைப்புக்களில் சிறுவர் உளவியல் கூறுகள் எந்தளவிற்கு உள்வாங்கப்பட்டுள்ளன என்பதை அடிப்படையாகக்கொண்ட மதிப்பீடு இடம்பெறவில்லை. தொகுப்பொன்றிலுள்ள ஆக்கங்களை தனித்தனியாக ஆராயாமல் பொதுவாகக் குறிப்பிடுவதன் மூலம் முழுத்தொகுதியுமே சிறுவர் உளவியலை அடிப்படையாகக்கொண்டே படைக்கப்பெற்றுள்ளதென்ற கருத்து வலுக்கின்றது. ஆனால் மேற்குறித்த தொகுதிகளிலுள்ள ஆக்கங்கள் சில, சிறுவர்களால் விளங்க

முடியாத சொற்கள், சொற்றொர்கள் கையாளப்பட்டும் அறிவூட்டுவதைப் பிரதானப்படுத்தியும் எழுதப்பட்டுள்ளமையைக் காணலாம். எனினும், இத்தகைய பலவீனங்களைக் கட்டுரையாசிரியர் சுட்டிக்காட்டவில்லை.

செ.யோகராசாவின் 'இலங்கையில் சிறுவர் இலக்கிய வளர்ச்சி: ஒரு கண்ணோட்டம்' என்ற கட்டுரை சிறுவர் இலக்கியம் குறித்த அறிமுகத்தை முன்வைக்கிறது. இதன் தொடர்ச்சியாக நோக்கத்தக்க வகையில் அவரது 'ஈழத்தில் சிறுவர் இலக்கியம் வளர்ந்துள்ளதா?' என்ற முக்கியமான கட்டுரை அமைகின்றது. இக்கட்டுரையில் சிறுவர் இலக்கியங்களில் காணப்படுகின்ற குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. குறிப்பாக, சிறுவர் உளவியல் பாதிக்கப்படுதல், இன்னோசை இடம்பெறாமை, நேரடியாக அறப்போதனை செய்தல், குறிப்பிட்ட உள்ளடக்கங்களையே மீண்டும் மீண்டும் பாடுதல், ஒரே பாணியிலான வெளிப்பாட்டு முறையைக் கொண்டிருத்தல், மொழிப் பிரயோகம் பற்றிய தெளிவின்மை முதலானவை சிறுவர் பாடல்களில் காணப்படுகின்றன என்பதை எடுத்துக்காட்டுக்களுடன் முன்வைக்கின்றது. மேலும், சிறுவர் கதைகள் பயமுறுத்தும் பாங்குடையனவாகவும் பழைய கதைகளையே கூறுகின்றனவாகவும் பெரும்பாலானவை தழுவல்களாகவும் மொழிபெயர்ப்புக்களாகவும் வெளிவருகின்றன என்பதையும் எடுத்துக்கூறுகின்றது. அத்தோடு, தமிழ்ச் சமூகத்தின் மனப்பாங்கு, கல்வித்துறைச் செயற்பாடுகளின் பலவீனம், எழுத்தாளர்களிடையே காணப்படும் வாசிப்பறிவற்ற தன்மை, நூல் வெளியீட்டு முயற்சிகள் இலகுவானமை காரணமாக எப்படியும் யாரும் நூல்களை வெளியிடலாம் என்ற மனநிலை உண்டாகியமை முதலானவை சிறுவர் இலக்கியங்கள் இன்னும் வளர்ச்சிபெறாமைக்கான காரணங்கள் என்பதையும் இக்கட்டுரை முன்வைக்கின்றது. அறிவியல் வளர்ச்சி, தொழில்நுட்ப வளர்ச்சி, சுற்றுச் சூழல், பெரியார் வரலாறு, வரலாறு, புவியியல், சமகால வாழ்வியல் முதலானவை சார்ந்து சிறுவர் இலக்கியம் கவனப்படுத்தப்படவேண்டும் என்பதையும் இக்கட்டுரை வலியுறுத்துகின்றது.

செ.யோகராசா எழுதிய 'சிறுவர் விமர்சனம்: அனுபவத்தினூடான மனப்பதிவு' என்ற தலைப்பில் அமைந்த மற்றுமொரு கட்டுரையும் முக்கியமானதாகும். இக்கட்டுரை கள ஆய்வுப் பாங்கில் பரிசோதனை முயற்சியாக எழுதப்பட்டதாகும். குறிப்பாக சிறுவர்களுக்கென எழுதப்படுகின்ற பாடல்கள் உண்மையில் சிறுவர்களுக்கு ஏற்புடையனவாக அமைகின்றனவா என்பதை சிறுவர்களுடைய கருத்துக்களினூடாக முன்வைக்கும் நோக்கில் எழுதப்பட்டதாகும். சிறுவர்களது அறிவு, ஆற்றல், உளவியல் ஏற்புடைமை, விருப்பங்களை உள்வாங்கி ஆக்கப்படுகின்ற பாடல்களையே சிறுவர்கள் விரும்புவார்கள் என்பதையும் இதற்கு முரணாக பெரியவர்களின் மனநிலைக்கேற்பவும் புதுக்கவிதைப் பாங்கில் இன்னோசையின்றி எழுதப்படுகின்ற கவிதைகளையும் அவர்கள் விரும்புவதில்லையென்பதையும் இக்கட்டுரை எடுத்துக்கூறுகின்றது.

ஜீவநதி வெளியிட்ட சிறுவர் சிறப்பிதழில் காணப்படுகின்ற புலவர் இளங்கோவின் 'ஈழத்தில் சிறுவர் இலக்கியம் அன்றும் இன்றும்' என்ற கட்டுரை ஈழத்தில் சிறுவர் இலக்கிய முன்னோடிகள், பிள்ளைப்பாட்டு நூலின் தாக்கம் ஆகியவற்றை விபரிப்பதோடு சிறுவர் கதைகள், கதைப்பாடல்கள், சிறுவர் நாடகங்கள், சிறுவர் கட்டுரைகள், சிறுவர் நாவல்கள், சிறுவர் இதழ்கள், மொழி பெயர்ப்புகள், அறிவியல் சார்ந்த படைப்புகள், முதலானவற்றையும் சுருக்கமாக வரையறை செய்து இன்றைய காலத்திற்கு ஏற்ப எவ்வாறு சிறுவர்களுக்கான இலக்கியங்களைப் படைக்கவேண்டும் எனச் சில பரிந்துரைகளை முன்வைப்பதாகவும் அமைந்துள்ளது. கட்டுரையாசிரியர் சிறுவர் இலக்கியத்தின் அனைத்துப் பிரிவுகளையும் அறிமுகம்செய்யமுற்பட்டுள்ளார். அத்தோடு தகவல்களை முன்வைப்பதில் முறையான ஒழுங்கும் பேணப்படவில்லை. ஆரம்பத்தில் சிறுவர் பாடல்கள் பற்றிக் குறிப்பிட்டு, பின்னர் ஈழத்துச் சிறுவர் இலக்கிய முன்னோடிகள் பற்றி எழுதியுள்ளார். அதற்குள்ளும் சிறுவர் பாடல்களை எடுத்துக்காட்டியுள்ளார். தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் எவ்வாறு சிறுவர் இலக்கியத்திற்குச் சவாலாக உள்ளன என்பதைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு அதன் பின்னர் இன்றைய நிலை பற்றி எழுதுகிறார். இன்றைய நிலை என்பதற்குள்ளேயே தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பற்றியும் குறிப்பிட்டிருக்கமுடியும். இத்தகைய பலவீனங்கள் இக்கட்டுரையில் காணப்படுகின்றன. தரவுகளைப் பகுப்பாய்வுக்குட்படுத்தி அவற்றை ஒழுங்குமுறையாக முன்வைக்க கட்டுரையாசிரியர் தவறியிருக்கிறார்.

அநு.வை.நாகராஜனின் 'தமிழில் சிறுவர் இலக்கியம்' என்னும் கட்டுரை, மேனாடுகளில் சிறப்பாக வளர்ச்சிபெற்றுள்ள சிறுவர் இலக்கியத் துறை தமிழில் வளர்ச்சிபெறாதவொன்றாகக் காணப்படுகின்றதென்ற கருத்தை முன்வைக்கிறது. தொடர்ந்து சிறுவர், சிறுவர் இலக்கியம் முதலான பதங்களை விளக்கி ஈழத்தில் இடம்பெற்ற சிறுவர் இலக்கிய முயற்சிகளை எடுத்துக்கூறுகின்றது. பெ.பேரின்பராசாவின் 'இலங்கையில் சிறுவர் இலக்கியங்கள் - வளர்ச்சியும் மாற்றங்களும்' என்ற கட்டுரை ஈழத்தில் சிறுவர் இலக்கிய முன்னோடி முயற்சிகள் பற்றியும் சிறுவர் இலக்கியம் எத்தகைய வளர்ச்சியடைந்தது என்பது குறித்தும் எடுத்துக்கூறுகின்றது. 1960 களில் சிறுவர் சஞ்சிகைகள் வெளிவந்தமை, அவற்றினூடாகச் சிறுவர் இலக்கியங்கள் பரவலாக்கம்பெற்றமை, 1970, 1980, 1990 களில் சிறுவர் இலக்கிய முயற்சிகள் படிப்படியாகப் பரவலாக்கம்பெற்றமை குறித்தும் இக்கட்டுரையில் எடுத்துக்கூறப்பட்டுள்ளது. இக்கட்டுரையும் தகவல்களை முன்வைக்கின்ற பாங்கிலேயே எழுதப்பட்டுள்ளது. பத்மா சோமகாந்தனின் 'தமிழில் சிறுவர் இலக்கியம்' என்ற கட்டுரையிலும் சிறுவர் உளவியலுக்கேற்ப சிறுவர் இலக்கியம் படைக்கப்படவேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டாலும் படைப்பினூடாக பகுப்பாய்ந்து முன்வைக்கப்படவில்லை. தகவல் திரட்சியாகவே இக்கட்டுரையும் அமைந்துள்ளது. குறிப்பாக, சிறுவர் இலக்கியம் குறித்த விமர்சன நோக்கிலான, உளவியல் கருத்துநிலை சார்ந்த ஆய்வாக இது அமையவில்லை.

கேணிப்பித்தன் ச.அருளானந்தம் எழுதிய 'ஈழத்தில் சிறுவர் இலக்கியம்' (2019) என்ற நூலில் சிறுவர், சிறுவர் இலக்கியம் பற்றிய விளக்கங்கள், சிறுவர் இலக்கியத்தின் தோற்றம், சிறுவர் இலக்கிய முன்னோடிகள், சிறுவர் இலக்கியம் எவ்வயதுப் பிரிவினருக்குரியது, பாடத்திட்டமும் பாடநூல்களும், ஈழத்தில் சிறுவர் கதைகள், ஈழத்தில் சிறுவர் பாடல்கள் முதலானவை குறித்து எழுதப்பட்டுள்ளது. நூலில் சிறுவர் பாடல்கள் பல எடுத்துக்காட்டப்பட்டள்ளன. எனினும,; அப்பாடல்கள் உளவியல் கூறுகளுக்கு அமைய ஆராயப்படவில்லை. எடுத்துக்காட்டுக்களையும் ஈழத்தில் வெளிவந்த சிறுவர் இலக்கியப் படைப்புகள் குறித்த தகவல்களையும் விரிவாக முன்வைக்கின்ற வகையில் இந்நூல் அமைந்துள்ளது.

சிறுவர் பாடல்கள் என்ற நோக்கில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்

சிறுவர் பாடல்கள்/கவிதைகள் குறித்தே கூடுதலான ஆய்வுகள் வெளிவந்துள்ளன. க.கைலாசபதியின் 'தமிழில் குழந்தைக் கவிதைகள்' என்ற கட்டுரை, ஈழத்தில் சிறுவர் பாடல்களின் தோற்றம், தமிழில் கவனிப்புப் பெறத்தக்க சிறுவர் பாடலாசிரியர்கள், அத்தகையோரின் தனித்துவங்கள், சிறுவர் பாடல்களின் பலவீனங்கள் உள்ளிட்ட கருத்துக்களை முன்வைக்கின்றது. திருத்தமான முறையில் ஈழத்தில் சிறுவர் பாடல்கள் 1935 ஆம் ஆண்டில் வெளிவந்த பிள்ளைப்பாட்டுத் தொகுதியினூடாகவே வெளிவரத்தொடங்கியது என்பதை இக்கட்டுரை முக்கியத்துவப்படுத்துகின்றது. மேலும், இக்கட்டுரையில் க.கைலாசபதி, சிறுவர் பாடல் என்ற அடிப்படையில் ஏராளமானோர் எழுதியிருப்பினும் குழந்தைகளின் வயது, மூளை வளர்ச்சி, மொழித்திறன், ஆற்றல், ஏற்புடைமை முதலானவற்றைக் கருத்திற்கொண்டு பாடல் இயற்றியோர் குறைவாகவே உள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழில் உள்ள குழந்தைப் பாடல்களிற் பெரும்பாலானவை எளிமைப்படுத்தப்பட்ட முதியோர் பாடல்கள்தாம். அறிவியல் நோக்கு, அதீத போதனைப் பண்பு இவையே சிறுவர் இலக்கியத்தின் பிரதான இயல்புகளாகக் காணப்படுகின்றன. அதாவது, முதியோர் இலக்கியத்திற் காணப்படும் பண்புகள் பல இங்கும் பிரதிபலிக்கின்றன எனலாம். ஆங்காங்கே குதூகலம் நிரம்பிய, வியப்புணர்ச்சியும் ஆர்வமும் நிறைந்த, மகிழ்ச்சியூட்டும் பாடல்கள் இயற்றப்பட்டுள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. எனினும் குழந்தை உள்ளத்திற்குத் திருப்தியளிக்கும் பாடல்கள் குறைந்த வீதத்தினவே (2007:27).

இதன்படி, வெளிவருகின்ற சிறுவர் இலக்கியப் படைப்புகள் எவ்விதம் சிறுவர் உள்ளத்திற்கு ஏற்புடைமையுடையன என்ற நோக்கிலான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லையென்ற குறைப்பாட்டைக் கட்டுரையாசிரியர் சுட்டிக்காட்டியுள்ளமை தெரிகின்றது. சிறுவர் பாடல்கள் குறித்த ஆரம்ப கால, அடிப்படையான விடயங்களை முன்வைக்கின்ற ஆய்வாக இது அமைந்துள்ளது.

கனக செந்திநாதனின் 'ஈழத்துக் குழந்தைப் பாடல்கள்' என்ற கட்டுரையில் குழந்தைகளைக் கட்டாயப்படுத்தும் தன்மையிலான இலக்கியங்களை எழுதுவதை விடுத்து குழந்தைகள் விரும்பத்தக்க

இலக்கியங்களைப் படைக்கவேண்டும் என்பதையும் குழந்தைகளின் பருவ வயது நிலையைக் கருத்திற்கொண்டு, இலகுவான சொற்கள், எளிமையான மெட்டு, தாளம்போட்டுப் பாடக்கூடிய பாடல்கள், சூழலிற் கண்டும் கேட்டும் அநுபவிக்கும் பொருள், நல்ல கதைகள் என்பவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து சிறுவர்களுக்கான இலக்கியத்தைப் படைக்கவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. எஸ்.சிவலிங்கராசாவின் 'தமிழ் இலக்கியப் பரப்பில் ஈழத்துக் கவிஞர்களின் குழந்தைப் பாடல்கள்' என்ற கட்டுரை, தமிழில் தோன்றிய குழந்தைப்பாடல்கள் ஓரளவுக்கு அறிதல் முறையையும் பெரும்பாலும் புத்திபுகட்டுவதனையுமே முக்கிய நோக்கமாகக்கொண்டிருந்தன என்பதையும் அதற்கான எடுத்துக்காட்டுக்களையும் குறிப்பிட்டு ஈழத்தில் சிறுவர் இலக்கியம் வளர்ச்சிபெற்றமை பற்றியும் சிறுவர் இலக்கிய முன்னோடிகள் பற்றியும் எடுத்துக்கூறுகின்றது. யாழ்ப்பாணன், வேந்தனார், செல்லையா முதலானோரின் பாடல்களும் கட்டுரையில் எடுத்துக்காட்டப்பட்டு பொதுமை நிலையில் எழுதப்பட்டுள்ளது.

த.துரைசிங்கத்தின் 'ஈழத்துக் குழந்தைப் பாடல்கள்: ஒரு பார்வை' என்ற கட்டுரை வித்துவான் க.வேந்தனார், முதுதமிழ்ப் புலவர் மு.நல்லதம்பி, அல்வாயூர் மு.செல்லையா, க.வீரகத்தி, சௌந்தரம் சந்தன நங்கை கந்தப்பு ஆகியோரின் சிறுவர் பாடல்களை எடுத்துக்காட்டும் மேலோட்டமான ஆய்வாக அமைந்துள்ளது. செ.யோகராசா 'ஈழத்துச் சிறுவர் அறிவியல் பாடல்கள்' என்ற கட்டுரையில் ஈழத்தில் அறிவியல் பாடல்கள் குறைவாகவே எழுந்துள்ளன என்பதையும் சி.அகிலேஸ்வரசர்மா, மு.நல்லதம்பி, மஹாகவி, கவீ, கண்டி மு.இராமச்சந்திரன், ச.அருளானந்தம், வ.இராசையா, மாவை.வரோதயன், த.துரைசிங்கம், ஆடலிறை, மு.பொன்னம்பலம், சிதம்பரபத்தினி, வளவைவளவன் மனோ, பற்குணம், ராணி ஸ்ரீதரன், வாகரைவாணன், இக்பால் அலி முதலான குறிப்பிட்ட சிலரே பெரும்பாலும் மின்சாரம், தொலைபேசி, வானொலி, கணினி, மின்னஞ்சல் முதலானவற்றை அடிப்படையாக வைத்து அறிவியல் பாடல்களை ஆக்கியுள்ளனர் என்பதையும் கட்டுரையாசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார்.

கல்வயல் வே.குமாரசாமியின் 'குருவியின் தலைமீது பனங்காயைச் சுமத்தலாமா?: குழந்தைக் கவிதைகள் பற்றிய சில சிந்தனைகள்' என்ற கட்டுரையில் குழந்தைக் கவிதைகளில் காணப்படும் முக்கிய குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதோடு குழந்தை இலக்கியம் எத்தகையதாக இருக்கவேண்டும் என்பதுவும் எடுத்துக்கூறப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கான இலக்கியம் என்ற போர்வையில் குழந்தைகளுக்குச் சுமையாக அமைகின்ற பொருத்தமற்றவற்றை எழுதுகின்ற போக்கு ஒரு குறைபாடாக உள்ளதென்பதை இக்கட்டுரையில் ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார். வே.செவ்வேட்குமரனின் 'யாழ்ப்பாணப் பிரதேசச் சிறுவர் பாடல் வளர்ச்சி ஒரு நோக்கு' என்ற கட்டுரை சிறுவர் பாடல் வளர்ச்சிக்கு தமிழகத்தைவிட ஈழமே கூடுதலான பங்களிப்பினைச் செய்துள்ளது என்பதனையும் தமிழில் வெளிவந்த முதலாவது சிறுவர் பாடல் நூலாக இருப்பது யாழ்ப்பாணம் தம்பிமுத்துப்பிள்ளை என்பவர் 1886 இல் எழுதி வெளியிட்ட 'பாலியக்கும்மி' எனவும் அதனைத் தொடர்ந்து 1918 இல் ச.சத்தியநாதரால் 'தமிழ்ப்பாலபோதினி' என்ற குழந்தைக்கவிதை நூலும் அதனைத் தொடர்ந்து குழந்தைப்பாட்டுக்குரிய உளவியல் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு 1935 இல் 'பிள்ளைப்பாட்டு' என்ற தொகுதியும் ஈழத்திலே வெளிவந்தன என்பதையும் இக்கட்டுரையின் ஆரம்பத்திலே கட்டுரையாசிரியர் எடுத்துக்கூறியுள்ளார். மேலும் குழந்தைகளுக்கான சிறுவர் பாடல் போட்டி முதன்முதலில் யாழ்ப்பாணப் பிரதேசத்திலேயே நடைபெற்றது என்பதைச் சுட்டிக்காட்டி, 1950களுக்கு முன்னரும் பின்னரும் சிறுவர் பாடல் துறையில் ஈடுபட்ட ஆளுமைகள் யாவர்?, அவர்களின் பாடல்கள் எவை? என்ற ஒழுங்கில் இக்கட்டுரை அமையப்பெற்றுள்ளது. குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேச சிறுவர் பாடல் மரபின் வளர்ச்சியின் அடிப்படை அம்சங்களைத் தெரிந்துகொள்ள விரும்புகின்ற ஒருவருக்கு இக்கட்டுரை ஒரு வழிகாட்டியாகவுள்ளதே தவிர, சிறுவர் இலக்கியப் படைப்புகளை விமர்சன நோக்கில் அணுகவில்லை.

செ.யோகராசாவின் 'மட்டக்களப்புப் பிரதேசத்தில் குழந்தைக் கவிதை வளர்ச்சி' என்ற கட்டுரை மட்டக்களப்புப் பிரதேசத்தில் ஐம்பதுகளிலிருந்து குழந்தைக் கவிதைகள் வெளிவந்துள்ளன என்பதை எடுத்துரைக்கின்றது. மேலும், ஆரையூர் அமரன், திமிலைத்துமிலன், வெற்றிவேல் வினாயகமூர்த்தி, திமிலை மகாலிங்கம், நாகூர் பாவா, செ.குணரத்தினம் முதலானோர் மட்டக்களப்பின் சிறுவர் இலக்கியத்துறை சார்ந்த ஆரம்ப காலக் கவிஞர்கள் என்பதையும் இக்கட்டுரையினூடாக எடுத்துக்காட்டுக்களுடன் ஆசிரியர் முன்வைத்துள்ளார். கனக செந்திநாதனின் 'ஈழத்துக் குழந்தைப் பாடல்கள்' (1988) என்ற சிறு நூலும் இங்கு குறிப்பிடத்தக்கது. இந்நூலிலுள்ள மூன்று பகுதிகளுள் ஒன்றே

ஈழத்துக் குழந்தைப் பாடல்கள் என்பதாகும். சொற்பொழிவாக நிகழ்த்தப்பட்ட ஒரு உரைப்பகுதியே இதுவாகும். இதில் சிறுவர்களுக்கான இலக்கியத்தை ஆக்கும்போது இலகுவான சொற்கள், எளிமையான மெட்டு, தாளம்போட்டுப் பாடக்கூடிய பாடல்கள், சூழலிற் கண்டும் கேட்டும் அநுபவிக்கும் பொருள், நல்ல கதைகள், வந்த சொற்களே மீண்டும் மீண்டும் வருதல், அபிநயம் செய்யக்கூடிய பதங்கள் என்பவற்றைக் கருத்திற்கொள்ளவேண்டும் எனக் கூறியுள்ளார். அத்தோடு ஈழத்தில் சிறுவர் பாடல்களின் முன்னோடி முயற்சிகள் பற்றியும் சுருக்கமாக எடுத்துக்கூறியுள்ளார். மேலும் கனக.செந்திநாதனின் 'அருமைக் குழந்தைகளுக்கு ஓர்; அம்பிப் பாடல்' என்ற மற்றுமொரு சிறு நூலும் இங்கு குறிப்பிடத்தக்கது. கட்டுரையாக எழுதப்பட்டு அதன் அவசியம் கருதி சிறு நூலாக வெளியிடப்பட்டுள்ளது. அம்பியின் சிறுவர் பாடல்கள் குறித்ததாக இதுவுள்ளது. ஈழத்துச் சிறுவர் இலக்கியத்தின் தனித்துவம், ஆளுமைகள் குறித்து ஆரம்பத்தில் எழுதி பின்னர் அம்பியின் பாடல்களின் சிறப்புக்களைத் தொட்டுக்காட்டியுள்ளார்.

பௌநந்தி, இராசநாயகம் ஆகிய இருவரும் இணைந்து எழுதிய 'இலங்கைத் தமிழ்ச் சிறுவர் பாடல்களில் விழுமியப்போதனை (2015) என்ற கட்டுரை சிறுவர் பாடல்கள் எவ்விதம் விழுமியக் கருத்துக்களைக் கூறுகின்றன என்பதை ஆடலிறை, பண்டிதர் க.வீரகத்தி, சாரணா கையூம், கல்வியல் வே.குமாரசாமி, கவிஞர் த.துரைசிங்கம் முதலானோரின் பாடல்களை எடுத்துக்காட்டி எழுதப்பட்டுள்ளது. எனினும் அத்தகைய பாடல்களில் விழுமியக் கருத்துக்கள் எவ்விதம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்றோ, அவற்றின் சொற்பயன்பாடு, சிறுவர் ஏற்புடைமை என்பவற்றுக்கு இயைய படைக்கப்பட்டுள்ளன என்றோ ஆராயவில்லை. த.மேகராசாவின் 'உளவியல் நோக்கில் ஈழத்துச் சிறுவர் பாடல்கள்' என்ற ஆய்வுக்கட்டுரை ஈழத்தில் எழுந்த சிறுவர் பாடல்களைக் குறிப்பிட்ட சில, சிறுவர் உளவியல் கூறுகளை அடிப்படையாகக்கொண்டு எடுத்துக்கூறுகின்றது.

சிறுவர் புனைகதைகள் என்ற நோக்கில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்

சஞ்சீவி சிவகுமாரின் 'சிறுவர் இலக்கியத்தில் அறிவியல் புனைகதைகள்' என்ற கட்டுரை அறிவுத் தேவை, பொழுதுபோக்குத் தேவை, கலை ஆர்வம், ஈடுபாடு, இரசனை என்பவற்றை நோக்காகக்கொண்டு சிறுவர் இலக்கியங்கள் ஆக்கப்படவேண்டும் என்பதை எடுத்துக்கூறி, சிறுவர் உளவியலுக்கு ஏற்றபடி கதைகூறும் மரபு பலவீனமாகவே உள்ளது என்பதையும் முன்வைக்கின்றது. தொடர்ந்து அறிவியல் புனைகதைகளின் அவசியத்தை எடுத்துக்கூறி, மூடக்கொள்கைகள் சிறுவர் மனதில் படிமமாகப் படிவதை நீக்கும் வகையிலும் புதிய விஞ்ஞான ரீதியான தகவல்களையும் சிந்தனைகளையும் சிறுவர் மனதில் பதிக்கின்ற வகையிலும் அறிவு பூர்வமான பழக்கவழக்கங்களுக்குச் சிறுவர்களைப் பழக்குகின்ற வகையிலும் ஆராய்ச்சி மனப்பாங்கையும் முனைப்பூக்கத்தையும் ஏற்படுத்துகின்ற வகையிலும் சிறுவர்களுக்கான அறிவியல் புனைகதைகள் அமையவேண்டும் என்பதையும் எடுத்துக்கூறுகின்றது.

சிறுவர் கதைப்பாடல்கள் என்ற நோக்கில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்

ஈழத்தில் கதைப்பாடல்கள் மிகக் குறைந்தளவிலேயே வெளிவந்துள்ளன. அதைவிடவும் மிகமிக அரிதாகவே கதைப்பாடல்கள் குறித்த ஆய்வும் ஈழத்தில் இடம்பெற்றிருப்பதைக் காணலாம். அவ்விதத்தில் விதந்துரைக்கத்தக்க முக்கியமானதொரு ஆய்வாக வானதி பகீரதனின் 'ஈழத்துச் சிறுவர் கதைப்பாடல்களின் வளர்ச்சி' (2022) என்ற நூல் அமைகின்றது. சிறுவர் இலக்கியமும் பண்புகளும், ஈழத்தில் சிறுவர் இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும், ஈழத்துச் சிறுவர் கதைப்பாடல்களின் பாடுபொருள்கள், ஈழத்துச் சிறுவர் கதைப்பாடல்களின் வெளிப்பாட்டு முறை, ஈழத்துச் சிறுவர் பாடல்கள், கதைப்பாடல்கள் - மதிப்பீடு ஆகிய தலைப்புகளில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஈழத்தில் வெளிவந்த கதைப்பாடல்கள், அவற்றின் ஆசிரியர்கள், அத்தகைய கதைப்பாடல்களின் பாடுபொருள்கள் பற்றிய பல தகவல்களைத் திரட்டித் தருகின்ற ஒரு ஆய்வாக இது அமைந்துள்ளது. அத்தோடு சிறுவர் கதைப்பாடல்களின் வெளிப்பாட்டு முறை தொடர்பாகவும் விரிவாக நோக்கப்பட்டுள்ளது. நூலின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிறுவர் இலக்கியத்திற்கான பண்புகள் சிறுவர் கதைப்பாடல்களில் எவ்விதம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்று பகுப்பாய்வு செய்து விமர்சன நோக்கில் எழுதியிருப்பின் இந்நூல் மேலும் கனதிபெற்றிருக்கும். ஆயினும், சிறுவர் கதைப்பாடல் சார்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நூல் என்ற வகையில் இதுவே அமைகின்றது.

சிறுவர் இலக்கிய ஆளுமைகள்/முன்னோடிகள் என்ற நோக்கில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்

ஜீவநதி வெளியிட்ட சிறுவர் சிறப்பிதழில் ஈழத்துச் சிறுவர் இலக்கிய ஆளுமைகளான நவாலியூர் சோமசுந்தரப்புலவர், வித்துவான் வேந்தனார், கவிஞர் மு.செல்லையா, யாழ்ப்பாணன், நாகூர் ஏ.பாவா, மு.பொன்னம்பலம், கல்வயல் வே.குமாரசாமி, சபா ஜெயராசா, அரியாலையூர் கவிஞர் வே.ஐயாத்துரை ஆகியோர் குறித்த கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் பல கட்டுரைகள் அறிமுகக் கட்டுரைகளாகவே உள்ளன. தருமராசா அஜந்தகுமாரின் 'சோமசுந்தரப் புலவரின் சிறுவர் செந்தமிழ்' என்ற கட்டுரை ஈழத்துச் சிறுவர் இலக்கிய வளர்ச்சியில் சோமசுந்தரப் புலவரின் பங்களிப்பினையும் தனித்துவத்தினையும் எடுத்துக்கூறுகின்றது. சோமசுந்தரப் புலவர் எழுதிய 'தாடி அறுந்த வேடன்', 'ஏறாத மேட்டுக் கிரண்டு துலை என்னும் நீலன் கதை', 'பவளக்கொடி' ஆகிய கதைப்பாடல்களையும் ஆடிப்பிறப்பு, நூற்றாண்டு வாழ்தல், ஆடு கதறியது, கத்தரி வெருளி முதலான சிறுவர் பாடல்களையும் எடுத்துக்காட்டி இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. எனினும், இவரது ஆக்கங்கள் சிறுவர்களுக்கு எவ்விதத்தில் ஏற்புடையன என்ற நோக்கு ஆழுத்தம்பெறவில்லை.

லெ.முருகபூபதியின் 'எளிமையும் ஓசை நயமும் மிக்க பாடல்களுடன் வித்துவான் வேந்தனாரின் குழந்தை மொழி' என்ற கட்டுரை உணர்வு மையநோக்கில் எழுதப்பட்டுள்ளது. ஆய்வுக்குரிய நடுநிலைப் போக்கில் வேந்தனாரின் பாடல்களை ஆய்வுசெய்வதாக இக்கட்டுரை அமையவில்லை. வேந்தனாரின் கவிதைப் பூம்பொழில் நூலிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 35 பாடல்களைக்கொண்ட 'குழந்தை மொழி' என்ற நூலுக்கான நயவுரைப் பாங்கில் இக்கட்டுரை அமைந்துள்ளது. த.கலாமணியின் 'கவிஞர் மு.செல்லையாவும் வளர்பிறையும்' என்ற கட்டுரை மு.செல்லையா 'வளர் பிறை' என்ற தலைப்பில் எழுதிய 'அம்மா வெளியே வா அம்மா' எனத் தொடங்கும் பாடலை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டுள்ளது. சிறுவர் உளவியலைக் கருத்திற்கொண்டு சிறுவர் இலக்கியம் எழுதப்படவேண்டும் என்பதை கட்டுரையாசிரியர் வலியுறுத்தியுள்ளார். மேற்குறித்த பாடல் முக்கியமானதொன்றாகக் காணப்படுகின்றபோதிலும் அப்பாடலிலும் சிறுவர் உளவியலைப் பொருட்படுத்தாமல் எழுதப்பட்ட 'துட்டச் சிறுவன்' போன்ற சொற்கள் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும,; ஜீவநதி சிறப்பிதழில் இடம்பெற்றுள்ள புலோலியூர் வே.நந்தகுமாரின் 'குழந்தைக் கவிஞர் யாழ்ப்பாணன் எனும் வே.சிவக்கொழுந்து' என்ற கட்டுரை கவிஞர் யாழ்ப்பாணன் பற்றிய மேலோட்டமான அறிமுகமாகவுள்ளது. இதில் யாழ்ப்பாணன் எழுதிய ஆட்டுக்குட்டி, அம்புலி வா, எனது பட்டம், ஜீவ இரக்கம் ஆகிய நான்கு பாடல்களும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளனவே தவிர அப்பாடல்கள் குறித்த கருத்துகள் எவையும் முன்வைக்கப்படவில்லை. செ.யோகராசாவின் 'நாகூர் ஏ.பாவா(1938-1997): முஸ்லீம் சிறுவர் பாடல் முன்னோடி', ந.சத்தியபாலனின் 'செழுமையான பங்களிப்புகளை இன்னமும் கோரிநிற்கும் சிறுவர் இலக்கியத் துறையில் முற்றத்துப் பூக்களின் பங்களிப்பு', மு.பொன்னம்பலத்தின் 'சிறுவர் பாடல்கள் பற்றிய ஒரு பார்வை', கு.றஜீபனின் 'கல்வயல் வே.குமாரசாமியின் குழந்தைப் பாடல்கள் ஒரு அவதானிப்பு பாலர் பாவை முன்வைத்து' ஆகிய கட்டுரைகள் மிகவும் சுருக்கமாக எழுதப்பட்ட அறிமுகக் குறிப்புகளாகவுள்ளனவே தவிர ஆய்வுக்கட்டுரைகள் என்ற நிலையில் அமையவில்லை.

செ.யோகராசா எழுதிய 'பேராசிரியர் சபா ஜெயராசாவும் ஈழத்தில் சிறுவர் இலக்கியமும்' என்ற கட்டுரை முக்கியமானதாகும். சபா ஜெயராசாவின் பாலர் பள்ளிப்பாடல்(1979), பாலர் கல்விப்பாடல் (1998), பாலர் கதைகள் (1999) ஆகிய தொகுப்புக்களை முன்வைத்து சிறுவர் உளவியலைக் கருத்திற்கொண்டு இலக்கியம் படைத்த முக்கியமான ஆளுமை சபா ஜெயராசா என்பதை நிறுவுகின்ற வகையில் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. மு.அநாதரட்சகனின் 'அரியாலையூர் கவிஞர் வே.ஐயாத்துரையின் வளர்தெங்கு சிறுவர் கவிதைகளை முன்வைத்து' என்ற கட்டுரையும் முக்கியமானதொன்றாகும். கவிஞர் வே.ஐயாத்துரையின் வளர்தெங்கு என்ற சிறுவர் பாடல் தொகுப்பிலுள்ள பாடல்களை எடுத்துக்காட்டி அவற்றின் முக்கியத்துவத்தினையும் பலவீனங்களையும் சுட்டிக்காட்டி எழுதப்பட்டுள்ளது. சிறுவர்களின் உளப்பாங்கு எவ்விதம் 'வளர்தெங்கு' தொகுப்பில் பின்பற்றப்பட்டுள்ளதென்ற நோக்கில் கட்டுரையாசிரியர் இதனை எழுத முயன்றுள்ளார். யோ.யோண்சன் ராஜ்குமாரின் 'ஈழத்தின் முதல் சிறுவர் நாடகம் நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் எலியும் சேவலும் ஓர் அரங்கியல் பார்வை' என்ற கட்டுரை கதைப்பொருள், நாடகத்தில் முரண், கதைப்பின்னல், கட்டமைப்பு, பாத்திரங்கள், கதைக்கரு,

மொழிநடை, ஆற்றுகைப் பண்புகள் என்ற உப தலைப்புக்களில் நோக்கி 'எலியும் சேவலும்' ஈழத்தின் முதலாவது சிறுவர் நாடகம் என்பதை முன்வைக்கிறது.

ஞானம் சஞ்சிகையில் செ.யோகராசா எழுதிய ஈழத்துச் சிறுவர் இலக்கிய முன்னோடிகள் என்ற கட்டுரை சோமசுந்தரப்புலவர், மா.பீதாம்பரம், கி.அகிலேசசர்மா, ஜே.எஸ்.ஆழ்வார்பிள்ளை, சி.தங்கசாமி ஐயர், கே.சின்னத்தம்பி ஆகியோரை ஈழத்துச் சிறுவர் இலக்கிய முன்னோடிகளாக அடையாளப்படுத்தி அவர்களின் முக்கியத்துவத்தைப் பாடல்களினூடாக எடுத்துக்கூறும் வகையில் அமைந்துள்ளது. இதன் தொடர்ச்சி என்று கூறத்தக்கதாக தி.ஞானசேகரன் எழுதிய 'ஈழத்துச் சிறுவர் இலக்கிய முன்னோடிகளில் ஒருவரான சி.தங்கசாமி ஐயர் (1901-1953) என்ற கட்டுரை அமைந்துள்ளது. அறியப்படாத சிறுவர் இலக்கிய ஆளுமையான சி.தங்கசாமி ஐயரை அறிமுகம் செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைந்துள்ளது. நவாலியூர் சோமசுந்தரப் புலவர், மா.பீதாம்பரம் ஆகியோரின் வரிசையில் சி.தங்கசாமியும் முக்கியமானவர் என்பதை வலியுறுத்தும் பாங்கில் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. செ.யோகராசா 'மட்டக்களப்புப் பிரதேச சிறுவர் இலக்கியத்தின் முன்னோடி எஸ்.இ.கமலநாதன்' என்னும் தலைப்பில் சிறுவர் இலக்கிய ஆளுமை சார்ந்து மற்றுமொரு கட்டுரையினையும் எழுதியுள்ளார். இக்கட்டுரை எஸ்.இ.கமலநாதனை மட்டக்களப்பின் சிறுவர் இலக்கிய முன்னோடி என நிறுவுகின்ற வகையில் எழுதப்பட்டுள்ளது.

சிறுவர்களின் கல்விச் சிந்தனை என்ற நோக்கில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்

சபா ஜெயராசாவின் குழந்தைக் கல்விச் சிந்தனைகள் (2001) என்ற நூலில் குழந்தைக் கல்விச் சிந்தனையாளர்களும் அவர்களது கருத்துகளும் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளன. எனினும் சிறுவர்கள் சார்ந்த உளவியல் கருத்துகளையும் சிறுவர் இலக்கியம் சார்ந்த படைப்பாளர்களையும் அவர்களது ஆக்கங்கள் சிலவற்றினையும் எடுத்துக்காட்டாக ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக சிறுவர் இலக்கியப் படைப்பாக்கத்தில் முக்கியம்பெறும் தேசிக விநாயகம்பிள்ளை, நவாலியூர் சோமசுந்தரப்புலவர், அழ.வள்ளியப்பா உள்ளிட்டோரின் பாடல்களைச் சான்றுகாட்டி எழுதியுள்ளார். அத்தோடு சிறுவர் கதைகளைப் பற்றியும் ஒரு பகுதியாக ஆராய்ந்துள்ளார். சிறுவர் கதைகளை அமைப்பியல் அடிப்படையில் எவ்வாறு நோக்கமுடியுமென்பதற்கும் வழிகாட்டியுள்ளார். சிறுவர் இலக்கியங்களைக் கோட்பாட்டு அடிப்படையில் ஆய்வுசெய்வதற்கு வழிகாட்டுகின்ற முக்கியமானதொரு ஆய்வாக இது அமைகின்றது.

சிறுவர் நாடகங்கள் என்ற நோக்கில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்

வானதி பகிரதனின் 'மா.பீதாம்பரம் கவனிக்கப்படாத கவனிக்கப்படவேண்டிய ஈழத்துச் சிறுவர் நாடக முன்னோடி – ஓர் ஆய்வு' (2010) என்ற கட்டுரை 'பிள்ளைப்பாட்டு'த் தொகுதியில் வெளிவந்த மா.பீதாம்பரத்தின் 'அனுராதபுரம் அமைத்த அருந்தவச்செல்வன் சித்ரா தேவியின் மகன் பந்துகாபயன் கதை' என்ற படைப்பை ஒரு சிறுவர் நாடகமாக இனங்கண்டு ஏலவே சிறுவர் நாடக முன்னோடி நவாலியூர் சோமசுந்தரப் புலவர் என்று கூறிவந்த கருத்தை மறுமதிப்பீட்டுக்கு உட்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

தொகுப்பும் முடிவும்

தொகுத்து நோக்குகின்றபோது சிறுவர் இலக்கியம் சார்ந்து எழுதப்பட்ட கட்டுரைகளில் பல மேலோட்டமான போக்கிலேயே எழுதப்பட்டுள்ளன. குறிப்பிட்ட கட்டுரைகள் ஈழத்தில் சிறுவர் இலக்கியத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றியனவாக உள்ளன. பல கட்டுரைகளில் சிறுவர் உளவியலைக் கருத்திற்கொண்டு சிறுவர்களுக்கான இலக்கியங்கள் ஆக்கப்படவேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளனவே தவிர – உளவியலாளர்கள் வலியுறுத்தும் சிறுவர்களின் வயதுப் பருவத்தை அடிப்படையாகக் கொண்டு இலக்கியம் ஆக்கப்படவேண்டும் என்று கூறப்படுகின்றனவே தவிர அவற்றைப் பிரித்து வகைப்படுத்தி நுட்பமாக ஆராய்கின்ற தன்மையில் எழுதப்படவில்லை.

விமர்சன நோக்கிலான இலக்கிய ஆய்வே ஆக்க இலக்கியப் படைப்பாளர்களை சிறந்த இலக்கியப் படைப்பாளர்களாக வழிப்படுத்த உதவுவதாக அமையும். ஆயினும் ஈழத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் பெரும்பாலானவை வரலாற்று நோக்கில் அதுவும் பெரும்பாலானவை ஒருவரால் கூறப்பட்ட தகவல்களை மீளவும் வலியுறுத்துகின்ற பாங்கிலேயே அமைந்துள்ளன. இலக்கியப் படைப்புகளை அடிப்படையாகக்கொண்டும் சிறுவர் உளவியல் கூறுகளை கவனத்திற்கொண்டும் படைப்பாளர்கள் தமது படைப்புக்களை செம்மைப்படுத்தக்கூடிய முறையில் எழுதப்பபெறவில்லை.

மற்றுமொரு முக்கியமான விடயம் யாதெனில், சிறுவர் இலக்கிய ஆய்வுகள், கட்டுரைகளைப் பெரும்பாலும் சிறுவர் இலக்கியப் படைப்பாளர்களே எழுதியுள்ளனர். சக படைப்பாளியொருவரே விமர்சகராக இருந்துகொண்டு இலக்கியப் படைப்புக் குறித்து எழுதுவது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக அமையும் என்றில்லை. அதேவேளை தமது படைப்புக்களிலேயே குறைப்பாடுகளைக் கொண்டிருக்கக்கூடியவர்கள் பிறிதொரு படைப்புக்குறித்து எந்த அளவுகோலின் அடிப்படையில் மதிப்பீட்டினை மேற்கொள்வது என்ற கேள்வியும் எழுகின்றது. இருப்பினும் ஈழத்துச் சிறுவர் இலக்கியம் குறித்து எழுதியோருள் சபா ஜெயராசா, கனக செந்திநாதன், செ.யோகராசா ஆகியோர் முக்கியம்பெறுகின்றனர். இவர்கள் ஆக்க இலக்கியப் படைப்பாளர்களாகவும் விமர்சன நோக்கில் சிறுவர் இலக்கியங்களை ஆய்வுக்குட்படுத்தியவர்களாகவும் உள்ளனர். அத்தோடு இவர்களின் கட்டுரைகளில் சிறுவர் உளவியல் கூறுகள் குறிப்பிடத்தக்க அளவு கவனத்திற்கொள்ளப்பட்டுள்ளன. சிறுவர் இலக்கியம் குறித்து உளவியல் நோக்கில் எழுதப்பட்ட சபா ஜெயராசா, செ.யோகராசா ஆகியோரின் சில காத்திரமான கட்டுரைகள் உள்ளபோதிலும் அக்கட்டுரைகளில் கூறப்பட்ட உளவியற்கூறுகள் சிறுவர் இலக்கியப் படைப்பாளர்களால் சரியாகப் புரிந்துகொள்ளப்பட்டனவென்று கூறமுடியாதுள்ளது. சிறுவர் இலக்கியப் படைப்பாளர்கள் இலக்கியப் படைப்புக் குறித்த விமர்சனக் கருத்துக்களை உள்வாங்கிக்கொள்வதில் கவனம்செலுத்துவது மிகவும் குறைவாக இருப்பது இதன்மூலம் தெரிகின்றது. குறிப்பாக படைப்பாளர்கள் தமக்கான தனித்த பாதையினூடாகவும் விமர்சகர்கள் இன்னொரு பாதையினூடாகவும் பயணிக்கின்ற தன்மையின் விளைவே இதுவெனலாம். இந்நிலைப்பாடு மாற்றமடைவதனூடாக ஈழத்துச் சிறுவர் இலக்கியப் படைப்பாக்கத்திலும் வமர்சன நோக்கிலான ஆய்விலும் ஆரோக்கியமான நிலையேற்படும்.

இவ்விதத்தில் சிறுவர் இலக்கியப் படைப்பாக்கத்திற்கும் சிறுவர் இலக்கியம் குறித்த விமர்சன ஆய்வுக்கும் சிறுவர் உளவியல் அடிப்படையானதாகும். சிறுவர் இலக்கியம் சிறந்த முறையில் வளர்ச்சிபெறுவதற்கு சிறுவர் இலக்கியங்களை சிறுவர் உளவியல் அடிப்படையில் நோக்குகின்ற ஆய்வுகள் பெருமளவு வெளிவரவேண்டும் என்பதும் அத்தகைய ஆய்வுகளைச் சிறுவர் இலக்கியப் படைப்பாளர்கள் கவனத்திற்கொண்டு தமது படைப்புகளை ஆக்குவதும் முக்கியமானது என்பதும் அதனூடாகவே ஈழத்துச் சிறுவர் இலக்கியப் புலம் சிறந்ததொரு வளர்ச்சிநிலையை அடையும் என்பதும் இவ்வாய்வினூடாக முன்வைக்கப்படுகின்றது.

உசாத்துணைகள்

அருளானந்தம்,ச. (2019). ஈழத்தில் சிறுவர் இலக்கியம், திருகோணமலை: அருள் வெளியீடு.

கலாமணி,த. (2018). இலக்கிமும் உளவியலும், யாழ்ப்பாணம்: ஜீவநதி வெளியீடு.

கனக.செந்திநாதன், (1998), ஈழத்துக் குழந்தைப் பாடல்கள் குரும்பச்சிட்டி.: சன்மார்க்க சபை.

கைலாசபதி,க. (1980). நவீன இலக்கிய அடிப்படைகள், கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

சபா ஜெயராசா, (1997). பாலர் கல்வி, யாழ்ப்பாணம்: ஏழாலை மகாத்மா அச்சகம்.

சபா ஜெயராசா, (2001). குழந்தைக் கல்விச் சிந்தனைகள், நல்லூர்: போஸ்கோ பதிப்பகம்.

யோகராசா,செ. (2007). ஈழத்துச் சிறுவர் இலக்கியக் களஞ்சியம், கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

வானதி பகீரதன், (2022). ஈழத்துச் சிறுவர் கதைப்பாடல்களின் வளர்ச்சி, புதுச்சேரி: தமிழ்ப் புதுவை.

உளச் சிகிச்சையாகக் கதைக்கலை (சீர்மியக் கோட்பாட்டு நோக்கில் கோகிலா மகேந்திரனின் 'மனதையே கழுவி')

செல்லத்துரை சுதர்சன்

தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்.

sellathuraisutharsan@gmail.com

Abstract

In today's world, counseling is also influencing creative writing. It is receiving more attention as an art therapy. This study is an attempt to apply the theory of Counseling to creative writings. It has the main title of 'Narrative Literature as Psychotherapy' and the sub-title of 'Kohila Mahendran's 'Manathaye Kaluvi' in the Perspective of Counseling Theory'. How Counseling is Transformed into Storytelling art, that is the first objective of this study. The next objective of this study is to analyze and examine the story of counseling content from a counseling perspective. Counseling has only appeared in Tamil as theoretical writings. It has not been used to analyze the story. However, this study considers the writings on Counseling published in Tamil as pioneering efforts. Beyond the fact that storytelling is an art form, how it functions as a psychotherapeutic method is considered a gap in this study. This study attempts to fill that gap. This is a theoretical study. Therefore, the theoretical approach is used here. In particular, the Client Centered Approach, which is highly emphasized in Counseling theory, is used here. This study covers the following areas: Counseling as psychotherapy, psychotherapy through the arts, storytelling and psychotherapy, and the theoretical perspective of counseling: 'Manathaye Kaluvi.'

Keywords: Counseling, Creative Writing, Art Therapy, Psychotherapeutic Method, Client Centered Approach

1.அறிமுகம்

இன்றைய உலகில், சீர்மியம் (Counseling) என்பது படைப்பிலக்கிய வெளியிலும் செல்வாக்குச் செலுத்தும் ஒரு துறையாக விளங்கிவருகிறது. கலைச் சிகிச்சை என்ற முறையில், சமகாலத்தில் அது அதிகம் கவனிப்புப் பெறுகிறது. இந்த ஆய்வானது சீர்மியக் கோட்பாட்டை, படைப்பிலக்கியத்தில் பிரயோகித்து ஆராயும் முயற்சியாக அமைகிறது. இந்த ஆய்வு 'உளச் சிகிச்சையாகக் கதைக்கலை' என்ற முதன்மைத் தலைப்பையும், 'சீர்மியக் கோட்பாட்டு நோக்கில் கோகிலா மகேந்திரனின் 'மனதையே கழுவி' என்பதை ஆய்வு எல்லை கருதிய துணைத் தலைப்பாகவும் கொண்டுள்ளது. சீர்மியக் கதையாக்கம் எவ்வாறு நிகழுகிறது என்பது இந்த ஆய்வின் பிரச்சினை மையமாகும். உளச்சிகிச்சையாகச் சீர்மியக் கதை ஒன்றின் அமைவைக் கண்டறிதலும், அக்கதையின் ஆக்குமுறையைப் பகுத்துக் காண்பதும் இந்த ஆய்வின் நோக்கங்களாக அமைகின்றன. இந்த ஆய்வுக்கு முன்னர், சீர்மியம் என்பது கோட்பாடுசார் எழுத்துக்களாகவே தமிழ்ச் சூழலில் உள்ளன. கதைக் கலை குறித்த ஆய்வுகளில் அவை பிரயோகிக்கப்படவில்லை. எனினும், முன்னர் வந்த சீர்மியக் கோட்பாட்டு எழுத்துக்களை இந்த ஆய்வு முன்னோடி முயற்சிகளாகக் கருதுகிறது. கதை என்பது ஒரு படைப்புக் கலை என்பதற்கு அப்பால், அது ஒரு உளச்சிகிச்சை முறையாக எவ்வாறு வினையாற்றுகிறது என்பதை இந்த ஆய்வு இடைவெளியாகக்

கொண்டுள்ளது. இது ஒரு கோட்பாட்டு ஆய்வு என்பதால், கோட்பாட்டு அணுகுமுறையே இங்கு பயன்படுத்தப்படுகிறது. குறிப்பாக, சீர்மியநாடி மைய அணுகுமுறை *(Client Centre Approach)* இந்த ஆய்வில் பிரயோகிக்கப்படுகிறது. உளச் சிகிச்சையாகச் சீர்மியம், கலைகளின் மூலம் உளச் சிகிச்சை, கதைக் கலையும் உளச் சிகிச்சையும், சீர்மிய வாசிப்பில் 'மனதையே கழுவி' ஆகிய தலைப்புகளில் ஆய்வுப் பொருள் குறித்து விரிவாக இந்தக் கட்டுரை பேசுகிறது.

2.உளச் சிகிச்சையாகச் சீர்மியம்

இன்றைய நவீன உளவியல், அதீத கரிசனை கொள்ளும் விடயப் பொருள் சீர்மியம் ஆகும். உளவியல் துறையின் உத்தமமான நெறியாக அது விளங்குகிறது. இலத்தீன், பழைய பிரெஞ்சு மொழிகளில் முறையே *consilium, conseil* என வழங்கிய சொற்கள், ஆங்கில மொழிக்குச் சென்று, ஆங்கிலத்தில் *Counseling* என நிலைபெற்றது. இது, தமிழில் 'உளவளத் துணை' என்றும் 'ஆற்றுப்படுத்தல்' என்றும் வழங்கிவருகிறது. எனினும், பெரும்பாலும் 'சீர்மியம்' என்றே தமிழகத்திலும் இலங்கையிலும் கல்வி மற்றும் ஆய்வு எழுத்துக்களில் பயில்நிலையில் உள்ளது. 'சீர்மியம்' என்பது அதிக அர்த்தச் செறிவைக் கொண்ட பதமாகப் புலப்படுகிறது. கோட்பாட்டு நிலையிலும், அதன் பிரயோக நிலையிலும், அதன் விளைவான பயன்கொள் நிலையிலும் நோக்கும்போது, 'சீர்மியம்' என்ற பதம் செம்மையானது.

சீர்மியம் என்பது கல்வித்துறை சார்ந்ததாகவே அதிகம் அறியப்பட்டிருக்கிறது. ஆனால், அது அனைத்துத் துறைகளையும் தழுவி நிற்பது. உடலும் உளமும் மனவெழுச்சியும் மேம்படச் சீர்மியம் துணை செய்ய வல்லது. "சூழற் கேள்விகளுக்கு *(Environmental Demand)* முகம் கொடுக்க விளைய உதவுதலே சீர்மியம்" *(ஜெயராசா,சபா.2002:9)* எனக் கூறலாம். சீர்மிய வழங்குநரைச் 'சீர்மியர்' என்றும், அதைப் பெறுவோரைச் 'சீர்மியநாடி' என்றும் இத்துறைசார் ஆய்வாளர் குறிப்பிடுவர். சீர்மியத்தை மேம்படுத்த உதவுவோரை, 'சீர்மிய அனுசரணையர்' என நாம் குறித்துக்கொள்ளலாம். 'சீர்மியநாடியும் சீர்மியரும் இணைந்த செயற்பாட்டைச் சீர்மியம்' எனலாம். இன்னும், "ஒழுங்கமைவுபெற்ற கண்டுணர் செயற்பாடாகச் (*Organized Exploratory Activity*) சீர்மியம் அமைகின்றது." *(மேலது, 2002:40)* சீர்மியமானது, பல்வகைக் காரணிகளால், சிக்குண்டு உலைவுறும் சீர்மியநாடியின் மனச் சுமையைக் கரைக்கிறது. சுகத் தீர்வுகளை நோக்கிய ஓர் உளச்சிகிச்சை முறையாகச் சீர்மியம் விளங்குகிறது.

ஒரு சீர்மியர், சீர்மிய நாடியின் இடர்களைத் தெளிவாக இனங்காண்பவராக, அவரை நேரடியாக வினவுபவராக, அவர் கூறுவதை ஆர்வத்தோடும் ஆதரவோடும் ஆழமாகக் கேட்பவராக, அவர் கூறுவதை நேர்மறையாக்கம் செய்யும் நோக்கோடு கிரகிப்பவராக, அவர் சொல்லால் சொல்வதையும் சொல்லாமல் விட்டுப்போன சொல்லில் பொதிந்ததையும் ஊன்றி உற்றுநோக்குபவராக, சொற்களுக்கு அப்பாலான உளத்தொடர்பு பேணுபவராக இருப்பது அவசியமானது.

3.கலைகளின் மூலம் உளச் சிகிச்சை

கலைகளின் மூலம், உளச் சிகிச்சை அளிக்கும் முறை இன்று பல நாடுகளிலும், பரவலாக வளர்ச்சிபெற்று வருகிறது. அது, கலைச் சிகிச்சை *(Art Therapy)* எனக் கூறப்படுகிறது. கலை ஒரு நிவாரணியாக இன்று

கணிப்புப்பெற்றுள்ளது. கலையைப் பயன்படுத்தி, உள நோய்களை நீக்கம் செய்வதும், வாழ்வை வளம்படுத்தி மேம்படுத்துவதும் நடைபெற்று வருகிறது. அதற்காகப் பல்வகைக் கலைவடிவங்கள் பரீட்சிக்கப்படுவதும் கையாளப்படுவதும் தொடர்ச்சியாக நிகழ்கின்றன. உலகமெங்கும் உள்ள வைத்தியசாலைகளில் இதற்கான ஒரு சிகிச்சை அலகு மெல்ல மெல்ல இணையத் தொடங்கியுள்ளது.

போருக்குப் பிந்திய சமூகங்களில், போரால் உருவாகிய மனப் புண்களை, கலைச் சிகிச்சை மூலமாகவே பெரிதும் நீக்கிவருகின்றனர். கலைகள் மூலம் போரினால் மனப் பாதிப்புற்றவர் விடுதலை செய்யப்படுகிறார். 'கலை விடுதலையளிக்கும் உயர் பண்புடையது' (2014:13) என, தீரமிக்க பாட்டாளி வர்க்க நாடக அரங்கான, காவிய அரங்கின் பிதாமகர், அரங்க மேதை பெர்டோல்ற் பிரெஜ்ட் (Bertolt Breacht) தனது எழுத்துகளில் விரிவாகக் குறிப்பிடுகிறார். அவர், 'வாழ்க்கைக்கு ஒரு மாற்றாகக் கலை' இருக்கிறது என்றும், 'சுற்றியிருக்கும் உலகுடன் ஒரு சமநிலையில் மனிதனை வைக்கிற சாதனமாகக் கலை இருக்கிறது' என்றும் கூறினார். (2014:9)

4.கதைக் கலையும் உளச் சிகிச்சையும்

கதைக் கலையும் உளச்சிகிச்சைக்கு உகந்ததாக இன்று பரவலாக அறியப்பட்டுள்ளது. கதை சொல்ல வைத்தல், கதையை ஆக்கிச் சொல்லல் என இரு முறைகளில் அது நிகழ்கிறது. இவற்றுள் முதலாவது முறையை 'உளவளத் தேவையர் கதை உரைப்பு' (சீர்மியநாடி கதை உரைப்பு) எனவும், இரண்டாவது முறையை 'சீர்மியக் கதைஞர் கதை உரைப்பு' எனவும் குறித்துக்கொள்ளலாம்.

ஒருவரைக் கதை சொல்ல வைத்து, அதைச் சொல்லும் அவரையே உளச் சுமையிலிருந்து விடுதலை செய்யும் முறையே, 'உளவளத் தேவையர் கதை உரைப்பு' ஆகும். இது ஒரு கலையாக்கம் அல்ல எனினும், கலையாக்கம் மிக்க சீர்மியக் கதை ஒன்றைவிடவும் இது முதன்மையானதாகக் கணிக்கப்படுகிறது. உளவளப் பாதிப்புற்றவரே தனது கதையைச் சொல்லல், சொல்லும்போது அவரே நேரடியாகப் பிரசன்னமாதல், அவரது வாக்குமூலமாக அவரது கதை அமைதல், அவரது மொழியில் அவரது கதை அமைதல். மொழி மற்றும் மொழிசாராத் தொடர்பாடல் வாயிலாக அவர் தனது உளச் சுமைகளை வெளிப்படுத்துதல் முதலாய காரணங்களால் 'உளவளத் தேவையர் கதை உரைப்பு' முறை முதன்மை பெறுகிறது.

சமூகத்தில், உளப் பிரச்சினைக் கிடங்கில் உள்ள கதைகளை, உளவள நன்மை கருதி, கலைத்துவம் ததும்ப மொழியில் வடிக்கும் முறையே, 'சீர்மியக் கதைஞர் கதை உரைப்பு' ஆகும். இத்தகைய சீர்மியப் பொருண்மை உள்ள சிறுகதைகள் எல்லா மொழிகளிலும் எழுதப்பெற்றுள்ளன. அவற்றைச் 'சீர்மியச் சிறுகதைகள்' எனக் குறிப்பது பொருத்தமானது. உளவியல் வல்லார் பலரும், இச்சிறுகதைகளை எழுதுவதில் ஆர்வம்காட்டி வருகின்றனர். இதனை, 'கதைக்கலையின் மூலமான உளச் சிகிச்சை' என அவர்கள் கருதுகின்றனர்.

தமிழ்ச் சூழலில், இத்தகைய சிறுகதைகளை சீர்மியர்களும் உளவியலாளர்களும் மருத்துவர்களும் எழுதிவருகின்றனர். இவர்களை, 'சீர்மியக் கதை சொல்லிகள்' என்று அழைப்பது பொருத்தமானது. ஈழத்தில் இவ்வாறான கதைகளை எழுதுவோருள், கோகிலா மகேந்திரன் அவர்களும் ஒருவர். அவர்

எழுதிய, 'மனதையே கழுவி' என்ற சீர்மியச் சிறுகதையை, சீர்மிய அணுகுமுறையில் வாசிக்க இக்கட்டுரை முயலுகிறது.

5.சீர்மிய வாசிப்பில் 'மனதையே கழுவி'

'மனதையே கழுவி' என்பது இந்தச் சீர்மியச் சிறுகதையின் தலைப்பு. இது, இரட்டை அர்த்தம் பொருந்திய ஒரு தலைப்பு என்பதை கதை குறித்த முழுமையான வாசிப்பில் தெளிவாகிறது. சீர்மியநாடியின் மனக் காயங்களைக் கழுவியும் மனச் சுமைகளைக் கரைப்பதுமாகச் சீர்மியரின் தொழில் அமைவதால் அதைப் புலப்படுத்துகிறது என ஒரு அர்த்தமும், சீர்மிய அனுசரணையர், தனது இலாபம் நோக்கி, மனதைக் கழுவும் தொழிலாற்றும் சீர்மியரின் மனசையே கழுவும் அபத்தநிலையைப் புலப்படுத்துவதால் அதைக் காட்டுகிறது என இன்னொரு அர்த்தமும் கதைத் தலைப்பினூடு தெளிவாகிறது.

சீர்மியரே மேலானவர், அவரே ஆலோசகர், அவரே வளவாளர் என்ற அதிகாரப்படிநிலை நிலவரங்களுக்கு மாறாக, சீர்மியநாடியே மைய நபர் என்றும் அவரின் ஊக்கியே சீர்மியர் எனவும் கருதும் அணுகுமுறையை, சீர்மியநாடி மைய அணுகுமுறை *(Client Centre Approach)* எனச் சீர்மியக் கோட்பாடுகள் விளக்குகின்றன. சீர்மியநாடி மைய அணுகுமுறையிலேயே, கதைசொல்லி இக்கதையைச் சொல்லிச் செல்கிறார் என்பதை முதலில் குறித்துக்கொள்வது பயனுடையது.

கதைசொல்லியின், தன்னிலை எடுத்துரைப்புப் பாணியில் *(First Person Narrative)* இக்கதை அமைகிறது. இதனை 'முன்நோக்கு எடுத்துரைப்பு' என்றும் ஆய்வாளர் குறிப்பிடுவர். *(பஞ்சாங்கம், க., 2003:69)* சீர்மியராக இருப்பதால், இக்கதைசொல்லிக்கு இந்த எடுத்துரைப்பு முறை மிக லாவகமானதும் இயல்பானதுமாக அமையக்கூடியது. கதைசொல்லியின் கற்பனை உலகுக்குள், ஏற்கனவே நிகழ்ந்து முடிந்த இறந்த காலக் கதைகள் பல உள்ளன. அவற்றுள் அவர் ஒன்றைத் தேர்ந்தெடுக்கிறார். அதை புறநிலையாகவும் அகநிலையாகவும் இன்னும், இவை இரண்டின் கலவையாகவும் ஊடி இழைக்கிறார். கதைசொல்லி, தான் சொல்லும் கதைச் சூழலுக்கு வெளியே நின்றவாறு, பிறரையும் தன்னையும் அச்சூழலுக்குள் பார்த்துச் சொல்லிக்கொண்டு போகிறார். இவ்வாறு அவர் சொல்லும்போது, அவரது தன்மை வெளிப்படுவதற்கு மாறாக, பாத்திரங்களின் தன்மை அசல் தன்மையில் வெளிப்படுகின்றன.

சீர்மியருக்கு, சீர்மியநாடி சொல்லிய தன்வாழ்வின் துயரத்தை, சீர்மியர், சீர்மிய அனுசரணையருக்குச் (அதிபர்) சொல்வதாகக் கதை அமைகிறது. இக்கதையில் பாத்திரங்கள் எவற்றிற்கும் பெயர் கிடையாது. பாத்திரப் பெயர்கள் இல்லாமலே இக்கதை அமையலாம். இக்கதைக்கு அது தேவையற்றதும்கூட. ஆனால், சீர்மியத்தில் அறமாகக் கடைப்பிடிக்கவேண்டிய முக்கியமான பண்புகளில் ஒன்று, சீர்மியநாடியின் பெயரைப் பொதுவெளியில் பகிரக்கூடாது என்பது. இக்கதை சொல்லி, தனது கதை சீர்மியக் கதை என்பதால், அதைக் கடைப்பிடித்திருப்பது சிறப்பிற்குரியது. சீர்மிய நாடியின் பெயரைச் சொல்லாது, மறைமுகமாக வைத்திருப்பதன் மூலம், சீர்மிய நாடிக்கும், அவர் தன்னிடம் நாடிச் சொல்லிய பிரச்சினைக் கதைகளுக்கும் மூடிய விசுவாசியாக, கதையில் வரும் சீர்மியர் பாத்திரம் இருப்பதும் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய ஒன்று. சீர்மியநாடிக்கு, நேரிய தீர்வைப் பெற்றுக்கொடுப்பதே சீர்மியரின் உயர் நோக்கம். 'மனதையே கழுவி' என்ற இக்கதையைப் பகுப்பாய்வின் வசதிகருதி மூன்று பெரும் பகுதிகளாகப் பகுத்துக்கொள்ளலாம்.

4.1 சீர்மியர் - சீர்மிய அனுசரணையர் உடன்படு சந்திப்பு

கதையின் முதற்பகுதியானது, சீர்மியர், சீர்மிய அனுசரணையர் (கல்லூரி அதிபர்) அறையில் நுழைதலும், அவரைச் சந்தித்தலும், அவர் விசாரித்தலும், சீர்மியர் கதையைத் திறத்தலும், அவர் கதை கேட்க ஆயத்தமாதலும் என அமைகிறது. சீர்மியர் சீர்மிய அனுசரணையரைச் சீர்மியநாடிக்காகச் சந்திப்பது இப்பகுதியின் கதைப்போக்கு. இப்பகுதிக் கதைக் களம் அதிபர் அறை.

"என்ன விடயம்?" (2008:1) என்ற அதிபரின் கேள்வியில் கதையின் முடிவுவரையான முழு உரையாடலும் கொழுவப்பட்டுள்ளது. ஒரு சங்கிலிக் கோர்வைக்குள் பல சங்கதிகள். ஒன்றன்பின் ஒன்றாக, ஒன்றினால் இன்னொன்றாகத் தொடர்கின்றன. "மாவிட்டபுரத்திலை இருந்து இடம்பெயர்ந்த ஒரு பிள்ளை... சரியான கஷ்டம் நான் ஒரு கவுன்சிலர் எண்டு என்னை நம்பிச்சொன்ன விடயங்களை உங்களிட்டை சொல்லப்பிடாது... எண்டாலும் சொல்லிறன்" (2008:1) என்ற சீர்மியர் கூற்றே, அவர் பெயரின் ரகசியம் பேணுவதைப் புலப்படுத்துகிறது. "சொல்லுங்கோ" (2008:2) என்ற அதிபரின் விசாரிப்போடு சீர்மியர் கதை திறக்கிறார்.

சீர்மியநாடி தன்னிடம் பெரும் உள அழுத்தத்துடன் வருகை தந்த தோற்றத்தை, "முகத்தைப் பார்த்தேன். தனிமை, ஆதங்கம், அவமானம், ஏக்கம், சோர்வு, வெறுப்பு, விரக்தி இவற்றில் ஒன்று அல்லது இவற்றில் பலவற்றின் சேர்வை! அந்த முகத்தின் மொழியற்ற செய்தியை என்னால் சரியாய் வாசிக்க முடியவில்லை. மூலகங்களில் அடர்த்தி கூடியது எது?..... மனித மனத்தின் கூறுகள் மிகப் பயங்கரமான அடர்த்தி கொண்டவை" (2008:2) எனக் கூறுகிறார். இங்குதான், சீர்மியநாடி குறித்த சீர்மியரின் முதலாவது அவதானிப்பை நாம் காணமுடிகிறது. சீர்மியநாடி பற்றிய முதல் மனப்பதிவு அது. இத்துடன் சீர்மியர் - சீர்மிய அனுசரணையர் (அதிபர்) உடன்படு சந்திப்பு என்ற முதல் பகுதி முடிவுக்கு வருகிறது.

4.2 சீர்மியர் - சீர்மியநாடி சந்திப்பு: முளைவிடும் ஒத்துணர்வு

சீர்மியர் - சீர்மியநாடி சந்திப்பு என்பது இரண்டாவது பகுதி. சீர்மியரைச் சீர்மியநாடி தேடிவந்திருப்பதால் இரண்டாவது பகுதியின் அனைத்துப் பிரிவுகளிலும், கதை நிகழ் களம், சீர்மியரின் வாழிடம் எனத் துணிய முடிகிறது. இந்த முதற் பிரிவில், சீர்மியநாடி சீர்மியரிடம் தன்னை அறிமுகம் செய்தல், சீர்மியநாடியின் வேண்டுகோள், அது தொடர்பான சீர்மியரின் பதிவு, இருவரதும் உரையாடலில் முளைவிடும் ஒத்துணர்வு ஆகியவை இடம்பெறுகின்றன.

"தங்கச்சி சொல்லுங்கோ" (2008:2) என்ற சீர்மியரின் ஆதரவான விசாரிப்புக்கு, "என்ரை பிள்ளை எப்படி எண்டாலும் படிக்க வேணும். என்னைப்போலை படிக்காமல் இருந்திட்டுப் பிறகு கடப்படப்பிடாது" (2008:2) என்ற சீர்மியநாடியின் கூற்றும், "அதைச் சொல்லும் போதே அழுகை வெடித்துப் பொங்கிச் சரிந்தது" (2008:2) என்ற கதைசொல்லியின் கூற்றும் சீர்மியத் தேவையை எடுத்த எடுப்பிலேயே கதையில் பதியமிடுகிறது. ஒன்றால் உருவாகிய இழப்பை, இன்னொன்றால் நிரப்பத் துடிக்கும் பதிலீட்டு உளநிலைச் (Substitute Mentality) சீர்மியநாடியை இங்கு காணமுடிகிறது. தான் படிக்காவிட்டாலும் தனது பிள்ளை படிக்க வேண்டும் என்பது இங்கு அதனையே புலப்படுத்துகிறது.

"அவளிடமே ஒரு குழந்தை மனம் நிறைந்து வழிந்தது. அவளுக்கும் ஒரு குழந்தையா?" (2008:2) என்ற கதைசொல்லியின் கூற்றில், சீர்மியநாடியின் இளமை நெடி அடிக்கிறது. ஆகவே, அவர் இளம் தாயான சீர்மியநாடிதான். சீர்மியநாடி முகம் திருப்பிக் கண்ணீர் துடைத்ததை, "முள் நிறைந்த வாழ்வுப் பாதையில் முதல் சுவட்டைக் கண்டிருப்பாள்" (2008:2) எனக் கதைசொல்லி கூறுவது, சீர்மியநாடியின் நேர்முகப் பயணத்தையும் கதையின் நேர்முக அசைவையும் காட்டுகின்றன. சீர்மியர் அழுகையைத் துடைக்குமாறு கைலேஞ்சியைக் கொடுத்தல் ஆதரவையும், அழுது தீர்ப்பதற்கு நேரம் கொடுத்தல் இறுக்கத்தை இளக வைக்க என்பதையும் தெரிவிக்கிறது. இந்த அழுகையைச் சீர்மியர் ஒரு நேர்முகக் கவன ஈர்ப்பாகக் (Positive Attention Seeking) கருதுகிறார்.

"நான், கொஞ்சம் அருகில் சென்று அவளின் தோளைத் தொட்டு எனது ஒத்துணர்வைக் காட்ட முயன்றேன். பிறரின் தொடல்களுக்கு அருகதை அற்ற பிறவி தான் என்பது போல் நான் தொட்ட தோளைச் சற்று இழுத்து..." (2008:3) என்ற சீர்மியர் கூற்றும், 'என்ரை சகோதரங்கள் ஒருத்தரும் எனக்குக் கிட்டவும் வாறதில்லை...." (2008:3) என்ற சீர்மியநாடியின் கூற்றும் நேர்முகக் கவன ஈர்ப்பைத் தெளிவாக்குகின்றன. தொடுதல், விலகுதல், அதற்கான காரணம் ஆகியவை இசைந்து, இதை உறுதிசெய்கின்றன. இதன்மூலம், உறவுகளால் உண்டாகிய உளமுறிவைச் சகிக்கும் ஆற்றல் (குசரளவசயவழைn வுழடநசயnஉந) அற்ற சீர்மியநாடி தென்படுவதை அவதானிக்க முடிகிறது. ஆகையால், சீர்மியர், சீர்மியநாடியை முதல்நிலை நபராக்கி (First Person) அவரின் உளமுறிவுக் கதைகளை, இக்கதை முழுவதும் சொல்ல வைக்கிறார்.

சீர்மியரின் பண்புகளுள், ஒத்துணர்வு உறவு (Empathic Relationship) முக்கியமான ஒன்று. சீர்மியநாடி காண்பது போலவும், உணர்வது போலவும், காண்பதும் உணர்வதுமான பண்புதான் ஒத்துணர்வு உறவு. ஒருவிதத்தில் இது தன்னிலையில் இறங்கி பிறர்நிலையாதலைக் குறிக்கும். இது, இருவழி இணக்கநிலைக்கு (Rapport) உதவுகிறது. இது, இரகசியங்களைப் பரிமாறும் உளநிலையை உருவாக்கும். ஒத்துணர்வு கட்டியெழுப்பல் (Empathy Building) என்பதில்தான் இந்தக் கதையே நகர்கிறது. இந்தப் பண்பு கதை முழுவதும் சம பணயம் செய்கிறது. இக்கதையில், சீர்மியர் சீர்மியநாடியுடன் ஒரு சக பயணியாக (Fellow Traveler) இருக்கிறார்.

இப்பிரிவில், தொடுதலும் விலகுதலும் நிகழும் கணத்தில், "சிறிது தயங்கினாள். நான் தன்னுடன் வருகிறேனா என்று 'செக்' பண்ணவோ!" (2008:3), 'உங்கடை பிள்ளையைப் படிப்பிக்க வேணும். ஒருத்தரும் உதவி செய்யாத படியால் அது உங்களுக்குக் கஷ்டமா இருக்கு" (2008:3), "நான் அவளின் உணர்வுகளையும் மீள எடுத்துக் கூறி அவளுடன் அருகே நடந்து கொண்டிருப்பதை உறுதி செய்தேன்" (2008:3) என்றெல்லாம் சீர்மியர் கூறுவன, ஒத்துணர்வின் வெளிப்பாடுகளே. சீர்மியநாடியின் உணர்வுகளின் அருகருகாக, சீர்மியர் நடந்துசெல்வதையே இவை புலப்படுத்துகின்றன.

4.3 சீர்மியர் - சீர்மியநாடி சந்திப்பு: தளையற்ற இணைப்பு

இரண்டாவது பகுதியின் இரண்டாவது பிரிவு, சீர்மியமாக்கு சூழலுக்குச் சீர்மியநாடி பொருந்தி வருவதாக அமைகிறது. சூழ இருந்த பச்சை வண்ணச் சுவர்களின் மீதான வெறித்த பார்வையுடன் இருக்கும் சீர்மியநாடியின் பார்வை, சுவரில் தொங்கிய பூக்கள் கொண்ட கலண்டரில் மெல்ல நகர்ந்து, அறைக்கு

வெளியே நின்ற பட்ட மரத்தில் நிலைக்கிறது. கதைசொல்லியின் கமரா நகர்வு, ஏதோ ஒரு செய்தியோடுதான் நகர்கிறது. பசுமையிலிருந்து ஆரம்பிக்கும் சீர்மியநாடியின் பார்வை, காலம் பூவாய் மலரும் கலண்டரில் தரித்து, அறை எல்லை தாண்டி வெளிக்குச் செல்வது என்பது எல்லை கடத்தலை உணர்த்துகிறது.

சீர்மியநாடி, தனக்குள் தானே கொள்ளும் ஊடாட்ட நிலையின் *(Intra Personal)* கணங்களை அவதானித்தல் சீர்மியருக்கு அவசியமானது. வெளியில் தனது பார்வையைச் செலுத்திய சீர்மியநாடி, *"அந்த மரம் ஒரு விதவை மாதிரி நிக்குது. அதுக்கு மேலை இருக்கிற வெள்ளைக் குருவி அதுக்கு ஆறுதல் சொல்லுது" (2008:4)* என்பது, தனக்குள் தான் கொள்ளும் ஊடாட்ட நிலை. இந்தப் பூடக மொழியை, சீர்மியர் உரிய கணத்தில் கையேந்தி, திறம்படக் கையாளுகிறார். நேர்மறைச் செயற்பாடுகளை நோக்கிய ஊக்கல் முனைப்பை *(Motivation)* உரிய கணத்தில் வழங்குவது சீர்மியரின் கடமை. அந்த ஊக்கல் முனைப்பை வழங்கல், சீர்மியநாடியின் உள்ளத்தை, உரிய நேரத்தில் நெறிப்படுத்தச் சீர்மியருக்கு உதவும்.

இக்கதையில், இப்போது சீர்மியநாடியால் உருவாகியிருப்பது ஒரு நேர்கவிநிலை *(Positive Climate)* ஆகும். அதை முனைப்பாக்கி வளர்ப்பது சீர்மியரின் கடமை. இத்தகையதொரு புரிதலின் அடிப்படையில்தான், சீர்மியர், *"நீங்கள் படிக்கேல்லை எண்டு சொல்றீங்கள். ஆனால் ஒரு கவிஞனைப் போலை நல்ல வடிவாக் கதைக்கிறீங்கள். ஒரு வேளை நான் அந்த வெள்ளைக் குருவி மாதிரி இருப்பன்" (2008:4)* என்று கூறுவதைப் புரிந்துகொள்ள வேண்டும். இருவரும் கலந்துரையாடும்போது, பிரச்சினையைத் தீர்ப்பதற்குத் தயாராகும் சிந்தனைக் கிளர்ச்சித் தூண்டல் *(Brainstorm)* உருவாவதை இங்கு அவதானிக்க முடிகிறது.

சீர்மியநாடி, தான் காணும் காட்சியை, தன்னுளே தான் - தன்னோடு தான் பேசும் பாணியில், மொழியில் குறியீட்டாக்கம் செய்கையில், வெளிப்படையான எடுத்துரைப்புத் தளத்திலிருந்து, அர்த்தமானது உள்ளார்ந்த தளத்திற்கு நகர்கிறது. சீர்மியர், உரிய கணத்தில் அந்தப் பூடக மொழியை, தனது நுண்மதிச் சாவியால் திறந்துவிட வேண்டும். இதனால், சீர்மியமாக்கலில் சீர்மியருக்கும் சீர்மியநாடிக்குமான தளையற்ற இணைப்பு *(Free Associations)* உருவாகிறது. அது உளச்சுகம் தேடும் பயணத்தை விரைவுபடுத்த வல்லது. இங்கே, சீர்மியநாடியின் குறியீட்டைச் சீர்மியர் புரிந்துகொண்டதும் தளையற்ற இணைப்பு உருவாகியதை, *"மெதுவாகச் சிரித்தாள். விரக்தி கலந்த புன்னகை தான், என்றாலும் அழகாக இருந்தது. அப்போது தான் அவளது உடையைக் கவனித்தேன். மெல்லிய மஞ்சளும் பச்சையும் சேர்ந்த எளிமையான சட்டை என்றாலும் அந்தத் தெரிவில் ஒரு கலைத்துவம் இருந்தது" (2008:4)* என்பது காட்டி நிற்கிறது.

4.4 சீர்மியர் - சீர்மியநாடி சந்திப்பு: கிளறி எடுத்தல்

இரண்டாவது பகுதியின் மூன்றாவது பிரிவுஇ முன்னைய இரண்டாவது பிரிவில் அமையும் குறியீட்டுப் பொருளின் காரணத்தை விளக்கும் பகுதியாக அமைகிறது. இப்பிரிவுஇ சீர்மியநாடிக்குத் தனது கணவர் இருக்கிறாரா இல்லையா என்ற நிச்சயமின்மைஇ சீர்மிய நாடியின் காதல் உடன்பிறப்புகளின்

ஒத்துழையாமையுடன் திருமணமாகியமைஇ அவற்றால் ஏற்பட்ட பாதிப்புகள் ஆகியவற்றைக் கூறுவதாய் அமைகிறது.

சீர்மியநாடிஇ 'பட்ட மரம்' எனத் தன்னைச் சுட்டிய குறியீடு இங்கே விரிக்கப்படுகிறது. "நான் விதவையோ இல்லையோ எண்டு எனக்குத் தெரியாது. அவரும் நானும் விரும்பித்தான் கல்யாணம் செய்தனாங்கள்.... அதுதான் என்ரை சகோதரர்களுக்குக் கோபம்... தொண்ணூறாம் ஆண்டு சண்டை தொடங்கேக்கை வவுனியாவுக்குப் போனார்... திரும்பி வரேல்லை. சிலபேர் சொல்லிச்சினம் வவுனியாவிலை அவரைக் கண்டதெண்டு. நானும் செஞ்சிலுவைச் சங்கம் எண்டும் அதெண்டும் இதெண்டும் அலையாத இடம் இல்லை. காலும் ஓய்ஞ்சு போச்சு. நாலு வரியம் முடிஞ்சுது. இனிக் காவல் இருக்கேலாது... சீலை உடுத்தாத்தானே வெள்ளைச் சீலைக்கு மாற வேணும்... எனக்குச் சீலை உடுக்க வழியில்லை" (2008:4-5) என்ற சீர்மியநாடியின் கூற்றுஇ அவரது உளப் பிரச்சினையின் மையப் புள்ளிகளைச் சீர்மியருக்கு அடையாளங்காட்டுகிறது.

சீர்மியநாடியின் உளப்பிரச்சினையின் மையப் புள்ளிகளை அடையாளம் காணும் சீர்மியர்இ அமுக்கியநிலையில் அழுத்தும் உணர்வுக் குவியல்களை (A mass of compressed emotions) சீர்மியநாடி தொடர்ந்து வெளியிடுவதற்கும்இ அதன்வழி சீர்மியநாடியை வளமாக்குவதற்கும் (Facilitative) முனைதல் வேண்டும். இன்னும்இ சீர்மியநாடியை எவ்வாறு பிரக்ஞைப்படுத்தலாம் என்ற 'முன்னோக்கு' (Preview)இப்போது சீர்மியருக்குள் தோன்றியிருக்கும். சீர்மியநாடியின் மேற்குறித்த கூற்றின் வலி "கத்தியால் கீறிய ரத்தக்கட்டி போல் ஒவ்வொரு சொல்லும் வெளிவந்தது" (2008:5) எனப் பதிவாகிறது. "நான் இன்னும் சற்று அவளை நோக்கிச் சரிந்து எனது நெருக்கத்தை வெளிப்படுத்த முயன்றேன்" (2008:5) என்ற சீர்மியர் கூற்றுஇ சீர்மியமாக்கலின் அண்மையநிலைச் செவிமடுத்தலின்போதுஇ பொருத்தமான தலையசைவுகளை வருவித்தலைக் காட்டுகிறது.

சீர்மியத்தில் 'கிளறி எடுத்தல்' (Drawing out) செயல்முறை சீர்மியருக்கு அவசியமானது. சீர்மியநாடியின் மனவலி மூட்ட உறைநிலையைக் கிளறிஇ அவரது மொழி வழியாகவே அவரது உள உளைவை வெளிக்கொணருவதை இது குறிக்கும். இது பேசியவாறே குணப்படுத்தும் (Talking Cure) செயல்முறை சார்ந்தது. இதன்போது சீர்மியர் திறந்த வினாக்கள் மற்றும் மூடிய வினாக்களைக் கேட்டல்இ பிரதிபலிப்பு நுட்பத்தைக் கையாளுதல் ஆகியவற்றில் ஈடுபட வேண்டும். இவற்றில் பிரதிபலிப்பு நுட்பம் (Reflection Technique) சிறப்பானதாகக் கருதப்படுகிறது. சீர்மியரின் பிரதிபலிப்பு (Reflection) தெரிந்தெடுத்த பிரதிபலிப்பாக (Selective Reflection) இக்கதையில் அமைகிறது. தெரிந்தெடுத்த பிரதிபலிப்பு என்பதுஇ சீர்மிய நாடி முன்மொழியும் மொழியைஇ அவருக்காகவே மீளவும் வலியுத்திஇ அவருக்கு ஆதரவாகும் செயல்முறை ஆகும். இதனால்இ சீர்மியநாடி தொடர்ச்சியான மொழிதலை நிகழ்த்தும் வாய்ப்பு அதிகம் உள்ளது.

"உங்கடை அவர் இருக்கிறாரோ இல்லையோ எண்டு தெரியாத நிலைதான் உங்களை ஆகவும் வேதனைப்படுத்துது" (2008:5) என்று சீர்மியர் கூறுவதுஇ தெரிந்தெடுத்த பிரதிபலிப்பு ஆகும். இந்த நுட்ப உபயோகிப்பால்இ "என்னைத் தொடர்ந்து அவள் அந்த நிச்சயமற்ற உணர்வுக்குள் வந்தாள்" (2008:5) எனச்

சீர்மியரால் தீர்மானிக்க முடிகிறது. "ஆமி பிடிச்சு எங்கையும் அடைச்சு வைச்சிருக்கிறானோ அல்லது ஆள் இல்லையோ..." (2008:5) என்று சீர்மியநாடி கூறஇ "அல்லாட்டில்...?" எனச் சீர்மியர் திறந்த வினாவை (Open question) நீட்டுகிறார். அதற்குச் சீர்மியநாடிஇ "எங்கையும் வேற கலியாணம் செய்துஇ என்னையும் பிள்ளையையும் மறந்துவிட்டாரோ?" (2008:5) என்ற ஐயமும் கவலையும் கலந்தொட்டிய ஏக்க வினாவையே பதிலாகச் சீர்மியருக்குக் கையளிக்கிறார்.

அதைத்தொடர்ந்துஇ தனது யோசனைஇ அதனால் உருவாகிய தலையிடிஇ சமைக்க இயலாதநிலை என்பவற்றைச் சீர்மிநாடி கொட்டித் தீர்த்துஇ "எனக்கு இருபத்தேழு வயதாகுது... நான் சாப்பிடாமல் கிடப்பன். அது ஐஞ்சு வயசுப் பாலன்... வயித்தைச் சுருட்டிக் கொண்டு கிடவெண்டால் கிடக்குமோ? நீங்கள் சொல்லுங்கோ அம்மா?" (2008:5) என்று கேட்கஇ சீர்மியர் "சின்னப்பிள்ளை பசி இருக்க மாட்டுது" (2008:5-6) என்ற தெரிந்தெடுத்த பிரதிபலிப்பைக் காட்டுவதால்இ வெம்மைநிலை சற்றுக் குளிராகிறது.

சீர்மியநாடி தான் வைத்தியசாலைக்குச் சென்றதையும்இ அங்கு மருத்துவர் மனக்கலையே வருத்தம் எனக் கூறிச் சீர்மியரிடம் வழிகாட்டியதையும் கூறும்போதுஇ சீர்மியநாடி ஓரளவு தன்னிலை அறிபவராக (Self-conscious patient) இருப்பதை அவதானிக்க முடிகிறது. சீர்மியர்இ சீர்மியநாடியின் உள்ளார்ந்த வெளிப்படுத்தல்களின் துணைக்கொண்டுஇ அவரது மனநிலை குறித்த ஒரு புறவரைபை (Internal Frame of Reference) அவ்வப்போதான உரையாடல்கள் மற்றும் வெளிப்பாடுகள் மூலம் ஏற்படுத்திக்கொள்வது அவசியமானது. அதனையேஇ "நிச்சயமற்ற தன்மை. இழப்பு. கணவரின் இழப்பை இவள் மனம் இன்னும் முற்றாக ஏற்றுக் கொள்ளவில்லை. இழப்பின் துயரத்தை வெல்லும் படிகளுக்கூடாக இவளை மெதுவாக அழைத்துச் செல்ல வேண்டும் என்று நான் மனதில் எழுதிக் கொண்டேன்" (2008:6) எனச் சீர்மியர் கூறுவது காட்டிநிற்கிறது. இவ்வாறு சீர்மியநாடியின் எதிர்மறையான சுய காட்சி அடுக்குகளை (Negative Self Labels) சீர்மியர் கதைப்போக்கில் ஆங்காங்கு குறித்துச் செல்வதும் கவனத்திற்குரியது.

4.5 சீர்மியர் - சீர்மியநாடி சந்திப்பு: எதிர்மறை உளமூட்டம்

இரண்டாவது பகுதியின் நான்காவது பிரிவு ஒரு சிறிய பகுதி. இதுஇ இரு முக்கியமான அம்சங்களைப் பேசுகிறது. சீர்மியநாடியின் சகோரத ஆதரவின்மை மற்றும் வெறுப்பு அதனால் விளைந்த மன உளைச்சல் ஆகியவற்றைப் பேசுவது ஓர் அம்சம். போரால் ஊரிழந்து போய் அதனால் உண்டாகிய ஏக்கம்இ துயரம் ஆகியவற்றைப் பேசுவதுஇ இரண்டாவது அம்சம். இந்த இரண்டாவது அம்சம் ஐந்தாவது பிரிவின் கதைப்போக்கிற்குத் தொடக்கமாகவும் அமைகிறது.

உறவுநிலை மற்றும் பல்வேறு சூழற் காரணிகளால் சீர்மியநாடி எதிர்மறையான உளமூட்டம் (Negative Temper) பெற்றிருக்கும் வாய்ப்பு அதிகமாக உள்ளது. அந்த நிலைஇ அவரை ஆதரவு அற்றுப்போன நிலைக்கு அதிகமாகத் தள்ளிவிடுகிறது. அதனை அவர் வாய்மொழியூடு கண்டுகொள்வதும் சீர்மியருக்கு அவசியமானது. இக்கதையில் வரும் சீர்மியநாடிஇ "இந்தப் பிள்ளைக்கு இரண்டு இடியப்பம் அவிச்சுக் குடுப்பம் எண்டு நேற்று அக்கா வீட்டிலை ஒரு விறகுத் துண்டு எடுத்துப் போட்டன் எண்டு அவ என்னவெல்லாம் பேசினா தெரியுமே? நான் அறுதலியாம்... மூதேசியாம்... நானும் பிள்ளையும் பட்டினி கிடக்க அவைக்குச் சாப்பிடுற சாப்பாடு என்னெண்டு செமிக்கும்?" (2008:6-7) என்று கூறுகிறார். இதுஇ

அவர் தனது சகோதர உறவுகளால் அதிகமான எதிர்மறை உளமூட்டம் பெற்றுள்ளார் என்பதையே காட்டி நிற்கிறது.

உளச்சுமையில் உள்ள சீர்மியநாடி ஒருவர்இ தனது முன்னைப் பெருமைஇ செழிப்பு ஆகியவற்றிலும் தன்னை மீளவும் மீளவும் இழந்தவாறு இருப்பார். சிலவேளைகளில் அவற்றை நினைவுகூருதலின் வாயிலாக ஒருவித பெருமையையுஇ அல்லது ஓர்மத்தை அவ்வப்போது வெளிக்காட்டியும் கொள்வார். தனது தனித்துவத்தின் இழப்பிற்கு *(Loose of Own Identity)* அவற்றின் இழப்பும் காரணம் என்று அதிகமாக எண்ணுவார். சீர்மியநாடி தனது தனித்துவத்தில் *(Identification)*ஒன்றிப்பதை இது உணர்த்துகிறது. இக்கதையில் வரும் சீர்மியநாடிஇ *"மாவிட்ட புரத்திலை எங்கடை வீட்டிலை இருந்த காவோலைகாணும் சமைக்க" (2008:6-7)* என்று இப்பிரிவிலும்இ *"அங்கை இருந்த வெத்திலைத் தோட்டம் காணும் எங்கடை சீவியத்துக்குஇ கமுகும்இ தென்னையும்இ வெத்திலைத் தோட்டமும் சுத்தி இருக்க எவ்வளவு செல்வமாய் இருந்தது எங்கடை வீடு!" (2008:8)* என்று ஐந்தாவது பிரிவிலும் கூறும் கூற்றுக்கள் இதனைப் புலப்படுத்துகின்றன.

சீர்மியநாடி பேசிக்கொண்டிருக்கும்போதுஇ கட்டுப்பாடுகளை இழந்து சென்றுவிடும் நிலையும் உண்டு. அவ்வாறான நிலையில்இ அவர் பெரும்பாலும் அழத்தொடங்கிவிடுவார். இதனைஇ உளப்பிசிறல் *(Hysterical)* எனக் குறிப்பிடுவர். சீர்மியநாடி பேசமுடியாது அழுதவாறு இருத்தலை அது குறிக்கும். இக்கதையிலும்இ *"ஒருவகை நிர்க்கதியான உணர்ச்சியுடன் மீண்டும் அவள் கண்கள் நீரைச் சுரந்தன. இப்போது சற்று நீண்ட நேரமாய் அழுதபடி இருந்தாள்" (2008:7)* எனச் சீர்மியநாடியின் நிலை குறித்துச் சீர்மியர் கூறுவது இதனையே புலப்படுத்துகிறது.

4.6 சீர்மியர் - சீர்மியநாடி சந்திப்பு: மனவடு உணர்வுக் கொட்டுகை

இரண்டாவது பகுதியின் ஐந்தாவது பிரிவு, சீர்மிய நாடி இமைகளை மூடித் திறந்து, மனதில் காணும் காட்சிகளை விவரிப்பதாய் அமைகிறது. பின்னோக்கு உத்திமூலம் கதைசொல்லி அதைச் சொல்ல முயன்றாலும், இங்கு, சீர்மியநாடியின் உணர்வுக் கொட்டுகை *(Emotional outpouring)* என நோக்குதலே பொருத்தமானது. சீர்மியநாடி, தனது கடந்த கால நிகழ்வை, சமகாலத்தில் கொட்டித் தீர்த்தலாக இதனைக் கருதவேண்டும். *"நீங்கள் மனதிலை காணுற அந்தக் காட்சியைப் பற்றி எனக்கும் சொல்லுறியளா....?" (2008:7)* என்ற சீர்மியரின் கேள்விக்கு, சீர்மியநாடியின் பதிலாக அமையும் விவரிப்பு வருமாறு:

"அண்டைக்கு விடிய ஐந்தரை இருக்கும். தூரத்தில் பொம்பர் ஒண்டு பதிஞ்சு குண்டு போட்டுது. ஆறுமணிக்குப் படபடவெண்டு சூடு கேட்டுது. பிள்ளைக்கு அப்ப ஒரு வயது. பிள்ளை படுத்திருந்த இடத்துக்குப் பக்கத்திலை ஒரு சன்னம் வந்து விழுந்திது. கோயிலடிக்குப் போன இவர் ஓடி வந்தார். ஆமிக்காரன் கோயிலடிக்கு வந்திட்டான் எண்டார். 'பிள்ளையைத் தூக்கு' எண்டார். அவர் சைக்கிளை எடுக்க, நான் பிள்ளையோடை சைக்கிளிலை ஏறினேன். அம்மா மாட்டடியிலை சாணகம் அள்ளிக் கொண்டு நிண்டது, 'அம்மா ஓடிவாணை' எண்டு கத்திக் கொண்டுதான் சைக்கிளில் ஏறினேன். எங்களுக்கு முன்னாலையும் பின்னாலையும் சன்னங்கள் விழுது. எப்படி வந்தனாங்கள் எதாலை வந்தனாங்கள் எண்டு

தெரியாது. அம்மா வரவில்லை. வெத்திலைத் தோட்டத்துக்குள்ளே நிக்கிறா எண்டு பின்னாலை வந்த ஆக்கள் சொன்னவை. கொஞ்ச நேரத்திலை அவ்விடத்தில் பொம்பர் அடிச்சுது..." (2008:7-8)

யாழ்ப்பாணத்தின் போர்க்காலச் சூழலை மையமாகக்கொண்டு, உளவியல் ஆய்வாளர் தயா சோமசுந்தரம் அவர்கள் எழுதிய 'மனவடு - நெருக்கீட்டின் உளவிளைவுகளும் அவற்றை எதிர்கொள்ளும் முறைகளும்' (1993) என்ற நூலுக்கு எழுத்தாளர் நந்தி அவர்கள் (செ. சிவஞானசுந்தரம்) எழுதிய முன்னுரையின் ஒரு பகுதியை, மேற்குறித்த சீர்மியநாடியின் கூற்றை மேலும் வலுப்படுத்த, இங்கு தருவது பொருத்தமானது: "வான் ஊர்திகளின் அச்ச ஓசைகள், குண்டு வீச்சு, எறிகணைகளின் நாசங்கள், வாழ்வின் துயரத்தில் அகதிநிலை, சித்திரவதை, பாலியல் வன்முறைகள், ஊரடங்கு, உணவுப் பற்றாக்குறை, பொருளாதாரக் கஷ்டம், அழிவுகளிலே அகால மரணங்கள், வீடு, சொத்து, தொழில் இழப்பு - இவற்றின் தாக்கம் - மனத்தின் எதிர்த்தாக்கம், இத்தியாதி" (1993:எனை). இப்பகுதியை வாசிப்போர், இக்கதையில் சீர்மியநாடிக்குப் போரினால் ஏற்பட்ட எதிர்மறைப் பாதிப்பினைப் புரிந்துகொள்வர். அது, இக்கதையில் கலையாக்கத்துடன் வரும்போது, அதிக தாக்குறவு கொண்டதாகவும் அமைந்துவிடுகிறது.

4.7 சீர்மியர் - சீர்மியநாடி சந்திப்பு: நலந்தரும் முரண்பாடு

இரண்டாவது பகுதியின் ஆறாவது பிரிவு, சீர்மியநாடியின் இடம்பெயர்ந்த வாழ்வின் அவலத்தை விரிக்கிறது. முன்னைய பிரிவுகளின் நீட்சியும் விரிவும்கொண்ட கதைப் பகுதியாக இது அமைகிறது. கணவரது இருப்பின் நிச்சயமின்மை குறித்த உள உளைச்சலுடன் சீர்மியநாடியின் உள உருக்குலைந்திருப்பது இப்பிரிவு உரையாடல்களில் வெளிப்படுகிறது.

"பிறகு கொஞ்ச நாள் பிள்ளையார் கோயிலடியில் தான் படுத்தனாங்கள். ஒருநாள் இவர் சொன்னார், இனி இப்பிடி இருந்து என்ன செய்யிறது? வெங்காயம் கட்டிக் கொண்டு வவுனியாவுக்குப் போட்டுவாறன் எண்டு. நானும் பிள்ளைக்குச் சாப்பாடு குடுக்கத்தானே வேணுமெண்டு ஓமெண்டன். பிள்ளையக் கவனமாய் பாத்துக்கொள், வாறன் எண்டு சொல்லிட்டுப் போனார். வரேல்லை" (2008:9) எனச் சீர்மியநாடி கூறுவதிலிருந்து, கணவரது நிச்சயமின்மைக்குத் தானும் போய்வரச் சம்மதித்துள்ளதை வெளிப்படுத்துகிறது. அதனால், அவர் தேவையற்ற பழி உணர்வைச் (Burden of Unnecessary guilt) சுமப்பதையும் புலப்படுத்துகிறது. அந்தப் பழி உணர்வு, அவரையே உள ரீதியாகத் துரத்தும் பழி உணர்வாக (Repulsive guilt) இப்போது பெருத்திருக்கிறது என்பதைச் சீர்மியர் உணர்வதற்கு அதிகவேளை எடுக்காது. அதனால், சீர்மியர், இச்சூழ்நிலைக்குப் பொருத்தமாக, "அவர் இனிமேல் வரமாட்டார் எண்டு நினைக்க எப்படி இருக்கு உங்களுக்கு?" (2008:9) என்ற திறந்த வினாவைச் சீர்மியநாடியிடம் கேட்கிறார். அவ்வாறு கேட்கும்போது, "உடைந்து நொருங்கி உருக்குலைந்து போய் இருந்த அவளின் கைகளைப் பற்றியபடி கேட்டேன்" (2008:9) என்றும் சீர்மியர் கூறுகிறார். இங்கு சீர்மியரின் 'கைபற்றல்' என்பது, வினாவின் தாக்கத்தை மட்டும் காட்டவில்லை. சீர்மியநாடியின் 'மனக் கொட்டல்' பற்றிய சீர்மியரின் எதிர்பார்ப்பையும் காட்டுகிறது. இந்தச் செயற்பாடு சீர்மியரின் வினைத்திறன் மிகு ஆழ்ந்து கேட்டலின் (Active Listening) சிறப்பாகவும் அமைகிறது. அத்துடன், சீர்மியரது சூழலின் கீழ்நிலையிலிருந்து (Keeping a Low Profile) கேள்வி கேட்கும் திறனானது, சீர்மியநாடி தன் உள்ளத்தை முழுமையாக வெளிப்படுத்தும் வகையிலும் அமைந்திருக்கிறது.

சீர்மியரின் வினாவுக்கு, சீர்மியநாடி, 'எனக்கு அவரிலை சரியான கோபம் வருது..." (2008:9) என 'வாழையிலை கிழிப்பது போன்ற' பதிலைச் சொல்கிறார். "என்ன கோபம்?" (2008:9) என்ற சீர்மியரின் திறந்த வினாவுக்கு, "என்னையும் பிள்ளையையும் தனிய விட்டிட்டு ஏன் போவான் எண்டு!" (2008:9) என்று சீர்மியநாடி பதில் சொல்கிறார். இத்தகைய சீர்மியநாடியைப் பிரக்ஞை நிலையில் தக்கவைத்தால் (Consciousness stabilization) சீர்மியவாக்கத்தில் மேலும் முன்னோக்கி நகரலாம் எனச் சீர்மியர் நம்புகிறார். அவர், சீர்மியநாடியின் மன ஓட்டத்தினை அறிந்து, நேர்முகமான மேம்பாட்டுக்கு அவரை அழைத்துச் செல்வதற்கான, தன்னமைவாக்கற் செயல் முறையில் (Assimilation Process) இறங்குகிறார். இந்த நேரத்தில் அவர் முரண்பாட்டினை (Confrontation) ஒரு உபாயமாகக் கையாள்கிறார். அந்த உபாயம் நலம் தரும் முரண்பாடாக (Beneficial Confrontation) அமைகிறது. இது, சீர்மியநாடியின் துலங்கலை அறியவும் மறுதலிப்புக்களைக் கண்டறியவும் துணைசெய்ய வல்லது.

சீர்மியர், சீர்மியநாடியை நோக்கி, "அவர் ஒரு வேளை இந்த உலகத்திலையே இல்லை எண்டால்..." (2008:9) என்று கேட்கிறார். அது நலம் தரும் முரண்பாட்டுக் கேள்வி. அதற்குச் சீர்மியநாடி, "அப்பவும் கோவம் தான்" (2008:10) என்கிறார். "எப்பிடி?" (2008:10) சீர்மியர் கேட்க, "ஏன் என்னை இப்பிடி விட்டிட்டுச் செத்துப் போனாயெண்டு?" (2008:10) என்று சீர்மியநாடி பதில்சொல்கிறார். அவரின் இறுதிப் பதிலைச் சீர்மியத்தின் மொழியில் குழந்தைமை (Regression) நிலையின் பதில் எனலாம். உளமுறிவுக்கு உள்ளாகும் ஒருவர் குழந்தைக்குரிய செயலையும் மொழியையும் கொள்ளும் நிலையை இது குறிக்கிறது.

சீர்மியநாடியின் இறுதிப் பதிலை கருத்திற்கொண்டு, "தன் உணர்வுகளைச் சரியாக அடையாளம் கண்டு கொண்ட அவளின் கண்கள் இப்போது சிவப்பு அடைந்தன" (2008:10) எனச் சீர்மியர் கூறும் கூற்று, தன்னமைவாக்கற் செயலினூடு கையாண்ட நலம் தரும் உபாயத்தின் பயனாகவே வெளிப்படுகிறது. "உங்களுக்கு அவரிலை சரியான கோபம். ஆனால் இல்லாத ஒருவரிலை கோபப்பட்டு என்ன செய்வீங்கள்?" (2008:10) என்ற சீர்மியர் வினாவுக்கு, 'ஓ... அப்பிடி நினைக்கேக்கை ஏதோ குற்றம் செய்யிற மாதிரி இருக்கு!" (2008:10) என்ற சீர்மியநாடியின் பதில், இப்போது அவள் உளச்சுமையின் நெருக்குவாரத்திலிருந்து சற்று வெளியேறியிருக்கிறாள் என்பதைக் காட்டுகிறது. அதன் புலப்பாடுதான், "எனக்குக் கொஞ்சம் தண்ணி தாறீங்களா குடிக்க?" (2008:10) என்று கேட்பது. "நான் கொடுத்த ஒரு கப் நீரை ஒரே மூச்சில் குடித்து முடித்தாள்" (2008:10) என்று சீர்மியரும் சொல்கிறார். இந்தச் சூழலில், சீர்மியநாடியின் அழுத்தத்திலிருந்து வெளியேறிய (Emotional Release) நிலையை ஓரளவு தரிசிக்க முடிகிறது.

4.8 சீர்மியர் - சீர்மியநாடி சந்திப்பு: பிரச்சினை நீக்கல் சுழல்

இரண்டாவது பகுதியின், ஏழாவது பிரிவு, சீர்மியர் சீர்மிய நாடியின் அனைத்துப் பிரச்சினைகளையும் அடையாளம் கண்டுவிட்டதை உணர்த்துகிறது. இந்தப் பிரிவு மூன்று நிலைகளில் முக்கியத்துவம் பெறுகிறது. அவற்றைத் தனித்தனியே நோக்கலாம்.

முதலாவதாக, சீர்மியநாடி முன்னே சீர்மியர் கொடுக்கும் தேர்வு வினா (Chosun question). சீர்மியநாடியுடன் நிகழ்த்திய உரையாடல் மற்றும் அவதானிப்பு மூலமாக, அவரின் உளச்சிக்கல் தொடர்பாக, தான் அறிந்த காரணங்கள் அனைத்தையும் நிரலாக்கி சீர்மியர் பின்வருமாறு வினவுகிறார்.

"உங்களுக்கு அவர், வீடு, காணி எல்லாம் ஒரே காலத்திலை இல்லாமல் போனது தாங்க முடியாததாலை அவர் உங்களை விட்டிட்டுப் போனது கோவம். இல்லாத ஒருவரோடை கோபிக்கிறன் எண்டு ஒரு குற்றப்பழி உணர்வு, பிள்ளையை எப்பிடிப் படிப்பிக்கிறது எண்டு ஒரு நிச்சயமில்லாத நிலை... இதுகளிலை எது உங்களைக் கூடப் பாதிக்குது?" (2008:11). இவ்வினாவிற்குச் சீர்மியநாடி, 'ஓம் அம்மா, எல்லாம் சேர்ந்து ஒரே தலையிடி. இந்தப் பிறவியிலை இந்தத் தலையிடி மாறாது, செத்தால் என்ன எண்டிருக்குச் சிலவேளை" (2008:11) எனக் கூட்டுவிடை (Compositive Answer) சொல்கிறார். சீர்மியநாடி, தனக்கு ஏற்பட்ட உளப் பிரச்சினைகள் யாவற்றையும் ஒன்றுடன் ஒன்று இணைந்த கூட்டுப் பிரச்சினையாகக் (Interconnected collective problem) காண்பதனாலேயே அவர் அவ்வாறு கூறுகிறார். அவர் கூட்டுப் பிரச்சினைகளால்; உளத்தாக்கம் (Psychological impact of collective problems) உற்றிருக்கிறார் என்பதைச் சீர்மியர் அறிந்திருக்கும் நிலையில் பல்நிலைப் படிகளில் உள ரீதியாக அவரை விடுதலை செய்து சுகமளிக்க முனைவார்.

இரண்டாவதாக, பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்காது சீர்மியநாடி, உளப்பிரச்சினைச் சூறாவளியில் ஒதுங்கி அந்நியமாதல் (Alienation) நிலைக்கு ஆளாதல். இது ஒருவிதத்தில் அவரே ஒதுங்கும் உளநிலை (Detached state of mind) ஆகும். இதனை, பின்வாங்கும் உளநிலை (Retreating state of mind) என்றும் குறிப்பிடுவர். சுநுவு என்று அழைக்கப்படும் பகுத்தறிவு எழுச்சி தூண்டற் சிகிச்சையில் (Rational Emotive Therapy) சீர்மியநாடியிடம் இருக்கும், தாம் தோற்றவராகக் கருதும் எண்ணத்தை (Self Defeating Outlook) மாற்றியமைக்கச் சீர்மியர் முயலவேண்டும் என்பது மீளமீள வலியுறுத்தப்படுகிறது.

இக்கதையில், சீர்மியநாடி தான், "செத்தால் என்ன எண்டிருக்குச் சிலவேளை" (2008:11) என்று கூறிவிடுகிறார். இது தனது தேவைகள் நிறைவேறாமையால், உள்ளிருந்து உறுத்தும் முரண்பாடுகளால் (Internal Conflicts) சிர்மியநாடி உருவாக்கிக்கொள்வது. இது முன்னர் விளக்கிய தோற்றுப்போன மனநிலையின் வெளிப்பாடு. இதைக் கேட்டதும், சீர்மியருக்கு, 'கனியாத நாவல் பழம் தின்றதுபோல் தொண்டை அடைப்பது போல' இருந்ததால், "ஓகோ... தற்கொலை எண்ணம் வேறு இருக்கிறதா?" (2008:11) என்று எண்ணி, "அப்படி எண்டால் உங்கடை பிள்ளை?" என்று நேரடி வினாவையே கேட்டுவிடுகிறார். அதற்குச் சீர்மியநாடி தன்னிடமுள்ள மீதி ஆசையையும் இன்னும் தான் வாழவிருக்கும் நோக்கத்தையும் வெளிப்படுத்திவிடுகிறார். சீர்மியநாடி, "அதை நினைச்சுத்தான் இன்னும் சாகாமல் இருக்கிறன். அந்தப் பிள்ளையை ஐயோ... நான் என்னெண்டு வளர்க்கப் போறன்? என்னண்டு படிப்பிக்கப் போறன்... அது எங்கை எண்டாலும் நல்ல பள்ளிக் கூடத்திலை படிக்க வேணும்... ஆனால் என்னட்டை இப்ப மிஞ்சியிருக்கிறது கவலையும், வறுமையுந்தான்... இதுதான் என்னை அதிகம் பாதிக்குது..." (2008:11) என்று கூறிவிடுகிறார்.

மூன்றாவதாக, சமாதானத்துடன் கூடிய ஒரு ஒத்துணர்வு நிலைப்பாட்டுப் புள்ளியில் (Sympathetic point) சீர்மியர். சீர்மியநாடி ஆகிய இருவரும் இணைதல். இது, இக்கதையில் சீர்மியரின் சீரிய வகிபங்கையும், சீர்மியநாடியின் நேர்மறை மேம்பாட்டையும் காட்டுகிறது. "நீங்கள் சொல்லுறதெல்லாம் எனக்கு விளங்குது. நாங்கள் அடிக்கடி சந்திப்பம், கதைப்பம். இரண்டு பேருமாச் சேர்ந்து மெல்ல மெல்ல உங்கடை பிரச்சினைகளைத் தீர்க்கப் பாப்பம்" (2008: 12) என்று சீர்மியர் கூறுகிறார். அதற்குச் சீர்மியநாடி, 'அம்மா, உங்களோடை கதைச்சது எனக்கு நல்ல ஆறுதலாக இருக்கு. என்ரை பிள்ளையை ஒரு நல்ல பள்ளிக் கூடத்திலை சேர்க்க உதவி செய்துவிடுங்கோ..." (2008:12) என்று கூறுகிறார்.

இக்கதையில், சீர்மியநாடி இவ்வாறு கூறும்போது, அவர் விரைவாகவே குணமாகுவார் என நீங்கள் சடுதியாக நினைத்துக்கொள்ளும் வாய்ப்பு உள்ளது. கதைசொல்லி, "செப்டெம்பர், ஒக்டோபர், நவம்பர் மாதங்கள். தேதிகள் அலங்கோலமாயின" (2008:12) என்ற கதைசொல்லியின் கூற்றினால் தாமதம் என நீங்கள் நம்பலாம். பாடசாலையின் இறுதித் தவணையான அம்மூன்று மாதங்களிலும், பிள்ளையைப் பாடசாலையில் சேர்ப்பது இயலாத காரியம். கடினம். அதற்கடுத்த மாதம் டிசம்பர். இறுதித் தவணை விடுமுறை அல்லவா! அப்போ, "இழப்பின் படிகளுக்கூடாக இவளை அழைத்துச் செல்லல், கோப உணர்வை வெளியேற்றல், குற்றப்பழி உணர்விலிருந்து விடுவித்தல், தானே குடும்பத் தலைவியாக அமர்ந்து பிள்ளையை வழி நடத்தலாம் என்று உணரச் செய்தல், இறுதியாகப் பிள்ளை ஒரு நல்ல பாட சாலையில் சேர உதவுதல் - எனக்குள் பல காட்சிகள் படமாய் விரிந்தன" (2008:12) எனச் சீர்மியர் எண்ணும் பிரச்சினை நீக்கச் சுழலுக்கு (Problem Solving Cycle) என்ன பிரச்சினை? அவ்வாறு அவர் எண்ணும் எண்ணத்தின் தடை எது?

4.9 சீர்மியர் - சீர்மிய அனுசரணையர் முரண்படு சந்திப்பு

இப்பகுதி கதையின் இறுதிப் பகுதி. கதைப்போக்கின் மூன்றாவது பெரும்பகுதி. இந்தப் பகுதியின் களம் அதிபர் அறை. மறுபடியும் சீர்மியருக்கும் சீர்மிய அனுசரணையருக்குமான சந்திப்பு. ஆனால், இது முரண்படு சந்திப்பு. இந்தப் கதைப்போக்கின் சூழல் எப்படி இருக்கும் என்பதை, "வரண்ட காற்று மண் புழுதியையும் சருகுகளையும் வாரி இறைத்தபடி சுழன்று வந்து கொண்டிருந்தது" (2008:12) என்று கதைசொல்லி பூடகமாக அவிழ்த்துவிடுகிறார்.

"உங்கடை பள்ளிக் கூடத்திலை இந்தப் பிள்ளையைச் சேத்தால் உதவியா இருக்கும். அவ எப்பிடியும் கஷ்டப்பட்டுப் படிப்பிச்சிடுவா" (2008:12) என்ற சீர்மியரின் வேண்டுகோளுக்கு, 'ஓ... அதுக்கென்ன? உங்களுக்குச் செய்யாத உதவியா?, சேர்க்கலாம், இப்படியான பிள்ளைகளைச் சேர்க்கத்தானே வேணும். அதுவும் எங்கடை அயல் கிராமம் மாவிட்டபுரம்.... கட்டாயம் செய்ய வேணும்...." (2008:13) என்றெல்லாம் தனது விம்பம் விசுவரூபம் எடுக்கும் வகையில், ஐஸ் ஒழுகக் கூறிச் செல்லும் சீர்மிய அனுசரணையர், "ஒரு ஐயாயிரம் ரூபா தந்தியளெண்டால் எங்கடை பாடசாலை அபிவிருத்திச் சபைக்கு உதவியாக இருக்கும். நான் மற்றவை சிலரிட்டைக் கூடவும் வாங்கி இருக்கிறன். நீங்கள் ஒரு ஐஞ்சு தாங்கோவன்...." (2008:13) என்றும் கூறிவிடுகிறார்.

இந்தக் கதையின் ஆரம்பத்தில், "என்ன விஷயம்?" (2008:1) என்று சீர்மிய அனுசரணையர் கேட்கும் கேள்வி, கதையின் முடிவில், அவரது பணம் தேடும் சமாச்சாரமாய் வந்து நிற்கிறது. சீர்மியரின்

எதிர்பார்ப்புச் சிதறும்போது, ஆரம்பக் கேள்வி, சாதாரண கேள்வியாய் மடிந்து போகிறது. அப்படியாயின், அது 'புதினம் விசாரித்தல்' கேள்வியோ! இன்னும், கதையின் ஆரம்பத்தில், ''சொல்லுங்கோ'' (2008:2) என்ற சீர்மிய அனுசரணையரின் விசாரிப்பு, அக்கறையுடன் கேட்பதல்ல. அது, தனக்குத் தேவையில்லாதது என்று எண்ணிக்கொண்டும் கேட்கும் யாழ்ப்பாணத்தாரின் 'விடுப்புக் கேட்டல்' என்பதன் உச்சநிலை!

கதையின் ஆரம்பத்தில் சீர்மிய அனுசரணையராகக் (அதிபர்) காட்டப்படும் பாத்திரம், கதையின் முடிவில் பணம் வேண்டு பதிக பாராயணத்தால், சீர்மியநாடியின் பெயரைச் சீர்மியர் அவசியமற்றுக் கூறத்தேவை இல்;லை என்பதை உறுதிப்படுத்திவிடுகிறது. கதையின் ஆரம்பத்தில் கௌரவத்துக்குரிய பாத்திரமாக அறிமுகமாகும் சீர்;மிய அனுசரணையர் (அதிபர்) பாத்திரம், கதையின் இறுதியில், சீர்மியத்தின் தாரதம்மியம் புரியாத, தவிச்ச முயல் அடித்த பாத்திரமாக வீழ்ந்து கிடக்கிறது. அத்தோடு, இளைப்பவரை வைத்துப் பிழைக்கும் குறியீட்டுப் பாத்திரமாகவும் வீழ்ந்து கிடக்கிறது. சீர்மியநாடியின் மனதைக் கழுவிக் குணமாக்கும் உளச்சேவையாளர் சீர்மியர். அந்தச் சீர்மியரின் மனதையே தனது இலாபத்திற்குக் கழுவ முயலும் அபத்தமான சமூக நிலவரத்தையே கதையின் இறுதிப் பகுதி படம்பிடித்துக் காட்டுகிறது.

5.முடிவுரை

இது சீர்மியக் கதை என்பதால், இங்கு அவர் மொழிமீது கொள்ளும் கரிசனை என்பது, பொருண்மை குறித்த நிதானம் பற்றியதாக உள்ளது. அவர் பயன்படுத்தும் உவமை, உருவகம் முதலிய பல்வேறு அணிகள், இதுவா அதுவா எனச் சொல்ல இயலாது, கதைப் போக்கின் தன்மைக்கும் சூழலுக்கும் ஏற்ப, அழகியல் விபத்துக் கொள்வது அவரின் கலையாற்றலைப் புலப்படுத்துகிறது. மொழியியலில், Paralinguistics என்பது, பொதுவாகச் சொற்சார்பற்ற தொடர்பாடல் அம்சங்களைக் (Nonverbal aspects of communication) குறித்து நிற்கும். பேச்சோடு இணைந்து வருகின்ற தொனி, ஏற்ற இறக்கங்கள், உடல் அசைவுகள் எல்லாவற்றையுமே அது உள்ளடக்கி நிற்கும். கதைசொல்லியும் பாத்திரத்தின் இயல்பு, சூழல், பேசும் தருணம் ஆகியவற்றின் தன்மை அறிந்து அவற்றைச் சிறப்புறக் கையாண்டுள்ளார். சீர்மியநாடியிடம் பிரச்சினை தொடர்பான தெளிவை ஏற்படுத்தும்போதும், பிரச்சினைக்குரிய தீர்வை இனங்காணும்போதும், இலக்குகளையும் நோக்கங்களையும் வடிவமைக்கும்போதும் மட்டுமல்லாது, சீர்மியநாடியின் தனியாள் கூர்மொழிவிலும் (Personal Issues), சீர்மியரின் திடநிலைக்கூர் மொழிவிலும் (concrete issues) கதைசொல்லியின் மொழி கச்சிதத் தன்மை பெற்று மிளிர்கிறது. அது, சீர்மியநாடியின் நலனில் கதைசொல்லி கொண்ட உள்ளார்ந்த அக்கறையினால் (Genuineness) நிகழ்ந்தேறியிருக்கிறது. அந்தவகையில், இச்சிறுகதையை 'இருவழிச் சீர்மியக் கதை' எனச் சுட்டலாம். அதாவது, சீர்மிய நாடியை நேரடியாகவும், அதற்கு எதிரான சமூகத்தை மறைமுகமாகவும் கழுவுவதால், இச்சிறுகதையை அவ்வாறு சுட்டுவதுதான் பொருத்தமானது.

உசாத்துணை நூல்கள்

கல்லர், ஜானதன். (2005). இலக்கியக் கோட்பாடு - மிகச் சுருக்கமான அறிமுகம் (மொ.பெ), அடையாளம், புத்தாநத்தம்.

சண்முகம், எஸ். (2021). மொழியின் மறுபுனைவு, யாவரும் பதிப்பகம், சென்னை.

சோமசுந்தரம், தயா. (1993). மனவடு – நெருக்கீட்டின் உளவிளைவுகளும் அவற்றை எதிர்கொள்ளும் முறைகளும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

ஃப்ரீலேண்ட், சிந்தியா. (2005). கலைக் கோட்பாடு - மிகச் சுருக்கமான அறிமுகம் (மொ.பெ), அடையாளம், புத்தாநத்தம்.

ஃபிஷர், எர்னஸ்ட். (2014). கலையின் அவசியம் (மொ.பெ), சென்னை: பாரதி புத்தகாலயம்.

நுஃமான், எம். ஏ. (2017). சமூக யதார்த்தமும் இலக்கியப் புனைவும், காலச்சுவடு, நாகர்கோவில்.

பஞ்சாங்கம், க. (2003). நவீனக் கவிதையியல்: எடுத்துரைப்பியல், காவ்யா, சென்னை.

பட்லர், கில்லியன்., மெக்மனஸ், ஃபரிதா. (2005). உளவியல் - மிகச் சுருக்கமான அறிமுகம் (மொ.பெ), அடையாளம், புத்தாநத்தம்.

மகேந்திரன், கோகிலா (2008). மனதைக் கழுவும் மகா சமர்த்தர்கள் - சீர்மியச் சிறுகதைகள், மணிமேகலைப் பிரசுரம், சென்னை.

மகேந்திரன், கோகிலா (2020). சீர்மியத்தில் சிறப்பு முறைகள், சோலைக்குயில் அவைக்காற்று கழகம், தெல்லிப்பளை.

ஜெயராசா, சபா (2002). கல்விச் சீர்மியம், போஸ்கோ வெளியீடு, நல்லூர்.

Corey, Gerald., (2013). ***Theory and Practice of Counseling and Psychotherapy****, Books/Cole, USA.*

Gladding, Samuel T. (2013). ***Counseling – A Comprehensive Profession****, Pearson Education, America.*

McElory, Siobhan., (2004). ***Art Therapy and Political Violence – with Art, without illusion,*** *'A soldier's story – An Art therapy and intervention in Sri Lanka, Routledge, London.*

Mcniff, Shaun., (1992). ***Art as Medicine – Creating a Therapy of the Imagination,*** *Shambhala Publications, London.*

Richards, I. A., (1929). ***Practical Criticism****, A Harvest Book, London.*

சங்க இலக்கியங்களில் விறலியின் சமூகப் பொருளாதார நிலை: கலை வெளிப்பாடுகளுடனான ஒரு பார்வை

[1]*Alagiah Vimalaraj* & [2]*Thurainathan Sapeethan*

[1&2] *Department of Dance, Drama & Theatre,*

Swami Vipulananda Institute of Aesthetic Studies,

Eastern University, Sri Lanka.

[1]vimalaraj72@gmail.com

ஆய்வுச் சுருக்கம்:

இந்த ஆய்வு, சங்க இலக்கியத்தில் 'விறலி' என்ற பெண் கலைஞரைப் பற்றிய மரபான அணுகுமுறைகளை மறுஆய்வு செய்து, அவளை பாணனின் துணை அல்லது கவிஞனின் வர்ணனைக்குரிய செயலற்ற அழகியல் பொருளாக மட்டும் காணும் பார்வைகளை நிராகரிக்கிறது. மாறாக, ஒரு தன்னுணர்வு கொண்ட தொழில்முறைப் பெண் கலைஞராக 'விறலி' இயங்கியதை இவ்வாய்வு நிறுவுகிறது. சங்ககால சமூக அடுக்கமைவில், தனது குடி (பாணர், கூத்தர்) மற்றும் பாலினம் (பெண்) ஆகிய அடிப்படைகளால் அடித்தட்டில் வைக்கப்பட்டிருந்த போதிலும், விறலி தனது 'விறல்' எனும் கலைத்திறனை முதன்மையான மூலதனமாகக் கொண்டு, உடல், அழகு, பெண்மை நளினம் மற்றும் கலை ஆற்றலை ஒரு நுட்பமான செயல்பாட்டு உத்தியாகக் கையாண்டு சமூகப்படிநிலைகளில் செங்குத்தாக இயங்கும் தகுதியைப் பெற்றாள். அவள் மன்னர்களின் அவைகளிலும் போர்ப் பாசறைகளிலும் தனது கலையை நிகழ்த்தி அரசர்களிடம் நேரடி அணுகலைப் பெற்றதுடன், பொருநராற்றுப்படை சுட்டும் அலங்கரிக்கப்பட்ட உடல் தொழில்முறை மேடைத் தோற்றமாகவும், சிறுபாணாற்றுப்படை காட்டும் வறுமைப்பட்ட உடல் புரவலனின் கடமையுணர்வைத் தூண்டும் கருவியாகவும் செயல்பட்டதை இவ்வாய்வு சுட்டிக்காட்டுகிறது. மேலும், பொருளாதார ரீதியாக கணவனைச் சாராத விறலி, "பாடு விறலியர் பல்பிடி பெறுக" (பதிற். **48**) என்பதற்கேற்ப தனது கலைத்திறனுக்காக யானைகளையே நேரடியாகப் பரிசாகப் பெறும் அளவிற்கு பொருளாதாரரீதியான தற்சார்பைக் கொண்டிருந்ததை ஆதாரங்களுடன் விளக்குகிறது. 'ஒக்கல்' (சுற்றம்) எனும் குடும்பக் கட்டமைப்புடன் பயணித்தமை, அவளது தொழில்முறைச் செயற்பாடுகளுக்கு சமூகப் பாதுகாப்புக் கவசமாக அமைந்ததையும் இந்த ஆய்வு வலியுறுத்துகிறது. ஆகவே, சங்ககால விறலி வறுமையின் குறியீடாக அல்ல் தனது கலையுழைப்பின் மூலம் சமூகப்பொருளாதாரத் தகுதியைத் தானே கட்டமைத்துக்கொண்ட ஒரு தன்னுணர்வு கொண்ட ஆளுமையாக விளங்கியதை இவ்வாய்வு நிறுவுகிறது.

திறவுச்சொற்கள்: சங்க இலக்கியம், சமூகப் பாத்திரம், பத்துப்பாட்டு, பெண் கலைஞர், தற்சார்பு பொருளாதாரம், விறலி

ஆய்வு எல்லை

சங்க இலங்கியங்களில் ஆற்றுப்படை இலக்கியங்கள் இவ்வாய்வின் எல்லையாக வகுக்கப்பட்டுள்ளது.

ஆய்வுப் பரப்பும் சான்றாதாரங்களும்

முதன்மை ஆதாரங்கள்: பத்துப்பாட்டு நூல்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று ஆற்றுப்படை நூல்கள் (பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, மலைபடுகடாம்) ஆய்வுக்குரிய முதன்மைப் பிரதிகளாக அமைகின்றன.

துணை ஆதாரங்கள்: ஆய்வுக்கட்டுரைகளும், கோட்பாட்டு நூல்களும் துணை ஆதாரங்களாக அமைகின்றன.

ஆய்வின் நோக்கம்

இந்த ஆய்வின் முதன்மை நோக்கம், பத்துப்பாட்டு ஆற்றுப்படை நூல்களில் (பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, மலைபடுகடாம்) விறலி என்ற பெண் கலைஞர், ஒரு செயலற்ற வர்ணனைப் பொருள் அல்ல, மாறாக அவர் ஒரு தன்னுணர்வு கொண்ட, தொழில்முறைக் கலைஞர் என்பதை நிறுவுதல்.

ஆய்வின் கருதுகோள்

சங்ககால விறலி, ஒரு செயலற்ற அழகியல் பொருள் அல்ல் மாறாக, அவள் ஒரு தொழில்முறைக் கலைஞர். அவள், சங்ககால சமூக அமைப்பிற்குள் இயங்குவதற்கு, தனது உடல், அழகு, பெண்மை நளினம் மற்றும் கற்பு ஆகியவற்றை ஒரு நுட்பமான செயற்பாட்டு உத்தியாகப் பயன்படுத்தி, அதன் மூலம் பொருளாதாரத் தகுதியையும் சமூக நிலைப்பாட்டையும் வெற்றிகரமாகக் கைக்கொண்டாள்.

ஆய்வுப் பிரச்சனை

சங்க இலக்கியங்களிலும் பின்வந்த ஆய்வாளர்களாலும் ~விறலி| நாட்டிய அழகுப் பெண்ணாகவும் பெரும்பாலும் வறுமையிலும் இருப்பதாகவே கட்டமைக்கப்பட்டுள்ளது.

ஆய்வு அணுகுமுறை

இந்த ஆய்வு, பண்புசார் ஆய்வு அணுகுமுறையைக் கையாள்கிறது. இது ஒரு விளக்கமுறைத் திறனாய்வாகவும் மற்றும் பகுப்பாய்வுமுறைத் திறனாய்வாகவும் அமைகிறது.

ஆய்வு அறிமுகம்

இன்று எமக்கு கிடைக்கப்பெறும் தமிழ் இலக்கியங்களுள் மிகப் பழைமையானவை சங்க இலக்கியங்கள். இவை பழந்தமிழ்ச் சமூகத்தின் வாழ்வியலைக் காட்டும் மிகத் தொன்மையான செய்யுள் தொகுப்புகளாகும். ''சங்க இலக்கியங்கள் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என மூவகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் சங்க நூல்கள், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் சங்கம் மருவிய நூல்கள் எனச் சிலரும், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும் சங்க இலக்கியங்களே என வேறு சிலரும் கருதுவர்" (பார்த்தசாரதி., ஆர்., **2007:** ஏ).

இவற்றுள் பத்துப்பாட்டு என்பது, திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் ஆகிய பத்து நீண்ட பாடல்களின் தொகுப்பாகும். ''தமிழ் மக்களின் சமயம், பண்பாடு, அரசியல், பொருளாதாரம், சமுதாயம் ஆகியவற்றின் வரலாற்றுக் கருவூலமாய்த் திகழ்வது பத்துப்பாட்டாகும்" (நாகராசன்.வி, **2007:** ஏ). மேலும், "பத்துப்பாட்டில் அமைந்துள்ள பாடல்கள் அடிவரையறையால் நீண்ட அகவற்பாக்களாகும்... இப்பத்துப்பாடல்களும் வெவ்வேறு காலச் சூழலில் எழுந்தவை" (மேலது: ஏ). இந்தப் பத்துப்பாட்டு நூல்களில், திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பானாற்றுப்படை, மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை) ஆக ஐந்து நூல்களும் ஆற்றுப்படை நூல்களாகும். பத்துப்பாட்டில் செம்பாதியாக ஆற்றுப்படை நூல்கள் விளங்குகின்றன.

'ஆற்றுப்படை' என்பது 'ஆற்றுப்படுத்தல்' என்ற சொல்லால் சங்க இலக்கியத்தில் குறிக்கப்பட்டுள்ளது. ''ஆற்றுப்படுத்தல் என்ற சொல்லானது: வழிகாட்டுதல், நெறிப்படுத்தல், போகவிடுதல் என்ற பொருளைத் தருகின்றது" (சத்தியா., சே., **2018: 1).** அதாவது, ஒருவரை ஒரு குறிப்பிட்ட இலக்கை நோக்கிச் செல்லுமாறு வழிகாட்டுவதே இதன் அடிப்படைப் பொருளாகும். பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம், ஆற்றுப்படை இலக்கியத்திற்கான இலக்கணத்தை பின்வரும் நூற்பாவின் மூலம் மிகத் தெளிவாக வகுத்துள்ளது:

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்

ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்

பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்

சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்" (தொல், பொருள்- புறத், நூ.**36)**

இதன் பொருள், ஒரு புரவலரிடம் (மன்னன் அல்லது வள்ளல்) தாம் பெற்ற பெரும் செல்வத்தோடு (பெருவளம்) திரும்பிக் கொண்டிருக்கும் ஒரு கலைஞர் (கூத்தர், பாணர், பொருநர், அல்லது விறலி), வழியில் தமக்கு எதிர்ப்படும் பரிசில் பெறாத, வறுமையில் வாடும் மற்றொரு கலைஞரைத் தடுத்து நிறுத்தி, தாமும் அந்தப் புரவலரிடம் சென்று வளம் பெறுமாறு அவருக்கு வழிகாட்டுவதாகும்.

"சங்ககாலத்தில் கலைஞர்கள் இரவலராகவே வாழ்ந்தனர். இக்கலைஞர்கள் தொழில் முறைக்கலைஞர்கள் என பகுக்கலாம்" (அறிவுராஜ், ந., 2012: 22). இவர்களுள் 'அகவலன், அகவுனர், பாணன், பொருநர், முழவன், வயிரியர், விறலி என தொழில் முறைக்கலைஞர்களைக் காணலாம்.' இக்கலைஞர்களுள் விறலி (ஆடுமகள்) முக்கியம் பெறுகின்றாள். இவர் பாணனின் துணையாக மட்டுமன்றி, ஒரு தொழில்முறைப் பெண் கலைஞராகவும் இயங்கியுள்ளார். விறலியின் கலைச் செயற்பாடுகள், ஆடல், பாடல் ஆகிய இரு நுண்கலைகளிலும் ('விறல்') சிறந்து விளங்குவதாகும். இவர் மன்னர்களின் அவைகளிலும் போர்ப் பாசறைகளிலும் (புறம் 64, பதிற் 57) தமது கலையை நிகழ்த்தியதோடு, சூழலுக்கேற்பப் புதிய வாய்மொழிப் பாடல்களையும் புனைந்து பாடும் ஆற்றல் பெற்றிருந்தார் (மலை. 534-539).

இவரது சமூகப் பொருளாதார நிலை நுட்பமானது. சமூகரீதியாக, இவர் 'கீழ்த்தளத்து' (மௌனகுரு, சி., 2003: 10) கலஞர் குடியைச் சேர்ந்தவராக இருப்பினும், இவரது திறனால் மன்னரை நேரடியாகச் சந்திக்கும் 'செங்குத்து இயங்குதன்மை' (ஜெயராசா, ச., 2008: 41) பெற்றிருந்தார். இவரது பொருளாதாரச் செயல்பாடு என்பது, தனது 'கலையுழைப்பை' வழங்கிச் செல்வம் ஈட்டுவதாகும். இவர் ஒரு 'தொழிலாளி' (மௌனகுரு, சி., 2003: 15) போலச் செயல்பட்டு, தனக்காகவே நேரடியாகப் பரிசில்களைப் பெற்றார் (பொருந. 150-151). இது இவரது பொருளாதாரரீதியான தற்சார்பை நிறுவுகிறது.

சங்ககால விறலி, ஒரு அழகியல் பொருள் அல்ல மாறாக, அவள் ஒரு தொழில்முறைக் கலைஞர். அவள், சங்ககால சமூக அமைப்பிற்குள் இயங்குவதற்கு, தனது உடல், அழகு, பெண்மை நளினம் மற்றும் ஆகியவற்றை ஒரு நுட்பமான செயல்பாட்டு உத்தியாகப் பயன்படுத்தி, கலைத்திறன் மூலம் பொருளாதாரத் தகுதியையும் 'சமூக நிலைப்பாட்டையும்' வெற்றிகரமாகக் கைக்கொண்டாள்.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களை முதன்மை ஆதாரங்களாகக் கொண்டு, இந்த நூல்களில் விறலியின் ஆடல் எவ்வாறு பதிவாகியுள்ளது என்பதை ஆராய்ந்து சங்ககாலப் பெண் கலைஞர் குறித்த நமது புரிதல்கள், மரபான 'வர்ணனைப் பொருள்" என்பதிலிருந்து, 'தன்னுணர்வு கொண்ட செயல்பாட்டாளர்" என்ற புதிய தளத்திற்கு இவாய்வு நகர்த்துகிறது.

விறலியின் கலை வெளிப்பாடு

விறலி, பாடல் கலையில் சிறந்த மகளிர் என இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன (மலை. 358-359; 534-536). குறிப்பாக, இவர் போர்ப் பாடல்கள் பாடுவதில் வல்லவர்; அதற்காக மன்னர்களின் பாசறைகளுக்கும் சென்றுள்ளார் (புறம் 64; 103; பதிற் 57). '...வேந்தன் மறம் பாடிய பாடினியும" (புறநா. 11:1013) என்ற புறநானூற்று அடியும், 'பாடு விறலியர் பல்பிடி பெறுக" (பதிற். 48:22) மற்றும் 'விறலியர் பாடல் சான்று நீடினை உரைதலின்" (பதிற் 40, 46, 55) போன்ற பதிற்றுப்பத்து அடிகளும் இவர் பாசறைக்குச் சென்று தலைவனைப் பாடியதையும், பாடல் திறனையும் உறுதி செய்கின்றன. 'வெள்ளிழைப் பாடுவல் விறலியர் கோதையும் புனைக" (புறம்: 172:23) என்ற அடி, விறலியர் இசை பாடுவதில் வல்லவர் என்பதைக் காட்டுகிறது. இவர் மன்னரைக் கண்டால், மரபு வழுவாமல் முதலில் கடவுளை வாழ்த்திப் பாடியபின், பின்னரே புதிதாகப் புனைந்த பாடல்களைப் பாடுவார் (மலை. 534-539). இச்செய்தி, விறலியர் வாய்மொழிப் பாடல்களை இடத்திற்கு ஏற்றாற்போல் புதிதாகப் புனைந்து பாடும் ஆற்றல்

பெற்றிருந்ததைக் காட்டுகிறது. பதிற்றுப்பத்து (பதிற். **47:6-8)** குறிப்பிடுவதுபோல, இரவில் நெய் விளக்கின் ஒளியில் விறலியர் மன்னரின் புகழைப் பாடியும் உள்ளனர். எனவே, விறலி திறம்படப் பாடுவதில் சிறப்புப் பெற்றவர் என்பது தெளிவாகிறது.

பாடுவதைப் போலவே, விறலி ஆடல் கலையிலும் சிறந்து விளங்கினாள் (சிறுபாண். **162;** பொருநர். **109-110). 'விறலி! ... மயில்போல நடந்து, மன்னனைக் காப்பாயாக!" (புறம் 133)** என்று புறநானூற்றுப் பாடல் ஒன்று, இவரது நடன அசைவைக் குறிப்பிடுகிறது. ஊர்களில் நிகழும் விழாக்களில், கூத்தர் போன்ற பிற இசைக்கலைஞர்கள் வாத்தியக் கருவிகளை இசைக்க, விறலியர் ஆடுவர் என்று பதிற்றுப்பத்து **(56:12)** சான்று பகர்கிறது. **'**ஆடுக விறலியர் பாடுக பரிசிலர்" (பதிற்: **58)** என்ற பதிற்றுப்பத்து அடி, விறலியர் ஆடிப் பரிசில் பெற்றதைக் கூறுகிறது. மேலும், **'**பாண்டில் விளக்குப் பரூஉச் சுடர் அழல நல்நுதல் விறலியர் ஆடும்" (பதிற். **47:6-8)** என்ற பதிற்றுப்பத்து வரிகள், இரவில் விளக்கொளியில் விறலியர் ஆடிய நிகழ்வைப் பதிவு செய்கின்றன. இவற்றின் மூலம், விறலி ஆடல் கலையிலும் விறல் (திறன்) மிக்கவராகத் திகழ்ந்தார் என்பது புலனாகிறது.

விறலி, பாண்குலப் பெண் ஆவார். **'**பாணனே! விறலியை அழைத்துச் சென்றால், நீ ஏராளமான செல்வம் பெறலாம்!" (புறம் **70)** என ஒரு புறப்பாடல் கூறுவது, இவரது கலைத்திறன் மூலம் பெறும் பரிசிலை உணர்த்துகிறது. ஔவையார், இளவயதுடைய பல விறலியரைத் தம்முடன் அழைத்துச் சென்றதாகப் புறம் **140** கூறுகிறது. விறலியை ஆற்றுப்படுத்துவதாக 'விறலியாற்றுப்படை' என்னும் துறைப் பாடல்கள் எட்டுத்தொகை நூல்களான புறநானூற்றிலும் **(64, 103, 105, 133)** பதிற்றுப்பத்திலும் (பாடல் **58, 60, 78, 87)** காணப்படுகின்றன (அறிவுராஜ;.ந, **2012:30).**

விறலியின் உடல் அழகியல் கட்டுமானம்

ஆடல்கலையின் முதன்மைக் களம் 'உடல்' ஆகும். பத்துப்பாட்டு நூல்களில், விறலியின் உடல் குறித்த மிக விரிவான, நுணுக்கமான வருணனை பொருநராற்றுப்படையிலேயே (அடிகள் **25-47)** காணப்படுகிறது. இந்த வருணனை, ஒரு கவித்துவமான வர்ணனை என்பதைத் தாண்டி, ஒரு பெண் கலைஞரின் தொழில்முறைக் கலைஞரின் உடல் எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதை விபரிக்கும் சான்றாகும்.

பொருநராற்றுப்படை, விறலியின் உடல் அழகை வருணிக்கும்போது, ஒரு குறிப்பிட்ட வரிசைக்கிரமத்தைக் கையாள்கிறது. அது அவளது தலைமுதல் பாதம்வரை,

"அறல் போல் கூந்தல், பிறைபோல் நுதல்

.....

வருந்துநாய் நாவின் பெருந்ததகு சீறடி" (பொருணராற்றுப்படை: **25-47)**

நீண்ட கூந்தல், அழகான முகம், வளைந்த புருவங்கள் ,கண்கள், சிவந்த வாய்,வரிசையான பற்கள், வளைந்த அழகிய கழுத்து, பருத்த தோள்கள்;, மெல்லிய மயிரினையுடைய முன்கைகள்;, மெல்விரல்கள்;,

வளைந்த நகங்கள்;, திரண்ட தொடைகள்;, பொருந்தின மயிர் ஒழுங்குபட்ட கணைக்கால்கள்;, சிவந்த சிறிய அடிகள்;, கல்விப் பெருமைமிக்க பாடினி என்று விறலியினை பொருணராற்றுப்படை வருணனை செய்கிறது.

பொருநராற்றுப்படை விறலியின் அலங்கரிக்கப்பட்ட உடலை முன்வைத்தால், சிறுபாணாற்றுப்படை அவளது 'வறுமைப்பட்ட' உடலை முன்வைக்கிறது.

"... ... உழாஅ நுண்பொடி உழுந்து மடிந்தன்ன

குப்பைக்கீரை உப்பில்லி வெந்ததை,

... ...

*"ஒல்கு பசி உழந்த ஒடுக்கு நுண் மருங்குல்..." (சிறுபாணாற்றுப்படை, அடிகள் **134-138**) அடிகளுள் உப்பில்லாமல் வேகவைத்த குப்பைக் கீரையை... விறலி உண்பாள்" என்ற இந்தக் காட்சி, அவளது வறுமையின் உச்சத்தைக் காட்டுகிறது. மேலும் இளைத்த உடலை உடைய கிணைமகள் (சிறுபாணாற்றுப்படை, அடிகள் **129-140**) என்றும் அவளது வறுமையின் உடலை பதிவு செயகிறது. இந்த 'வறுமையின் வெளிப்பாடு' என்பது, அவளது ஆடல், "இத்துணை வறுமையிலும் தனது கலையை விடாத இவளுக்குக் கொடை வழங்குவது என் கடமை" என்ற பெருமிதத்தை புரவலனுக்கு வழங்கும்.*

விறலியின் சமூக நிலை

The eighth category pertains to variations arising from interactions between external objects. In this context, the previously discussed differences can be analyzed through two distinct lenses. The first concerns the idea that an individual's experiences of objects are influenced by their prior interactions with other entities. The second emphasizes that objects are perceived differently in relation to other items in the environment. Consequently, this interdependence suggests that all entities within the universe are intrinsically connected, with the knower also being subject to this relational framework. As nothing can be comprehended in isolation, it is prudent to refrain from making judgments or taking actions based on such limited understandings (Outline of Pyrrhonism: 135-140). Differences are highlighted concerning the frequency and occurrence in the ninth mode. Rare occurrences tend to attract greater attention and scrutiny compared to those that happen regularly over extended periods. For instance, a comet often garners more interest than the sun, and individuals residing in regions prone to frequent earthquakes are more attuned to seismic activities than those in less affected areas. Furthermore, the initial encounter with physical beauty captivates attention, but sustained exposure typically diminishes the level of engagement. Similarly, precious items such as gold lose their perceived value when they become as commonplace as stones. Consequently, it is advisable to refrain from making fixed judgments, as it is evident that the value assigned to any object fluctuates based on these varying contexts (Outline of Pyrrhonism: 141 - 144).

Variations in the traditions and laws of the tenth mode are intrinsically linked to individuals' lifestyles, morals, and beliefs. A lifestyle represents a conscious choice made by individuals or specific groups regarding the principles they wish to uphold and the manner in which they choose to live (Outline of Pyrrhonism: 145–146). In this context, laws, traditions, regulations, and mythological beliefs are established and embraced accordingly. It is noteworthy that a lifestyle accepted and practiced by one community may not find resonance with another, even among neighboring populations. Such disparities can even lead to opposition between individuals adhering to different ways of life. In this regard, beliefs and practices are accepted not necessarily on the basis of their absolute truth or correctness, but rather in accordance with the lifestyles adopted by individuals or communities. Consequently, attempting to discern which way of life is right or wrong is ultimately an exercise in futility (Outline of Pyrrhonism: 163; Bett, 2021: 57).

The ten modes of Pyrrhonism provide profound framework to understand the complexities of life and leads to the path of happiness. Through embracing the insights of these modes, people can cultivate more flexible and adaptable mindset.

Major contribution of the ten modes is the promotion of open-mindedness. This open-minded approach helps deeper connections with community. Which are vital components for fulfilling life. Knowing the subjectivity of human experience helps to understand that personal preferences and judgments are not universal truths. The awareness of that others may hold different opinions and experiences, can create space for mutual understanding. This acceptance leads to a more harmonious existence. This supports to coexist with differant viewpoints and enjoy the richness it brings. It is also noteworthy that being aware that our judgments may shift over time, we can cultivate a sense of empathy. This practice empowers to approach situations with a willingness to revise opinions. These practices greatly reducing stress and anxiety associated with the eager for certainty.

As a result, this practice can enhance overall happiness through allowing to flow with the rhythms of life rather than going against them. The recognition of interconnectedness among experiences is prime in the Pyrrhonian perspective. By understanding how perceptions are influenced by experience with the world, we can cultivate a deeper sense of connection with it. This encourages to view everyone as part of a larger whole. Understanding that our happiness is intertwined with the happiness of others can motivate us to engage in acts of kindness and compassion. The acknowledgment that the value of experiences and objects fluctuates based on context helps to cultivate detachment from rigid judgments. Embracing these uncertainties promote ability to live life as it unfolds. It finally contributes to a deeper sense of satisfaction.

Finally, we may say that living in different ways help to recognize all the differences between how people live and how they value, believe and relate to one another. By demonstrating that there are no "better and exact" ways to live, we are able to recognize the diversity of our cultures and communities, which creates a path for us to embark on an endless variety of experiences and ideas. This will help develop our personalities further, resulting in an increased understanding of the experience of being human. By using the developing of acceptance of different ways of living, we will be able to create far greater levels of happiness and peace, as well as helping to deal with the issues of life in a compassionate and understanding way. Thus, all 10 of the Different Ways of Pyrrhonism will give us a way to pursue true happiness.

Conclusion and Recommendations

The philosophy known as Pyrrhonian Skepticism provides a way to achieve peace of mind through withholding judgment or suspension of belief regarding human perceptions and experiences, while enabling one to take action when there is a basis for taking the action, rather than holding a fixed set

of beliefs. Pyrrhonian Skepticism recognizes and expresses that humans cannot possibly know everything and therefore must live their lives with uncertainty and limitations. Practicing skepticism will lead to feelings of calmness, since a person will be less likely to respond with strong emotions (fear, anxiety, nervousness, etc.) when evaluating their understanding of the events and circumstances surrounding them. Thus, by practicing skeptical reasoning, Pyrrhonism teaches individuals to grow in their ability to be compassionate and empathetic to others, while enhancing their ability to have the confidence to make their own decisions. Therefore, by encouraging and supporting the individual's ability to exercise their emotions in a positive manner, the Five Modes of Pyrrhonism support intellectually humble, reflective thinkers who develop their reasoning skill as they try to find answers to life's complex issues through reasoned thought and not necessarily by relying upon absolute and dogmatized beliefs. The Ten Modes of Sextus Empiricus, on the other hand, are additional philosophical tools that individuals can use in their daily lives to help them to deal with the challenges they face by prompting them to stop and evaluate their situation, develop a reflective and rational response, and remain even-tempered while progressing toward their goals and making daily progress toward achieving their long-term goals based upon an unshakeable foundation of beliefs, Values and Principles. Ultimately, the philosophy at the base of the Pyrrhonian skepticism offers individuals the best means for achieving the good life by seeking out emotional peace and suppressing the effects of suffering through deeper clarity of Understanding. For these the followings are recommended;

- Skeptical Inquiry- People must be taught to put forth a Skepticism attitude and question their own beliefs and assumptions at a later stage. The process helps one to open up their mind and gain more insight into the mind of other people, building intellectual development as well as tolerance to others.
- Suspension of Judgement- Suspension of judgement will be made a regular practice, particularly in situations that touch on emotional aspects, and this will minimize stress and emotional distress. When people fail to make absolute judgements about matters, they become more capable of establishing a more harmonious and peaceful state of mind.
- Developing the Existence in a No-self State- To attain a state of psychological calm, the person should come to care about the happenings and demands of the society. By understanding the impermanence and indeterminacy of the events in the world, people discover a state of freedom of inner (i.e. inner freedom) resilience.
- Application of the Five and Ten Skeptical Modes- With the help of the five modes of Agrippa, one can improve their critical thinking skills by admitting the relativity of perspectives, and also

understanding the boundaries of their knowledge. Also, through the ten skeptical modes which are used in everyday experiences, people become more aware and aware of the difficulties in perception, and become more capable of adjusting emotionally and establishing peace in their interpersonal relationship.

Incorporating these recommendations into daily life can enable individuals to harness the wisdom of Pyrrhonian skepticism, fostering psychological resilience, enhancing well-being, and contributing to a more fulfilling existence in an inherently uncertain world

References

Adamson, P. (2015). *Philosophy in the Hellenistic and Roman worlds*. Oxford University Press

Annas, J., & Barnes, J. (2000). *Sextus Empiricus – Outline of Skepticisms* (Edi.). Oxford University Press

Alquist, J. L., & Baumeister, R. F. (2023). *Dealing with uncertain situations*. *The Journal of Positive Psychology, 19*(6), 923–946. https://doi.org/10.1080/17439760.2023.2282781

Attie-Picker, M. (2020). Does skepticism lead to tranquility? Exploring a Pyrrhonian theme. In T. Lombrozo, J. Knobe, & S. Nichols (Eds.), *Oxford studies in experimental philosophy: Volume 3* (pp. 97–125). Oxford University Press. https://doi.org/10.1093/oso/9780198852407.003.0005

Bailey, A. (2002). *Sextus Empiricus and Pyrrhonean Skepticism.* Clarendon Press

Bett, R. (2019). Can we be ancient skeptics? In *How to be a Pyrrhonist: The practice and significance of Pyrrhonian skepticism* (pp. 226–243). Cambridge University Press.

Bett, R. (2021). *How to keep an open mind – An Ancient Guide to Thinking Like a Skeptic.* Princeton University Press

Byrd, J. (2023). The practical price of pyrrhonism. *Philosophies*, 8(6), pp.104-117. https://doi.org/10.3390/philosophies8060104

Bullock, J. B. (2025). *Skeptical suspension in the face of disagreement*. *Archiv für Geschichte der Philosophie, 107*(2), 212–240. https://doi.org/10.1515/agph-2023-0095

Coliva, A., & Pritchard, D. (2022). *Skepticism.* Routledge Publications

Cooper, J.M. (2012). *Pursuits of Wisdom – Six Ways of Life in Ancient Philosophy from Socrates to Plotinus.* Princeton University Press

Gill, M.L., & Pellegrin, P. (2006). *A Companion to Ancient Philosophy* (Edi.). Blackwell publications

Hadot, P. (2002). *What is Ancient Philosophy*. The Belknap Press of Harvard University Press.

Hartman, J. (2017). *The History of Skepticism – In Search of Consistence* (Edi.). Peter Land Edition

Hicks, J. and King, L. (2009). Meaning in life as a subjective judgment and a lived experience. *Social and Personality Psychology Compass*, 3(4), pp.638-653. https://doi.org/10.1111/j.1751-9004.2009.00193.x

Kenny, A. (2004). *A New History of Western Philosophy: Ancient Philosophy - Volume I.* Clarendon Press

Kernes, J. and Kinnier, R. (2005). Psychologists' search for the good life. *Journal of Humanistic Psychology*, 45(1), 82-105. https://doi.org/10.1177/0022167804268008

Kumar, M. (2022). *Making decisions under uncertainty: The Prudent Judgement Approach*. *European Journal of International Security*, 8(1), 109–129. https://doi.org/10.1017/eis.2022.17

Lagerlund, H. (2020). *Skepticism in Philosophy – A Comprehensive, Historical Introduction.* Routledge Publications

Long, A.A. (1985). *Hellenistic Philosophy – Stoics, Epicureans, Sceptics* (2nd Edi.). Routledge Publications

Machuga, D.E. (2011). *New Essays on Ancient Pyrrhonism* (Edi.). Brill Publications

Machuca, D.E. (2011). Ancient skepticism: pyrrhonism. *Philosophy Compass*, 6(4), 246-258. https://doi.org/10.1111/j.1747-9991.2011.00391.x

Mark, J. J. (2022, June 03). Sextus Empiricus. *World History Encyclopedia*.

Nawar, T. (2022). Conflicting appearances, suspension of judgment, and Pyrrhonian skepticism without commitment. *Journal of the History of Philosophy*, 60(4), 537–560. https://doi.org/10.1353/hph.2022.0052

Nawar, T. (2022). Pyrrhonian scepticism, the infinite regress of reasons, and ancient infinitism. *Rhizomata, 10*(2), 283–306. https://doi.org/10.1515/rhiz-2022-0016

Raleigh, T. (2021). *Suspending is believing*. *Synthese, 198*(3), 2449–2474. https://doi.org/10.1007/S11229-019-02223-8

Sellars, J. (2018). *Hellenistic Philosophy.* Oxford University Press

Smith, P. J. (2023). Neo-Pyrrhonism: a contemporary version of skepticism. *Sententiae*, *42*(3), pp.47–66. https://doi.org/10.31649/sent42.03.047

Svavarsson, S.H. (2015). The Pyrrhonian Idea of a Good Life, in O.Rabbas, E.K. Emilsson *The Quest for the Good Life* (Edi.). pp. 197-211. Oxford University Press

Thorsrud, H. (2009). *Ancient Skepticisms.* Routledge Publications

Warnick, B. (2021). Interrogating the opinionated life: An educational engagement with Pyrrhonian skepticism. *Philosophical Studies in Education, 52*, 61–73. https://files.eric.ed.gov/fulltext/EJ1344753.pdf

சம்பந்தர் பாடல்களில் அறிவின் வாயில்கள் பற்றிய கையாளுகை -ஓர் அறிவாராய்ச்சியியல் ஆய்வு

S. Jeganathan

Department of Philosophy and Value Studies,

Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.

jeganathans@esn.ac.lk

ஆய்வுச் சுருக்கம்

அறிவு தொடர்பான ஆராய்ச்சி மனித வரலாற்றில் நீண்ட காலமாக இடம்பெற்றுவருகின்றது. அறிவு என்றால் என்ன?, அதன் மூலங்கள் எவை? அதன் எல்லை அதேபோல அதன் ஏற்புடைமை மற்றும் அறிவைப் பெறும் வாயில்கள் தொடர்பாக பலதரப்பட்ட வாத விவாதங்கள் மேலைத்தேயத்திலும் கீழைத்தேயத்திலும் இடம்பெற்று வருகின்றன. இத்தகைய அறிவாராய்ச்சியியல் பிரச்சினை (Problem of Epestemology) பற்றிய மேலைத்தேய அணுகுமுறைப் பற்றி, அதற்கு முன்னரே கீழைத்தேயத்தில் எடுத்தாளப்பட்டுள்ளது. ஆனாலும் மேலைத்தேயத்தில் அது ஒரு சிந்தனைப் பள்ளியாக உருவாக்கம் பெற்றளவிற்கு கீழைத்தேயத்தில் அதன் விருத்தி இடம்பெறாதது இன்றைய இந்தியச் சிந்தனையாளர்களிடையே அது தொடர்பான ஆய்வு நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டிய தேவையை உணர்த்தியுள்ளது. இந்திய தரிசனங்களில் பெரும்பாலானவை கடவுள் உண்மையை ஏற்பவை. சிலவை ஆன்மாவையும் உலகையும் ஏற்க சிலவை உலகை மட்டுமே ஏற்கின்றன. இவ்வாறு ஒவ்வொரு பிரிவினரும் வெவ்வேறுபட்ட கருத்துக்களை கூறுவதற்கு அடிப்படையாக அமைந்தவை அவைகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அறிவைப் பெறும் வாயில்கள் - அளவைப் பிரமாணங்களேயாகும். இந்தியச் சிந்தனையாளர்களிடையே பிரமாணங்களை பொறுத்தமட்டில் ஒருமித்த கருத்துக்கள் காணப்படவில்லை. இந்திய தரிசனங்கள் தமது நிலைப்பாட்டிற்கு ஏற்ப பிரமாணங்களில் (அளவைகள்) ஒன்றையோ, பலவற்றையோ ஏற்றுக்கொள்கின்றன. இந்திய அறிவாராய்ச்சியியலில் எப்போதும் வலிதானதும் ஏற்புடையதுமான அறிவே எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த அடிப்படையில் இந்திய அறிவாராய்ச்சியியல் சிந்தனையில் அறிவைப் பெறும் வாயில்கள் பற்றிய அடிப்படையான விளக்கத்தை சம்பந்தர் எவ்வாறு கையாண்டுள்ளார் என்பதைச் சம்பந்தர் பாடல்களை அடிப்படையாக வைத்து விபரிப்பு, ஒப்பீடு, பகுப்பாய்வு, விமர்சனம் போன்ற முறையியலினூடாக தெளிவுபடுத்த இக்கட்டுரை முனைகிறது.

திறவுச் சொற்கள் : அறிவின் வாயில்கள், அறிவின் மூலங்கள், அறிவாராய்ச்சியியல், இந்திய தரிசனங்கள்

01. அறிமுகம்

அறிவு தொடர்பான ஆராய்ச்சி என்பது மிக நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தை கொண்டது. கி.மு 5ஆம் நூற்றாண்டு வரை அறிவாராய்ச்சியியலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. மாற்றத்தின் தன்மை மீதும் அதன் சாத்தியத்தின் மீதுமே அதிக கவனம் செலுத்தியிருந்தனர். அறிவாராய்ச்சியியல் தொடர்பான தொடக்க சிந்தனையை சோபிஸ்டுகளிடம்தான் காணமுடிகின்றது. "மனிதனே அனைத்தையும் அளந்தறியும் அளவு கோல்" எனப் புரோடோகோரஸ் கூறினார். அறிவின் மூலங்கள் தொடர்பாகவும் அதைப் பெறும் வாயில்கள் தொடர்பாகவும் ஆராய்ச்சிகள் மேலைத்தேயத்திலும் இந்திய தரினங்களிலும் இடம்பெற்றுள்ளன. அந்தவகையில் அறிவின் மூலங்கள் தொடர்பாக இருவேறு சிந்தனைப் பள்ளிகள் தோற்றம்பெற்றன. அவை காரணமுதல் வாதம் (Reasonalism), அனுபவமுதல் வாதம் (Empiricism) என்பனவாகும். இதில் காரணமுதல் வாதம் அறிவினது மூலம் தொடர்பாக பகுத்தறிவை (Reason) வலியுறுத்த, அனுபவமுதல் வாதமானது அறிவினது மூலமாக அனுபவத்தினை

(Experience) வலியுறுத்தியது. அறிவாராய்ச்சியியலில் அறிவினை பெறும் வாயில்கள் பற்றிய ஆராய்ச்சியும் இன்றியமையாதது. அந்தவகையில் காட்சி, கருதல் என்ற இரண்டும் மேலைத்தேயத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தது. இந்திய தரிசனங்களில் காட்சி, கருதல், உரை, இன்மை, அருந்தாபத்தி, உவமை, பரிசேடம், உண்மை, ஐதீகம், இயல்பு எனப் பத்து இனம் காணப்பட்டாலும் இறுதியில் அளவையெல்லாம் காட்சி, அனுமானம், (கருதல்), உரை என்;ற மூன்றில் உள்ளடங்கிவிடும் எனக் கூறப்படுகிறது. இத்தகைய அறிவின் வாயில்கள் பற்றிய கையாளுகை சம்பந்தர் பாடல்களில் எவ்வாறு அமைந்துள்ளது என்பதை ஆராய்வதை இலக்காகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது.

*02. ஆய்வு முறையியல் (*Research Method*)*

இவ்வாய்வு மேற்கொள்ளப்படுவது விபரிப்பு, பகுப்பாய்வு, விமர்சன மற்றும் ஒப்பீட்டு முறையிலாகும். எடுத்துக் கொள்ளப்பட்ட பிரச்சினை சார்பாக எழுத்துருவிலுள்ள ஆக்கங்களிலிருந்து பெறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யும் முறை இங்கு பின்பற்றப்படுகிறது. குறித்த பிரச்சினை தொடர்பாக மூல நூல்களிலிருந்தும் (Primary Sources) வழிநூல்களிலிருந்தும் (Secondary Sources) மேலதிக வாசிப்பு நூல்களிலிருந்தும் (Peripheral Reading) தரவுகள் பெறப்பட்டு இங்கு ஆய்வுகள் செய்யப்படுகின்றன.

03. ஆய்வுப் பிரச்சினை

இந்திய தரிசனங்களில் கூறப்படும் அறிவின் வாயில்கள் பற்றிய சிந்தனையானது ஏற்புடைய அறிவினைக் கட்டமைப்பதற்கான கருவியாக அமையும் தன்மையிலான கருத்தியலைத்தான் சம்பந்தரும் தனது பாடல்களில் கையாண்டுள்ளாரா என்பது ஆழமாக ஆராயப்பட வேண்டியது.

04. ஆய்வு நோக்கங்கள்

மேலைத்தேய கீழைத்தேய நோக்கில் அறிவாராய்ச்சியியல் பற்றிய சிந்தனையைத் தெளிவுபடுத்தல்.

இந்திய அறிவாராய்ச்சியியலில் அறிவின் வாயில்கள் தொடர்பான கருத்தியலை விளக்குதல்.

சம்பந்தர் பாடல்களில் அறிவின் வாயில்கள் பற்றிய கையாளுகையை அடையாளப்படுத்துதல்.

05. இலக்கிய மீளாய்வு

பேராசிரியர் சோ. கிஸ்ணராஜவின் இந்திய மெய்யியல் தொடர்பான பல ஆக்கங்கள் இந்த ஆய்வுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அந்தவகையில் சைவ சித்தாந்த அறிவாராய்ச்சியியல் என்ற நூலில் இந்திய தரிசனங்களின் பல்வேறு அறிவாராய்ச்சியியல் சிந்தனைகள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக அறிவின் வாயில்கள் பற்றிய கருத்துக்கள் மேலைத்தேயத்துடன் தொடர்புபடுத்தி விளக்கப்பட்டுள்ளது. பேராசிரியர் வ. ஆ தேவசேனாபதி ''சைவசித்தாந்தத்தின் அடிப்படைகள்'' என்ற நூலிலும் கலைவாணி இராமநாதன் எழுதிய சைவ சித்தாந்த மெய்ப்பொருளில் என்ற நூலிலும் இது தொடர்பாக விளக்கப்பட்டுள்ளது. இங்கு சைவ சித்தாந்தம் கூறும் அறிவாராய்ச்சியியல் எண்ணக்கருவை விளக்கும் வகையிலே குறிப்பிடப்பட்டுள்ளது. பேராசிரியர் க. பாஸ்கரன் எழுதிய சைவ சித்தாந்தத்தில் அறிவாராய்ச்சியியல் என்ற நூலிலும் இந்திய தரிசனங்களில் கையாளப்படும் அறிவின் வாயில்கள் பற்றிய கருத்துக்கள் இலக்கியங்களை ஆதாரம் காட்டி விளக்கப்பட்டுள்ளது. மேலும் அறிவாராய்ச்சியியல் பற்றிய மேலைத்தேய சிந்தனையை விளக்கும் வகையில் அறிவின் வாயில்கள் குறிப்பிட்டப்பட்டுள்ளது. கலாநிதி இராமகிருஷ்ணன், தனது Perspectives in Saivism என்ற நூலில் மெய்கண்ட சாஸ்திரங்களில்; அறிவின் வாயில்கள் பற்றிய சிந்தனையை On Religious Language, Causation- Saiva and Buddhist, Karmar, Ignorance, Salvation – Buddhist and Saiva தலைப்புக்களை விளக்கும் போது அதற்கு வலுச்சேர்க்கும் வகையில் கையாண்டுள்ளார். ஜோன் பையிட் (John Piet) என்பவர் A Logical Presentation of the Saiva

Siddhanta Philosophy என்ற நூலில் அறிவாராய்ச்சியியல் அடிப்படையில் சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருள் தத்துவத்தை சிறப்பாக ஆராயும் போது அறிவின் வாயில்கள் தெளிவுபடுத்தியிருந்தார். இவ்வாறு அறிவின் வாயிகள் பற்றிப் பல ஆய்வுகள் செய்யப்பட்ட போதும் சம்பந்தரது பாடல்களுடன் தொடர்புபடுத்தியதான அறிவாராய்ச்சியியல் நோக்கில் ஆய்வுகள் இதுவரை செய்யப்பட்டதாக தெரியவில்லை. அந்த வகையில் குறித்த இவ் ஆய்வானது இந்த ஆய்வு இடைவெளியினைப் பூர்த்தி செய்வதாக அமைகிறது.

6. முடிவுகளும் கலந்துரையாடலும்

6.1 மேலைத்தேய அறிவாராய்ச்சியியல்

மேலைநாட்டில் அறிவு தொடர்பான ஆராய்ச்சி என்பது மிக நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தை கொண்டது. கி.மு 5ம் நூற்றாண்டு வரை அறிவாராய்ச்சியியல் அதிக முக்கியத்துவம் பெறவில்லை. மாற்றத்தின் தன்மை மீதும் அதன் சாத்தியத்தின் மீதுமே அதிக கவனம் செலுத்தியிருந்தனர். அறிவாராய்ச்சியியல் தொடர்பான தொடக்க சிந்தனையை சோபிஸ்டுகளிடம்தான் காணமுடிகின்றது. ''மனிதனே அனைத்தையும் அளந்தறியும் அளவு கோல்'' எனப் புரோடோகோரஸ் கூறினார் (இராமலிங்கம், சி., 1973 : 22).

கிரேக்கத்தில் அறிவின் தொடக்கம் எவ்வாறு? என்ற வினா குறித்த ஆராய்ச்சியில் சோக்ரட்டீஸ், பிளேட்டோ ஈடுபட்டனர். பிளேட்டோவின் 'தியேடிட்டஸ்' இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். மத்திய காலத்தில் புனித அகஸ்டின் அறிவு என்பது நிகழக்கூடியது அல்லது புரியக்கூடிய ஒன்றுதான் என வலியுறுத்தி அறிவு என ஒன்று உள்ளதா? என்பது பற்றிய விவாதமே தேவையில்லை என்றார். இவ்வாறாக இந்த அறிவாராய்ச்சியியல் தொடர்பான ஆரம்ப கருத்தாக்கங்கள் நவீன காலத்தில் மிகவும் தீவிரமான முறையில் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டன.

நவீன காலத்தில் அறிவின் மூலங்கள் தொடர்பாகவும் அதைப் பெறும் வாயில்கள் தொடர்பாகவும் ஆராய்ச்சிகள் அடிப்படையில் இடம்பெற்றுள்ளன. அந்தவகையில் அறிவின் மூலங்கள் தொடர்பாக இருவேறு சிந்தனைப் பள்ளிகள் தோற்றம்பெற்றன. அவை காரணமுதல் வாதம் (Reasonalism), அனுபவமுதல் வாதம் (Emperialism) என்பனவாகும். இதில் காரணமுதல் வாதம் அறிவினது மூலம் தொடர்பாக பகுத்தறிவை (Reason) வலியுறுத்தியதோடு அதன் முதன்மைச் சிந்தனையாளர்களாக டேக்கார்ட், லைபினிட்ஸ், ஸ்பினோசா ஆகியோர் காணப்படுகின்றனர். அனுபவமுதல் வாதமானது அறிவினது மூலமாக அனுபவத்தினை (Experience) வலியுறுத்தியதோடு அதன் முதன்மைச் சிந்தனையாளர்களாக லொக், ஹியும், பேக்கிலி போன்றவர்கள் விளங்குகின்றனர். தனியே அனுபவமோ தனியே பகுத்தறிவோ ஏற்புடைய அறிவொன்றை பெற உதவாது. எனவே இரண்டையும் உள்ளிட்டதான அறிவுதான் ஏற்புடையதாகும் என்ற கருத்துக்கள் காண்டினால் முன்வைக்கப்பட்டன. ஆனாலும் இன்றுவரை இந்த அறிவின் மூலங்கள் தொடர்பான வாத விவாதங்கள் மேலைத்தேயத்தில் இடம்பெற்ற வண்ணமேயுள்ளன.

அறிவாராய்ச்சியியலில் அறிவினை பெறும் வாயில்கள் பற்றிய ஆராய்ச்சியும் இன்றியமையாதது. அந்தவகையில் காட்சி, கருதல் என்ற இரண்டும் மேலைத்தேயத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தது. காட்சியினூடாக நாம் நேரடியாக பெறுவது என்ன?, நாம் எவ்வாறு அறிகின்றோம்? போன்ற வினாக்களுக்கு விடைதேட நேர்காட்சி வாதம், பிரதிநிதித்துவக் கொள்கை, தோற்றப்பாட்டு வாதம் என்ற மூன்று கொள்கைகளும் தோற்றம்பெற்றன (Russell, B., 1994 :1-6). இக்கொள்கைகள் ஒன்றில் காணப்படும் குறைபாட்டைச் சுட்டிகாட்டியே மற்றயது தனது கருத்தை நிறுவ முற்பட்டது. இங்கு திரிவுக் காட்சி, இல்பொருள் காட்சி முதலான விடயங்களும் காட்சியின் போலித்தன்மையை தெளிவுப்படுத்துவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அனுமானத்தை பார்க்கும்போது தரப்பட்ட தரவிலிருந்த தரப்படாத உண்மையினைக் கண்டறிவது அனுமானமாகும். அரிஸ்டோட்டில் உண்மையென ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு தரவெடுப்பிலிருந்து நாம்

எதனை பெறலாம்? என்ற வினாவிற்கு விடைதேட முயன்றார். இதற்கு உடன் அனுமானம் என்ற பகுதியில் எடுப்பு முரண்பாட்டு அனுமானத்தையும் வெளிப்பேற்று அனுமானத்தையும் அறிமுகம் செய்தார். அதன் விருத்தியாக அவர் நியாயத்தொடை அனுமானத்தையும் அறிமுகம் செய்தார். அந்த அனுமான முறைக்கு அடிப்படையாக இருப்பவை எடுப்புக்கள் (Prepositional), விதிகள் (Laws) என்பனவாகும். அதாவது எடுப்புக்கள் விதிகளுக்கு அமைவாக இருந்தால் வாதம் வாய்ப்பானதாக கொள்ளப்படும். இல்லையேல் வாய்ப்பற்றதாக கொள்ளப்படும். காலப்போக்கில் ஏற்பட்ட மொழி வளர்ச்சி, கணித துறையின் வளர்ச்சியினால் குறியீட்டு அளவையியல், கணித அளவையியல், கனணி அளவையியல், பயனிலைத்தர்க்கம் என்றவாறு திட்டவட்டமாகக் கூறமுடியா வண்ணம் மேலைநாட்டு அளவையியல் பெரும் பிரிவுகளாக முன்னேறியுள்ளது.

6.2 கீழைத்தேய அறிவாராய்ச்சியியல்

கீழைத்தேயத்திலும் அறிவு தொடர்பான ஆராய்ச்சி மிக நீண்டகாலமாக இடம்பெற்று வந்துள்ளது. இந்த வகையில் இதன் தொடக்கத்தை வேதத்தில் காண முடியும். வேதம் என்பது 'வித்' எனும் வினையடியிலிருந்து தோன்றிய அறிவு நூல் எனப்பொருள் கொள்ளப்படுகின்றது. இங்கு கூடுதலாக பௌதீக அதீதம் தொடர்பான எண்ணக்கருக்களின் இருப்பு பற்றிய ஆராய்ச்சி முக்கியத்துவப்படுத்தப்பட்டுள்ளது. இந்த தொடக்க நிலை ஆராய்ச்சியானது உபநிடதங்கள், பகவத் கீதை, தரிசனங்கள், வேதாந்தம், சைவ சித்தாந்தம் எனத் தொடர்ந்து இடம்பெற்று வந்துள்ளது. எனவே இந்திய சிந்தனையில் அறிவு என்பது ஆராய்ச்சிக்குரியதொன்றாக இருந்துள்ளது. அத்தோடு மெய்ஞான அறிவு பற்றிய ஆராய்ச்சி முறைதான் இந்திய சிந்தனையில் காணப்பட்டுள்ளது. இந்த மெய்ஞான அறிவு எப்போதும் பகுத்தறிவோடுதான் தொடர்புடையதாகக் காணப்படும்.

அதேநேரம் உலகாயுதம் போன்ற தத்துவங்கள் அனுபவ அறிவை விளக்குவதால் இந்திய சிந்தனையில் பகுத்தறிவு, அனுபவ அறிவு என்ற இருவகை அறிவின் மூலகங்கள் பற்றிய நிலைப்பாட்டை காணமுடிகின்றது. இந்திய அறிவாராய்ச்சியியல் செல்நெறியானது பரம்பொருள், ஆன்மா, உலகு என்ற முப்பொருளின் மெய்மையை காண்பதில் கரிசனை செலுத்தியதே தவிர மேலைத்தேயத்தைப் போன்று (நவீனகாலத்தில்) அறிவின் மூலங்கள் பற்றிய ஆராய்ச்சியில் அதிக அக்கறை செலுத்தவில்லை.

இந்திய அறிவாராய்ச்சியியல் ஒரு முறைப்படுத்தப்பட்ட ஒரு தனிப்பிரிவாக மிலிர்ந்து கௌதமரின் நியாய தரிசனத்தில்தான். அதேபோன்று மேலைத்தேய அறிவாராய்ச்சியியல் ஒரு முறைப்படுத்தப்பட்டது லொக்கின் ''மனித விளக்கங்களை உள்ளடக்கிய கட்டுரை.'' என்ற நூலிலும் இன்னும் உறுதியான கருத்தினை காண்டின் தூய அறிவு பற்றிய விமர்சனம் என்ற நூலிலும் தான் (பாஸ்கரன், க., 2006 : 20).

இந்திய தரிசனங்களில் பெரும்பாலானவை கடவுள் உண்மையை ஏற்பவை. சிலவை ஆன்மாவையும் உலகையும் ஏற்க சிலவை உலகை மட்டுமே ஏற்கின்றன. இவ்வாறு ஒவ்வொரு பிரிவினரும் வெவ்வேறுபட்ட கருத்துக்களை கூறுவதற்கு அடிப்படையாக அமைந்தவை அவைகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவைப் பிரமாணங்களேயாகும். எனவே இவற்றை விரிவாக நோக்கவேண்டியுள்ளது (கிரு~;ணவேணி, ஏ. என்., 2008 : 34).

6.3 இந்திய அறிவாராய்ச்சியியலில் பிரமாணங்கள்

இந்திய தத்துவத்தில் அளவைகளாகக் காட்சி, கருதல், உரை, இன்மை, அருந்தாபத்தி, உவமை, பரிசேடம், உண்மை, ஐதீகம், இயல்பு எனப் பத்து இனம் காணப்பட்டாலும் இறுதியில் அளவையெல்லாம் காட்சி, அனுமானம், (கருதல்), உரை என்;ற மூன்றில் உள்ளடங்கிவிடும் என்பதைச் சித்தியார் பின்வரும் பாடல் மூலம் விளக்குகிறது.

''அளவை காண்டல் கருதலுரை யபாவம் பொருளொப்பாறென்பர்

அளவை மேலு மொழிபுண்மை யைதி கத்தோ டியல்பென நான்

களவை காண்ப ரவையிற்றின் மேலுமறைவ ரவையெல்லாம்

அளவை காண்டல் கருதலுரை யென்றிம் மூன்றி னடங்கிடுமே" (சிவஞானசித்தியார், சுபக்கம் பாடல் 07)

பிரமாண விகாரமே பிரமேய விகாரத்திற்கு அடிப்படை. மேலைத்தேய தத்துவத்தில் காட்சி, அனுமானம் என்ற இரண்டுமே முக்கியம் பெறுகின்றன. காரண முதல்வாதம், அனுபவ முதல்வாதம் ஆகிய சிந்தனைப்போக்குகளால் கட்டியெழுப்பப்பட்ட மேலைத்தேய அறிவாராய்ச்சியியலில் காட்சி, கருதல் முக்கியம்பெற, பௌதீக உலகிற்கு அப்பாற்பட்ட பரம்பொருள் பற்றிய எண்ணக்கருக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இந்திய அறிவாராய்ச்சியியல் காட்சி, கருதலுடன் ஆப்தவாக்கியத்திற்கும் முதன்மை கொடுக்கின்றது.

இந்திய சிந்தனை மரபில் பல காட்சிக் கொள்கைகள் கூறப்பட்டாலும் அவற்றுள் சவிகற்ப காட்சி, நிர்விகற்ப காட்சி இரண்டும் முக்கியமானவை. "ஐயம் தவறு" என்பவற்றில் இருந்து நீங்கியதாயும் ஒரு பொருளின் சாதி, குணம் என்பவற்றுடன் காண்பதே வலிதான காட்சி. இக்காட்சி சவிகற்ப பிரத்தியட்சம் எனப்படும். பொருளின் இருப்பை மட்டும் அறியும் அறிவு நிர்விகற்பக் காட்சியாகும். சவிகற்பக் காட்சி வலிதானது என விளக்கிய சித்தியார் அதில் இந்திரியக் காட்சி, மானதக்காட்சி, தன்வேதனைக்காட்சி, யோகக் காட்சி எனும் நால்வகைக் காட்சி பற்றியும் கூறியுள்ளது.

சிற்சக்தியால் (அறியும் ஆற்றல்) புலன்களினூடாக பொருளை சவிகற்பமாகவே அறிவது இந்;திரியக் காட்சி. இக்காட்சியை நிர்விகற்பக் காட்சி என அனைவரும் கூறுவர். சிவஞான சுவாமிகளின் அபிப்பிராயப்படி மானதப் பிரதியட்சமே சவிகற்பக் காட்சியாகும்;. அதாவது புலன்களுக்கு திட்டவட்டமாக அறியும் அறிவு இக் காட்சியால் வருகிறது. இக் காட்சியில் புத்திக்கும் பங்குண்டு. ஒரு பொருளில் வரும் இன்ப துன்பம் பற்றிய அறிவு தன்வேதனைக் காட்சியாகும். காலம், வெளி கடந்த காட்சி யோகக்காட்சியாகும் (கிரு~;ணராஜா, சோ., 1995 : 18).

அறிவைப் பெறும் வழியில் அடுத்து முக்கியமானது அனுமானமாகும். உண்மையென அறியப்பட்ட நேர்வுகளைப் பயன்படுத்தி நியாயித்தலின் மூலமாகப் புதிய தகவல்களைப் பெறுவதற்குப் பயன்படுத்தும் முறையே அனுமானமாகும். சிவஞான சித்தியார் பூர்வக்காட்சி அனுமானம், கருதல் அனுமானம், உரை அனுமானம் என அனுமானத்தை முப்பிரிவுத் திட்டத்தில் உள்ளடக்கியுள்ளார். இதனை தன்பொருட்டனுமானம், பிறபொருட்டனுமானம் எனும் இரு பிரிவில் பாகுபடுத்துகிறார்.

அனுமானம் முதலில் பக்கம், ஏது, திட்டாந்தம் என்ற மூன்று அம்சங்களைக் கொண்டிருந்தது. பின்னர் இவற்றுடன் உபநயனம், நிகமனம் என்ற இரண்டும் இணைந்து மொத்தம் ஐந்து அவயங்களைக் கொண்டதாகக் காணப்படுகிறது. அருணந்தி சிவாசாரியார் மேற்கோள், ஏது, திட்டாந்தம் என்ற மூன்று உறுப்புக்களைக் கொண்ட அனுமான வடிவத்தையே ஏற்றுக் கொண்டார். அவ்வகை அனுமானம் சைவ சித்தாந்தத்திற்கும் பொருத்தமானதே என நாம் கூறலாம். அனுமானம் ஒரு முக்கிய பிரமாணம் என்ற வகையில் உபநயம், நிகமனம் என்ற தேவையற்ற இரு உறுப்புக்களையும் சேர்த்துக் கொள்வதனால் "அதிவியாதி" என்ற பிரமாண தோசம் ஏற்படும். எனவே அவற்றை விலக்குவதே ஏற்புடையது (கிரு~;ணராஜா, சோ., 1993 புரட்டாதி : 40).

*அடுத்து அறிவைப் பெறும் வழிகளில் உரைப்பிரமாணமும் ஒன்றாகும். இதனை ஆப்த வாக்கியம், ஆகமப்பிரமாணம் எனவும் சப்தப் பிராமணம் எனவும் கூறுவர். சங்கரபண்டிதர் இது பற்றிக் கூறும்போது தன்கண் மயக்கமில்லாது பொருளை உள்ளவாறு உணர்ந்து உள்ளவாறு கூறுபவனே ஆப்தன். அவன் கூறும் வாக்கியம் ஆப்தம் என்கிறார் (சங்கர பண்டிதர், 1925: 40-42). சுருதி சாதாரண வழிமுறைகளால் வெளிப்படுவதில்லை, பக்குவமுடைய மனிதர்களுக்கு இறைவனால் போதிக்கப்படும் உண்மைகளே அவைகளாகும் என ஹிக்ஸ் (*Hick*) குறிப்பிடுகிறார்* Hick, J., 1979 :68,69).

சிவஞான சித்தியார் ஆப்த வாக்கியத்தை மந்திர உரை, தந்திர உரை, உபதேச உரை என மூன்றாக வகுத்துள்ளார். உரையாசிரியர்களின் கருத்துப்படி ஆகமங்களின் சரியா, கிரியா பாதங்கள் தந்திர உரை எனவும் யோக பாதமும் ஞான பாதமும் முறையே மந்திர உரை எனவும் உபதேச உரை எனவும்

அழைக்கப்பட்டது. ஞானப்பிரகாச முனிவரின் கருத்துப்படி சப்த சாமத்தியம், அர்த்த சாமத்தியம், வஸ்து சாமத்தியம் என்பனவற்றால் ஆகம விரோதமின்றி சரியா, கிரியா கிருத்தியம் போதிப்பது தந்திர உரையாகும். மனமடங்கி யோகத்திலிருந்து வழிபாடு செய்தல் பற்றியது மந்திர உரையாகும் பதி, பசு, பாசம் என்ற மூன்றினது இலக்கணங்களைப் போதிப்பது உபதேச உரையாகும் கிருஷ்ணராஜா, சோ.,1995 : 37).

அறிவைப் பெறும் பிரமாணங்களில்; மேற்சொன்ன காட்சி, கருதல், உரை ஆகிய மூன்றும் முதன்மையானதாக இருந்தாலும் ஏனைய பிரமாணங்கள் பற்றியும் பார்க்க வேண்டியுள்ளது. இதில் அபாவம் என்பது இன்மையாகும். அதாவது இல்லாத தன்மையைக் காட்டுவது. உதாரணம் மேசையில் புத்தகம் இல்லை. இவ்வளவையானது காட்சி அளவையுடன் தொடர்புபடுகின்றது.

பொருள் என்பது ஒன்றை அனுமானித்துக் கொள்ளுதலாகும். உதாரணமாகக் கொடுப்பவன் இவன் எனும்போது கொடுக்காதவனும் உள்ளான் என்பதைப் பெறக்கூடியதாக உள்ளது. இதனை நாம் அனுமான அளவையினுள் அடக்கலாம்.

உவமை என்பது இரண்டு பொருள்களின் தன்மையை அறிந்த ஒருவன் இவற்றில் ஒன்றை அறியாத ஒருவனுக்கு மற்றைய பொருளை, அவன் அறிந்த பொருளின் தன்மையைக் கொண்டு விளங்கப்படுத்துவதாகும். இதனை அனுமான அளவையியலில் அடக்கலாம்.

ஒழிவு என்பது ஐந்து பூதங்களுள் ஓசைக்குக் காரணமாவது எது? எனும்போது நாற்;றத்திற்குப் பிருதிவி எனவும் சுவைக்கு அப்பு எனவும் ஒளிக்;கு தேயு எனவும் ஊற்றுக்கு வாயு எனவும் கூற மிஞ்சியது ஆகாயம். இதுவே ஓசைக்குப் பற்றுக்கோடு என அறிதலாகும். இதனையும் அனுமான அளவையினில்தான் அடக்கமுடியும்.

அடுத்த அளவையாக உள்ளது உண்மையாகும். இதனை சம்பவ அளவை எனவும் கூறுவர். முழுப்பொருளைக் குறிப்பிடும்போது அதற்குள் அதன் உறுப்பு அடங்கியிருத்தலாகும். ஆயிரம் எனும்போது அதனுள் நூறு அடங்கி இருப்பதைக் கூறலாம். இதனையும் அனுமான அளவையினுள்ளேயே அடக்கலாம். ஐதீகம் என்பது இது பரம்பரை பரம்பரையாக நம்பப்படுவது. (உபதேசம்). உதாரணமாக அந்த ஆலமரத்தில் பேய் உள்ளது. இது உரையளவையினுள் அடங்கும்.

அடுத்த அளவை இயல்பு. இதனை சகசம் எனவும் அழைப்பதுண்டு. குறிப்பிட்ட பொருளிற்கு அந்தந்த கணத்திற்கு ஏற்ப பொருள் கொள்ளுதலாகும். உதாரணம் குதிரைமேலிருந்து ஒருவன் 'கோல்' தா எனும்போது தடியை எடுத்துக் கொடுத்தலாகும். இதனை காட்சியவையினுள் அடக்கலாம்.

இந்தியச் சிந்தனையாளர்களிடையே பிரமாணங்களை பொறுத்தமட்டில் ஒருமித்த கருத்துக்கள் காணப்படவில்லை. இந்திய தரிசனங்கள் தமது நிலைப்பாட்டிற்கு ஏற்ப பிரமாணங்களில் (அளவைகள்) ஒன்றையோ, பலவற்றையோ ஏற்றுக்கொள்கின்றன. அந்தவகையில் உலகாயதம் காட்சியை மட்டும் ஏற்கின்றது. ஜைனரும் பௌத்தரும் காட்சியையும் கருதலையும் ஏற்றுக்கொள்கின்றனர். சாங்கியமும் யோகமும் காட்சி, கருதல், உரை என்ற மூன்றையும் ஏற்கின்றனர். நையாயிகர் காட்சி, கருதல், உரை, உவமானம் என்ற நான்கினையும் ஏற்கின்றார். பிரபாகரர் காட்சி, கருதல், உரை, உவமானம், பொருள் என்ற ஐந்தையும் ஏற்கின்றார். மீமாம்சகர் காட்சி, கருதல், உரை, உவமானம், பொருள், இன்மை என்ற ஆறினையும் ஏற்கின்றார் (Atreya, B.L., 1948 : 44,45),

மேற்கூறப்பட்ட அளவை முறையின் அடிப்படையில் அறிவைப் பெறும்போது, அதனை உத்தேசம், இலக்கணம், பரீட்சை என்பவற்றால் சோதித்து அறிந்து கொள்ள வேண்டும் என்பது சைவ சித்தாந்தத்தின் நிலைப்பாடாகும். வரைவிலக்கணங்களினூடாக மேலதிக விளக்கங்களைப் பெறுதல், தொடர் நியாய முறையைப் பயன்படுத்துதல் என்பனவும் சித்தாந்திகளினால் பயன்படுத்தப்பட்ட அறிவாராய்ச்;சியியல்

உத்தியாகும். சிவஞானபோத செய்யுள் வைப்பு முறை தொடர் நியாய முறையில் பயன்படுத்தப்பட்டது இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இதற்கு உரையாசிரியர்கள் விளக்கமளிக்கும் போது மாட்டெறிதல் இரட்டுற மொழிதல் (சிலேடை) உத்திகளையும் பயன்படுத்தினர் (கிருஷ்ணராஜா, சோ., 1995 : 51).

சைவ சித்தாந்திகள் ஐயத்தையும் ஓர் அறிவாராட்சியல் முறையாகப் பயன்படுத்தினர். இவர்களின் கருத்துப்படி, ஐயம் யதார்த்த அனுபவத்திற்குரியது. யதார்த்த அனுபவம் என்பது உடனடி அல்லது நேர் அனுபவமே எனினும் அதுவோர் வலிதற்ற அறிவின் வடிவமாகும். சைவ சித்தாந்த உரையாசிரியர்களிடையே ஐயம் பற்றிய ஆய்வில் கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன. உதாரணமாக ஐயத்தின் அறிவாராய்ச்;சியியல்; தகுதிபற்றி சிவஞான சுவாமிகளுக்கும், சிவாக்கிரயோகிகளிற்கும் இடையிலுள்ள அபிப்பிராய பேதத்தைக் குறிப்பிடலாம்.

6.4 இந்திய அறிவாராய்ச்சியியல் சிந்தனையில் சம்மந்தரின் பாடல்கள்.

மேலைத்தேய அறிவாராய்ச்சியியல் தளத்தின் பல விடயங்களுடன் ஒத்துச் செல்லும் சம்பந்தரின் சில பாடல்கள் அவரது அறிவாராய்ச்சியியல் புலமைக்கு சான்றாக அமைவதோடு பிற்பட்ட இந்திய அறிவாராய்ச்சியியல் வளர்ச்சிக்கும் அடிப்படையாகவும் அமைந்துள்ளன. மேலைத்தேய அறிவாராய்ச்சியியல் பாரம்பரியம் என்பது சம்மந்தருக்கு முற்பட்டது என்பதால் சம்மந்தர் அவற்றை பிரதிசெய்தாரா? என்ற கேள்வி எழுவது இயல்பானதே. உண்மையில் சம்மந்தர் கி.பி 7ம் நூற்றாண்டு காலப்பகுதியைச் சேர்ந்தவர். ஆனால் ஐரோப்பியரின் வருகை தமிழ்நாட்டில் அதற்கு பிற்பட்ட காலத்திலே இடம்பெற்றுள்ளது. அதேபோன்று இன்றைய நவீன தொழிநுட்ப சாதனங்களின் வளர்ச்சியும் குறைவானதாகவே இருந்துள்ளது. மேலும் தமிழையும் சமஸ்கிருதத்தையும் தவிர சம்மந்தருக்கு ஆங்கில புலமையும் இருக்கவில்லை. இதனடிப்படையில் நோக்கும்போது சம்மந்தர் மேலைத்தேய அறிவாராய்ச்சியியல் அம்சங்களை அறிந்திருக்கவோ அல்லது அவற்றைவிட பிரதி பண்ணியதற்கோ வாய்ப்பு இருக்கவேயில்லை. அவரது அறிவாராய்ச்சியியல் தொடர்பான சிந்தனைகள் இந்திய சிந்தனை மரபிற்குரிய தனித்துவமானது.

ஞான(அறிவு) சம்பந்தன் எனப் போற்றப்படும் சீர்காழியில் பிறந்த திருஞானசம்பந்தன் மூன்று வயதில் ஞானப்பால் அருந்தி தேவாரம் பாடத் தொடங்கினார். பன்னிரு திருமுறைகளுள் முதல் மூன்று திருமுறைகளும் சம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பதிகங்களாகும். முதலாம் திருமுறையில் 136 பதிகங்களும் 1469 பாடல்களும் உள்ளன. இரண்டாம் திருமுறையில் 122 பதிகங்களும் 1331 பாடல்களும் உள்ளன. மூன்றாம் திருமுறையில் 126 பதிகங்களும் 1358 பாடல்களும் உள்ளன. குறிப்பாக பக்தியோடு தொடர்புபடுத்திப் பேசப்படும் நாயன்மார்களினது பங்களிப்பானது பக்திப்புலம்சார் இலக்கியமாக அமைந்து விடுவது பெரும்பான்மை வழக்காகும். இவ்வழக;கை ஒத்த சம்பந்தரது பக்தி இலக்கியத்துறை பங்களிப்பு மிகவும் முக்கியத்துவமுடையது. அந்தளவுக்கு இல்லாவிட்டாலும் அவரது அறிவாராய்ச்சியியல் சிந்தனை பற்றிய ஆராய்ச்சியும் இன்றியமையாததே.

சம்மந்தரது திருப்பதிகங்களில் அறிவு தொடர்பான ஆராய்ச்சி பெரும்பாலும் பகுத்தறிவோடு தொடர்புடைய காரணமுதல் வாதம் சார்பானதாகவே காணப்படுகின்றது. இருந்தாலும் அளவையியல் குறிப்பிடுகின்ற பக்கம், ஏது, திட்டாந்தம் தொடர்பான கருத்துக்கள் பற்றிய சிந்தனை அவரது,

“ஏதுக்க ளாலு மெடுத்த மொழியாலு மிக்குச்

சோதிக்க வேண்டா சுடர்விட்டுள னெங்கள் சோதி……” 3376

என்ற பாடல் தெளிவுப்படுத்துகின்றது. அதாவது அளவையியல் என்பது ஒரு அனுபவ விஞ்ஞானம். எனவே இறைவன் தொடர்பான புரிதல்களை சுட்டுவிளக்கங்கள் மூலமோ எடுத்துக்காட்டுக்கள் மூலமோ நிறுவமுடியாது. அவை உள்ளார்ந்த ரீதியானவை. அவற்றை அனுபவ உலகைக் கொண்டு உள்ளார்ந்த ரீதியாகத்தான் அறியமுடியும். சம்மந்தரின் இக்கருத்தை நாம் மேலைத்தேயத்தில் அன்சலம், அக்குவைனஸின் உள்பொருளியல் வாதம், பிரபஞ்சவியல் வாதம் ஆகியவற்றுடன் தொடர்புபடுத்த

முடியும். சித்தாந்தம் கூறும் கடவுள் இருப்பு நிரூபணம் தொடர்பான சிந்தனைக்கும் சம்மந்தரது பாடல்கள் அடிகோலாக அமைந்தன.

மேலைத்தேய அறிவாராய்ச்சியியல் சிந்தனையோட்டம் ஒரு வகையில் விஞ்ஞானம் சார் அணுகுமுறையினை தாங்கிக்கொண்டு செல்ல சம்மந்தரது அறிவாராய்ச்சியியல் ஆன்மீகம் சார்ந்து அமைவதைதான் நாம் அவதானிக்க முடியும். இறைவன் உள்ளான். அதை அறிவதற்கு அறிவு அவசியம். அறிவு உள்ளவர்கள் இறைவனைப் போற்றி வழிபடவேண்டும். அது அவர்கள் கடமையாகும். இதனை,

"…….. பிறைநுத லீருமைப் பேணுதல்

கற்றறி வோர்கள்தங் கடனே." (3836)

என்ற பாடல் மூலம் விளக்குகின்றார். அறிவு தொடர்பான ஆராய்ச்சியில் நம்பிக்கை பிரதான இடத்தைப் பெறுகின்றது. நம்பிக்கை எப்போது அறிவாகும்?, அறிவிற்கும் நம்பிக்கைக்கும் ஏதாவது தொடர்புள்ளதா? போன்ற பல ஆராய்ச்சிகள் இடம்பெற்றுள்ளன. மேலைத்தேயத்தில் அன்சலம் என்பவர் ''நான் நம்புகிறேன் என்பதற்காக இறையிருப்பு பற்றிய நிரூபணங்களைத் தேடவில்லை. இறைவனைப் புரிந்துகொள்வதற்காகவே நிரூபணங்களைத் தேடுகிறேன். இறைவன் இருக்கிறான் என நான் நம்பாது போவேனாயின் என்னால் அவரைப் புரிந்துகொள்ள முடியாது போய்விடும்'' என்றார். இதே கருத்தை சம்மந்தர், இறைவனைத் தொழுதால் மட்டுமே அவனை அறிந்துக்கொள்ள முடியும் என்றார். இதனை, ***"ஆண்டகழல் தொழிலல்லது அறியாரவ ரறிவே."*** *(188)* என்ற பாடல் மூலம் விளக்கியுள்ளார்.

இவ்வாறு இறைவனைத் தொழுவதன் மூலமே அறிவை பெற முடியும்; அதுவே ஏற்புடைய அறிவாகும். அவ்வாறு பெறாதவைகள் ஏற்புடைய அறிவாக இருக்காது. இதனை,***"அதிருறு கழலடி களதடி தொழுமறி வலதறி வறியமே."*** *(201)* என்ற பாடலின் மூலம் தெளிவுப்படுத்தியுள்ளார். பொதுவாக இந்திய சிந்தனையில் விடுதலைப் பற்றிய கருத்து சிறப்பிடம் பெறுகின்றது. பெரும்பாலான இந்தியச் சிந்தனை மரபுகள் வினைக் கொள்கையினையும் மறுபிறப்புக் கொள்கையினையும் ஏற்றுக்கொள்கின்றன. அதாவது, கற்பதன் மூலமாக அறிவைப் பெறலாம், அந்த அறிவானது இறைவனை அடைய வழிவகுக்கும். கல்வியறிவு அடையப் பெற்றவர்கள் இப்பிறவி எடுத்ததன் சிறப்பினையும் உணர்ந்து கொள்வதோடு சிவனையே சதா நினைத்துப் போற்றுவார்கள் என்பதை,

''...

கற்றவர் தாந்தொழு தேத்தநின்றான் காதலிக்" (52) என்ற பாடல் மூலம் கூறியுள்ளார். கல்லாதவர்களை இறைவன் விரும்பமாட்டான் என்பதை ***"கல்லா நெஞ்சின் நீல்லா னீசன்." (3224)*** அதாவது, கற்றதனால் ஆயபயன் இறைவனைத் தொழுது போற்றுவது என்பதை இவ்விரு பாடல்களும்; விளக்கிற்று.

மேற்கூறிய கருத்தை தெளிவுப்படுத்தும் வகையில் இன்னுமொரு பாடலும் காணப்படுகின்றது. ...

கற்றாருங் கேட்டாரும் போய்

விண்ணோருலகத்து மேவிவாழும் விதியதுவே

யாகும் வினை மாயுமே. (644)

பொன் போன்ற தழல் வண்ணத் திருமேனியுடைய ஈசன் சடையில் கங்கையை ஏற்று கல்வியில் வல்ல அறிஞர்கள் மிக்க சந்திரனைப் போன்ற குளிர்ந்த பொழில் சூழ்ந்த இப்படிப்பட்ட இடத்தில் வீற்றிருக்கும் இறைவனை நெஞ்சே நீ அவனை நினைக்க வேண்டும் என பாடுகின்றார். சந்திரன், கங்கை முதலான பெரும் இயற்கை சக்திகளுக்கு ஒப்ப சம்மந்தர் கற்றவர்களை கருதியுள்ளார். இதே கருத்தினை ஒத்த பல பாடல்களை சம்மந்தர் திருப்பதிகங்களில் காண முடியும். *(பார்க்க : உசாத்துணை :10)*

அறிவு என்றால் என்ன?, அறிவின் மூலங்கள் எவை? என்பவற்றுடன் தொடர்புடையதாக அமைந்த சம்மந்தரின் மேற்படி பாடல்கள் இந்திய அறிவாராய்ச்சியியல் சிந்தனையில் தனித்துவத்தை எடுத்துக்காட்டி நிற்கின்றன. அறிவாராய்ச்சியியலில் அடுத்து முக்கியம் பெற்றிருப்பதும் அறிவைப் பெறும் வாயில்கள் பற்றியும் சம்மந்தரின் பாடல்கள் விளக்கி நிற்கின்றன.

6.5 சம்மந்தரின் பாடல்களில் அறிவின் வாயில்கள்

பொதுவாக இந்திய அறிவாராய்ச்சியியலில் அளவைப் பிரமாணங்களாக பத்து குறிப்பிடப்பட்டாலும் அவற்றுள் காட்சி, கருதல், உரை என்ற மூன்றும் முக்கியமானதாக அமைகின்றது. சம்மந்தரை பொறுத்தவரையில் காட்சிக்கும் உரைக்கும்தான் முக்கியத்துவம் கொடுத்த தன்மையை காணமுடிகிறது. சம்மந்தரின் பாடல்கள் தோற்றம் பெறுவதற்கு முன்னரே இந்திய அறிவாராய்ச்சியியல் சிந்தனை கட்டமைக்கப்பட்டிருந்தது. இதற்கு சிறந்த சான்றாக மணிமேகலையில் **'தவத்திறம் பூண்டு தருமங்கேட்ட காதை (29), தவத்திறம் அறுகென பாவை நோற்ற காதை (30)** என்பனவற்றில் பௌத்த தர்க்கம் கட்டமைக்கப்பட்டிருந்ததைக் கூறலாம். மணிமேகலையில் காட்சி, உரை இரண்டையும் விட அனுமானம் தான் அதிகம் விளக்கப்பட்டிருந்தது. ஆனால், சம்மந்தர் பாடல்களில் காட்சி, உரை என்ற இரண்டிற்கும் முக்கியத்துவம் கொடுத்துள்ளார்.

காட்சி என்பது ஐம்புலன்களில் புறஉலகை அவதானிப்பதன் மூலம் கிடைப்பது. இந்த காட்சியியை ஐயக்காட்சி, திரிவுக்காட்சி, மாதைக்காட்சி, வாயிற்காட்சி என பல வகைகள் காணப்படுகின்றன. சம்மந்தர் பாடல்களில் காட்சி என்பது இயற்கை வர்ணனைகளாக இடம் பெறுவதை காணலாம். அதாவது இறைவன் வீற்றிருக்கும் தன்மையை விபரித்து பாடும் பாடல்கள் மேற்குறிப்பிட்ட அனைத்தும் காட்சி கொள்கையுடன் தொடர்புபடுவதை காணலாம்.

உரைப்பிரமாணத்திற்கு முக்கியத்துவம் கொடுத்த தன்மையினை வெளிப்படுத்தும் பாடல்கள் பல காணப்படுகின்றன. உரை என்பது கற்றறிந்தவர்களாலும் மதிப்பிற்குரிய நூல்களாலும் கூறப்படும் கருத்தின்பால் ஒரு விடயத்தைப் பற்றி அறிந்துக்கொள்வது. எந்த முற்கற்பிதமும் இன்றி முன்னையது ஏதுவானதாக ஏற்றுக்கொள்ளப்படுவது. அந்தவகையில் வைதீக சிந்தனைகள் வேதத்தை முதல் நூலாகவும் அது இறைவனால் அருளிச்செய்யப்பட்டதாகவும் ஏற்கின்றன. இத்தகைய வேதங்கள் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்காக வகைப்படுத்தப்படும். இதனை சம்பந்தர் **"வேதம் நான்கினு மெய்பொருளாவது" (3320)** என்ற பாடல் மூலம் விளக்கியுள்ளார்.

இருக்கு வேதம் பற்றிய பாடல்களை சம்மந்தரின் பதிகத்தில் காண முடியும்.

"... இருக்கின் மலிந்த இறைவ ரவர்போலாம்." (259)

என்ற பாடல் மூலம் இருக்கு வேதம் கூறும் கடவுள் சிவனைப் பற்றியது என சம்மந்தர் விளக்கியுள்ளார். சாமம் என்பது இசை எனப் பொருள்படும் இதனை சம்பந்தர் **"சாம வேதமோர் மேதியத் தசமுகன் பரவும்..." (2471)** என்ற பாடல் மூலம் தெளிவுபடுத்தி யுள்ளார். பொதுவாக வேதத்தை இறைநூலாக ஏற்றுக்கொண்டதை **" வேதமோதி வெண்ணூல் பூண்டு வெள்ளையெருதேறி" (72), "வேதத்தில் உள்ளது நீறு" (2179)** எனும் பாடல் அடிகள் தெளிவுபடுத்துகின்றன. வேதத்தின் புனிதத் தன்மையை உணர்த்தும் வகையில் சம்பந்தரின் பல பாடல்கள் காணப்படுகின்றன. *(பார்க்க : உசாத்துணை :11)*

வேதத்திற்கு அடுத்தாக புராணங்களும் சிறந்த உரை நூல்களாகத்தான் கொள்ளப்படுகின்றன. புராணங்கள் பற்றிய பல செய்திகளையும் சம்மந்தர் பதிகங்களில் காணக்கூடியதாக உள்ளன. அந்த வகையில் இராவணன் பற்றிக் கூறும் போது அவன் ஒரு சிறந்த சிவ பக்தன், இலங்கையை ஆண்ட மன்னன். அவனுடைய வீரதீரச் செயல்கள் முதலான புராணங்கள் கூறும் செய்திகளைச் சம்மந்தர் தேவாரத்தில் காணக்கூடியதாக உள்ளது.

"கடற்படை யுடையவக் கடலிங்கை மன்னன்..." (2535)

என்ற பாடல் இதற்கு சிறந்த உதாரணமாகும். மேலும் பிரம்மாவும் விஸ்ணுவும் அடிமுடி தேடிய புராணக் கதைகளை வலியுறுத்தியும் சம்பந்தர் பதிகங்கள் அமைந்துள்ளன. ***பிரமன் மாலு மியாப் பெரியோனே" (280)*** *என்ற வரி இதனை உணர்த்தி நிற்கின்றது. பொதுவாகச் சம்பந்தரது பாடல்கள் ஒரு திட்டமிடப்பட்ட ஒழுங்கு முறையில் அமைந்து காணப்படுகிறது. அந்த அடிப்படையில் பார்க்கும் போது பதிகங்களில் பெரும்பாலானவற்றில் 8ம் பாடலில் இராவணனைப் பற்றியும் 9ம் பாடலில் அடிமுடி தேடிய வரலாறு பற்றியும் 10ம் பாடலில் சமண பௌத்த இழிவுகள் பற்றியும் 11ம் பாடல் பாடற் பயன் பற்றியும் விளக்குவதாக அமைந்துள்ளன (யோகராசா, செ., 2008 : 394)*

இவ்வாறாக பல புராணங்கள் கூறும் செய்திகளை சம்மந்தரின் பதிகங்களில் காணக்கூடியதாக இருக்கிறது.

சம்மந்தரது அறிவாராய்ச்சியியல் கொள்கையை தொகுத்து நோக்குகின்றபோது அறிவு என்றால் என்ன?, அறிவின் மூலங்கள், அதை பெறும் வாயில்கள் பற்றிய சிந்தனையோட்டம் காணப்படுகின்றது. இவற்றை விளக்குவதனூடாக சம்மந்தர் எதை விளக்க முனைந்தார் என்றால் அது சைவ சித்தாந்தம் கூறும் முப்பொருள் இருப்பு பற்றியதாக இருக்கும். பௌதீக அதீத இருப்பு பற்றிய ஆராய்ச்சி மேலைத்தேய அறிவாராய்ச்சியியலில் முக்கியம் பெறவில்லை. மாறாக மனித அறிவின் உற்பத்தி, வளர்ச்சி பற்றி ஒரு விஞ்ஞானத் தன்மையுடன் கூடியதான விளக்கமே முதன்மை பெற்றது.

07. முடிவுரை.

தத்துவ உலகில் சம்பந்தரின் பாடல்களில் கையாளப்படும் அறிவின் வாயில்கள் பற்றிய சிந்தனையானது இந்திய தரிசனங்களில் கூறப்படும் அறிவின் வாயில்கள் கருத்து நிலையிலிருந்து மாறி, பௌதிக அதித நிலைப்பட்டதாக எல்லோராலும் உணரமுடியாததாக கடவுளின் உண்மைத்துவத்தை உறுதிப்படுத்தும் அறிகருவியாக அமைந்துள்ளதோடு அறிவாராய்ச்சியியலில் அவரது பாடல்களின் கருத்துக்கள் தனித்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. பொதுவாகச் சம்பந்தரின் பாடல்கள் தெய்வங்கள் மீது பாடப்பட்ட அருட் பாசுரங்களாகவும் பக்திமாலைகளாகவும் கொள்ளப்படுகின்ற மரபுதான் அதிகம். அதற்கப்பாலும் இன்று தத்துவ உலகில் பேசப்படும் பல விடயங்கள் அறிவாராய்ச்சியியல், உளவியல், கல்வி போன்றன சம்பந்தரின் பாடல்களில் எடுத்தாளப்பட்டுள்ளதுடன் அவைகள் மெய்கண்ட சாத்திரங்களுக்கும் பண்டார சாத்திரங்களுக்கும் முன்னோடியாகவும் சைவ சித்தாந்த தத்துவத்தின் வளர்;சிக்கான கருவூலமாகவும் அமைந்துள்ளன.

08. உசாத்துணை நூல்கள்

இராமலிங்கம், சி. (1973). அறிவியல் சார்ந்த மெய்பொருளியலின் தோற்றம். தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை.

கணேசராஜா, க. (2011). இந்திய அளவையியலில் அனுமானம். மகாவீர் பதிப்பகம், தஞ்சாவூர்.

கிருஷ்ணவேணி, ஏ. என். (2008). சைவ சித்தாந்தம் ஓர் அறிமுகம். சேமமேடு பொத்தகசாலை, கொழும்பு.

கிருஷ்ணராஜா, சோ. (1995). சைவ சித்தாந்த அறிவாராய்ச்சியியல் ஓர் அறிமுகம். இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

கிருஷ்ணராஜா, சோ. (1993 புரட்டாதி), சைவ சித்தாந்த அறிவாராய்ச்சியியல் ஓர் அறிமுகம், பண்பாடு, மலர்-3,(பகுதி 2), பண்பாட்டாய்வுக் கழகம், பேராதனை.

சங்கர பண்டிதர், (1925). சைவப்பிரகாசம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.

சிவஞானசித்தியார், (1971). (பதிப்பு) யாழ்ப்பாணம் : கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு விற்பனைக்கழகம்;.

பாஸ்கரன், க. (2006). சைவ சித்தாந்தத்தில் அறிவாராய்ச்சியல், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

யோகராசா, செ. (2008). "பக்திப் பாடல்களில் இராவணன்" பக்தி நெறியும் பண்பாட்டுக் கோலங்களும், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கெழும்பு.

" மதியால் வழிபட்டான் வாணால் கொடுபோவான் 888

"கற்றவர்கள் பணிந்தேத்துங் கழுமலத்து 1393

"...

"படித்தார் மறைவேள்வி பயின்றார் பாவத்தை" 889

"கற்றறிவெய்திக் காமன்முன்னாகும் முகவெல்லாம்" 1052

"கல்வியாளர் கனகம் அழல்மேனி" 307

"கற்றனன் மறை லடியவ" 3733

"அங்கமும் வேதமும் ஓதும் நாவர் அந்தணா"; 55

"...

மாறாமறை நான்காய்வரு பூதம்பாவை" 109

"வேதாடவேதமெல் லாமுறையால் விரித்..."1450

"வேதநா வினர்வெண் பளிங்கின் குழைக்காதர்..."1879

"விழையாருள்மை நன்கெழுநாவில் வினைகெட வேதமா றங்கம"; 454

Atreya, B.L. (1948). **The Elements of Indian Logic,** Nalandha Publication, Bombay.

Hick, J. (1979). **Philosophy of Religion**, Prentice hall of India private, New Delhi.

Matilal, B.K. (1967). **A Modern Introduction to Indian Logic,** Clanendon Press , India.

Russell, B. (1994). **"Appearance and reality" The Problems of Philosophy,** Oxford University Press, India.

குறிப்பு: *இக்கட்டுரையில் நூற்குறிப்பின்றித் தரப்பட்டுள்ள பாடல் எண்கள் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் பதிப்பித்து கங்கை வெளியீடாக வந்த தேவாரத் திருப்பதிகங்கள் (1998) எனும் நூலில் வழங்கப்பட்டுள்ளபடி தரப்பட்டுள்ளன.*

வட இலங்கையின் வணிகப் பண்பாட்டு வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தியிருந்த புவியியல் காரணிகள் (கி.பி. 10ஆம் நூற்றாண்டு வரை) ஒரு வரலாற்றுப் பார்வை

The Significance of Geographical frameworks in facilitating the Growth of Marcantile Culture in Northern Sri Lanka: A Historical Perspective (Up to the 10th Century A.D) A Historical View

செல்வச்சந்திரன். ஜெயா, செல்லையா கிருஷ்ணராசா,

[1]முதுதத்துவமாணி ஆய்வாளர், பட்டப்படிப்புக்கள் பீடம், யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம் [2]வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்

[1]chandranjeya1979@gmail.com [2]Skrishna514@gmail.com

Abstract

This study investigates the historical evolution of mercantile culture in Northern Sri Lanka, analyzing how its unique geographical setting facilitated its emergence as a pivotal hub in Indian Ocean trade. Positioned at a strategic maritime crossroads, Northern Sri Lanka served as a primary conduit for commercial and cultural exchange between Western civilizations—including Rome, Greece, and Arabia—and Eastern regions such as Southeast Asia and China. Through a historical-analytical lens, this research examines the environmental factors that sustained this maritime prominence. Key geographical features, such as natural bay-formations acting as breakwaters and the abundance of coastal freshwater springs, allowed for uninterrupted maritime operations. The study highlights the significance of a "chain" of natural harbors, including Mantai (Mannar), Nagathevanthurai (Pooneryn), and Jambukolapattinam, which catalyzed the development of urban centers and specialized industries like shipbuilding—most notably the construction of *Samban* vessels. The findings suggest that the region's socio-political and cultural structures, including religious and architectural traditions, were profoundly shaped by these maritime networks. By examining archaeological evidence and historical toponyms, this paper concludes that the physical environment of Northern Sri Lanka was the decisive factor in sustaining its distinguished mercantile prosperity and international connectivity up to the 10th century A.D.

Key Words: Port, Trade, Mediterranean Countries, Southeast Asian Countries, Monsoon Climate, Maritime Culture, Religious Institutions, South Asia, Commercial Prosperity.

ஆய்வுச் சுருக்கம்

இலங்கையின் தனித்துவமான புவியியல் அமைவிடம் பண்டைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வணிக நடவடிக்கைகளின் தாக்கத்தினால் வரலாற்றுக் காலம் முழுவதும் பல்வேறு பெயர்களில் பதியப்பட்டுள்ளது. இலங்கையின் வடபகுதியானது கடல்சார் சமூகத்தின் வர்த்தகப் பண்பாட்டு பரிமாற்றங்களுக்கான மையமாகவும் ஒரு முக்கிய வர்த்தகத் தளமாகவும் வரலாற்று ரீதியாகத் திகழ்ந்துள்ளது. இந்தியப் பெருங்கடலின் மையப்பகுதியில் அமைந்துள்ள இலங்கை வர்த்தகப் பண்பாட்டு பரிமாற்றங்களை இணைக்கும் ஒரு முக்கிய வணிக மையமாகச் செயற்பட்டது. இப்பகுதியில் உருவான வணிக வாழ்க்கை முறை கடல் சார்ந்த வணிக வலைப்பின்னல்களுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தது. இந்தத் தனித்துவமான வணிகப் பண்பாட்டின் வரலாற்று வளர்ச்சியானது பெதீகச்சூழல் மற்றும் பருவக்காற்று காலநிலை போன்ற புவியியல் காரணிகளால் வலுவாகப் பாதிக்கப்பட்டது. இக்காரணிகள் வணிக காரணிகளால் வலுவாகப் பாதிக்கப்பட்டது. இக்காரணிகள் வணிக வாழ்க்கை மற்றும் கலாசார மேம்பாட்டை வடிவமைப்பதில் தீர்க்கமான பங்கினை வகித்தன. வரலாற்றில் சமூக மற்றும் கலாசார மாற்றங்கள் பெரும்பாலும் அதன் புவியியல் அமைப்பினாலேயே தீர்மானிக்கப்பட்டன. குறிப்பாக கடல் பயணங்கள் வெளிநாட்டு வணிகத்தொடர்புகள் மற்றும்

பிராந்தியங்களுக்கு இடையிலான வர்த்தகத் தொடர்புகள் என்பன வடஇலங்கையில் அமைந்துள்ள இயற்கைத் துறைமுகங்களிலேயே தங்கியிருந்தன. மாதோட்டம் (மன்னார்), நாகதேவன்துறை (பூநகரி), காயாத்துறை (காங்கேசன்துறை), சம்பில்துறை, கௌதாரித்துறை (நாகர்கோவில்) மற்றும் நெடுந்தீவின் பெருந்துறை போன்ற முக்கிய துறைமுகங்கள் முதன்மையான கடல்சார் மையங்களாகச் செயற்பட்டு வடஇலங்கையுடனான வெளிநாட்டு வர்த்தகத் தொடர்புகளிற்கு பங்களிப்புச் செய்துள்ளன என்பதை தொல்பொருள் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. இத்துறைமுக மையங்களின் ஊடாக வடஇலங்கையில் கடல்சார் வணிகமும் வணிகப் பண்பாடும் எவ்வாறு வளர்ச்சியடைந்தன என்பதை ஆராயும் உரு வரலாற்றுப் பகுப்பாய்வாக இது அமைகிறது. மேற்கு ஆசிய நாடுகளுடனான இத்தாலி, கிரேக்கம், சிரியா, அரேபியா, எகிப்து, எதியோப்பியா மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளான சீனா, ஜப்பான் மற்றும் தென்னிழக்காசிய நாடுகள் வடஇலங்கையுடன் வணிக மற்றும் கலாசாரத் தொடர்புகளைப் பேணி வந்தன. இதன் விளைவாக வட இலங்கை பிரதான கடல்சார் வர்த்தகப் பாதைகளின் முக்கிய சந்திப்பு புள்ளியாக உருவெடுத்தது. வட இலங்கையின் கடலோரப் பகுதிகள் இயற்கைத் துறைமுகங்களையும், நன்னீர் ஊற்றுக்களையும் கொண்டிருந்தன. இச்சாதகமான சூழல் வர்த்தக நடவடிக்கைகள் சீராக நடைபெற வழிவகுத்ததுடன் துறைமுகங்களை ஒட்டிய நகரமயமாக்கலுக்கும் வித்திட்டது. கடலோரப் பகுதிகள் ஆழமான கடற்பரப்பைக் கொண்டிருந்தமையால் கப்பல் கட்டும் தொழில் இங்கு விரிவாக வளர்ச்சியடைந்தது. "சாம்பான்" (ஞயஅடியn) வகைத் தோணிகள் கட்டப்பட்டு நங்கூரமிடப்பட்ட இடங்கள் காலப்போக்கில் சம்பந்துறை, சம்பில்துறை, ஜம்புகோலப்பட்டினம் போன்ற பெயர்களால் அழைக்கப்பட்டன. குறிப்பாக வடமராட்சிப் பகுதியின் வல்வெட்டித்துறைத் துறைமுகப் பட்டினத்தில் பண்டைய காலத்திலிருந்தே கப்பல் கட்டும் தொழில் நிலவி வந்ததைக் காணமுடிகிறது. கி.பி 10ஆம் நூற்றாண்டு வரை வட இலங்கை அதன் வணிகச் செழிப்பால் தென்னாசிய வரலாற்றில் ஒரு புகழ் பெற்ற இடத்தைப் பிடித்திருந்தது. வளைகுடா போன்ற இயற்கை அரண்கள், நன்னீர் வசதி மற்றும் மூலோபாய அமைவிடம் ஆகிய புவியியல் காரணிகளே இலங்கைக்கும் ஏனைய நாடுகளுக்கும் இடையிலான தடையற்ற வணிகத் தொடர்புகளைச் சாத்தியமாக்கின. வட இலங்கையிக் பண்பாட்டு வாழ்வில் ஆதிக்கம் செலுத்திய வணிக நிறுவனங்களின் தொடர்ச்சியான வளர்ச்சிக்குக் காரணமான புவியியல் கூறுகளை ஆராய்வதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

திறவுச் சொற்கள்: துறைமுகம், வாணிபம், மத்தியதரைக்கடல் நாடுகள், தென்கிழக்காசிய நாடுகள், பருவக்காற்றுக் காலநிலை, சமுத்திரவியல் பண்பாடு, சமய நிறுவனங்கள், தென்னாசியா, வாணிபச் செழிப்பு.

ஆய்வு அறிமுகம்

ஆய்வு அறிமுகம் மற்றும் பின்னணி (Research Background)

இலங்கைத் தீவானது இடைவெப்பவலய காலநிலை மண்டலத்திற்குள் அமைந்திருப்பதனால் ஒரு பருவம் மழைவீழ்ச்சியையும் மற்றொரு பருவம் வரட்சியான காலநிலையினையும் கொண்டு விளங்குகிற்றது. இந்நிலமையின் பின்னணியில் பருவக்காற்றுக் காலநிலையின் பூரண செல்வாக்கினையும் அதன் அமைவிடத்தின் சிறப்பியையும் இலங்கை ஆதிகாலத்திலிருந்தே பெற்றிருந்தது. தென்மேல் மற்றும் வடகீழ் பருவக் காற்றுகள் வீசும் காலங்களில் மத்தியதரைக்கடல் நாடுகளிலிருந்தும் தென்கிழக்காசிய நாடுகளிலிருந்தும் வாணிகக் கப்பல்கள் வடஇலங்கையின் வடமேற்கு மற்றும் வடகிழக்கு கடற்துறைமுகங்களை வந்தடைந்தன.

ஆய்வு சிக்கல் மற்றும் அதன் அவசியம்(Research Problem & Rationale)

வடஇலங்கையின் காலநிலையமைப்பும் பௌதீக (Geographical) அம்சங்களும் வாணிக வளர்ச்சிக்கு ஒரு உந்துசத்தியாக அமைந்த போதிலும், அவற்றைச் சார்ந்த புவியியல் காரணிகள் எவ்வாறு வாணிப நிறுவனங்களின் வளர்ச்சியை தீர்மானித்தியன என்பது குறித்த விரிவான விளக்கங்கள் ஆகியன போதியளவில் முன்வைக்கப்படாமல் உள்ளது. வாசனைத் திரவியங்கள் மற்றும் கடற்பாதை வாணிபம்

என்பன பருவக்காற்றுடன் எவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்டது என்பதை தொல்லியல் மற்றும் நாணய ஆதாரங்களுடன் மீள்ஆய்வு செய்ய வேண்டிய அவசியம் எழுகின்;றது.

***ஆய்வு வினாக்கள்* (Research Questions)**

1.வடஇலங்கையின் பருவக்காற்று காலநிலையமைப்பு வாணிப வளர்ச்சிக்கு எவ்வாறு செல்வாக்குச் செலுத்தியது?

2.வெளிநாட்டு வாணிபக் கப்பல்களின் வருகையையும் திருப்பச் செல்லும் பயணத்தையும் தீர்மானிப்பதில் பருவக்காற்றுகள் எவ்வாறான பங்கினை ஆற்றின?

***ஆய்வு நோக்கங்கள்* (Research Objectives)**

வடஇலங்கையின் வாணிப வளர்ச்சியில் பருவக்காற்று மற்றும் புவியறியல் காரணிகளின் செல்வாக்கினை விரிவாகப் பகுபாய்வு செய்தல்.

தொல்லியல், நாணய ஆதாரங்கள் மற்றும் வெளிநாட்டு இலக்கிய சான்றுகளைக் கொண்டு வடஇலங்கையின் கடற்பாதை வாணிப வரலாற்றினை உறுதிப்படுத்தல்.

வாணிப நிறுவனங்களின் வளர்ச்சியை புவிப்பௌதீகக் காரணிகளுடன் (Geographical components) *இணைத்து மீளாய்;வு செய்தல்.*

***ஆய்வு முறையியல்* (Implications)**

இவ்வாய்வானது வடஇலங்கையில் கி.பி 10ஆம் நூற்றாண்டு வரையான வணிக நடவடிக்கைகள் பற்றி எழுதப்பட்ட ஆவணங்கள், குறிப்புக்கள், சங்சிகைகள், வெளியீடுகள், தொல்பொருட்சான்றுகள் என்பவற்றின் மூலம் தகவல் சேகரிக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாய்வு வரலாற்று ஆய்வியல் முறை (Historical method), *விபரண ஆய்வியல் முறை* (Descriptive method), *பகுப்பாய்வு முறையும் தொகுத்தறி முறையும் ஆகியவற்றின் அடிப்படையில் முன்னெடுக்கப்படுகிறது.*

வடஇலங்கையின் பண்பாட்டுச் சூழல்

கி.பி.10ஆம் நூற்றாண்டு வரையிலான வடஇலங்கையின் பண்பாட்டுச் சூழ்நிலையானது இந்திய உபகண்டத்தில் முகிழ்த்து, வளர்ச்சி பெற்ற பண்பாட்டு நிறுவனங்களின் தொழிற்பாட்டினால் உருவாக்கப்பட்டதாகும்.



Map: 1.1

Source: Arjuna's Atlas of Sri Lanka, P.25.

Figur-1 Boundary of the Northern Sri Lanka (source : Arjuna's Atlas of Sri Lanka, p.25)



Figure -2 Trade Route of Indian Ocean (source Vikas K.Verma 2022)

இலங்கை வரலாற்றினைக் கூறும் பாளி – பௌத்த இலக்கிய ஆதாரங்களின்படி வடஇந்திய அரசியல் பண்பாட்டுச் சூழ்நிலையுடன் இலங்கைத்தீவானது முதற்குடியேற்றப் பிராந்தியமாக மாற்றுவிக்கப்பட்ட சம்பவங்களின் பதிவுகளை கண்டு கொள்ள முடிகின்றது. வடஇலங்கையில் மாதோட்டத்திலும் நாகர்கோவிற் பிராந்தியத்திலும் கந்தரோடையிலுமிருந்தும் கி.மு. 4ஆம் நூற்றாண்டுக்குரிய வெள்ளி உலோகத்தாலான அச்சக்குத்தப்பட்ட நாணயங்கள் அங்கம், வங்கம், மகத அரசுகளுக்குரியவையாகக் கண்டுபிடிக்கப்பட்டமையிலிருந்து வடஇந்திய வணிகத் தொடர்புகளை உறுதி செய்யமுடிகின்றது. இதே நேரம் தென்னிந்திய பாண்டிய , சேர வம்ச ஆட்சியாளரது நாணயங்களும் வடஇலங்கையிலும் தென்னிலங்கையில் அக்குறுகொட, கதிர்காமம் போன்ற மையங்களிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டமையானது தமிழக வணிகத்தொடர்புகளை உறுதிப்படுத்துவதாக உள்ளது. தென்னிந்தியாவில் பேரரசுகள் உருவாக்கம் பெற்றபின் (கி.பி. 6ஆம் நூற்றாண்டுக்குப் பின்) இலங்கைமீதான வடஇந்தியத் தொடர்புகள் வீழ்ச்சியடைந்து சென்றமையைக் காண்கின்றோம். கி.பி. 6ஆம் நூற்றாண்டிலிருந்து கிபி. 10ஆம் நூற்றாண்டு வரைக்கும் தென்னிந்தியாவினது கட்டமைக்கப்பட்ட அரசியல் பண்பாட்டுச் சூழலுக்குள் வடஇலங்கையின் பண்பாட்டு நிறுவனங்கள் உட்படடிருந்தமையை இலக்கிய, கல்வெட்டுச் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. இக்கட்டத்திலேயே வடஇலங்கை மீதான

வணிக நடவடிக்கைகள் உச்சநிலையில் வளர்ச்சியடைய ஆரம்பித்திருந்தமையைக் காணமுடிந்தது. கேரள, தமிழ்நாட்டு வணிக கணங்கள் இலங்கைத்தீவில் கோலோச்சியிருந்த காலம் இக்காலமாகும்.

இந்து சமுத்திரத்தின் மையப்பகுதியில் ஒரு படிக்கல்போன்று இலங்கை அமைந்திருக்கின்ற காரணத்தினால் மேலைத்தேயங்களினதும் கீழைத்தேயங்களினதும் சமுத்திரப்பாதைகள் சந்திக்கும் ஒரு முக்கிய புள்ளியாகவும் இலங்கைத்தீவு அமைந்திருக்கின்ற அதேவேளையில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட சகாப்தத்திலிருந்து மத்தியகாலம் வரைக்கும் தென்னிந்தியாவில் எழுச்சி பெற்ற முடியாட்சியாளரின் (பல்வேறு வம்சத்தினரதும் மதத்தினரதும்) **தாக்கத்தணிப்பு பிராந்தியமாக** வடஇலங்கை மாறிவிட்டிருந்தமையை இலங்கையின் வரலாற்றுச் சான்றுகள் எடுத்துரைக்கின்றன.

மத்தியகாலத்தில் சீனாவின் பட்டுவர்த்தக மார்க்கத்தில் அமைந்த ஒரு சந்தியாகவும் வட இலங்கை மற்றும் தென் இலங்கை காணப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. அல்லைப்பிட்டியில் 1980ஆம் ஆண்டில் அகழ்ந்து கண்டுபிடிக்கப்பட்ட சீனமரக்கலத்துடனான மட்பாண்டங்களும் காலியில் அமைந்துள்ள மும்மொழிக்கல்வெட்டும் இதனை உறுதிப்படுத்தி நிற்கின்றன. இவ்வாறு வடஇலங்கையானது கிறிஸ்துவுக்கு முற்பட்ட சகாப்தத்திலிருந்து மத்திய காலம் வரைக்கும் உள்நாட்டு, வெளிநாட்டு வாணிபத்தில் சிறந்து விளங்கியமைக்கு அதன் புவியியல் அமைவிடமும் கட்டமைக்கப்பட்ட சூழ்நிலையுமே (டீரடைவ நுஎளசைழஅநவெ) பிரதான காரணங்களாக காணப்பட்டிருந்தன. ஒரு தொடர்ச்சியான வாணிப வரலாற்றுப் பாரம்பரியத்தினைக் கொண்டு விளங்கும் இலங்கைத்;தீவின் அரசியல் வரலாற்று வளர்ச்சியானது பரம்பரை முடியாட்சி முறையில் அமைந்திருந்தமை காரணமாக வடஇலங்கையில் வணிக ஈட்டத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட செல்வ நிலை மேலும் செழிப்படைவதற்கு காரணமாக இருந்துள்ளது.

புவியியல் அமைப்பியலினால் கட்டமைக்கப்பட்ட வணிகப்பொருட்கள்

வாணிபப் பொருட்களாக கடல் முத்து, சங்கு, சங்கு வளையல், சந்தணம், கறுவா, உலர்ந்த திராட்சை இரத்தினக்கற்கள், மயிலிறகு, மயிலெண்ணை, புனுகுநெய், யானை, யானைத்தந்தம், தந்தத்தினாலான சீப்பு, மான்தோல், மான்கொம்பு, கண்ணாடி வளையல்கள், தேன் முதலானவை மேற்குலகிலிருந்து வரும் வணிகர்களுக்கானவையாகக் காணப்பட்டன.

தேங்காய், நெல், கரும்பு, அகில் ஆகியன தென்கிழக்காசிய நாடுகளிலிருந்து வந்த வணிகர்களால் இலங்கைக்;குக் கொண்டுவரப்பட்டவையாகும். இவ்வாறு ஆரம்பகால இலங்கை வரலாற்றினைப் பொறுத்த வரையில் கீழைத்தேய, மேலைத்தேய நாடுகளிற்கிடையில் அமைந்திருந்த வர்த்தகப் பாதையில் அமைந்துள்ளமையாலும், இந்து சமுத்திரத்தின் போக்குவரத்திற்குரிய கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்;ளமையாலும் நாட்டைச் சுற்றி ஆழமான கடற்கரைகளை எல்லையாகவும், இயற்கைத்துறைமுகங்கள் பலவற்றைக் கொண்டும், இந்திய உபகண்டத்திற்கு சமீபமாகவும் அமைந்துள்ளமையால் இலங்கையானது புவியியல் ரீதியான வாய்ப்பினூடு வாணிபநடவடிக்கைகளில் சிறந்து விளங்க காரணமாக அமைந்துவிட்டது. அதுமட்டுமன்றி இலங்கையி;ன் மத்தியமலைநாட்டில் விளைந்த வாசனைத்திரவியங்கள் உலக நாடுகளில் விலைமதிப்பற்ற இடத்தினைப் பெற்றமையால் அவ்விலைமதிப்பற்ற பொருட்களைப் பெறுவதற்காக

உயர்தரமான வணிகர்கள் இலங்கைக்கு வந்து சென்றமையால் பல்வேறு நாட்டுத் தொடர்புகளும் இலங்கையில் ஏற்பட வாய்ப்பாயிற்று. இதனால் இலங்கையின் அரசியல், பொருளாதார, பண்பாட்டு வரலாற்றில் குறிப்பாக வடஇலங்கையின் அரசியல்,பொருளாதார,பண்பாட்டு வரலாற்றில் மாற்றங்கள் ஏற்பட அதன் அமைவிடமே முக்கிய காரணமாகும் என்பதனை யாரும் மறுப்பதற்கில்லை. இவ்வாய்வுக்கட்டுரையில் கி.பி. 10ஆம் நூற்றாண்டு வரையிலான வடஇலங்கையின் வாணிபப் பாரம்பரியத்தில் அதன் புவியியல் கூறுகள் எந்தளவிற்குச் செல்வாக்குச் செலுத்தியிருந்தது என்பது பற்றிய ஆய்வுப் பிரச்சினை வரலாற்று மூலங்களுடன் இக்கட்டுரையில் எடுத்தாரயப்படுகின்றது.

வடஇலங்கையின் வணிகவரலாற்று வரைபியல் (இலக்கிய மீளாய்வு)

வடஇலங்கை என்ற தனித்துவமான பண்பாட்டுப் பகைப்புலமானது பாளிமொழிச் சொற்களில் குறிப்பிடப்பட்டு வந்திருந்மையின் அடிப்படையில் இலங்கைத்தீவின் வரலாற்றுப் பாரம்பரியத்தின் வளர்ச்சியில் இப்பிராந்தியம் ஆதிகாலத்திலிருந்து தனித்துவமாக நோக்கப்பட்டு வந்திருந்தமை தெளிவாகின்றது. உத்தரரட்ட அல்லது பச்சிம தேசம் என அழைக்கப்பட்ட வடஇலங்கையானது அனுராதபுரம் தலைநகராக்கப்பட்ட காலத்திலிருந்து அதற்கு வடக்கே தனித்துவமான நிர்வாகப் பிரிவாக இருந்து வந்துள்ளது. வடஇலங்கையில் வல்லிபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட பொற்சாசனமானது **படகரஅதனஹீ** என்றவொரு பாளி மொழிச் சொற்பதத்தினை பொறித்திருப்பதிலிருந்து அதனை வடஇலங்கை என கொள்வதில் பொருத்தப்பாடு காணப்படுகின்றது என வரலாற்றாய்வாளர் சிலர் கருதுகின்றனர். பேராசிரியர் வேலுப்பிள்ளை அதனை **வடகரையாதனம்** எனக் கொள்கின்றார். இது எவ்வாறிருப்பினும் வடஇலங்கை என்ற தொடர் மிகவும் தொன்மையானது என்பது வெளிப்படையாகின்றது. அவ்வகையில் நாகதீப என அழைக்கப்பட்ட யாழ்ப்பாணக்குடாநாடு உட்பட, வன்னிப்பிரதேசங்களான கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்கள் அடங்கலாக திருகோணமலையும் வடஇலங்கை என்ற புவியியல் வரையறைக்குள் எமது இவ்வாய்வில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிடப்பட்ட பிராந்தியங்களை உள்ளடக்கிய வகையில் அமைந்த வடஇலங்கையின் பண்பாடு பற்றிய ஆராய்ச்சியில் பௌத்தமதத்தினை அடிப்படையாகக் கொண்டு, போல் ஈ.பீரிஸ் என்பவர் 1917 இல் முதன்முதலாக கட்டுரைகளை எழுதியிருந்தார். Buddhism in the Northern Ceylon என்ற தலைப்பில் கந்தரோடையை அனுராதபுரத்துடன் ஒப்பிட்டு அவரால் கட்டுரைகள் எழுதப்பட்டன. இவருக்கு முன்னர் யாழ்ப்பாணவைபவமாலை என்றவொரு நூல் மாதகல் மயில்வாகனப்புலவர் என்பவரால் ஒல்லாந்தர் ஆட்சிக்காலம் வரைக்குமான காலப்பரப்பினை எல்லiயாகக் கொண்டு 1790இல் எழுதப்பட்டு, 1884இல் வெளியிடப்பட்டது. இந்நூலில் வடஇலங்கையில் மேற்கொள்ளப்பட்ட வாணிப நடவடிக்கைகள் பற்றிய பல செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன. பின்னர் 1736 இல் செ.இராசநாயகம் புராதன யாழ்ப்பாணம் என்ற அரிய நூலை எழுதி வெளியிட்டிருந்தார். இந்நூலில் வடஇலங்கையின் அரசியல் மற்றும் வாணிப, பண்பாட்டு வரலாறு ஆதிகாலத்திலிருந்து ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் வரைக்கும் எழுதப்பட்டிருப்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. 1960களுக்குப் பின்னர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய பேராசிரியர்களான கா.கணபதிப்பிள்ளை, கா.இந்திரபாலா, எஸ் பத்மநாதன், க.வேலுப்பிள்ளை ஆகியோர் வடஇலங்கை தொடர்பான ஆய்வு நூல்களையும் கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டிருந்தனர். இவை எமது வடஇலங்கை தொடர்பான வணிகவரலாற்று ஆய்வியலுக்கு

அடிப்படையாதாரங்களாக அமைந்துள்ளன. 1974 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் வடஇலங்கை பற்றிய ஆய்வில் பல திருப்பங்கள் ஏற்பட்டிருந்தன. யாழ்ப்பாணக்குடாநாட்டினுள்ளும் அதற்கு வெளியேயும் பல இடங்களில் தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 1980இல் ஆனைக்கோட்டையில் அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. வடஇலங்கையின் வரலாற்று ஆய்விற்கு ஆனைக்கோட்டை அகழ்வாராட்சிச் சான்றுகள் வரப்பிரசாதமாக அமைந்தன.

பொ.இரகுபதியின் ஆய்வுகள் யாழ்ப்பாணக்குடாநாட்டினை முழுமையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டமையானது அதன் வாணிபம் தொடர்பான ஆய்விற்குரிய தகவல்களைத் தருவதாக அமைந்தது. பரமுபுஸ்பரத்தினது ஆய்வுகள் பெருமளவிற்கு வன்னிப்பிராந்தியங்களை உள்ளடக்கியதாக மேற்கொள்ளப்பட்டமையானது வடஇலங்கையின் வணிகப் பண்பாட்டு வரலாற்றினை வரைவதற்குரிய தொல்லியல் சான்றுகளை வழங்குவதாக அமைந்தது. செல்லையா கிரு~;ணராசாவினது தொல்லியல் - வரலாற்று ஆய்வுகளும் மத்தியகாலம் வரையிலான வடஇலங்கையின் வணிக வரலாறு பற்றிய தகவல்களை தருவனவாக அமைந்துள்ளன. இவ்வாறான ஆய்வுகளின் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு எமது இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

செங்கடல் மார்க்கமும் தமிழகமும்

"தென்னிந்திய நிலப்பரப்பிலும் செங்கடல் மார்க்கத்தலும் மிகக் கூடுதலாகக் கிடைத்துவரும் ரோமானிய வாணிபம் தொடர்பான தொல்லியல் எச்சங்களானவை மத்தியதரைக்கடற்பரப்பிலுள்ள ரோமாபுரிக்கும் தென்னிந்தியாவுக்குமிடையே நிகழ்ந்து வந்த வாணிபத்தொடர்புகளையும், அதன்தன்மை, வளர்ச்சி நிலைகளையும் உறுதிப்பட வரலாற்று வெளிச்சத்திற்குத் தந்துள்ளன. சேர்மோட்டிமர் வீலரால் இந்தோ-ரோமானிய வாணிபம் தொடர்பான விரிவான அகழ்வாய்வுகளைத் தொடர்ந்து (1946) பிரான்ஸ் நாட்டைச்சேர்ந்த J.M.கஸால் என்ற தொல்லயலாளர் 1956 இல் அரிக்கமேட்டில் அகழ்வாய்வு செய்து பிரமாண்டமாக அமைக்கப்பெற்றிருந்த ரோமானியவர்த்தகக் கிடங்கினை கண்டுபிடித்தார். இவற்றுக்கும் மேலாக தென்னிந்தியாவின் கிழக்குப்பக்கமாக காணப்பட்ட கடற்கரையோர நிலப்பரப்பிலும், உள்நிலப்பரப்பிலும் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின் நிமித்தம் ரோமானிய வாணிபம் தொடர்பான பல அரியசெய்திகள் வெளிக் கொணரப்பட்டன. கஸால் என்பவரால் புதிதாகக் கண்டுபிடிக்கப்பெற்று அகழ்வாய்வு செய்யப்பட்ட பல புதிய மையங்கள் ரோமானிய வர்த்தக நடவடிக்கைத் தளங்களாக விளங்கியபோதும் அவை புராதன சுதேசிய இலக்கியங்களில் சிறப்பாக சங்ககாலத்து தமிழ்இலக்கியங்களில் குறிப்பிடப்படாதவையாகக் காணப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் கிரேக்க, ரோமானிய இலக்கியங்களில் அவை குறிப்பிடப்பட்டுள்ளமை அவதானிக்கத்தக்கதாகவுள்ளது. கிரேக்க பொற்கால இலக்கிய கர்த்தாக்களான ஸ்ராபோ, மற்றும்தொலமி, பெரிப்பிளஸ்மாறிஸ் எரித்திரேயன் சீ என்ற நூலின் ஆசிரியர் ஆகியோரது பதிவுகளே இந்தியாவிற்கும் மத்தியதரைக் கடற்பிராந்தியத்திற்குமிடையிலான ரோமானிய வர்த்தகநடவடிக்கைள் தொடர்பான விரிவான தகவல்களைத்தருகின்ற பதிவுகளாக காணப்படுகின்றன. Periplus Maris Erythrian Sea என்ற நூல் கி.பி. 40க்கும் 70க்கும் இடையிலான காலப்பரப்பில் எழுதப்பெற்றதாகும். இந்நூலானது கப்பலோட்டிகளும் வணிகர்களும் ரோமன்- எகிப்திலுள்ள துறைமுகங்களில் தொடங்கி, செங்கடல்

மார்க்கத்தில் பயணித்து, ஆபிரிக்காவின் கிழக்குக்கரையோரமாக படகுகளைச் செலுத்திச் சென்று, அரேபியக் கடற்கரையோரமாகக்கடலைக்கடந்து, இந்தியாவை ரோமானியர் சென்றடைந்து கொண்ட வரலாற்றினைப் பதிவுசெய்துள்ளது. இந்நூலில் மேலும் பல வாணிபச் செய்திகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. லாயனல் கஸன் என்பவரின் கூற்றுப்படி பிரதான துறைமுகங்களின் அமைவிடம், அவற்றின் பாதுகாப்பான சூழல், பொருட்களை களஞ்சியப்படுத்தும் வாய்ப்புகள் முதலான செய்திகளை இந்நூல் தருவதோடு இந்தியக்கரையோரமாகக் காணப்பட்ட துறைமுகங்களின் நீண்ட ஒருபட்டியல் தரப்பட்டுள்ளமையும் சிறப்பான ஓர் அம்சமாகக் காணப்படுகின்றது. இருந்தும் பெரிப்பிளஸ் நூலில் காணப்படும் ஒரு குறைபாடு தென்னிந்திக் கிழக்குக் கரையோரமாகக்காணப்படும் துறைமுகங்கள் பற்றிய செய்திகள், அங்கு வாணிபத்தில் ஈடுபட்டிருந்த வணிகக்கப்பல்கள் பற்றிய செய்திகள் மிகக் குறைந்தளவிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளமையாகும். இதற்குக் காரணம் ரோமானிய வணிகக் கப்பல்கள் மிகக் கூடுதலானளவிற்கு மேற்கே கேரளக் கடற்கரைத்துறைமுகங்களிலேயே தரித்துநிற்கும் வழக்கத்தினைக் கொண்டிருந்தன எனக் கஸன் குறிப்பிடுகின்றார். தென்னிந்தியாவின் கிழக்குக் கடற்கரையோரத் துறைமுகங்களுக்கு இந்தியக்கப்பல்களை செலுத்தி வந்தவர்கள் கிழக்குப்பிராந்தியத்தில் வர்த்தகத்தில் தனியுரிமை கொண்டோராக விளங்கினர். பெரிப்பிளஸ் நூலில் கிழக்குக் கடற்கரைத்துறைமுகங்களுக்கும் மேற்குக் கடற்கரைத்துறைமுகங்களுக்குமிடையே இந்திய மாலுமிகள் ஒழுங்காக கப்பல்களை செலுத்தி வருவார்கள் எனவும,; ரோமாபுரியிலிருந்து கொண்டுவரப்பட்ட வணிகப் பொருட்களை இந்திய மாலுமிகள் மேற்குக் கரையிலிருந்து கிழக்குக் கரைத்துறைமுகங்களுக்கு ஒழுங்காக எடுத்துச் செல்வார்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறான ஒருதொடர்ச்சியான வாணிப வலைப்பின்னல் செயற்பாட்டு ஒழுங்கில் கந்தரோடையும் இணைவு பெற்றிருந்நமையைக் காண்கின்றோம். ரோமாபுரியிலிருந்து தமிழகத்திற்கு ஏற்றி வரப்பட்ட வாணிகப் பொருட்களில் அரிட்ரையின் மட்பாண்டம், அம்போறா என்றழைக்கப்பட்ட மட்பாண்டக் கொள்கலன்கள், ரோமன்கண்ணாடி, பாவை விளக்குகள், தங்க நாணயங்கள், மதுசாரம் (யவன பானம்) ஆகியன மிகப்பிரதான பொருட்களாக விளங்கின. காவிரிப்பூம் பட்டினத்தில் யவன இருக்கை என்ற கிராமக்குடியேற்றம் ஒன்று அமைந்திருந்நமையை சிலப்பதிகாரத்திலுள்ள குறிப்பு ஒன்று எடுத்துக்காட்டுகின்றது. அரிக்கமேட்டின் அகழ்வாய்வுக்கிடங்கிலிருந்து பாவை விளக்குள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சங்ககாலத்துப் புலவரான நக்கீரர் ரோமர்களது பாவை விளக்குகள்தொடர்பாகவும் wine என்ற திராட்சை ரசம் பற்றியுமான தகவல்களை தந்துள்ளார். யவனத்தச்சர் பற்றி மணிமேகலையும், பொன்னொடு வந்து மிளகொடு செல்லும் யவனர் என்று அகநானூற்றில் வரும் அடிகளும், தயன் கண்ணனார் என்பவரும் குறிப்புக்களைக் கொடுத்துள்ளனர்" *(கிரு~;ணராசா, செ.,2024: கலைநிலம்: ப.05)*

வரணியில் கிடைத்த ரோமநாணயங்கள்

Figurs – 3 & 4

உரோமத் தங்க நாணயம் - கந்தரோடை வரணியில் கிடைத்த உரோம நாணயங்கள்

(மூலம் : கிரு~;ணராசா, செ.1998: தொல்லியலும் யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டுத் தொன்மையும்; யாழ்ப்பாணம், plate No. 25)

தென்கிழக்காசிய நாடுகளும் தமிழகமும்

கேரள- தமிழக வாணிபமும் வட இலங்கையில் அதன் பரம்பலும்

இலங்கையானது இந்திய உபகண்டத்திற்கு தென் எல்லையில் அமைந்துள்ளமையாலும், புவியியல் ரீதியாக பிரிக்கப்பட்டு தனியான அலகாக அமைந்திருப்பதாலும் இலங்கைக்கும், இந்தியாவிற்குமான தொடர்புகள் தனியே வர்த்தகம் சார்ந்தவையாக மட்டும் அமையாது அரசியல், பண்பாட்டு உறவுகளையும் உள்ளடக்கியதாக உள்ளது. இந்தியாவிற்கு மிகவும் அண்மையில் அமைந்திருப்பதனால் அங்கு ஏற்படும் அபிவிருத்திகள் இலங்கையிலும் பாதிப்புக்களை ஏற்படுத்தச் செய்தன. பௌத்தமதம், பெருங்கற்கால பண்பாடு போன்றன இலங்கை வரலாற்றின் அடிப்படை அம்சங்கள் யாவும் இந்திய உபகண்டத்திலிருந்து பெறப்பட்டவையாக கருதப்படுகின்றன. இலங்கையானது தனித்த ஒரு அமைப்பாக இருந்தமை காரணமாக முற்றுமுழுதாக இந்தியாவில்; ஏற்பட்ட மாறுதல்கள் யாவற்றையும் ஏற்கவேண்டும் என்ற நிலையிலும் இருக்கவில்லை. பெரும்பாலும் இந்தியாவில் ஏற்பட்ட மாறுதல்களே இலங்கையிலும் கூடியளவு செல்வாக்கை செலுத்துவதாயிருந்தது. குறிப்பாக இந்தியாவிற்கு வடமேற்கு இந்தியா வழியாக ஏற்பட்ட பாதிப்புக்கள் இலங்கையில் எவ்வித பாரிய மாறுதல்களையும் ஏற்படுத்தவில்லை. இதனால் .இலங்கையின் புவியியல் அமைவிடம் காரணமாக அது தென்னாசிய பண்பாட்டுப் பாரம்பரியத்தின் ஒரு பகுதியாக இருக்கின்ற போதிலும் தனியான சில சிறப்பம்சங்களையும் கொண்டதாக அமைந்துள்ளது. (கிருஷ்ணகுமார்.சோ 2005:38-39)

Figure – Trade Route of Early Tamilakam (source – Vikas K Verma 2022)

தென்னிந்தியாவின் தென்பகுதியில் குறிப்பாக கேரளாவிற்கும் தமிழகத்திற்கும் மிக அண்மையில் அமைந்து காணப்படும் வடஇலங்கையானது தொடக்கத்தில் வடஇந்திய பண்பாட்டு செல்வாக்கிற்கு உட்பட்டு வளர்ந்தாலும் அதன் ஆதிகால, இடைக்கால அரசியல், பொருளாதார, பண்பாட்டு வரலாறு பெருமளவிற்கு கேரள மற்றும் தமிழகத்தின் செல்வாக்கிற்கு உட்பட்டு வளர்ந்;ததற்கு அதிகமான தொல்லியல் சான்றுகள் காணப்படுகின்றன. இலங்கை – கேரள, தமிழக உறவின் குறுக்கு நிலமாக வடஇலங்கை காணப்படுவதால் தழிழகத்தில் காலத்திற்கு காலம் தோன்றி வளர்ந்த பண்பாட்டை முதலில் உள்வாங்கிக் கொள்ளும் தொடக்கவாயிலாக வடஇலங்கையே திகழ்ந்தது.



இலங்கையின் ஆதிகால வரலாறு கூறும் இலக்கியங்கள், தொல்பொருட் சான்றுகள் என்பன இலங்கையின் அயல்நாட்டு உறவுகளில் வடஇலங்கைத் துறைமுகங்களே அதிக பங்கு வகித்ததை உறுதிப்படுத்துகின்றன. உதாரணமாக பாளி இலக்கியங்களில் வடஇலங்கையிலுள்ள மாதோட்டப்பட்டினம், ஜம்புகோளப்பட்டினம் ஊடாகவே அயல்நாட்டு உறவுகள் நடைபெற்றன எனக் கூறப்படுகின்றது. வடஇலங்கையின் அயல்நாடுகளுடனான குறிப்பாக கேரளா மற்றும் தமிழகத்துடனான வணிக உறவு பற்றி அறிவதற்கு இலக்கிய மூலாதாரங்களான பாளி, சிங்கள இலக்கியங்கள் பெரும்துணை புரிகின்றன. இவற்றுள் பௌத்த ஜாதகக் கதைகள், தீபவம்சம், மகாவம்சம், மகாவம்சடீகா, ஸமந்தபாஸாதிக, ரஸவாகினி, சகஸவத்துப்பகரண, புதுசரண, பூஜாவலிய என்பனவும், இந்திய இலக்கியங்களான மகாபாரதம், அர்த்தசாஸ்திரம், ராஜதரங்கிணி, மணிமேகலை, பாலராமாயணம் என்பனவும் உறுதுணைபுரிகின்றன. மேலும் வெளிநாட்டவரது குறிப்புக்களிலிருந்தும் இலங்கை

அயல்நாடுகளுடன் கொண்டிருந்த வணிகத்தொடர்புகள் பற்றி பெருமளவிற்கு அறியமுடிகின்றது. இவைகளுள்ளே பெரிபுளூஸ், ஸ்ராபோ, தொலமி, கொஸ்மஸ், பிளினி, பிறகோபியஸ், இபின்பதூதா, இத்சிங், மார்க்கோபோலோ, பாகியன், சௌயூ-குவா, யுவாங்சுவாங் போன்றவர்களின் குறிப்புக்கள் குறிப்பிடத்தக்கன. அவ்வாறே தொல்லியல் மூலாதாரங்களான சாசனங்கள், முதலாம் பராக்கிரமபாகுவின் நயினாதீவுக்கல்வெட்டு, காலிமும்மொழிக் கல்வெட்டு என்பன சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதுடன், பிறதொல்லியல் மூலாதாரங்களான வடஇலங்கைத் துறைமுகங்கள், உள்நாட்டுப் பிரதேசங்களில் கிடைக்கும் வெளிநாட்டு நாணயங்கள், உடைந்த பொருட்கள், மட்பாண்ட ஓடுகள், சிறுமணிகள், என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இந்து சமுத்திரத்தில் நிலவிய வர்த்தகத் தொடர்புகளின் போது வெப்வேறு வகையான காலகட்டங்களில் வடஇலங்கையின் முக்கியத்துவமானது கூடியும், குறைந்தும் காணப்பட்டது. இதனூடு வடஇலங்கையின் வெளிநாட்டு வர்த்தகம் பற்றி எம்மால் அறிந்து கொள்ள முடியும். அதனை அடிப்படையாகக் கொண்டு கிறிஸ்தவ சகாப்தத்தின் தொடக்ககாலத்தில் இருந்து கிறிஸ்துவிற்கு பிற்பட்ட 5ஆம், 6ஆம் நூற்றாண்டு வரை கிரேக்க, உரோமர்களின் வர்த்தக ஆதிக்கம் மேலோங்கிக் காணப்பட்டது (சத்தியசீலன்.ச1976:54). உரோமப் பேரரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து பாரசீக, அராபிய, பல்லவர்களின் வர்த்தக நடவடிக்கைகளும் இடம்பெற்றிருந்தன. கி.பி 10-17 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதிக்குள் அராபிய, சோழ, சீன, தென்கிழக்காசிய நாடுகள் போன்றனவற்றின் நிலையமாக அமைந்து கொள்ளும் வாய்ப்பும் ஏற்பட்டது.

ஆரம்ப காலத்தில் தமிழ்நாட்டு வணிகர்கள் இலங்கை போன்ற நாடுகளிலிருந்து ஏலம், கறுவா, மிளகு போன்ற வாசனைப் பொருட்களையும், முத்து, இரத்தினம், யானை, யானைத்தந்தம், விலையுயர்ந்த கனிமங்கள் முதலான பொருட்களைப் பெற்று தென்னிந்திய துறைமுகங்களுடாக உரோமிற்கும், ஏனைய நாடுகளிற்கும் அனுப்பி வைத்தனர். அவ்வாறே இலங்கைக்கு தேவையான உணவுப்பொருட்கள், குதிரை, உலோகப்பொருட்கள், மதுவகைகள், பலதாரப்பட்ட மட்பாண்டங்கள் என்பன தென்னிந்திய துறைகளிற்கு அனுப்பப்பட்டு அங்கிருந்த கொண்டுவரப்பட்டுள்ளன. இந்நிலைமை 1ஆம் நூற்றாண்டளவில் மாற்றமடைந்தது. உரோமநாட்டு வர்த்தகரே இலங்கையில் நேரடியாக வணிகநடவடிக்கைகளில் ஈடுபட்டவராவர். இந்நேரடி வர்த்தகத்தில் வடஇலங்கைப் பிரதேசங்களே முக்கிய பங்கு வகித்திருந்தன. அதனை மாந்தை, பூநகரி, கந்தராடை, வல்லிபுரம், ஆனைக்கோட்டை, வரணி போன்ற இடங்களில் கிடைத்த உரோமநாணயங்கள், உரோமமட்கலங்கள், கண்ணாடிப் பொருட்கள் என்பன உறுதிசெய்கின்றன. இச்சான்றுகளின் மூலம் ரோம வணிகர்களது மரக்கலங்கள் மாந்தை- பூநகரிப் பிரதேசத்திற்கும், ஊடுருவி வணிக நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கலாம் எனக்குறிப்பிடுகின்றது. (கிருஸ்ணராசா.செ2005:150). இப்பிராந்தியங்களிலிருந்து கடல்முத்துக்கள், யானைத்தந்தங்கள், இரத்தினக்கற்கள், மெல்லிய நூலாடைகள் என்பன வாணிபப் பொருட்களாக கைமாறப்பட்டன. கந்தரோடையிலிருந்து சங்குவளையல்களும், கர்ணேலியன் மணிகளும், மான்கொம்புகளும் ரோம வியாபாரிகளிற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தமையை தொல்லியல் சான்றுகள் உறுதிசெய்கின்றன. சமகாலத்தே அநுராதபுரம், பொலனறுவை, பொம்பரிப்பு, திருகோணமலை போன்ற இடங்களிலும் உரோம வர்த்தகத் தொடர்பு ஏற்பட்டிருந்தமையை சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. உரோமரின் இவ்வணிக நடவடிக்கை கி.பி 5ஆம் நூற்றாண்டுவரை தொடர்ந்திருந்தமையை சான்றுகள் பிரதிபலிக்கின்றன.

வடஇலங்கையின் வியாபாரிமூலை, தம்பசெட்டிப்பகுதிகளில் பல்லவர்கால வர்த்தகச் செழிப்பினை வெளிப்படுத்தும் பண்பாட்டுக் கோலங்கள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. மேலும் வெளிநாட்டு வணிகர்கள் மற்றும் அவர்களின் முகவர்கள் பண்டைக்காலத்திலிருந்து இலங்கையில் இருந்துள்ளனர். வெளிநாட்டு வர்த்தகர்களிற்கு இலங்கையில் குடியுரிமை இருந்ததாக வரலாற்றுப்பதிவுகள் குறிப்பிடுகின்றன. உதாரணமாக கொஸ்மஸ் தனது நூலை எழுதும்போது இலங்கையில் பாரசீகத்தவரின் குடியேற்றம் காணப்பட்டதாக எழுதியுள்ளார். (Cosmas *364-372)* அவ்வாறான குடியேற்றம் அநுராதபுரத்தில் இருந்தமைக்கான தொல்லியல் சான்றாக நெஸ்ரோறியன் சிலுவைச்சின்னம் பொறிக்கப்பட்ட கற்சிற்பம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அது கி.பி 4ஆம் நூற்றாண்டிற்குரியது. இதே சிலுவைச்சின்னத்தை தாங்கிய அச்சுக்குத்தப்பட்ட வெள்ளிநாணயம் பேராசிரியர் கிருஸ்ணராசாவினால் வடஇலங்கையின் கந்தரோடையிலிருந்து மீட்கப்பட்டு ஆராயப்பட்டது. இந்நாணயத்தின் முதற்பக்கத்தில் நெஸ்ரோறிய சிலுவைச்சின்னமும், அதன்கீழ் பிராமி வரிவடிவமும் சமஸ்கிருத வரிவடிவமும் கலந்த நிலையில் பொறிக்கப்பட்ட *"மாதிரேக்க காஸீஸ"* என்ற வாசகமும் பொறிக்கப்பட்டுக் காணப்படுகின்றது. அது கந்தரோடையை மையமாகக் கொண்டு நெஸ்ரோறிய கிறிஸ்தவர்களால் மேற்கொள்ளப்பட்ட வாணிபநடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதாக உள்ளது. *((கிருஸ்ணராசா,செ.2005:156).*

பருவக்காற்றுக் காலநிலையும் கடல்போக்குவரத்தும்

பண்டைய காலத்தில் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். இந்துசமுத்திரத்தின் மத்தியில் இந்தியாவிற்கு அண்மையில் இலங்கை அமைந்துள்ளது. கிழக்கிற்கும், மேற்கிற்கும் இடையிலான வர்த்தகப் பாதையின் மத்தியில் இலங்கை அமைந்திருந்திருந்தமையால் இந்நாடு ஒரு மத்திய நிலையமாக விளங்க வாய்ப்புக் கிடைத்ததெனலாம். இதற்குச் சாதகமாக வடகீழ்ப்பருவக் காற்று, தென்மேல் பருவக்காற்று போன்றனவும், இயற்கையான துறைமுகங்களும் வளங்களும் காணப்பட்டன. இப்பின்னணியில் கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்திதிலிருந்து சர்வதேசவர்த்தகத்துடன் இணைந்தவகையில் வலைப்பின்னல் அமைப்பில் வர்த்தக நடவடிக்கைகளில் இலங்கை ஈடுபட்டிருந்தமை சிறப்பிற்குரிய அம்சமாகும்.

வெளிநாட்டு வர்த்தகத்தில் துறைமுகங்களின் பங்கு முக்கியமானதாகும். பொதுவாகக் கப்பல் பயணமானது துறைமுகத்தில் ஆரம்பித்து பிறிதொரு துறைமுகத்தில் நிறைவடைந்ததாகும். பண்டைக் காலத்தில் கடல் கடந்த நாடுகளுக்கிடையிலான தொடர்புகளைப் பொறுத்தவரை பிற போக்குவரத்துச் சாதனங்கள் விருத்தியடைந்த நிலையில் கடல்சார் போக்குவரத்துக்களே முனைப்படையத் தொடங்கியிருந்தன. இத்தகைய கடல்சார் போக்குவரத்துக்கள் துறைமுகங்களைப் பின்னணியாகக் கொண்டு நாடுகளுக்கிடையிலான உறவுகளை வலுப்படுத்தியிருந்தன. கடல் சார்ந்த போக்குவரத்துக்களை அவதானிக்கும்போது அவை உலகக் கடல்மார்க்கங்களோடு தொடர்புடையனவாக அமைந்திருதமையைக் காணலாம்.; இவை வடஇலங்கைத் துறைமுகங்களுக்கும் பொருத்தமானவையாகும்.

இலங்கைக்கும் பிறநாடுகளுக்கும் இடையிலான தொடர்புகளில் வடஇலங்கையின் பண்டைய துறைமுகங்களான மாந்தை, கோகர்ணம், ஜம்புகோளப்பட்டினம் என்பன முதலிடத்தினைப் பெற்றன.

மாந்தைத் துறைமுகமானது இலங்கையின் ஆரம்பகால வரலாற்றோடு இணைத்துப் பேசப்படும் பெருமையுடையதாகும். வர்த்தகத்துடன் மட்டுமன்றி அரசியற் படையெடுப்புக்கள், புலப்பெயர்ச்சி, பண்பாட்டுப்பரவல் போன்றவற்றிற்கும் இத்துறைமுகம் சாதகமானதாக அமைந்தது. இதற்கு இங்கு கிடைக்கப்பெற்ற வெறிநாட்டார் குறிப்புக்களும், தொல்லியற் சான்றுகளும் சான்று பகர்கின்றன.

வடஇலங்கையின் யாழ்ப்பாணக்குடாநாட்டுப் பரப்பிலே அதிகளவிலான துறைமுகங்கள் காணப்பட்டன. இவற்றில் பண்டைய துறைமுகமான ஜம்புகோளப்பட்டினம் கப்பற்போக்குவரத்துக்களின் போது முக்கிய ஒரு துறைமுகப்பட்டினமாக விளங்கி, வாணிபத் தொடர்புகளின் மூலம் முக்கியமான பங்கினை ஆற்றியுள்ளது. அந்தவகையில் வடஇலங்கையின் வாணிபத்தொடர்புகளிற்கேற்ப பருவகால காலநிலை அம்சங்களை தன்னகத்தே கொண்டு பல்வேறு பண்பாட்டுப்பரவுகைகளின் வரவுகளிற்கு உறுதுயையாய் அமைந்தது. இதனையே அறிஞர்கள் கிழக்கிந்தியாவிற்குச் செல்லும் பிரதான துறையாக ஜம்புகோளம் சிறந்துவிளங்கியதெனக் குறிப்பிடுவர்.

வடஇலங்கையில் பல்வேறு துறைமுகங்கள் பிற்பட்ட காலத்தில் புழக்கத்தில் இருந்தபோதும் அவற்றிற் பல காலப்போக்கில் முக்கியத்துவம் இழந்து விட்டன. ஏனெனில் கடல்மார்க்கங்கள் நிலையானவையல்ல. கரையோர அமைப்பு கடல்போக்குவரத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் பிரதான அம்சமெனலாம். அதனைவிட நீர்ப்பரப்பு, பருவநிலைகள், கால்வாய்கள், மூலப்பொருட்களின் முக்கியத்துவம் மற்றும் அவற்றின் இருப்பு, சர்வதேசநிலை, அரசியல், பொருளாதாரம், பண்பாடு, தொழில்நுட்பம் போன்ற பல்வேறு நிலைகளும் துறைமுகங்களின் எழுச்சியிலும், வீழ்ச்சியிலும் பிரதான பங்குவகிப்பதை இன்றும் காணலாம். இப்பின்னணியில் வடஇலங்கையில் செல்வாக்குச் செலுத்திய துறைமுகங்கள் பிற்காலத்தில் முக்கியத்துவம் இழப்பதையும் பின்னர் அடையாளமின்றி வெறும் வரலாற்றுச் செய்தியாக மட்டுமே இருப்பதையும் அவதானிக்கலாம். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை கொழும்புத்துறை, அராலித்துறை, பண்ணைத்துறை போன்றவை அத்தன்மை கொண்டவையாகும். இவைகளிற்பல இன்று மீன்பித்துறைகளாக மட்டுமே செயற்படுகின்றன. இன்னும் சில இறங்குதுறைகளாகவே உள்ளன. பண்டைய வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக மார்க்கத்தில் பருதித்துறை, வல்வெட்டித்துறை, காங்கேசன்துறை, கச்சாய், கொழும்புத்துறை, ஊர்காவற்துறை ஆகிய துறைமுகங்களில் மும்முரமாக வணிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இத்துறைமுகங்கள் இலங்கையின் பிரதான துறைமுகங்களோடு மட்டுமன்றி பிறநாடுகளின் துறைமுமுகங்களொடும் தொடர்புகளைக் கொண்டிருந்ததன. *(சாந்தினி,அ. 2011:19-20)*

உள்நாட்டு இயற்கை வளங்களும் வர்த்தக சந்தைகளும் வர்த்தகப் பாதைகளும்

இலங்கையானது சிறியதீவாகக் காணப்படினும் மிகப்புராதன காலம்தொட்டே அது பல்வேறு நாடுகளில் தனது வளங்கள் காரணமாக முதன்மையான இடத்தினை வகித்து வந்தது. அந்தவகையில் இலங்கையில் காணப்பட்ட இயற்கை வளங்களான கறுவா, ஏலம், சாதிக்காய், முத்து, மாணிக்கம், யானை, யானைத்தந்தம், தேன்மெழுகு என்பவற்றுடன் இங்கு காணப்பட்ட பிரதான வர்த்தகப் பாதைகளும், வர்த்தக சந்தைகளும் பிரதான இடத்தினைப் பெற்றுக்கொண்டன.

இவ்வகையில் இலங்கையின் உள்நாட்டு வர்த்தகம் தொடர்பாகப் பல தொல்லியற் சான்றுகள் கிடைக்கப்பெறுகின்றன. ஈரத்தாழ்வலய மற்றும் இடைத்தர வலயத்திலிருந்து இரத்தினக்கற்கள் நாட்டின் பிற வலயங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டன. சிப்பியோடுகளைப் போல முத்து, உப்பு போன்ற கடல்படு திரவியங்கள் நாட்டின் உட்பாகத்திற்குப் பரந்துள்ளமைக்கான சான்றுகளும் கிடைக்கப்பெறுகின்றன. யாழ்ப்பாணத்தின் பண்டைய தலைநகராகக் கருதப்படும் கந்தரோடைக்கும், உரோகணை இராச்சியத்திலுள்ள மகாகமைக்கும் இடையே நெடுங்காலமாக வணிகத்தொடர்புகள் இருந்து வந்துள்;ளமையை தொல்லியல் சான்றுகள் புலப்படுத்துகின்றன. மகாகமையிலிருந்தும், அயலிலுள்ள திசமகாறாமையிலிருந்தும் மிகஅண்மைக் காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட நீள்சதுரமான இலட்சுமி நாணயங்கள் கந்தரோடையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட இலட்சுமி நாணயங்களைப் பெருமளவிற்கு ஒத்துக் காணப்படுகின்றன. இதன் மூலம் உள்நாட்டில் நடைபெற்று வந்த வர்த்தகத் தொடர்பினை அறிந்து கொள்ள முடிகின்றது. (சாந்தினி,அ. 2013:14-15)

வெளிநாட்டு வாணிபமார்க்கங்களும் இந்துசமுத்திர வலைப்பின்னல் பாதைகளும்

இலங்கை வரலாறானது ஆதிகாலத்திலிருந்தே வர்த்தகத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததுடன் பெருமளவு பாதிப்புக்கும் உட்பட்டு வந்துள்ளது. இலங்கையின் வரலாற்றுக்கால ஆரம்பத்தில் ஏற்பட்ட திராவிட, ஆரியக் குடியேற்றங்களும் தென்னிந்திய, வடஇந்தியப் பண்பாட்டுப் படர்ச்சியும் அக்காலத்தில் நடைபெற்ற வர்த்தகத் தொடர்புகளின் விளைவுகளே. பௌத்த ஜாதகக் கதைகளிலும், சங்க இலக்கியங்களில், மகாபாரதம், அர்த்தசாஸ்திரம், மணிமேகலை போன்ற நூல்களிலும் ஆங்காங்கே காணப்படும் குறிப்புகளில் இருந்து ஆரம்பகாலத்தில் வர்த்தகம் தொடர்பாக இலங்கை முக்கியமான இடத்தைப் பெற்றிருந்தது என்பது நன்கு புலனாகும். பிற்பட்ட காலத்தில் இடம்பெற்ற ஐரோப்பிய வருகைகூட இந்த வர்த்தக நோக்கத்தினையே கொண்டிருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கை ஒரு தீவாகப் பரந்தளவிலான நீர்ப்பரப்பினிடையே இந்து சமுத்திரத்தின் மத்தியில், இந்திய உபகண்டத்திற்கு அண்மையில் அமைந்துள்ளது. இத்தகைய கேந்திர முக்கியத்துவத்துவமான நிலை வெளிநாடுகளுடான வர்த்தக வரலாற்றிலே தனியானதோர் இடத்தைப் பெறுவதற்குக் காரணமாக இருந்துள்ளது. அது பெற்றிருந்த புவியியல் நிலையம் கிழக்கேயுள்ள நாடுகளுக்கும் மேற்கேயுள்ள நாடுகளுக்கும் இடையிலான கடல் வர்த்தகப் பாதைகள் சந்திக்கும் முக்கியத்துவத்தை இலங்கைக்கு வழங்கலாயிற்று. அதன் ஒருபுறத்திலே இத்தாலி, கிரேக்கம், சிரியா, அராபியா, பாரசீகம், எகிப்து, எதியோப்பியா என்பவையும் மறுபுறத்திலே மலாயா, பர்மா, கம்போடியா, தாய்லாந்து, வியட்னாம், இந்தோனேசியா போன்ற தென்கிழக்காசிய நாடுகள், சீனா என்பவையும் அமைந்து காணப்படுகின்றன. இவ்வகையில் அது பெற்றிருந்த கேந்திரத்தானத்தின் விளைவாக இந்துசமுத்திரத்தில் நடைபெற்ற வர்த்தக வரலாற்றிலே இலங்கை முக்கியமான இடத்தைப் பெற்று வந்துள்ளது.

கிறிஸ்துவுக்கு முற்பட்ட முதலிரு நூற்றாண்டுகளில் இருந்து கிட்டத்தட்ட கி.பி 3ஆம் நூற்றாண்டுவரை இப்பிராந்தியத்தில் இடம்பெற்ற வர்த்தகத்திலே கிரேக்க, உரோமர்களின் வர்த்தக ஆதிக்கம் மேலோங்கியிருந்தது. உரோமப் பேரரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து பாரசீகர் 6ஆம் நூற்றாண்டு வரையில் இப்பிராந்தியத்திலே முக்கியத்துவம் பெற்றனர். இவர்களின் பின் அராபிய எழுச்சியைத் தொடர்ந்து 9ஆம் நூற்றாண்டளவில் இப்பிராந்திய வர்த்தகம் பெருமளவு அவர்கள் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தது. 10-

13ஆம் நூற்றாண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் இப்பிரதேசத்தில் பிரதேச வாரியாக அராபிய, சோழ, ஸ்ரீவிஜய ஆதிக்கம் அவ்வப்பிரதேசத்தைச் சூழ நிலவிவந்தது. 13ஆம் நூற்றாண்டின் பின்னர் ஐரோப்பியரின் ஆதிக்கம் ஏற்படும் வரை திரும்பவும் அராபியர் ஆதிக்கத்தின் கீழ் இவ்வர்த்தகம் இடம்பெற்று வந்தது.

இலங்கையானது இந்திய உபகண்டத்திற்கு மிக அண்மையில் இருப்பதனாலும், தெற்கில் அதனது கேந்திர நிலையத்தினாலும் ஆரம்ப காலத்திலிருந்தே இலங்கை இந்தியாவுடனான கடல்வர்த்தகத்தில் முக்கியமானதோர் இடத்தைப் பெற்றுள்ளது. இந்தியாவிற்கு மிகஅண்மையில் இருப்பதன் காரணமாக ஆதியில் ஏற்படுத்தப்பட்ட குடியேற்றங்கள்கூட இவ்விரு பிரதேசங்களுக்குமிடையில் நடைபெற்ற வர்த்தகத்தின் விளைவாக ஏற்பட்டவை எனக்கொள்ளலாம். எந்தவொரு நாட்டுடனும் ஆரம்பத்தில் வர்த்தகத் தொடர்புகள் ஏற்பட்டதன் பின்பே மற்றைய தொடர்புகள் ஏற்படுகின்றன என்பது ஏற்றுக்கொள்ளத்தக்க விடயமாகும்.

இலங்கையில் வர்த்தகம் தொடர்பாக முக்கியத்துவம் வாய்ந்த சில துறைமுகங்கள் சிறப்பிடம் பெறுகின்றன. அவற்றுள் மகாதீர்த்தம் அல்லது மாதோட்டம், ஜம்புகோள, திருகோணமலை, உறுவெல என்பன குறிப்பிடத்தக்கன. மாதோட்டம் அடிக்கடி படையெடுப்புக்கள் இறங்கிவரும் வழியாகவும், புறப்படும் வழியாகவும் மகாவம்சவில் குறிப்பிடப்படுகின்றது. பிறொகொப்பியாசின் நூலிலிருந்தும், கொஸ்மஸ் தரும் குறிப்புக்களில் இருந்தும் மகாதீர்த்தம் சர்வதேசப் பரிவர்த்தனை நிலையமாக விளங்கியதனை அறியலாம். ரஸவாகினி எனும் நூலின்படி மகாதீர்த்தத்தில் நந்தி எனும் பெயருள்ள வணிகன் தன் கப்பல் கூட்டத்தின் உதவியுடன் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தை வெளிநாடுகளுடன் நடத்தியதாக அறிகிறோம். ஏறத்;தாழ ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவராக கருதப்படும் சுந்தரமூர்த்தி நாயனார் தனது தேவாரங்களில் ''வங்கம் மலிக்கின்ற கடல் மாதோட்ட நன்னகர்'' என்றும் பாடியள்ளார். வங்கம் என்பது கப்பலையும், வையம் என்பது உலகையும் உலகின் பல்வகைப்பட்ட மக்களையும் குறிக்கும். எனவே கப்பல்கள் நிறைந்த துறைமுகமாகவும், பல்வகைப்பட்ட மக்கள் கூடும் நகரமாகவும் மாதோட்டம் விளங்கியது என்பதனை அறியமுடிகிறது. கி.பி ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த மன்னார் கச்சேரித்தூண் கல்வெட்டு இத்துறைமுகத்திற்குப் பொறுப்பாக இருந்த ''மகாபுடலத்தன்'' என்ற அதிகாரி பற்றிக் குறிப்பிடுகின்றது. இத்தகைய தகவல்களின் மூலம் இந்து சமுத்திரப் பிரதேசங்களுடனான வர்த்தகத்தில் மகாதீர்த்தம் மிகப்பிரதான துறையாக விறங்கியிருந்தமையினை அறிய முடிகின்றது.

கீரிமலைக்கு மேற்கே மூன்றுமைல் தூரத்தில் அமைந்ததாகக் கருதப்படும் ஜம்புகோளத்துறை கூடியளவிற்குப் பௌத்த பாளி நூல்களிலே சமயத்துடன் தொடர்புபடுத்தப்பட்டே குறிப்பிடப்படுகின்றது. வங்காளத்திலுள்ள தாமிரலிப்தியுடனான தொடர்புகளைப் பொறுத்தமட்டில் ஜம்புகோளம் முக்கியம் பெறுகின்றது. வடஇந்தியாவிலிருந்து இலங்கைக்கு மேற்கொள்ளப்பட்ட சமய சம்பந்தமான உறவுகளில் பெரும்பாலானவை இவ்விரண்டு துறைகளின் ஊடாகவே இடம்பெற்றன. மேலும் இலங்கையின் கிழக்குக் கரையிலே அமைந்துள்ள கோகர்ணத்திற்கும், கலிங்க நாட்டிற்கும் இடையே தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆந்திரத் தொடர்பகளும், கட்டடக்கலை மரபுகளும் இத்துறையூடாகவே பரப்பப்பட்டிருத்தல் வேண்டும். இந்து சமுத்திரக்கிழக்குப்பாக வர்த்தகத்தைப் பொறுத்து இத்துறைமுகம் முக்கிய இடத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். அவ்வகையில்

தென்னிந்திய வணிக கணங்களின் நடவடிக்கைகள் இத்துறைமுகத்தைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் இடம்பெற்றிருக்கின்றன.

தற்போது ஊர்காவற்துறை என அழைக்கப்படும் ஊராத்துறை இக்காலப்பகுதியில் ஒரு பெரிய வர்த்தகத்துறையாக இருந்திருத்தல் வேண்டும். இத்துறைமுகம் பற்றிக் குறிப்பிடத்தக்க தகவல்களை முதலாம் பராக்கிரமபாகுவின் நயினாதீவுக் கல்வெட்டு மூலம் அறிகிறோம். இதன்மூலம் பிறநாட்டவர் இத்துறைக்கு வந்து வர்த்தகம் செய்தமை பற்றியும், ஊராத்துறையை வந்தடையும் சேதமடைந்த கப்பல்கள் தொடர்பான சில வர்த்தக ஒழுங்குபாடுகள், பிறநாட்டு வணிகருக்கான பாதுகாப்புப் பற்றியும் தகவல்கள் கிடைத்துள்ளன. (கௌதமி,க.2015:28)

முடிவுரை

எந்தவொரு நாட்டுக்கும் அதன் இயற்கையமைப்பும் புவியியல் சூழலுமே அதன் பண்பாட்டு, பொருளியல் நிறுவனங்களின் இயல்பினையும் வளர்ச்சிப் போக்கினையும் தீர்மானிக்கின்ற சக்திகளாக அமைந்துள்ளன. சீன நாகரிகம் , எகிப்திய நாகரிகம் மற்றும் சுமேரிய நாகரிகங்கள் வளர்த்தெடுத்த வணிக – பண்பாட்டு நிறுவனங்கள் அவ்வவற்றின் புவியியல் கூறுகளினால் கட்டமைக்கப்பட்ட சூழ்நிலைகளின் விளைவாக ஒவ்வொன்றும் தனித்துவமானதாக வளர்ச்சி பெற்றிருந்ததையைக் காணமுடிந்தது. எனவே கட்டமைக்கப்பட்ட சூழ்நிலையின் தாக்கமானது புவியியல் அலகுகளினூடாக ஓரிடத்தின் பண்பாட்டு நிறுவனங்களின் வளர்ச்சியையும் பிறநாட்டுத்தொடர்புகளையும் கடற்போக்குவரத்து முறைகளையும் தீர்மானிப்பதனைக் காணமுடிந்தது. வடஇலங்கையைப் பொறுத்தவரையிலும் அதன் புவியியல் அலகுகளும் அமைவுடமும் காலநிலையும் பொருண்மிய மற்றும் பண்பாட்டு நிறுவனங்களின் வளர்ச்சிப்போக்கினையும் வெளிநாட்டுத் தொடர்புகளையும் தீர்மானித்த காரணிகளாக அமைந்திருந்தன. சடங்குகள் மற்றும் சம்பிரதாயங்களின் தொடர்ச்சியினை வணிக நிறுவனங்கள் வளர்த்தெடுத்திருந்தன. ரோமானிய வணிகர்கள் பல இந்து ஆலயங்களுக்கு போஜகர்களாக – காப்பாளர்களாக சேவைபுரிந்திருந்தமையினை தமிழகத்து இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. வணிகர்குலம் தாம் போனபோன நாடுகளில் இந்து ஆலயங்களை ஸ்தாபித்து தேவதானங்களையும் வழங்கி, இந்துப் பண்பாட்டிற்கு பங்களித்துள்ளார்கள். வடஇலங்கையைப் பொறுத்தவரையிலும் அவ்வாறான தொழிற்பாட்டினை அவர்கள் ஆற்றியிருந்தமைக்கான கல்வெட்டுச் சான்றுகளை நல்லூர் சிவன் கோவிலிலும் மாந்தையிலுள்ள திருக்கேதீஸ்ரம் சிவன்கோவிலிலும் காணமுடிகின்றது. பொதுவாக கல்வெட்டுக்களில் வணிகர்களை 'சாத்தன்' என்றே குறிப்பிடுவது வழமையாகும். இவ்வாறான நிலையானது மக்கள் கூடும் மையமான ஆலயங்களின் அமைவிடத்தினைப் பொறுத்தே அதாவது அவ்வாலயத்தின் சேவை வழங்கல் முறையினைப் பொறுத்தே உருவாக்கிக் கொள்ளப்படுகின்றது. கடற்கரையோர ஆலயங்கள் சமுத்திர நிகழ்வுகளைப் பொறுத்து உள்நாட்டு வெளிநாட்டு வணிக நிறுவனங்களின் செல்வாக்கினை உள்ளீர்த்தெடுத்திருப்பதனைக் காணலாம். மாந்தை துறைமுகத்தில் அமைந்த திருக்கேதீஸ்வரம் அத்தகைய சிறப்பிற்குட்பட்ட ஓர் இந்து ஆலயமாகும். மாந்தை அகழ்வாராய்ச்சி;யின்போது பெற்றுக்கொள்ளப்பட்ட தொல்லியல் சான்றுகள் இக்கருத்தினை நன்கு உறுதிப்படுத்தியுள்ளன. எனவே வணிகப் பாரம்பரியமானது எந்தவொரு நாட்டிலும் சரி, பிரதேசத்திலும்சரி சமய – பண்பாட்டு நிறுவனங்கள் மீது செல்வாக்குச் செலுத்தி வந்திருந்மையைக் காண்கின்றோம். வடஇலங்கையும் இதற்கு விதிவலக்கானதல்ல.

உசாத்துணை நூல்கள்

கிரு~;ணகுமார்,சோ. (2015). இலங்கையின் வெளிநாட்டு உறவுகளில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள், வரலாறு சமூகக்கல்வி மன்றம், யாழ்ப்பாணம்.

கிருஸ்ணராசா,செ. (2024). கந்தரோடையும் வாணிப வலைப்பின்னலும். கலைநிலம்: இதழ் 05. கலாசாரப் பேரவை – வலி-தெற்கு பிரதேச செயலகம் உடுவில், யாழ்ப்பாணம்.

கிருஸ்ணராசா.செ. (2012). இலங்கை பண்பாட்டுப் பரிணாமத்தின்; அடிப்படைகள். AB Creator &Publishers , Colombo.

கௌதமி,க. (2015). வடஇலங்கையும் அயல்நாட்டு வணிகத் தொடர்புகளும். பூந்துணர் நறவறம் 5, பூநகரி பிரதேச செயலகம்.

சத்தியசீலன்,ச. (1976). இலங்கையும் இந்து சமுத்திர வர்த்தகமும் (கி.மு 2ஆம் நூற்றாண்டு- கி.பி 13ஆம் நூற்றாண்டுவரை) யாழ்ப்பாணம். சிந்தனை வெளியீடு

சாந்தினி, (2013). இலங்கையின் ஆரம்பகால வர்த்தகம். கலைக்கேசரி இதழ் 2

சி.ற்றம்பலம்,சி.க. (1993). யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி

"வல்லிபுரத் தாழி தரும் தமிழர் தரும் நாகரிகம்." ஈழநாடு (வாரமலர்) 28.05.1972.

சி.ற்றம்பலம்,சி.க.(1993). யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி

Ariane de Saxce ,Trade and Cross-cultural Contacts in Srilanka and South India during Late Antiquity (6^{th}-10^{th} Centuries) , Journal of Multidisciplinary Studies in Archaeology 4 (2016): 121-159

Http://www.iranchamber.com/history/articles/india-parthian-colonyl.php.

Hulugalle, H.A.J . (1965). Ceylon of the Early Travellers.Published VijithaYapa Distributions . Colombo

Mendis,V,L,B. (1965). The Foreign relations of Srilanka , from earliest times to 1965, published Tisara prakasakayo.

Navaratnam,C,S. (1958). Tamils and Ceylon, Jaffna. Printed at the Saiva Prakasa press, Jaffna.

Pathmanathan.S (1978). kingdom of Jaffna. Published Arul.M.Rajendran, Colombo 13,Srilanka

Ragupathy, Ponnampalam, (1987). Early Settlement in Jaffna, Puplished by Thilimalar Ragupathy , Madras.

Rasanayakam,Mudaliyar C. (1926). ANCIENT JAFFNA,Madras.

இலங்கை சிகிரியா மற்றும் இந்திய அஜந்தா ஓவியங்களின் கலை நுட்பங்கள்: ஒப்பிட்டு ஆய்வு

Artistic Techniques of Sri Lanka's Sigiriya and India's Ajanta Paintings: A Comparative Study

Fayas, S.M.[1] & Raksha, S.F.[2]

[1&2]Department of Islamic Studies, South Eastern University, Sri Lanka.

Correspondence: smfayas@seu.ac.lk

Abstract

Wall paintings in the South Asian art tradition are a significant medium reflecting religion, history, and culture. The Sigiriya paintings in Sri Lanka and the Ajanta cave paintings in India, both from the fifth century, are regarded as exemplary artistic testaments. This study conducts a comparative analysis of the historical context, patronage, artistic techniques, themes, stylistic features, and conservation challenges of these two sites. Employing a qualitative comparative methodology, data for Sigiriya were gathered through direct field visits and scientific observation of the paintings. For Ajanta, data were primarily collected from documentary sources, academic videos, photographs, scholarly texts, and UNESCO records. Sigiriya's paintings, commissioned under King Kashyapa I, depict celestial maidens, emphasizing worldly aesthetics and symbolic elegance. In contrast, Ajanta's paintings, supported by religious and royal patrons, illustrate Jataka tales, highlighting devotion, moral teachings, and educational purposes. Both utilize tempera techniques and natural pigments, yet Sigiriya focuses on isolated feminine figures, while Ajanta emphasizes complex narrative compositions. Conservation challenges differ: Sigiriya contends with weathering and biological degradation, while Ajanta faces humidity and tourism-related impacts. These paintings reveal the diversity of South Asian art traditions, illuminating the interplay of religion, politics, and aesthetics. The study not only documents historical significance but also underscores the value of introducing this artistic and cultural heritage to younger generations.

Key words: Ajanta cave paintings, Cultural heritage, South Asian wall painting art, Sigiriya cave paintings, Tempera technique.

ஆய்வுச் சுருக்கம்

தெற்காசிய சுவர் ஓவியக் கலை, மத, வரலாறு மற்றும் கலாசாரத்தை பிரதிபலிக்கும் முக்கிய வடிவமாக கருதப்படுகிறது. இலங்கையின் சிகிரியா மற்றும் இந்தியாவின் அஜந்தா குகை ஓவியங்கள், 5ஆம் நூற்றாண்டின் சிறப்பான கலைச் சான்றுகளாக விளங்குகின்றன. இவ்வாய்வு, இவ்விரு தளங்களின் வரலாற்றுப் பின்னணி, புரவலர் ஆதரவு, கலை நுட்பங்கள், கருப்பொருள்கள், பாணி அம்சங்கள் மற்றும் பாதுகாப்பு சவால்களை ஒப்பீட்டு முறையில் ஆராய்கிறது. பண்பு ரீதியான ஒப்பீட்டு முறையை (Qualitative Comparative Methodology) அடிப்படையாகக் கொண்டு, சிகிரியா தளத்திற்கு நேரடி புல வருகைகள் (Direct Visits) மேற்கொள்ளப்பட்டு, அங்குள்ள ஓவியங்களை அறிவியல் முறையில் அவதானிக்கப்பட்டது. அஜந்தா ஓவியங்களைப் பற்றிய தரவுகள் பெரும்பாலும் ஆவணங்கள், கல்வி வீடியோக்கள் (Videos) மற்றும் புகைப்படங்கள் போன்ற காட்சி ஆதாரங்களிலிருந்து திரட்டப்பட்டன. இவற்றோடு கல்வி நூல்கள் மற்றும் யுனெஸ்கோ ஆவணங்களிலிருந்து கூடுதல் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. சிகிரியா ஓவியங்கள், 1ஆம் காசியப்ப மன்னனின் ஆதரவுடன்

தேவகன்னியர் உருவங்களைச் சித்தரித்து, உலகியல் அழகியலையும் குறியீட்டு நளினத்தையும் வெளிப்படுத்துகின்றன. மாறாக, அஜந்தா ஓவியங்கள், மத மற்றும் அரசு புரவலர்களின் ஆதரவுடன், ஜாதகக் கதைகள் மூலம் பக்தி, ஒழுக்கக் கற்பிதங்கள் மற்றும் கல்வி நோக்கங்களை வலியுறுத்துகின்றன. இரண்டும் டெம்பரா நுட்பங்கள் மற்றும் இயற்கை நிறமிகளைப் பயன்படுத்தினாலும், சிகிரியா தனிமைப்படுத்தப்பட்ட பெண்மை உருவங்களையும், அஜந்தா சிக்கலான கதைமுறை கலவையமைப்புகளையும் மையப்படுத்துகின்றன. பாதுகாப்பு சவால்களில், சிகிரியா வானிலை மற்றும் உயிரியல் பாதிப்புகளையும், அஜந்தா ஈரப்பதம் மற்றும் சுற்றுலாவின் தாக்கங்களையும் எதிர்கொள்கிறது. இவ்வோவியங்கள் தெற்காசிய கலை மரபின் பன்முகத்தன்மையை வெளிப்படுத்தி, மத, அரசியல் மற்றும் அழகியல் இடைவினைகளை புரியவைக்கின்றன. இவ்வாய்வு, வரலாற்றுப் பெருமையை ஆவணப்படுத்துவதோடு, இளைய தலைமுறைக்கு கலை மற்றும் கலாசார பாரம்பரியத்தின் மதிப்பை உணரச் செய்கிறது.

திறவுச் சொற்கள்: அஜந்தா குகை ஓவியங்கள், கலாசார பாரம்பரியம், சிகிரியா குகை ஓவியங்கள், டெம்பரா நுட்பம், தெற்காசிய சுவர் ஓவியக் கலை

1. ஆய்வு அறிமுகம்

தெற்காசியாவின் கலை மரபு, அதன் சிக்கலான தன்மை, நுட்பமான கலைத்திறன் மற்றும் கலாசார ஆழத்திற்கு புகழ்பெற்றது. இதில் சுவர் ஓவியங்கள், மத, அரசியல் மற்றும் சமூக மதிப்புகளை வெளிப்படுத்தும் முக்கிய ஊடகமாக விளங்குகின்றன. இலங்கையின் சிகிரியா ஓவியங்களும், இந்தியாவின் அஜந்தா குகை ஓவியங்களும் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் வரையப்பட்டவையாக, வரலாற்று மற்றும் கலாசார முக்கியத்துவம் வாய்ந்தவையாகத் திகழ்கின்றன. சிகிரியாவில், மத்திய இலங்கையில் அமைந்த பாறைக் கோட்டையின் மேற்கு முகப்பில், முதலாம் காசியப்ப மன்னனின் ஆணைப்படி வரையப்பட்ட ஓவியங்கள், அரச அதிகாரத்தையும் அழகியல் மாண்பையும் இணைத்து, அப்சரஸ் (Apsaras - தேவகன்னியர்) உருவங்களை நுண்ணிய கோடுகள், உயிரோட்டமான வண்ணங்கள் மற்றும் நளினமான மனித உருவங்களுடன் சித்தரிக்கின்றன (Walker, **2019**). இவை அரசியல் கிளர்ச்சிகள் மற்றும் அரியணை அபகரிப்பு சூழலில் உருவாகி, உலகியல் மற்றும் குறியீட்டு அர்த்தங்களின் கலவையை வெளிப்படுத்துகின்றன (Encyclopedia Britannica, **2025**).

இதற்கு மாறாக, மகாராஷ்டிராவில் அமைந்த அஜந்தா குகைகள், கி.மு. 2ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 6ஆம் நூற்றாண்டு வரை பௌத்த மடங்களாகச் செயல்பட்டு, தியானம், வழிபாடு மற்றும் சமூகக் கூடுதல்களுக்கு இடமளித்தன. வாக்காடக (Vākāṭaka) பேரரசர் ஹரிசேனாவின் (Harishena)[1] காலத்தில் உச்சமடைந்த இவ்வோவியங்கள், ஜாதகக் கதைகள், போதிசத்துவர்கள், அரச குடும்பத்தினர் மற்றும் அன்றாட வாழ்க்கைக் காட்சிகளை சித்திரித்து, பக்தி நோக்கத்துடன் கல்வி மற்றும் உத்வேகத்தை வழங்குகின்றன (UNESCO World Heritage Centre, n.d.).

இரு தளங்களும் டெம்பரா (Tempera)[2] நுட்பத்தில் உலர் சுதை மீது வரையப்பட்டவையாக, தாதுக்கள் (Minerals)[3] மற்றும் தாவரங்களிலிருந்து பெறப்பட்ட இயற்கை நிறங்களைப் பயன்படுத்துகின்றன. சிகிரியா ஓவியங்கள், தாவர கோந்து (Plant Gum / Resin)[4] மற்றும் உலர்த்தும் எண்ணெய்களுடன் நீர் எதிர்ப்பு மேற்பரப்புகளை உருவாக்கி, வெளிப்புற சூழலுக்கு ஏற்றவாறு தழுவியுள்ளன (Rathnayake et

[1] வாக்காடக (Vākāṭaka) பேரரசர் ஹரிசேனா (Harishena) என்பது அஜந்தா குகைகளின் உச்சகட்ட வளர்ச்சிக்குப் பொறுப்பான ஆட்சியாளராக வரலாற்றில் அறியப்படுகிறார். அவர் கி.பி. 475 முதல் 500 வரையிலான காலத்தில் ஆட்சி செய்தார். ஹரிசேனா, வாக்காடக வம்சத்தின் (இது சதவாகனர்களுக்குப் பின் மகாரா~;டிராவில் ஆட்சி செய்த ஒரு சக்திவாய்ந்த வம்சம்) கடைசி முக்கிய மன்னராகக் கருதப்படுகிறார்.

[2] ஓவிய நுட்பம். நிறப்பொடியை (pigments) பசை அல்லது முட்டை மஞ்சள் போன்ற பிணைப்பிகளுடன் கலந்து சுதை அல்லது பலகை மீது வரையும் முறை.

[3] இயற்கையில் கிடைக்கும் பாறைகள், உலோகங்கள், கற்கள் போன்றவற்றிலிருந்து பெறப்படும் பொருட்கள். பழைய ஓவியங்களில் நிறமூலம் (pigments) உருவாக்க தாதுக்கள் அரைத்து தூளாக்கப்பட்டன. உதாரணம்: சிவப்பு - Hematite, மஞ்சள் - Orpiment, பச்சை - Malachite.

[4] மரங்களிலிருந்து வெளியேறும் இயற்கை பிசின். ஓவியத்தில் நிறப்பொடியை சுவரில் ஒட்ட வைக்க பிணைப்பியாக (binder) பயன்படுத்தப்பட்டது.

al., 2025). அஜந்தா ஓவியங்கள், குகை உட்புறங்களில் பசை அடிப்படையிலான பிணைப்புகளுடன், நுண்ணிய அடுக்கு முறைகள் மற்றும் நிழல்-தொனி (Shading & Tonal Variation)[5] மாறுபாடுகளைப் பயன்படுத்தி கதைமுறையின் ஆழத்தை மேம்படுத்துகின்றன. இந்த நுட்பத் தேர்வுகள், சுற்றுச்சூழல் மற்றும் செயல்பாட்டு நோக்கங்களுக்கு ஏற்ப தெற்காசிய கலை மரபின் புதுமையை வெளிப்படுத்துகின்றன.

சிகிரியா ஓவியங்கள் அரச மாண்பையும் குறியீட்டு அர்த்தங்களையும் பிரதிபலிக்க, அஜந்தா ஓவியங்கள் பௌத்த ஒழுக்க மற்றும் ஆன்மீக கற்பிதங்களை வெளிப்படுத்துகின்றன. இரண்டும் சமூக மதிப்புகள், மத சிந்தனை மற்றும் கலைச் சாதனைகளின் நீடித்த பதிவுகளாக விளங்கி, பிராந்திய குறுக்குவெட்டு பரவலை வெளிப்படுத்துகின்றன. எனினும், சிகிரியாவில் வானிலை மற்றும் அஜந்தாவில் ஈரப்பதம் போன்ற பாதுகாப்பு சவால்கள், இந்த கலாசார மரபுகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன. இந்த ஒப்பீட்டு ஆய்வு, வரலாற்று, தொழில்நுட்ப மற்றும் கருப்பொருள் சூழல்களில் இரு ஓவியத் தொகுப்புகளையும் ஆராய்ந்து, தெற்காசிய கலை மரபு பற்றிய ஆழமான புரிதலை வழங்க முற்படுகிறது.

2. ***ஆய்வின் பிரச்சினைக் கூற்று***

இலங்கையின் சிகிரியா ஓவியங்கள் மற்றும் இந்தியாவின் அஜந்தா குகை ஓவியங்கள் ஆகியவை வரலாற்று மற்றும் கலை முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருந்தபோதிலும், தற்போதைய அறிவியல் ஆய்வுகள் பெரும்பாலும் இவற்றைத் தனித்தனியாகவே ஆராய்கின்றன. இவை பிராந்திய பாணிப் பண்புகள் (Artistic Styles)[6] அல்லது தனிப்பட்ட வரலாற்றுச் சூழல்களில் மட்டுமே கவனம் செலுத்துகின்றன (Walker, 2019; Kumar, 2025). இத்தகைய அணுகுமுறைகள், 5ஆம் நூற்றாண்டு தெற்காசிய சுவர் ஓவியக் கலையில் குறுக்குப்பிராந்திய தாக்கங்கள் (Cross-Regional Influences)[7], பகிரப்பட்ட கலை நுட்பங்கள் (Shared Artistic Techniques)[8] மற்றும் கருப்பொருள் தழுவல்களைப் பற்றிய விரிவான புரிதலை மட்டுப்படுத்துகின்றன. மேலும், இந்த இரு தளங்களும் செயல்பாடு, புரவலர் (Patron)[9] மற்றும் சுற்றுச்சூழல் வெளிப்பாடு ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளைக் கொண்டுள்ளன: சிகிரியா ஒரு அரச அரண்மனையாகவும் திறந்தவெளி ஓவியங்களைக் கொண்டதாகவும் உள்ளது, அதேசமயம் அஜந்தா குகைகள் ஒரு மடத்தின் மூடப்பட்ட பக்தி வளாகமாகச் செயல்படுகின்றன. இருப்பினும், ஒப்பீட்டு ஆய்வுகள் இந்த வேறுபாடுகள் கலை வெளிப்பாடு மற்றும் கலாசார முக்கியத்துவத்தை எவ்வாறு வடிவமைத்தன என்பதை அரிதாகவே ஆராய்கின்றன. பாதுகாப்பு சவால்களைப் பொறுத்தவரை, சிகிரியா ஓவியங்கள் வானிலை அழிவை எதிர்கொள்ளும் நிலையில் உள்ளன, அதேவேளையில் அஜந்தா ஓவியங்கள் ஈரப்பதம் மற்றும் பார்வையாளர்களால் ஏற்படும்

---

[5] ஓவிய நுட்பத்தில் ஒளி-இருள் வேறுபாட்டை உண்டாக்கி, உருவங்களுக்கு ஆழம், உயிர்மை மற்றும் முப்பரிமாண (3D) தோற்றம் அளிக்கும் முறை.

[6] பாணிப் பண்புகள் என்பது ஓவியங்களில் காணப்படும் தனித்துவமான கலை வடிவங்கள், நுட்பங்கள் மற்றும் காட்சித்தன்மைகளை குறிக்கும். இதில் சேர்க்கப்படக்கூடியவை: வரைவியல் (Line work, contouring), வண்ணப் பயன்படுத்தல் மற்றும் ஒளி-நிழல் (Color schemes, shading), காட்சிப்பாடுகள் மற்றும் அமர்த்தல்கள் (Composition, perspective), கலைஞர் தனிப்பட்ட வெளிப்பாடு (Individual artistic expression), குறிப்பிட்ட காலப்பகுதியில் அல்லது கலாசாரத்தில் தோன்றிய தன்மை (Period or cultural style traits).

[7] குறுக்குப்பிராந்திய தாக்கங்கள் என்பது ஒரு பகுதியின் கலை வடிவங்கள் மற்ற பகுதி அல்லது கலாசாரங்களில் இருந்து பெற்ற தாக்கங்களை குறிக்கும். இதன் மூலம் ஒரு பகுதி கலை நேர்த்தி, கருப்பொருள் தேர்வு, கலை நுட்பம் போன்றவை பிற கலாசாரங்களின் மூலம் மாறியிருக்கலாம் என்பதை ஆராயலாம்.

[8] பகிரப்பட்ட கலை நுட்பங்கள் என்பது பல பிராந்தியங்கள் அல்லது கலாசாரங்களில் பொதுவாகக் காணப்படும் கலை நுட்பங்களை குறிக்கிறது. இது கலாசார பரிமாற்றத்தையும், கலைஞர்களின் ஒரே மாதிரியான தொழில்நுட்பக் கலைக்கழகச் செயல்முறைகளையும் வெளிப்படுத்துகிறது.

Chandrasena மற்றும் Manoj ஆகியோர்களால் 2021 இல் "நீர்கொழும்பு மீன்வள சமூகத்தில் பாரம்பரிய கடற்கரை மீன்பிடித்தொழில் எதிர்கொள்ளும் சவால்கள்" எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வானது நீர்கொழும்பு மீனவ சமூகத்தில் பாரம்பரிய கடலோர மீன்பிடித் தொழிலை வளர்ப்பதில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஆராய்வதை முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது. குவியக்குழு விவாதங்கள், நேர்காணல்கள் மற்றும் பங்கேற்பு அவதானிப்புகளிலிருந்து சேகரிக்கப்பட்ட முதன்மை தரவுகளைப் பயன்படுத்தி ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சிக்காக சேகரிக்கப்பட்ட தகவல்களுக்கு முக்கியமாக கலப்பு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. மீன்வளத் துறை தொடர்பான அரசுத் துறை பொறுப்புள்ள அதிகாரிகளுடன் கட்டமைக்கப்படாத நேர்காணல்கள் நடத்தப்பட்டுள்ளன. மீனவ சமூகம் மற்றும் பல்வேறு அரசு நிறுவனங்களின் அதிகாரிகளுடனான நேர்காணல்களில் தரவுகளைச் சேகரிக்க கேள்வித்தாள்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஆராய்ச்சியை பகுப்பாய்வு செய்ய தரமான மற்றும் அளவு தரவுகள் இரண்டும் பயன்படுத்தப்பட்டுள்ளன. பகுப்பாய்வு பகுதியில், எண் தரவுகள் MS Excel தொகுப்புடன் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. இவ்வாய்வின் முடிவுகளின்படி, நீர்கொழும்பு பிரதேச செயலகப் பிரிவில் பாரம்பரிய கடலோர மீன்பிடித் தொழிலை பாதிக்கும் முக்கிய பன்னிரண்டு காரணங்கள் ஆராய்ச்சியாளரால் அடையாளம் காணப்பட்டுள்ளது. முக்கியமாக கொழும்பு துறைமுக நகர திட்டத்தின் பாதகமான விளைவுகள், கடலோர சுற்றுச்சூழல் மாசுபாடு, கட்டுப்பாட்டு வலைகள் மற்றும் கருவிகள், உதவி மற்றும் மாற்றீடுகள் இல்லாமை ஆகியவை இந்தத் தொழிலுக்கு முக்கிய காரணங்கள் என்று பங்கேற்பாளர்கள் வலியுறுத்தியுள்ளனர். முக்கியமாக மீன்வளத் தொழிலில் ஈடுபடும் மக்கள் மோசமான நிதி மேலாண்மையைக் கொண்டுள்ளனர் எனவும் கல்வி நிலை மற்றும் கல்விக்கான வசதிகள் மீன்வள சமூகத்தில் மோசமான நிலையில் உள்ளது எனவும் அவர்களின் பெரும்பாலான குழந்தைகள் கல்வியில் வெற்றியை இலக்காகக் கொண்டிருக்கவில்லை எனவும் ஆய்வு கண்டறிந்துள்ளது.

Dayalatha *என்பவரால் 2020 இல் "இலங்கையில் தென்பகுதி கரையோர மீனவ குடும்பங்களின் சமூக பொருளாதார நிலை" எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வானது தெற்கு கடலோரப் பகுதியில் உள்ள கடலோர மீனவ குடும்பங்களின் சமூக பொருளாதார நிலையை ஆராய்வதே முக்கிய நோக்கமாகும். ஆய்வுப் பிரதேசமானது தேவிநுவர முதல் அம்பலங்கொடை வரையிலான கடலோர மாவட்ட ஆட்சியர் பிரிவுகளைக் கொண்டிருந்தது. சீரற்ற மாதிரியைப் பயன்படுத்தி முதன்மைத் தரவுகளைச் சேகரிக்க 10 சதவீத (482 வீடுகள்) பயன்படுத்தப்பட்டது. முதன்மைத்தரவுகள் கேள்வித்தாள்கள் மூலம் சேகரிக்கப்பட்டன. இரண்டாம்நிலைத் தகவல்கள் மீன்வள அலுவலகங்களிலிருந்து சேகரிக்கப்பட்டன. தரவுகளை பகுப்பாய்வு செய்ய அளவு மற்றும் தரமான முறைகள் இரண்டும் பயன்படுத்தப்பட்டன. இவ்வாய்வின் பெறுபேறுகளின்படி முக்கிய தொழில் மீன்பிடித் தொழில் என்றும், நாள் வருமானம் ரூபாய் 1000 (43.8 மூ) க்கும் அதிகமாக இருந்தது என்றும் கண்டுபிடிப்புகள் குறிப்பிடுகின்றன. மீனவர்களின் கல்வி மட்டத்தில் 62.3மூ தரம் 1 முதல் 10 வரை இருந்தது. 1980 முதல் 2014 வரை மாத்தறை மற்றும் காலி மாவட்டங்களில் மீனவ குடும்பங்களின் மக்கள் தொகை முறையே 223 சதவீதமும் 258 சதவீதமும் அதிகரித்துள்ளது. ஆய்வு முடிவுகள் காரணமாக, பல கடலோர குடும்பங்கள் மீன் தொழிலை நம்பி வாழ்கின்றன மற்றும் மிகக் குறைந்த வருமானத்தை ஈட்டுகின்றன. கடலோர மக்கள் தொகை அதிகரிப்புடன் அவர்களின் குடும்ப பொருளாதாரங்கள் சரிகின்றன. எனவே, அவர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த வருமானம் ஈட்டும் மாற்று வழிகளை அறிமுகப்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும்.*

Richard et al., *ஆகியோர்களால் 2013 இல் "மீன்வளம் மற்றும் வறுமைக்கிடையிலான தொடர்பை ஆராய்தல்: இந்தோனேசியாவின் மேற்கு சுமத்ராவை மையப்படுத்திய ஆய்வு" எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வானது அரசாங்க நிறுவனங்களால் தொடர்ந்து சேகரிக்கப்பட்ட சமூக-பொருளாதார புள்ளிவிவரங்களைப் பயன்படுத்தி ஒரு எளிய வழிமுறையைக் கொண்டு ஆய்வுப் பிரதேசத்தில் மீன்வளம் மற்றும் வறுமைக்கிடையிலான தொடர்பை ஆராய்வதை பிரதான நோக்கமாக கொண்டுள்ளது. மூன்று இடஞ்சார்ந்த அளவுகளில் மீன்வள சார்பு மற்றும் மீனவர்களிடையே வறுமை நிகழ்வுகளை வரைபடமாக்க இரண்டு குறியீடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. அனைத்து பொருளாதாரத் துறைகளிலும் வேலைவாய்ப்பு மற்றும் வறுமை பற்றிய மக்கள் தொகை கணக்கெடுப்புத் தரவைப் பயன்படுத்தி, அனுபவத் தரவுகளைப் பயன்படுத்தியும் 'மீன்பிடிப்பு உண்மையிலேயே வறுமையுடன் இணைகிறதா' என்ற கேள்விக்கு பதிலளிக்கத் தொடங்குவதற்காக, மீனவர்களிடையே வறுமை நிகழ்வுகள் பரந்த வறுமை சூழலில் வைக்கப்படுகின்றன. இந்த ஆய்வு பின்வரும் போக்குகளை அடையாளம் கண்டுள்ளது. வறுமை நிலையில் உள்ள மீனவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது, பயிர் வளர்ப்புடன் மீன்பிடித்தல் ஆகியவை வறுமை நிகழ்வுகள் அதிகமாக இருக்கும் இரண்டு துறைகள், அதிக மீன்பிடி சார்புநிலைக்கும் மீனவர்களிடையே அதிக வறுமை விகிதத்திற்கும் இடையே குறிப்பிடத்தக்க தொடர்பு இல்லை, விவசாய சார்புநிலைக்கும் கடலோர சமூகங்களில் மொத்த சதவீத வறுமைக்கும் இடையே குறிப்பிடத்தக்க தொடர்பு உள்ளது மற்றும் பிற பொருளாதாரத் துறைகளின் வலிமைக்கும் விவசாயத் துறையில் வறுமைக்கும் இடையே தலைகீழ் தொடர்புகள் உள்ளன.*

Venkatesh Salagrama *என்பவரால் 2006 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட* "Trends in Poverty & Livelihoods in coastal fishing communities of Orissa State, India" *எனும் வெளியீடானது இந்தியாவின்*

ஓரிசா மாநில கரையோர மீன்பிடி சமூகத்தின் வறுமை மற்றும் வாழ்வாதாரத்தின் போக்கு பற்றி ஆய்வு செய்கிறது. இந்த ஆய்வு வெளியீட்டிலே வாழ்வாதாரத்திற்கும் வறுமைக்கும் இடையிலான தொடர்புகள் பல காலமாகக் குறிகாட்டிகளின் அவதானிப்புக்களின் அடிப்படையில் இது ஆராய்கின்றது. ஓரிசா பிரதேச கரையோர மீனவர்களின் வறுமையான வாழ்வாதாரத்தில் இயற்கை, பௌதிக, சமூக, மானிட மற்றும் நிதிசார் காரணிகள் அனைத்தும் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஏழைப் பங்குதாரர்களிளால் மீன்பிடியில் உச்சளவில் வளங்களைப் பயன்படுத்த முடியாமையினால் மீன்பிடித் தொழினுட்பம் மற்றும் சந்தை விநியோக தொடர்புகளில் ஏற்பட்ட மாற்றமானது இப்பிரதேச மக்களின் மீன்பிடியில் தாக்கம் செலுத்தியுள்ளது. இந்த ஆய்விலே ஓரிசாவினுடைய கடற்கரை மற்றும் மீன்பிடிக்குச் சாதகமான தன்மைகள், மீன்பிடி சார் உற்பத்திகள் தொடர்பாகவும் விளக்கப்படுகின்றன.

Varnagulasingham என்பவரால் 2005 இல் "மட்டக்களப்பு மாவட்டத்தின் கரைவலை மீன்பிடித் தொழில் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் சவால்களும்" என்ற ஆய்வில் கரைவலை அமைப்பு முறை, கரைவலை மீன்பிடி முறைகள், கரைவலைத் தொழிலுக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள், கரைவலைத் தொழிலில் ஈடுபடும் தொழிலார்கள் அவர்களுக்கான வேதன அமைப்பு முறை கல்விநிலை சமூக பொருளாதாரநிலை வருமானம் கரைவலைத் தொழிலில் அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகளும் சவால்களும் அதற்கான தீர்வுகளும் பரிந்துரைகளும் போன்ற விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதில் கரைவலை தொடர்பான மக்கள் மத்தியில் காணப்படும் வறுமை நிலையும் வாழ்வாதாரம் தொடர்பான விடயங்களை ஒப்பீட்டு அடிப்படையில் ஆய்வாளரின் ஆய்வுக்காக கையாளப்பட்டுள்ளன.

மேலே இலக்கிய மீளாய்வில் குறிப்பிடப்பட்ட ஆய்வுகள் பெரும்பாலும் மீனவ குடும்பங்களின் சமூக பொருளாதார நிலை, மீன்வளம் மற்றும் வறுமைக்கிடையிலான தொடர்பை ஆராய்தல், மீன்வள சமூகத்தில் பாரம்பரிய கடற்கரை மீன்பிடித்தொழில் எதிர்கொள்ளும் சவால்கள், கரையோர மீன்பிடி சமூகத்தின் வறுமை மற்றும் சமூக பொருளாதார நிலை குறித்து உலகளாவிய ஆய்வுப் போக்குகளை ஆராய்வதாக அமைகின்றது. இவை உலகளாவிய ரீதியிலும் தேசிய ரீதியிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளாக விளங்குகின்றன. எனினும் ஆய்வுப் பிரதேசத்தில் இவ்வகையான ஆய்வுகள் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டாலும் தற்கால தரவுகளை உள்ளடக்கி ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. ஆகவே ஆய்வுப் பிரதேசத்தில் இவ்வாய்வு இடைவெளியினை பூர்த்தி செய்யும் முகமாக ஆய்வு அமையப்பெற்றுள்ளது.

03. ஆய்வு முறையியல்

3.1 ஆய்வுப் பிரதேசம்

இந்தியாவிற்கு தெற்காக அமைந்துள்ள இலங்கை 65,610 சதுர கிலோமீற்றர்ப் பரப்பைக் கொண்டு காணப்படுவதுடன் பிரதானமான 09 மாகாணங்களையும் 25 மாவட்டங்களையும் கொண்டுள்ளது. இலங்கையின் கரையோர மாவட்டங்களில் இயற்கையோடு இணைந்த பல்லுருவத் தன்மை கொண்ட மாவட்டங்களில் ஒன்றாக மட்டக்களப்பு மாவட்டம் காணப்படுகிறது. மட்டக்களப்பு மாவட்டமானது 346 கிராம சேவகர் பிரிவுகளையும், 14 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் கொண்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தின் மொத்தப் பரப்பளவு 2633.1 சதுர கிலோமீற்றர் ஆகும். கடல்மட்டத்திலிருந்து 7.23 மீற்றர்

உயரத்தில் அமைந்து காணப்படுவதுடன் 61.41 கிலோமீற்றர் நீளமான கடற்கரையினையும் கொண்டு காணப்படுகிறது. இப்பிரதேசம் 7°55'10" வட அகலாங்கிற்கும் 81°31'53" கிழக்கு நெட்டாங்கிற்கும் இடையில் அமைந்து காணப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டமானது பௌதிக அடிப்படையில் இரு பிரிவுகளாக நோக்கப்படுகின்றது. எழுவான்கரை படுவான்கரை, எழுவான்கரை என்பது மட்டக்களப்பு மாவட்டத்தில் சூரியன் உதயமாகும் பகுதியைக் குறிக்கின்றது. படுவான்கரை என்பது சூரியன் மறையும் பகுதியைக் குறிக்கின்றது. நீண்ட கரையோர நிலவுருவங்களைக் (குடா, களப்பு, முனை, கழிமுகம், பொங்குமுகம்) கொண்டு மீன்பிடியினையும் சுற்றுலாத்துறையினையும் விருத்திபெறச்செய்து பொருளாதாரத்தினை ஈட்டித்தரும் மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் காணப்படுகின்றது. விவசாயத்திற்கு அடுத்ததாக மக்களின் வாழ்வாதாரமாகக் காணப்படுவது மீன்பிடித் தொழிலாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மிக முக்கிய பிரதேச செயலகப்பரிவுகளில் ஒன்றாகக் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகப்பிரிவு காணப்படுவதுடன் மட்டக்களப்பு நகரத்திலிருந்து ஏறத்தாள 16 கிலோமீற்றர் தொலைவில் வடக்காக அமைந்து காணப்படுகின்றது. பிரதேச செயலகப்பிரிவானது 634.16 சதுர கிலோமீற்றர் பரப்பளவினையும் மட்டக்களப்பு மாவட்ட மொத்த நிலத்திணிவில் 11.5வீத பங்கினையும் கொண்டுள்ளது. ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகப்பிரிவில் 39 கிராம சேவகப்பிரிவுகள் உள்ளடங்குவதுடன் அங்கு 203 கிராமங்கள் காணப்படுகின்றன. இதன் அமைவிடமாக வடக்கே கோறளைப்பற்று தெற்கு, கிழக்கே இந்து சமுத்திரம், தெற்கே மன்முனைப்பற்று வடக்கு, மேற்கே மகா ஓயாவையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. தன்னாமுனை கிராம சேவகர் பிரிவிலிருந்து சித்தாண்டி கிராமம் வரையிலும் வீதியின் இரு பகுதிகளிலும் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலக பிரிவானது பரந்து காணப்படுகின்றது. ஏறாவூர்ப் பற்று பிரதேச செயலாளர் பிரிவில் கரையோர மீனவக் கிராமங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

அந்தவகையில் களுவன்கேணி -01, களுவன்கேணி 02. தளவாய், சவுக்கடி, ஆறுமுகத்தான் குடியிருப்பு, ஐயங்கேணி என்பனவாகும். இவை தவிர நன்னீர மீன்பிடிக் கிராமங்களாக மயிலவெட்டுவான். தன்னாமுனை, பன்குடாவெளி, குமாரவேலியார் கிராமம், கொடுவாமடு என்பன காணப்படுகின்றன. இத்தகைய மீன்பிடித் தொழிலுக்கான வாய்ப்புக்கள் காணப்பட்டாலும் மீனவ மக்கள் வறுமை நிலையினை அனுபவிப்பவர்களாகவே காணப்படுகின்றனர். இவற்றினுள் களுவன்கேணி -01 களுவன்கேணி 02 என்ற கிராம சேவரகர் பிரிவிற்குள் அடங்கும் கடற்கரை சார்ந்த பிரதேசமே ஆய்விற்குரிய பிரதேசமாக உள்ளது. ஆய்வுப் பிரதேச பொருளாதார முறையை எடுத்துநோக்குமிடத்து பிரதானமாக காணப்படுவது விவசாயம், மீன்பிடி மற்றும் சிறுகைத்தொழில் ஆகும். அதிகமாக விவசாயமே இங்குள்ள பொருளாதார நிலமைகளை முன்னேற்றுவதாக காணப்படுகின்றது. ஏனைய கடற்கரையோரம் சார்ந்து வாழும் மக்களின் பிரதான தொழிலாக மீன்பிடி காணப்படுகின்றது. எனினும் களுவன்கேணிப் பிரதேசத்தில் அதிகரித்துச் செல்லும் வறுமையும் முன்னேற்றகரமற்ற வாழ்வாதார நிலையும் தொடர்ந்த வண்ணமே காணப்படுகின்றது.



படம் 3.1: ஆய்வுப் பிரதேசம்

மூலம்: ஆய்வாளர், (2025)

3.2 ஆய்வு முறை

ஆய்வு முறையியல் என்பது ஆய்வினை மேற்கொள்ளும்போது எவ்வாறான முறையில் எத்தகைய உத்திகளை கையாண்டு ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது என்பதைக் குறித்து நிற்கின்றது. எந்தவொரு ஆய்விலும் ஆய்வு முறையியல் என்பது மிக முக்கியமான ஒன்றாகும். ஆய்வுப் பிரச்சினை, அதன் வடிவம், ஆய்வு வினாக்கள் மற்றும் ஆய்வின் நோக்கம் போன்ற காரணிகளின் நிமிர்த்தம் ஆய்வு முறையியல் வேறுபடுவதாக உள்ளது. ஆய்வு முறையியலானது பொதுவாக பண்பு சார்ந்தவையாகவும் அளவை சார்ந்தவையாகவும் காணப்படுகின்றன. சில ஆய்வுகள் ஒன்றைச் சார்ந்தவையாகவும் சில ஆய்வுகள் இரண்டையும் சார்ந்ததாகவும் காணப்படுகின்றன. இதனடிப்படையில் இவ்வாய்வு பெரும்பாலும் பண்பு சார்ந்தவையாகவே அமைந்துள்ளது. ஆய்வு முறையியல் கலப்பு முறையில் செயற்படுத்தப்பட்டுள்ளது.

*மட்டக்களப்பிலுள்ள ஏறாவூர்ப் பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட களுவண்கேணிப் பிரதேசத்தில் கரையோர மீன்வர்களின் வறுமையும் சமூக பொருளாதார நிலைமை பற்றிய இவ்வாய்வானது முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை தரவின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலாம் நிலைத்தரவு எனும்போது நேரடி அவதானிப்பு, கலந்துரையாடல், நேர்காணல், ஒளிப்படம் (*Videography*) எடுத்தல், கள வேலையின்போது படம் (*Photos*) பிடித்தல்,*

வினாக்கொத்து மூலம் விடைகள் பெறல் போன்ற விடயங்கள் மூலம் இவ்வாய்வுக்கான தகவல் பெறப்பட்டுள்ளது.

நேரடிக் கலந்துரையாடலானது ஆய்வுப்பிரதேச மக்களிடம் அவர்களின் சமூக பொருளாதார செயற்பாடுகள் பற்றியும் எதிர்கொள்ளும் வறுமை நிலை பற்றியும் வறுமையைத் தீர்த்துக் கொள்வதற்கான வழிவகைகள் பற்றியும் கருத்துக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் அப்பிரதேசம்சார் கிராம சேவகர், அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு விடைகள் பெறப்படவுள்ளன. கள அவதானிப்பு முறைமையானது ஆய்வுப் பிரதேசத்திற்கு விஜயம் செய்து கள நிலவரங்கள் அறிந்து தகவல்கள் திரட்டப்படும்.

மாதிரி தெரிவு முறை

மாதிரி தெரிவுமுறை என்பது ஒரு குறித்த பகுதியில் காணப்படும் அதிகளவான மக்களை ஒரு ஆய்விற்கு உட்படுத்துவது கடினம் என்பதனால் அவற்றில் இருந்து குறிப்பிட்டளவானோரை குறிப்பிட்ட சில காரணிகள் மற்றும் பிரிவுகள், பாகுபாடுகளின் அடிப்படையில் தெரிவு செய்து பாகுபடுத்தும் நுட்பமுறையாகும். இதனடிப்படையில் ஆய்வாளனின் ஆய்வுக்குரிய மாதிரி எடுப்பு முறையானது குறிக்கோளுடன்கூடிய மாதிரி எடுப்பு முறையாக காணப்படுகிறது. அதாவது ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 39 கிராம சேவகப்பிரிவின் களுவன்கேணி பிரதேசத்திற்குள் உள்வாங்கப்படுகின்ற பிரதானமாக மீன்பிடியை தமது வாழ்வாதாரமாகக் கொண்ட 2 கிராம சேவகப்பிரிவுகள் குறிக்கோளுடன் கூடிய மாதிரி எடுப்பு முறையின் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஆய்வுப் பிரதேசத்தில் குடும்பங்களின் எண்ணிக்கையானது உயர்ந்தளவில் காணப்படுகின்றது. ஆகவே ஆய்வுக்கு தெரிவு செய்யப்பட்ட கிராம சேவக பிரிவுகளில் காணப்படும் மொத்த மீனவ குடும்பங்களின் அடிப்படையில் 100 வினாக்கொத்துகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. அதாவது ஆய்வுப் பிரதேச குடும்பங்களுக்கு வினாக்கொத்துக்களானது ஒவ்வொரு கிராம சேவகப்பிரிவிலும் காணப்படும் மீனவ குடும்பங்களின் எண்ணிக்கையைப் பொறுத்து கொடுக்கப்பட்டு அதிலிருந்து தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

அட்டவணை 3.1: மாதிரிக்காக தெரிவு செய்யப்பட்ட கிராமசேவகர் பிரிவும் குடும்பங்களின் எண்ணிக்கையும்

மாதிரிக்கு தெரிவு செய்யப்பட்ட கிராமசேவகர் பிரிவு	மொத்த மீனவக்குடும்பங்களின் எண்ணிக்கை	வினாக்கொத்துக்களின் எண்ணிக்கை
களுவன்கேணி 01	951	55
களுவன்கேணி 02	768	45
மொத்தம்	1719	100

மூலம்: ஆய்வாளர், (2025)

ஆய்வுப்பிரதேசமான 2 கிராம சேவகப்பிரிவிலிருந்தும் நேர்காணலுக்காக தனிப்பட்ட ரீதியில் அனுபவம் வாய்ந்த 5 நபர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கீழ்க்காணப்படும் ஒவ்வொரு இலக்குக் குழுக்களிலிருந்தும் 3 நபர்கள் நேர்காணலுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். குழுக்கள் முறையினாலான நேர்காணலில் கீழ்க்காணப்படும் ஒவ்வொரு இலக்குக் குழுக்களிலிருந்தும் ஒரு குழு நேர்காணலுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு குழுவிலிருந்தும் அனுபவம் வாய்ந்த, ஓரளவு அனுபவம் வாய்ந்த நபர்கள் என்றவாறு மொத்தமாக நால்வர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

- *ஆய்வுப் பிரதேச மீனவர்கள்*
- *மீனவ சங்கங்கள்*
- *மீன்பிடி பரிசோதகர் பிரிவுகள்*
- *பெண் மீனவர்கள்*

ஆய்வுப் பிரதேசத்தின் பன்முகத்தொடர்புகளின் அடிப்படையில் ஏற்படும் இயல்புகளின் நிலைமைகளது காரணங்களையும், விளைவுகளையும் சரியாக நோக்கி குறித்துக்கொள்ளும் செயன்முறை அவதானிப்பு ஆகும். ஆய்வுப்பிரதேசத்தில் ஆய்வுக்குரிய இலக்கு கருதி கள அவதானிப்பு இடம்பெற்றுள்ளது. இவற்றில் நேரடி அவதானிப்பின் மூலம் ஆய்வாளனால் ஆய்வுப் பிரதேசத்திற்கு நேரடியாக சென்று அவதானிக்கப்பட்ட தரவுகள் சேகரிக்கப்பட்டதோடு ஒளிப்படமும் எடுக்கப்பட்டுள்ளது.

அட்டவணை 3.2: ஆய்வுடன் தொடர்புடைய அவதானிப்புக்களும் ஆய்வுப்பிரதேசங்களும்

கிராம சேவகர் பிரிவுகள்	*அவதானிக்கப்பட்ட விடயங்கள்*
களுவன்கேணி 01	• *மக்களின் மீன்பிடி முறைகள்* • *மீன்பிடி உபகரணங்கள்* • *சமூக பொருளாதார நிலைமைகள்* • *மீனவர்களின் உட்கட்டமைப்பு அம்சங்கள்*
களுவன்கேணி 02	• *மீன்பிடி தொடர்பாக எதிர்நோக்கும் பிரச்சினைகள்* • *சந்தை முறைகள்*

மூலம்: ஆய்வாளர், (2025)

ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படுகின்ற மீனவர்கள், ஆய்வுப்பிரதேச முக்கிய மீனவ அலுவலக உத்தியோகத்தர்கள், மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகள் போன்றோரை நேரடியாக சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடி அவர்களிடமிருந்து மீன்பிடி மக்களின் சமூக பொருளாதார நிலைமைகள்

மீனவக்குடும்பங்கள், மீனவர்களின் எண்ணிக்கை, மீன்பிடி பிரச்சினைகள், மீனவர்களுக்கான சலுகைகள், உதவிகள் என்பன தொடர்பான தரவுகள் மற்றும் தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

இவ்வாறு வினாக்கொத்து, நேர்காணல்கள், கள அவதானிப்பு மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளானது தொகுக்கப்பட்டு, பின்னர் அவை ஒழுங்கமைப்பிற்கு உட்படுத்தப்பட்டு விபரண முறையில் தகவல்களாக தொகுத்து ஆய்விற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வுக்காக இரண்டாம் நிலைத்தரவானது பல்வேறு விதமாக சேகரிக்கப்பட்டுள்ளது. அதாவது மீன்பிடிமுறைகள், மீனவர் சனத்தொகை போன்றவற்றை காட்டுவதற்காக கடற்றொழில் நீரியல் வளங்கள் அமைச்சு மற்றும் மீன்பிடி கூட்டுறவு பரிசோதகர் பிரிவு போன்றவற்றிலிருந்து இரண்டாம் நிலைத்தரவுகள் பெறப்பட்டுள்ளன.

ஆய்வாளனால் சேகரிக்கப்பட்ட தரவுகள் Microsoft Office *2013* எனும் மென்பொருளின் துணையுடன் தட்டச்சுப் பதிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாம் நிலைத்தரவுகளும் ஒன்றுடன் ஒன்றினை சேர்த்து பரிசீலிக்கப்பட்டு பொருத்தமான அட்டவணைகள், வரைபடங்கள் *(பார் வரைபடம், பை வரைபடம்)* விளக்கப்படங்கள் என்பன Microsoft excel 2013எனும் மென்பொருளினை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளன. மேலும் Arc GIS 10.4.1 எனும் மென்பொருளில் Geoprocessing எனும் கருவி ஊடாக ஆய்வுப்பிரதேசத்திற்கான படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

04. ஆய்வின் பெறுபேறுகளும் கலந்துரையாடலும்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஏறாவூர்பற்று பிரதேச பிரிவிற்குட்பட்ட களுவன்கேணிப் பிரதேசத்தில் கரையோர மீனவர்களின் சமூக பொருளாதார நிலை பற்றிய ஆய்வானது *02* கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. இதனடிப்படையில் இப்பிரதேச மீனவர்களின் சமூக பொருளாதார நிலையை பற்றி தரவுகள் சேகரிப்பதற்கு *100* மீனவர் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு வினாக்கொத்து வழங்கப்பட்டன. அதன் மூலமாக தரவுகள் சேகரிக்கப்பட்டு அவற்றினை அடிப்படையாகக் கொண்டு பகுப்பாய்வு இடம்பெற்று கலந்துரையாடலும் முடிவுகளும் பெறப்பட்டுள்ளது.

4.0 மீனவக் குடும்பங்கள், சமூக மற்றும் பொருளாதார நிலை

4.1 குடும்பத் தலைமைத்துவம்

ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட *02* கிராம சேவகர் பிரிவுகளின் அடிப்படையில் நோக்கினால் முதலாவதாக குடும்பத்தலைவர் தொடர்பாக ஆய்வு செய்யும்போது ஆய்வுக்குட்படுத்தப்பட்ட *100* மீனவக் குடும்பங்களில் ஆண் தலைமை தாங்கும் குடும்பங்கள் *90* வீதமாகவும், பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள் *10* வீதமும் காணப்படுகின்றன. கீழ்வரும் வரைபடம் இதனைக் காட்டுவதாக உள்ளது.



வரைபடம் 4.1: குடும்பத் தலைமைத்துவம்

மூலம்: ஆய்வாளர், (2025)

ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களின் அடிப்படையில் 10 வீதமானவர்கள் பெண்கள் தலைமை தாங்கும் மீனவக் குடும்பங்களாக காணப்படுவதால் இக்குடும்பங்களில் ஆண் பிள்ளைகளின் பங்கு அதிகமாகக் காணப்படுகின்றது. இயற்கை மரணம், விபத்துக்கள், யுத்த நடவடிக்கை, தற்கொலை, கொலை போன்ற பல காரணங்களால் கணவனை இழந்த குடும்பங்களை பெண்கள் தலைமை தாங்குகின்றார்கள். கணவனை இழந்த பெண்களில் 05 வீதமானவர்கள் சிறு குடிசைக்கைத்தொழிலை மேற்கொண்டு தமது வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதாகவும் மீதி 05 வீதமானவர்கள் கருவாடு போடுதல், தோட்டவேலைக்குச் செல்லுதல் போன்ற கூலி வேலைகளுக்குச் சென்று தமது வாழவாதாரத்தை முன்னெடுப்பதாகவும், அதனால் உணவு மற்றும் பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளுக்கு இத்தொழில் மூலமான வருமானம் கிடைப்பதாகவும் அறியமுடிந்தது.

4.2 மீனவ சங்கத்தில் அங்கத்துவம்

ஆய்வு பிரதேசத்தின் அடிப்படையில் மீனவர் தமது கிராமங்களில் காணப்படும் மீனவ சங்கங்களின் அங்கத்துவ விடயங்களை பற்றி நோக்கும் போது மீனவர் சங்கத்தில் 58 சதவீதமானோர் அங்கத்துவம் வகிக்கும் அதே வேளை 4 சதவீதமானோர் அங்கத்துவம் இல்லாமல் காணப்படுகின்றனர் இதனை பின்வரும் அட்டவணை மூலமாக அறிந்து கொள்ளலாம்.

அட்டவணை 4.1: மீனவ சங்கத்தில் அங்கத்துவம்

அங்கத்துவம் தொடர்பான விபரம்	சதவீதம்
அங்கத்துவம்	58
அங்கத்துவமின்மை	42

மூலம்: ஆய்வாளர், (2025)

மீனவர் சங்கத்தில் அங்கத்துவம் இன்மைக்கான காரணங்களாக மீன்பிடித் தொழிலில் நாட்டமின்மை, வேறு தொழிலுக்குச் செல்லுதல், மேசன், தச்சன் போன்றவற்றிற்காக வெளியூரிற்குச் செல்லுதல், மீனவ சங்கங்கள் கட்டாயப்படுத்தாமை, கவனயீனம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். மீனவ சங்கத்தில் உறுப்பினராக இருக்காத சந்தர்ப்பத்தில் அது சார்ந்த ஏனைய விடயங்கள், மீனவர் சங்கத்தின் ஊடாக கிடைக்கப் பெறும் சலுகைகள் போன்றவற்றை பெற முடியாமல் இருக்கின்றது. எனவே இதனால் கிடைக்கக்கூடிய குறைந்தளவிலான உதவி கூட சில நேரம் மீனவர் சங்கத்தில் அவர்கள் அங்கத்துவம் வகிக்காததன் காரணமாக கிடைக்காமல் போகிறது.

4.3 குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை

ஆய்வுக்குட்பட்ட 100 மீனவக் குடும்பங்களினை அடிப்படையாகக கொண்டு நோக்கும் போது 1-2 அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களாக 05 வீதமும், 3-6 அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களாக 83 வீதமும், 6 அங்கத்தவர்க்கு மேல் கொண்ட குடும்பங்களாக 12 வீதமும் கொண்டு காணப்படுகின்றன.



வரைபடம் 4.2: குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை

மூலம்: ஆய்வாளர், (2025)

குடும்ப அங்கத்தவர் தொடர்பான விடயத்தில் 3-6 அங்கத்தவர்களைக் கொண்டவர்கள் 83 வீதமாக காணப்படுவதானது தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களின் குடும்ப அங்கத்தவர் எண்ணிக்கை ஓரளவு நடுத்தரமான குடும்ப அளவில் உள்ளது என்பதனை எடுத்துக் காட்டுகின்றது.

4.4 மீனவ வயதுக் குழுக்கள்

ஆய்வுப் பிரதேச மீனவர்களை வயதுக்குழுக்களாக பிரித்து நோக்கும்போது 21-40 வயதுக்குட்பட்டோர் 20 சதவீதமாகவும், 41-60 வயதுக்குட்பட்டோர் 32 சதவீதமாகவும். 60 வயதுக்கு மேற்பட்டோர் 48 சதவீதமாகவும் காணப்படுகின்றனர். கீழ்வரும் அட்டவணை இதனைக் காட்டுவதாக உள்ளது.

அட்டவணை 4.2: மீனவ வயதுக் குழுக்கள்

மீனவர்களின் வயதுக் குழுக்கள்	சதவீதம்
21 – 40 வயதுக்கு இடைப்பட்டோர்	20
41 – 60 வயதுக்கு இடைப்பட்டோர்	32
60 வயதுக்கு மேற்பட்டோர்	48

மூலம்: ஆய்வாளர், (2025)

மீனவர் வயதுக் குழுக்களை நோக்கும்போது 41-60 வயதுக்கு இடைப்பட்டோர் 32 சதவீதமானவர்கள் காணப்படுகின்றார்கள். 60 வயதுக்குட்பட்ட மீனவர்கள் தனிப்பட்ட படகு, வலை, வள்ளம் போன்றவற்றைக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் சொந்தமாக மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றார்கள். 60 வயதிற்க்கு மேற்பட்டவர்கள் 48 சதவீதமானவர்கள் காணப்படுகின்றார்கள். இந்த வயதுப் பிரிவினர் மீன்பிடியில் சிறந்த அனுபவமிக்கவர்களாக உள்ளனர். சிலர் மீன்பிடியில் ஈடுபடும்போது இறப்பை தழுவிக் கொண்டதாகவும் அறியமுடிந்தது.

4.5 மீனவர் சமய நிலை

ஆய்வுக்குட்பட்ட பிரதேசத்தின் சமயநிலை தொடர்பான விபரங்களில் 100 மீனவக் குடும்பங்களில் 80 சதவீதமானோர் இந்துக்களாகவும். 20 சதவீதமானோர் கிறிஸ்தவர்களாகவும் காணப்படுகின்றனர்.



வரைபடம் 4.3: மீனவர்களின் சமய நிலை

மூலம்: ஆய்வாளர், (2025)

களுவன்கேணி பிரதேசத்தில் மீன்பிடித்தொழிலானது இந்து சமய மக்களால் தொண்டு தொட்டு மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்தவர்களும் மீன்பிடியில் ஈடுபட்டு வருவதனை காணலாம். இந்துக்களை விட கிறிஸ்தவர்கள் குறைவாகக் காணப்படுகின்றார்கள். பல இந்து ஆலயங்கள் காணப்படுகின்றபோதிலும் ஒரேயொரு கிறிஸ்தவ தேவாலயம் இருப்பதனை கள ஆய்வின்போது அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

4.6 மாதாந்த வருமானம்

ஆய்வுப் பிரதேச மக்களின் மாத சராசரி வருமான அளவுகளை நோக்கினால் 62 சதவீதமானவர்கள் 5000 - 7000 ரூபாய் வரையும், 26 சதவீதமானவர்கள் 7001 - 9000 ரூபாய் வரையும், 08 சதவீமாதனவர்கள் 9001 – 10000 ரூபாய் வரையும், 04 சதவீதமானவர்கள் 10001க்கு மேல் வருமானத்தைப் பெறுபவர்களாகவும் காணப்படுகின்றனர். அதனைப் பின்வரும் அட்டவணையில் அவதானிக்கலாம்.

அட்டவணை 4.3: மாதாந்த வருமானம்

மாதாந்த வருமானம்	சதவீதம்
5000 – 7000 வரை	62
7001 – 9000 வரை	26
9001 – 10000 வரை	08
10001 க்கு வரை	04

மூலம்: ஆய்வாளர், (2025)

மாதாந்த வருமான மார்க்கங்களை நோக்கும்போது 58 சதவீதமானவர்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொள்கின்றார்கள். ஏனைய 42 சதவீதமானவர்கள் மேசன், தச்சன், வெளிநாட்டு வேலைவாய்ப்பு, வெளிமாவட்டங்களுக்கு அதாவது கொழும்புக்கு வேலைக்காக செல்லுதல் போன்றவற்றையும் சுட்டிக்காட்டியுள்ளனர். இங்குள்ள மக்களின் மாத வருமானமாக 5,000 - 7,000 ரூபாய் வரையும், 62 சதவீதமானவர்கள் தரவினடிப்படையில் அதிகமான வருமானத்தைப் பெறுபவர்களாக காணப்படுகின்றார்கள். மீன்பிடியின்போது அதிகமான மீன் பிடிபடாத வேளைகளில் மீனவ

தொழிலாளர்களுக்கு எந்தவிதமான வருமானமும் இல்லை. இதனால் இவர்கள் வறுமையை எதிர்நோக்குகின்றார்கள்.

4.7 மீனவ குடும்பங்களின் கல்வி நிலை

ஆய்வுப் பிரதேசத்தின் அடிப்படையில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களின் கல்வி நிலை பற்றி நோக்கும்போது 5ம் தரத்திற்கு கீழ் கற்றோர் 04 வீதமாகவும் 5 -11 தரம் கற்றோர் வரை 20 வீதமாகவும் 11ம் தரம் வரை கற்றோர் 42 வீதமாகவும் உயர்தரம் கற்றோர் 26 வீதமாகவும் மற்றும் பல்கலைக்கழகம் சென்றவர்களின் எண்ணிக்கை 08 வீதமாகவும் காணப்படுகின்றது.



வரைபடம் 4.4: மீனவ குடும்பங்களின் கல்வி நிலை

மூலம்: ஆய்வாளர், (2025)

தரம் 11 வரை படித்தவர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகின்றது. இது மீனவக்குடும்பங்களின் கல்வி நிலையில் சற்று முன்னேற்றகரமான நிலைமையினைக் காட்டுகின்றது. களுவன்கேனி மீனவ மக்களின் தற்போதைய கல்வி நிலைமையை நோக்கும்போது பல்கலைக்கழகங்களுக்குச் செல்லும் மாணவர்கள் மற்றும் உயர்கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுகின்றது. அத்தோடு களுவன்கேணி கிராமத்தில் 03 பாடசாலைகள் காணப்படுகின்றன.

கல்வி பொதுதராதர, உயர்தர பாடசாலையும் இரண்டு ஆரம்பப் பிரிவு பாடசாலைகளும் காணப்படுவதனால் கல்வியை இங்குள்ள மீனவக் குடும்பங்கள் இலகுவாக பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது. பாடசாலைகளுக்கும் இவர்களது குடியிருப்புக்குமான தூரம் 1 Km இடைவெளிக்குட்பட்டதாக காணப்படுகின்றது. கலைத்துறைப் பாடங்கள் மாத்திரம் இங்குள்ளதுடன் உயர்தரத்தில் வணிகம், மருத்துவம், கணிதம் போன்ற துறைகளைத் தெரிவு செய்யும் மாணவர்கள் வெளியீடங்களுக்கு சென்று மட்டக்களப்பு மாவட்ட நகர்ப்புறப் பாடசாலைகளில் கற்பதுடன், அதற்கிடையிலான தூரமாக 20Km காணப்படுவதனால் சில குடும்பங்கள் அங்கேயே இடம்பெயர்ந்துள்ளார்கள். இவர்களின் வாழ்வாதாரமானது மீன்பிடியை விட்டு வேறு வழிகளில் பொருளாதாரத்தை ஈட்டுவதற்குரிய வழிகளை கல்வி வழங்குகின்றமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

4.8 போக்குவரத்து வசதி

ஆய்வுக்குட்பட்ட 02 கிராமசேவகர் பிரிவிலும் காணப்படும் 100 குடும்பங்களில் போக்குவரத்து வசதி தொடர்பாக நோக்கும்போது சொந்த வாகனம் உடையவர்கள் 32 வீதமும், பொதுப் போக்குவரத்து வாகனங்கள் 46 வீதமும், நடந்து செல்பவர்கள் 22 வீதமும் காணப்படுகின்றார்கள். இதனைப் பின்வரும் வரைபடம் மூலமாக அறிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது.



வரைபடம் 4.5: போக்குவரத்து முறைகள்

மூலம்: ஆய்வாளர், (2025)

ஆய்வுப் பிரதேசத்தில் போக்குவரத்து வசதிகள் தொடர்பான ஆய்வின்போது மக்களின் பயணங்கள் பெரும்பாலும் பொதுப் போக்குவரத்து மார்க்கங்கள் ஊடாகவே இடம்பெறுகின்றன. இதற்கு அரச பேருந்துகள் இன்மையால் தனியார் பேருந்துகளே பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய பொதுப்போக்குவரத்தானது எல்லா நேரங்களிலும் இடம்பெறுவதில்லை. குறிப்பாக மூன்று வேளைகளில் இடம்பெறுகின்றது. காலையில் களுவன்கேணியிலிருந்து செங்கலடிக்கும் 11.30 மணியளவில் செங்கலடியிலிருந்து களுவன்கேணிக்கும், 12.30 மணியளவில் மீண்டும் செங்கலடிக்குச் சென்று 3.00 மணியளவில் களுவன்கேணியை அடையும். அதன் பின்னர் எந்தவிதமான பொதுப்போக்குவரத்து செயற்பாடும் இடம்பெறுவதில்லை. இவை தவிர மக்கள் மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டி போன்றவற்றில் பயணங்களை மேற்கொள்கின்றமையினையும் காணக்கூடியதாக உள்ளது.

4.9 வீடமைப்பு முறை

ஆய்வுக்குட்பட்ட பிரதேசத்தில் மீவைக்குடும்பங்களின் வீடமைப்பு முறைகளைக் கொண்டு அவர்களின் வறுமை நிலைமையினை கணிக்ககூடியதாக உள்ளது. ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட 100 குடும்பங்களில் 74 சதவீதம் கல் வீடாகவும், 08 சதவீதம் தகர வீடாகவும், 16 சதவீதம் ஓலை வீடாகவும், 02 சதவீதம் களிமன் வீடாகவும் காணப்படுகின்றது. இதனைப் பின்வரும் அட்டவணை; மூலமாக அறிந்து கொள்ளலாம். ஆய்வுப் பிரதேசத்தில் 54 சதவீதமாக அமைக்கப்பட்டுள்ள வீடுகள் அனைத்து வசதிகளையும் கொண்ட வீடுகளாகக் காணப்படவில்லை. சுனாமியின் பின்னர் அமைத்துக் கொடுக்கப்பட்ட பொருத்தமற்ற வீடுகளாகவே இவை உள்ளன. அதாவது மலசலகூட வசதிகள் அற்றவைகளாக இவை காணப்படுகின்றன. ஏனைய 46 சதவீதமானவர்களும் தமது வருமான நிலைமைகளுக்கு ஏற்ப தங்களுடைய வீடுகளை தகரம், ஓலை, களிமண் போன்றவற்றால் அமைக்கின்றார்கள். மேலும் மழை, வெயில் காலங்களில் இவர்கள் பெரும் இன்னலுக்கு உள்ளாகின்றார்கள்.

ஆய்வுக்குட்பட்ட பிரதேத்தில் 36 சதவீதமானவர்கள் ஓலை வீடுகளில் வசிக்கின்றனர். மழைக் காலங்களில் நீர்க்கசிவுகள் ஏற்படுவதனால் மக்களின் குடியிருப்புக்கு பாதிப்பாக உள்ளது. இவை இங்குள்ள மக்களின் வறுமை நிலையினையே காட்டுகின்றது. மேலும் பிள்ளைகள் படிப்பதாக இருந்தாலும் வெளியே இருந்துதான் படிக்க வேண்டியிருகின்றது. சமையலும் சில வேளைகளில் வெட்டவெளியில்தான் இடம்பெறுகின்றது. ஆய்வுப் பிரதேசத்தில் கம்பரலிய வீடமைப்புத் திட்டத்தின் மூலமாக 75 வீடுகள்

புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இதனால் எதிர்காலத்தில் வீட்டு வசதிகள்; ஓரளவுக்கு நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

4.10 சமையலறை வசதி

ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மீனவக் குடும்பங்களில் காணப்படும் சமையலறை வசதி தொடர்பாக நோக்கினால் 86 வீட்டில் சமையலறை வசதியைக் கொண்டோராகவும், 14; வீதமானோர் சமையலறை வசதி அற்றோராகவும் காணப்படுகின்றனர். சமையலறை வசதியை பொறுத்தமட்டில் 57 வீதமானோர் சமையலறை வசதி இல்லாமல் வெளியே அதாவது மர நிழலிலும் வெட்ட வெளியிலும் தமக்கான சமையல் வேலைகளை செய்து முடிக்கின்றனர். சில கல் வீடுகளிலுள்ளவர்களும் இத்தகைய நிலைமைகளில் சமையலை மேற்கொள்கின்றார்கள். சொந்தமாக அல்லது உறவினர் மற்றும் அயலவரின் சமையலறை வசதி இல்லாததன் காரணமாகவும் வீட்டுக்கு வெளியே தற்காலிகமாக நினைத்த இடத்தில் சமையலறை வசதியை இவர்கள் ஏற்படுத்துகினறனர். படுக்கையறைகூட சில சந்தர்ப்பங்களில் சமையலறையாக பயன்படுத்துகின்ற நிலைமையினை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

4.11 மலசல கூட வசதி

களுவன்கேணி மீன்பிடிக் கிராமத்தில் மீன்பிடியாளர்களின் மலசலகூட வசதி தொடர்பாக நோக்குகின்றபோது சொந்தமான மலசலகூட வசதி காணப்படுவதாக 53 சதவீதத்தினரும், பொது மலசலகூடத்தை பயன்படுத்தும் மக்களாக 07 சதவீதத்தினரும், அயலவரின் மலசலகூடத்தை பயன்படுத்தும் மக்கள் 25 சதவீதத்தினரும், மலசலகூடம் இல்லாமல் காடுகளை உபயோகிக்கும் மக்கள் 05 சதவீதத்தினரும், தற்காலிக மலசலகூடங்களைப் பயன்படுத்துபவர்கள் 10 சதவீதத்தினரும் காணப்படுகின்றனர். இந்நிலைமையால் ஆய்வுப் பிரதேசத்தில் சுகாதார ரீதியான பிரச்சினைகளும், சுற்றுச்சூழல் சார்ந்த பிரச்சினைகளும் காணப்படுகின்றன.



4.12 வைத்திய வசதி

ஆய்வுப்பிரதேச வைத்திய வசதியினை நோக்கும்போது அரச வைத்தியசாலை வசதிகள் எதுவும் காணப்படாத நிலைமை காணப்படுகின்றது. இருப்பினும் மருந்தகங்களில் 10 வீதமானவர்களும், தனியார் வைத்தியசாலைகளில் 20 வீதமானவர்களும், ஏனைய வழிகளில் 70 வீதமானவர்களும் தமது நோய்களுக்கு வைத்திய சிகிச்சைகளைப் பெறுவதாகவும், அரச வைத்தியசாலை இன்மை காரணமாக பல வறிய மீனவக் குடும்ப மக்கள் 63 கிலோமீற்றர் தூரம் சென்று அயற் கிராமங்களில் அரச வைத்திய வசதிகளைப் பெறவேண்டியுள்ளது.

ஆய்வுக்குட்பட்ட பிரதேசத்தில் 70 சதவீதமானவர்கள் அதாவது மாவடிவேம்பு கிராமிய வைத்தியசாலை, செங்கலடி பிரதேச வைத்தியசாலை மற்றும் சந்திவெளி கிராமிய வைத்தியசாலை போன்றவற்றில்

சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்கின்றார்கள். இதனடிப்படையில் மாவடிவேம்பு கிராமிய வைத்தியசாலைக்கு செல்லும் தூரம் 06 கிலோமீற்றரும், அதனைவிட அதிகமான தூர இடைவெளிகளில் ஏனைய வைத்தியசாலைகள் அமைந்திருப்பதால் களுவன்கேனி மீனவ மக்கள் மாவடிவேம்பு கிராமிய வைத்தியசாலைக்குச் சென்று நோய்க்கான சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்கின்றார்கள். அத்துடன் இலங்கை அரசின் சுரசவிய அவசர அம்பியுலன்ஸ் சேவையின் மூலமாகவும் பிரதேச மக்கள் வைத்திய வசதிகளைப் பெறுகின்றார்கள்.

தனியார் வைத்தியர் ஒருவர் தனது விடுமுறை வேளைகளில் இங்கு வருகை தந்து வாரத்தில் மூன்று நாட்கள் வைத்திய சேவையினை வழங்குவதாகவும் பிரதேச மக்கள் கருத்து தெரிவித்தார்கள.; அவை திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் நடைபெறுவதாகவும் ரூபாய் 300 முதல் 500 வரையும் மருத்துவத்துக்கு செலவாகுவதாகவும் கூறினார்கள். இதன் மூலமாக 20 சதவீதமானவர்கள் தனியார் வைத்திய வசதிகளைப் பெற்றுக்கொள்கின்றார்கள். இத்தகைய வசதிகளை அதிகமானவர்களால் பெறமுடியாமல் கிராமிய மற்றும் பிரதேச வைத்தியசாலைகளில் வைத்திய சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்கின்றார்கள்.

4.13 பொதுசன ஊடக வசதி

ஆய்வுப்பிரதேசத்திலுள்ள மக்களிடையே பொதுசன ஊடகங்களின் பாவனை தொடர்பாக நோக்கும்போது வானொலி 19 சதவீதமானோரும், தொலைக்காட்சி 36 சதவீதமானோரும,;; தொலைபேசி 45 சதவீதமானோரும் பயன்படுத்துபவர்களாகக் காணப்படுகின்றார்கள். ஆய்வுப் பிரதேச மக்களிடையே பொதுசன ஊடகங்களின் பாவனையில் தொலைபேசி பாவனையாளர்கள் அதிகமாக உள்ளனர். அதிலும் வீட்டுத் தொலைபேசி பயனாளர்கள் 26 சதவீதமானவர்களும,; தனிநபர் தொலைபேசி பயனாளர்கள் 74 சதவீதமானவர்களும் காணப்படுகின்றனர். காலநிலைத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு 55 சதவீதமானவர்களின் வீடுகளில் வானொலி, தொலைக்காட்சிப்பெட்டி என்பன காணப்படுகின்றன.

4.14 வாகன வசதிகள்

ஆய்வுக்குட்பட்ட பிரதேசத்தில் வாகனங்கள் தொடர்பாக நோக்கும்போது சொந்த வாகனங்களைக் கொண்டிருப்பவர்கள் 52 குடும்பங்களாகும். அதில் சொந்தமாக துவிச்சக்கரவண்டி வைத்திருப்பவர்கள் 66 சதவீதமானவர்களாகவும், 32 சதவீதமானவர்கள் மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்களாகவும், 02 சதவீதமானவர்கள் முச்சக்கரவண்டி வைத்திருப்பவர்களாகவும் காணப்படுகின்றார்கள். ஆய்வுப் பிரதேச மக்களிடம் வருமானம் குறைவாக காணப்படுகின;றமையினால் சைக்கிளையே அதிகமானவர்கள் கொண்டுள்ளனர். சைக்கிளில் போக முடியாத தூரங்களுக்கு பஸ், வேன், கார், முச்சக்கரவண்டி போன்ற வாகனங்கள் பயன்படுத்தப்படுவதனால் போக்குவரத்து தொடர்பான செலவுகளும் அதிகரித்த வண்ணம் உள்ளதினை கள ஆய்வின் மூலம் அறியக்கூடியதாக இருந்தது.

4.15 உணவுக்கான மாத செலவு

ஆய்வுப் பிரதேச மக்களின் மாதச் செலவுடன் தொடர்பான விபரங்களில் முதன்மையாக உணவுக்கான செலவு விபரங்களை நோக்குமிடத்து, மொத்த ஆய்வுக்குட்படுத்தப்பட்ட குடும்பங்களில் ரூபாய் 10000-15000 வரை 66 சதவீதமானவர்களும், ரூபாய் 15001-20000 வரை 03 சதவீதமானவர்களும், ரூபாய் 20001 க்கு மேல் 04 சதவீதமானவர்களும் உணவுக்காக மாதம் செலவிடும் அளவினை காணக்கூடியதாக உள்ளது. களுவன்கேணி பிரதேசத்தில் 02 சதவீதமானவர்கள் இரண்டு வேளை உணவு உண்ணுகின்றார்கள.; காலை வேளையில் கடற்றொழிலுக்கு செல்லும்போது சாப்பிடுபவர்கள் இரவு வேளைகளில் சாப்பிடுவதில்லை. இதற்கான காரணமாக அதிகளவான மீன்கள் பிடிபட்டால் உணவுப் பிரச்சினை எதுவுமில்லை எனவும், மீன்பிடி இல்லாத வேளையில் பெரும்பாலும் இரவு உணவு இல்லாத நிலைமையும் காணப்படுவதாகக் கூறினார்கள்.

4.16 கல்விக்கான மாத செலவு

கல்விக்கான மாத செலவினைப்; நோக்கும்போது, ஆய்வுக்குட்பட்ட குடும்பங்களில் காணப்படுகின்ற கல்விச் செலவானது ரூபாய் 500-1000 வரை 35 சதவீதமானவர்களும், ரூபாய் 1001-2000 வரை 15 சதவீதமானவர்களும், ரூபா 2001-3000 வரை 06 சதவீதமானவர்களும்; காணப்படுகின்றார்கள். கல்வி என்பது இலவசமாக கிடைத்தாலும் இங்கு கல்விக்கான செலவு 500-1000 என்ற அடிப்படையில் கூடுதலானவர்களின் செலவு காணப்படுவதினை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதற்கான காரணங்களாக பிள்ளைகள் தமது கல்வித் தேவைக்காக அப்பியாசப் புத்தகங்கள் முதல் பேனா, பென்சில் மற்றும் கணித பொருட்கள் போன்றவற்றையும் வருடத்தில் ஒரு தடவை டிசம்பர் மாதங்களிலும் மற்றும் மாதாமாதமும் வாங்குவதற்காக பணத்தினை செலவிடுகின்றனர்.

மேலதிக வகுப்பிற்கான செலவுகளும் தற்போது அதிகரித்துள்ளது. குடும்பத்தில் மூன்று அல்லது நான்கு பிள்ளை மேலதிக வகுப்புக்களுக்கு செல்லும்போது அதற்கான தொகை அதிகரிக்கின்றது. அத்தோடு ஆய்வுப் பிரதேசத்தில் போக்குவரத்தின்மை காரணமாக மோட்டார் வாகனங்கள், முச்சக்கர வண்டிகளில் மேலதிக வகுப்புக்களுக்கு செல்வதாகவும் இதற்காக எரிபொருள்ச் செலவுகளும் அதிகமாக ஏற்படுவதாகவும் பிரதேச மக்களிடமிருந்து அறிய முடிந்தது.

4.17 மருத்துவத்திற்கான மாத செலவு

மருத்துவ செலவு தொடர்பான விடயத்தை நோக்கினால் 500 ரூபாய்க்கு கீழ் 30 சதவீதமானவர்களும், 501 – 1000 ரூபாய் வரையும் 40 சதவீதமானவர்களும், 1001-2000 ரூபாய் வரை 20 சதவீதமானவர்களும், 2001 ரூபாய்க்கு மேல் 10 சதவீதமானவர்களும் செலவினை மேற்கொள்ளுகின்றார்கள். ஆய்வுப் பிரதேச குடும்பங்களில் அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுபவர்கள் என அனைவருக்கும் மருத்துவச் செலவுகள் ஏதோ ஓர் அடிப்படையில் காணப்படுகின்றது.

4.18 போக்குவரத்திற்கான மாத செலவு

ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட 100 குடும்பங்களில் 64 சதவீதமானவர்கள்; 500க்கு கீழும், 21 சதவீதமானவர்கள் 501-700 ரூபாய் வரையும், 15 சதவீதமானவர்கள் 701 ரூபாய்க்கு மேலும் செலவுகள் காணப்படுவதினை அறியக்கூடியதாக இருந்தது. அத்தோடு போக்குவரத்திற்கான வீதியமைப்பை பொறுத்தவரையில் களுவன்கேணியிலிருந்து பிரதான வீதியோடு இணையும் பாதை ஓரளவு சிறப்பாக காணப்படுவதோடு, ஊரினுள் உள்ள ஏனைய சிறு வீதிகள் ஓரளவு சிறப்பானதாக உள்ளமையினையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அதாவது கொங்கிறீட் பாதைகள், தார் வீதிகளைக் கொண்டனவாகக் காணப்படுகின்றன.

4.19 தொலைத்தொடர்பு சாதனங்களுக்கான மாத செலவு

ஆய்வுப் பிரதேசத்தில் தொலைத்தொடர்பு சாதனங்களின் மாத செலவு தொடர்பாக நோக்கும்போது 500-1000 ரூபாய் வரை 62 சதவீதமானவர்களும், 1001-1500 ரூபாய் வரை 14 சதவீதமானவர்களும் 15001-2000 ரூபாய் வரை 14 சதவீதமானவர்களும் 2000 மேல் 10 சதவீதமானவர்களும் காணப்படுகின்றனர். மீன் வியாபாரிகள், முதலாளிமார் ஊழியர்கள் போன்றோர் வியாபார ரீதியான தொடர்பாடலை மேற்கொள்வதற்கு தொலைபேசிக்கு அதிக தொகையினை செலவிடுகின்றனர்.

4.20 மாதாந்த கடன் செலவு

ஆய்வுப்பிரதேச மக்களின் கடனுக்கான செலவினைப் பொறுத்தமட்டில் மொத்த ஆய்வுக்குட்படுத்தப்பட்ட 100 குடும்பங்களில் 62 சதவீதமானோரே கடன் சுமைக்கு உட்பட்டுள்ளனர். எனவே மிகுதி 38 சதவீதமானோர் கடன் சுமைக்கு உட்படாதவர்களாவர். அதிகமாக இங்குள்ளவர்கள் வட்டிக்கு கடன் வாங்குகின்றவர்களாகவும், சமுர்த்தியில் கடன் பெறுபவர்களாகவும், நுண்கடன்

வழங்கும் நிறுவனங்களிலும் கடன்காரர்களாக காணப்படுகின்றார்கள். இதற்கான மாதசெலவுகள் அதிகரித்துக் கொண்டே செல்வதாகவும் கிராம மக்கள் கருத்து தெரிவித்தனர்.

4.21 போதைப்பொருள் பாவனை

ஆய்வுப் பிரதேச மக்களிடையே போதைப்பொருள் பாவனை தொடர்பாக நோக்கும்போது 100 குடும்பங்களில் 74 சதவீதமானவர்கள் போதைப்பொருள் பாவனை உள்ளவர்களாகவும், 26 சதவீதமானவர்கள் போதைப்பொருள் பாவனை அற்றவர்களாகவும் காணப்படுகின்றார்கள். போதைப்பொருள் பாவனையாளர்களில் பீடி 12 சதவீதமானவர்களும், மதுபானம் 37 சதவீதமானவர்களும் கஞ்சா 04 சதவீதமானவர்களும், வெற்றிலை 47 சதவீதமானவர்களும் பயன்படுத்துபவர்களாக காணப்படுகின்றார்கள். இங்குள்ள மக்களில் பெரும்பாலன மீனவர்கள் போதைப்பொருள் பாவனைக்குள்ளாகியுள்ளனர். இதனைத் தொடர்ந்து வெற்றிலை பாவனை ஆண், பெண் இருபாலாரிடமும் காணப்படுகின்றது. சட்டவிரோத மதுபான உறுதியால் சமூக சீர்கேடுகள் ஏற்படுகின்றன. அதாவது இங்குள்ளவர்கள் மதுபான தயாரிப்பில் ஈடுபடுவதனால் குற்றவாலிகளாக சட்டத்தின்முன் நிற்கின்றார்கள். சட்ட விரோத மதுபான உற்பத்தியை நிறுத்துவதற்காக பிரதேச செயலகம், கிராமசேவகர் இணைந்து முன்னெடுத்த செயற்பாடுகளின் விளைவாக கடந்த காலங்களில் பலர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதாகவும் அறியமுடிந்தது. இதனால் அதிகளவான தண்ட பணத்தினையும் நீதிமன்றங்களுக்கு செலுத்தி வருவதினையும் அறியக்கூடியதாக இருந்தது. மேலும் தற்காலங்களில் குடிநீர் வசதி, மின்சார வசதி என்பன சிறப்பான வகையில் காணப்படுவதாக கிராமசேவகர் மற்றும் மீனவ சங்கத் தலைவர்களுடனான நேர்காணலின்போது அறியக்கூடியதாக இருந்தது.



வரைபடம் 4.7: போதைப்பொருள் பாவனை

மூலம்: ஆய்வாளர், (2025)

மேலும் ஆய்வுப் பிரதேசத்தில் மீனவ சமூகம் எதிர்நோக்கும் மிக முக்கியமான பிரச்சினையாக காணப்படுவது மீன்பிடியில் நவீன தொழிநுட்பங்களை பயன்படுத்துகின்றமையாகும். அதாவது பெட்ரி, டைனமிக், சுருக்கு வலைகளின் பயன்பாடு என்பன சாதாரண மீன்பிடியாளர்களை பெரிதும் பாதிக்கின்றது. இந்நிலையானது மீன்பிடியில் ஈடுபடுபவர்களை பல்வேறு பிரதேசங்களுக்கு இடம்பெயர்த்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

05. முடிவுரை

ஆய்வுப் பிரதேசத்தில் இனங்காணப்பட்ட முக்கிய சமூக பொருளாதார பிரச்சினைகளாக குடும்ப நிலை, வருமானம், கல்வி, உணவு, வீட்டு வசதிகள், சுகாதாரம், போக்குவரத்து தொடர்பான பிரச்சினைகள் காணப்படுவதோடு, மீனவக் குடும்பங்களிடையே அதிகரித்த வறுமைக்கு இவை வழிவகுக்கின்றன. இதனால் சமூக, பொருளாதார அபிவிருத்திகள் பின்னடைந்து காணப்படுகின்றன. எனவே ஆய்வுப்

பிரதேசமானது கடந்த காலத்தினைவிட தற்போது சமூக பொருளாதார ரீதியாக பின்னடைந்து வறுமை நிலையில் இருப்பதனை ஆய்வின் மூலம் கண்டறியக்கூடியதாக இருந்தது. இவ்வாறு இனங்காணப்பட்ட பிரச்சனைகளுக்கான தீர்வுகள் மக்களுக்கு சாதக விளைவுகளை வழங்கக்கூடிய வகையில் அரச திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் அரசாங்கத்துடன் இணைந்து ஆய்வுப்பிரதேச மீனவ சமூக அமைப்புக்களும், அரசசார்பற்ற நிறுவனங்களும் கரையோர மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த தேவையான வழிவகைகளை செய்து கொடுப்பது இவ்வனைத்து அமைப்புக்களினதும் கடமையாகும். மீன்பிடி தவிர்ந்த மாற்றுத் தொழில்களை குறிப்பாக சுற்றுலா, குடிசைக் கைத்தொழில், பழச்செய்கை, மரக்கறிச் செய்கை மற்றும் துறைமுகங்கள் போன்ற தொழில்களை ஆரம்பிப்பதன் மூலம் இளைஞர்கள் வேறு இடங்களுக்கு தொழில் தேடிச் செல்வதைத் தடுப்பதுடன், வருமானத்தை அதிகரிக்கச் செய்து, மீனவக் குடும்பங்களின் முன்னேற்றகரமான நிலைபேறுடைய வாழ்வாதாரத்தினையும் உறுதி செய்து கொள்ள முடியும்.

பின்னிணைப்பு



உசாத்துணைகள்

Adams, T.1.H. (1998), Coastal Fisheries and Marne Development Issues for Small Islands, Available from: https://www.researchgate.net/publication/27768325 (Accessed on 10/08/2025)

Abebe Ejigu Alemu, A.E. & Azadi, H. (2018), Fish Value Chain and its Impact on Rural Households' Income: Lessons Learned from Northern Ethiopia, Available from: https://www.mdpi.com/2071-1050/10/10/3759/pdf (Accessed on: 14/08/2025)

Beddington, J.R., Agnew, D.J. & Clark, CW. (2007) Current Problems in the Management of Marine Fisheries, Available from: https://www.researchgatst.net/nutilication/5248405 (Accessed on: 10/08/2025)

Bene, C. & Friend, R.M. (2011) Poverty in small-scale fisheries: Old issue, new analysis, Available from: https://www.researchgate.net/publication/258174695 (Accessed on: 11/08/2025)

Coulthard, S. White, C. Paranamana, N. Sandaruwan, K. P. G. L. Manimohan, R. & Maya, R. (2018), Tackling alcoholism and domestic violence in fisheries -A new opportunity to improve well-being for the most vulnerable people in global fisheries, Available from: https://onlinelibrary.wiley.com/doi/full/10.1111/faf 12426 (Accessed on: 15/08/2025).

Dayalatha, W.K.V, (2020), Low Socio- Economic status among coastel fishing families in Southern Sri Lanka, Available from: www.europeanproceedings.com (Accessed on: 14/08/2025)

Jentoft, 5. & Groups (2018), Working together in small-scale fisheries: harriessing collective action for poverty, eradication, Available from: https://www.researchgate.net/publication/376341046 (Accessed on: 13/08/2025).

Kadfak, A. (2019) More than Just Fishing. The Formation of Livelihood Strategies in an Urban Fishing Community in Mangaluru, India, Available from: https://doi.org/10.1080/00220388.2019 1650168 (Accessed on: 11/08/2025)

Maarten, B., Derek, S.J. & Svein, J. (2005), Challenges and concerns in capture fisheries and aquaculture, Available from: https://www.researchgate.net/publication/303080164 (Accessed on: 11/08/2025)

Nafees, M.S.M., Athuda, A.R.S.B. & Edirisinghe, U. (2009), Impacts of Tsunami and Security Situations on Marine Fisheries of Kinniya, Trincomalee, Available from: https://www.researchgate.net/publication/759757908 (Accessed on: 11/08/2025)

Rostitawati, T. Wahyuddin, N.I. & Mohammed, O. (2019), The Poverty Puddles of the Cage Fishing Community at Limboto Lake Coast, Indonesia, Available from: http://www.ccsenet.org/journal/index.php/jsd/article/download/0/0/39603/4 0510 (Accessed on: 15/08/2025)

Sanchirico, J.N. & Wilen, J.E. (2007), Global Marine Fisheries Resources: Status and Prospects, Available from: https://www.researchgate.net/publication/5172241 (Accessed on: 12/08/2025)

Sinha, M.K., Anrose, A., Pratyush, D. & Babu,C (2017), Indian Deep Sea Fisheries Its Prospects, Issues and Challenges, Available from: https://www.researchgate.net/publication/313843844 (Accessed on: 12/08/2025)

Sirajudheen, T. K., Shyam SS. Bijukumar, A. & Bindu A, (2014), Problems and Prospects of Marine Ornamental Fish Trade in Kerala, india, Available from: http://www.researchgate.net/publication/262545 (Accessed on: 12/08/2025)

Soosai, A.S, (2008), Impacts of Intra-state Warfare and International Resource Conflicts on Livelihoods of Fishing Communities in Northern Sri Lanka, Available from: https: www.researchgate.net (Accessed on 15/08/2025)

Temesgen, M., Getahun, A. & Lemma, B. (2019), Current Problems in the Management of Marine Fisheries, Available from: https://www.researchgate.net/publication/6248405 (Accessed on 13/08/2025)

poverty line [online] Available from twx//www.adb.org/countries/lanka/povertyhttp://www.statistics.gov.lk/page.asp?page-Poverty (Accessed on 13/08/2025)

Venkatesh Salagrama, (2006), Trends in poverty and livelihoods in coastel fishing communities of Orissa state, India, Available from: https://www.semanticscholar.org (Accessed on: 15/08/2025)

Wardojo, S.W. (2018), Poverty and Women Status among the Fishers from Era, Community Available from: https://ejournal2 undip.ac.id/index.php/jmsni/article/download/5424/2953 in Contemporary (Accessed on: 14/08/2025).

இஸ்லாத்தில் சர்வதேச உறவுகள்: அப்துல் ஹமீத் அபூ சுலைமானுடைய கட்டமைப்பின் சமகால பொருத்தப்பாடு குறித்த ஒரு மதிப்பீடு

International Relations in Islam: An Evaluation of the Contemporary Relevance of Abdul Hamid Abu Sulayman's Framework

Fayas, S.M.[1], Mufasiya, A.M.F.[2] & Rizvi. M.T.M.[3]

[1&2]Department of Islamic Studies, South Eastern University, Sri Lanka.

[3]Department of Islamic Studies, Eastern University, Sri Lanka.

Correspondence: smfayas@seu.ac.lk, rizvimtm@esn.ac.lk

Abstract

International relations are regarded as a powerful mechanism for fostering constructive engagement among communities in the modern world. However, it is concerning that adequate awareness and understanding of this field have not sufficiently developed across many societies. This gap is particularly visible within the Muslim community, where consistent attention to and engagement with the significance of international relations remain limited. In an era marked by rapid global transformations and expanding cross-cultural interactions, it has become imperative for Muslims to cultivate constructive international relations and align them with Islamically grounded objectives. Accordingly, this study presents a comprehensive evaluation of the Islamic framework for international relations proposed by Abdul Hamid Abu Sulayman, a leading thinker in contemporary Islamic social sciences. It examines how his theories, foundational principles, and core values can serve as guiding tools for shaping international relations in the present global context. Adopting a qualitative methodology, the study conducts a literature-based analysis using secondary data-including research articles, books, journals, and credible online sources-through a descriptive analytical approach. The findings reveal that Abu Sulayman's structural framework offers a highly relevant intellectual foundation for the international relations strategies that Muslim societies need to adopt in response to contemporary geopolitical and social changes. The study further demonstrates that his approach provides clear guidance for formulating foreign policies and global engagement strategies rooted in Islamic principles, doctrines, and ethical norms.

Keywords: *Abdul Hamid Abu Sulayman, Foundational Principles & Values, International Relations, Islamic Framework*

ஆய்வுச் சுருக்கம்

சர்வதேச உறவுகள் நவீன உலகில் சமூகங்களுக்கிடையேயான ஆக்கபூர்வ உறவுகளை உருவாக்கும் சக்திவாய்ந்த கருவியாகக் கருதப்படுகின்றன. இருப்பினும், இன்றைய சூழலில் சர்வதேச உறவுகள் குறித்த விழிப்புணர்வும் புரிதலும் பல சமூகங்களிடையே போதுமான முறையில் உருவாகாமல் இருப்பது கவலைக்குரியதாகும். குறிப்பாக, முஸ்லிம் சமூகத்தில் இவ்வுறவின் முக்கியத்துவம் குறித்த கவனமும் தொடர் ஈடுபாடும் குறைவாகக் காணப்படுகின்றன. எனவே, சமகாலத்தின் மாற்றத்திற்கும் உலகளாவிய

தொடர்புகளின் வளர்ச்சிக்கும் ஏற்ப, முஸ்லிம்கள் ஆக்கபூர்வமான சர்வதேச உறவுகளை உருவாக்குவதும், அவற்றை இஸ்லாமிய அடிப்படையிலான நோக்கங்களுடன் இணைப்பதும் காலத்தின் அவசியமாகிறது. அந்தவகையில் இவ்வாய்வு, இஸ்லாமிய சமூக அறிவியலின் முன்னணி சிந்தனையாளரான அப்துல் ஹமீத் அபூ சுலைமானின் இஸ்லாமிய அடிப்படையிலான சர்வதேச உறவுகளுக்கான கட்டமைப்பை மையமாகக் கொண்டு விரிவான மதிப்பீட்டை முன்வைக்கிறது. குறிப்பாக, அவர் வழங்கிய கோட்பாடுகள், அடிப்படை நியமங்கள் மற்றும் பெறுமானங்கள் எவ்வாறு சமகால சர்வதேச உறவுகளை கட்டியெழுப்புவதில் வழிகாட்டியாக அமைகின்றன என்பதை இந்த ஆய்வு ஆராய்கிறது. இந்த ஆய்வு பண்புசார் (Qualitative) முறையைக் கொண்டு, இரண்டாம் நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்ட இலக்கிய விமர்சனத்தை மேற்கொள்கின்றது. இதற்காக ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் நம்பத்தகுந்த இணையவழித் தகவல்கள் ஆகியவை பயன்படுத்தப்பட்டு, விவரண ரீதியான (Descriptive) பகுப்பாய்வு முன்னெடுக்கப்படுகிறது. ஆய்வின் முக்கிய கண்டுபிடிப்பாக, இன்றைய கால-இட மாற்றங்களுக்கு ஏற்ப முஸ்லிம் சமூகங்கள் நடைமுறைப்படுத்த வேண்டிய சர்வதேச உறவுக் கொள்கைகளுக்கு அப்துல் ஹமீத் அபூ சுலைமானின் அமைப்புத் திட்டம் மிகுந்த பொருத்தமுடைய ஒரு சிந்தனைக் களமாக இருக்கிறது என்பதை வெளிப்படுத்துகிறது. குறிப்பாக, வெளிவிவகாரக் கொள்கைகள் மற்றும் உலகளாவிய அணுகுமுறைகளை வடிவமைக்கும் போது, இஸ்லாமிய நியமங்கள், கோட்பாடுகள் மற்றும் ஒழுங்குகளைப் பின்பற்றுவதற்கான தெளிவான வழிகாட்டுதலாக இந்த ஆய்வு செயற்படுகிறது.

திறவுச் சொற்கள்: அப்துல் ஹமீத் அபூ சுலைமான், அடிப்படை நியமங்கள் மற்றும் பெறுமானங்கள், இஸ்லாமிய அமைப்புத் திட்டம், சர்வதேச உறவுகள்

1. ஆய்வு அறிமுகம்

சர்வதேச உறவுகள் என்பது நாடுகள், உலக அரங்கில் செயற்படும் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்கிடையேயான தொடர்புகளை ஆய்வு செய்யும் ஒரு முக்கிய துறையாகும். இத்துறை இராஜதந்திரம், வெளியுறவுக் கொள்கை, முரண்பாட்டுத் தீர்வு, உலகமயமாக்கல் மற்றும் சர்வதேச சட்டம் போன்ற பல்வேறு பிரிவுகளை உள்ளடக்கியதுடன், நாடுகளுக்கிடையேயான உறவுகளை மட்டுமல்லாமல், ஒரு நாட்டில் உள்ள தனிநபர்கள் அல்லது குழுக்கள் பிற நாடுகளுடன் ஏற்படுத்தும் பன்முகத் தொடர்புகளையும் ஆய்வு செய்கிறது (Ney, ***2011).*** இவ்வாறு பன்முகத்தன்மை கொண்ட சர்வதேச உறவுகள், சமூக, பொருளாதார, அரசியல், சுற்றுச்சூழல், நம்பிக்கை, கலாசாரம் மற்றும் பண்பாடு போன்ற பல துறைகளில் மேம்படுத்தப்பட்டு, இவற்றுக்கிடையேயான தொடர்புகளை ஆராய்கிறது (Clinchey, ***2023).***

சர்வதேச உறவுகள் குறித்த பொதுவான கருத்துக்கள் இவ்வாறு இருக்க, இஸ்லாமிய நோக்கில் சர்வதேச உறவுகள் என்பது வெறுமனே பிற நாடுகளுடனான பன்முகத் தொடர்புகளையோ அல்லது அதன் அம்சங்களையோ மையப்படுத்தி, ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ளும் முறையைப் பற்றியது மட்டுமல்ல (Naseef Manabilang Adiong et al., 2019). மாறாக, இது உலகின் பல்வேறு நாடுகளுக்கிடையேயான தொடர்புகளையும், அதன் அம்சங்களையும் இஸ்லாமியக் கொள்கைகளின் அடிப்படையில் ஆய்வு செய்யும் ஒரு துறையாகும் (Hassan & Kamal, 1991).

இஸ்லாமிய அடிப்படையிலான சர்வதேச உறவுகளின் கவனம், இஸ்லாமிய வரலாற்றில் 7ஆம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் தொடங்கியது. அக்காலத்தில், அட்லாண்டிக் பெருங்கடலின் கிழக்குக் கரையிலிருந்து ஆப்கானிஸ்தான் வரையிலான பரந்த பகுதிகள் இஸ்லாமிய ஆட்சிக்குட்பட்டதால், முஸ்லிம்கள் சர்வதேச உறவுகளில் போர், சமாதானம் போன்ற கருத்துக்களைப் பற்றி சிந்திக்க வேண்டியிருந்தது. இதனால், அக்கால உமையா[24] மற்றும் அப்பாஸியப்[25] பேரரசுகள், தங்களுக்கும் பிற நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை ஒழுங்குபடுத்துவதற்கான விதிகளை உருவாக்கியது. இதன்படி, அப்பாஸியர்கள் பிரதேசங்களை தார் அல்-இஸ்லாம்[26] (Dār al-Islām) இஸ்லாமிய விதிமுறைகளால் நிர்வகிக்கப்படும் பகுதி) மற்றும் தார் அல்-ஹர்ப்[27] (Dar al-Harb) எனப் பிரித்தனர். பின்னர், இஸ்லாமியப் பேரரசு பிற நாடுகளுடன் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளத் தொடங்கியபோது, தார் அல்-அமான்[28] (Dar al-Aman) எனும் கருத்தாக்கமும் அறிமுகப்படுத்தப்பட்டது (George Sadek, 2012).

இவ்வாறு, சர்வதேச உறவுகள் பெரும்பாலும் அல்-குர்ஆன் மற்றும் ஹதீஸ் அடிப்படையிலான இஸ்லாமிய சட்டத்தில் (ஷரீஅத்) இருந்து பெறப்பட்ட அரசியல் கோட்பாடுகளால் நிர்ணயிக்கப்பட்டன. இதனை அடிப்படையாகக் கொண்டு, உமையா, அப்பாஸிய மற்றும் உஸ்மானியப்[29] பேரரசுகள் சர்வதேச உறவுகளை மேற்கொள்ளும்போது, தூதுவர்களை அனுப்புதல், ஒப்பந்தங்கள் (சுல்ஹ் அல்லது அமான்) மேற்கொள்ளுதல், தூதுவர்களுக்கு பாதுகாப்பு வழங்குதல் போன்ற நெறிமுறைகளைப் பின்பற்றினர். இவை, இறைத்தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் ஹுதைபிய்யா ஒப்பந்தம் முன்மாதிரியை அடிப்படையாகக் கொண்டவை (Wheatley, ***2003).***

இருப்பினும், ***10***ஆம் நூற்றாண்டின் இறுதியில், சில விதிவிலக்குகளைத் தவிர, முஸ்லிம் சிந்தனை தேக்கமடைந்து, தக்லீத் (கண்மூடித்தனமாகப் பின்பற்றுதல்) மற்றும் தல்பீக் (ஒன்றிணைத்து காணும் முறை) போன்றவற்றுக்கு உட்படுத்தப்பட்டது. இதனால், முஸ்லிம் சிந்தனை தேக்கநிலையை

---

[24] உமையா காலம் (கி.பி. 661-750) இஸ்லாமிய வரலாற்றில் ஒரு முக்கியமான காலகட்டமாகும், இது உமையா வம்சத்தின் ஆட்சியைக் குறிக்கிறது. இது இரண்டாவது இஸ்லாமிய கலிபா ஆட்சியை நிறுவிய முதல் குறிப்பிடத்தக்க முஸ்லிம் வம்சமாக விளங்கியது, டமாஸ்கஸைத் தலைநகராகக் கொண்டு முஆவியா I ஆல் கி.பி 661இல் இந்த வம்சாவளி ஆட்சி தோற்றுவிக்கப்பட்டது. இவர்களின் ஆட்சியின் கீழ், இஸ்லாமிய பேரரசு மேற்கில் ஸ்பெயின் முதல் கிழக்கில் மத்திய ஆசியா வரை பரந்து விரிவடைந்திருந்தது.

[25] அப்பாஸிய காலம் (750-1258) இஸ்லாமிய பொற்காலத்தின் முக்கியமான காலகட்டமாகும், இது அறிவியல், பொருளாதாரம் மற்றும் கலாசார வளர்ச்சியில் சிறந்து விளங்கியது. உமையாத் வம்சத்தை அடுத்து ஆட்சியைப் பிடித்த அப்பாஸியர்கள், பக்தாத் (Baghdad)நகரத்தை தலைநகராக நிறுவினர். இந்த செழிப்பான காலம் 1258இல் மங்கோலிய படையெடுப்பால் முடிவுக்கு வந்தது.

[26] தார் அல்-இஸ்லாம், அதாவது 'இஸ்லாமிய இல்லம்' அல்லது 'இஸ்லாமிய உலகம்', முஸ்லிம் ஆட்சியின் கீழ் உள்ள பிரதேசங்களைக் குறிக்கிறது. இங்கு மக்கள் தங்கள் இஸ்லாமிய மார்க்கத்தை சுதந்திரமாகப் பின்பற்ற அனுமதிக்கப்படுகின்றனர். இது பல்வேறு கலாசாரங்கள், மொழிகள் மற்றும் பாரம்பரியங்களைக் கொண்ட ஒரு பரந்த, ஒன்றோடொன்று இணைந்த உலகத்தை பிரதிபலிக்கிறது, இவை அனைத்தும் பகிரப்பட்ட இஸ்லாமிய நம்பிக்கைகளால் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

[27] தார் அல்-ஹர்ப், 'போரின் இல்லம்' என மொழிபெயர்க்கப்படும் இஸ்லாமிய சட்டப் பதம், இஸ்லாமிய ஆட்சியின் கீழ் இல்லாத பிரதேசங்களைக் குறிக்கிறது. இத்தகைய பகுதிகளில் இஸ்லாமிய சட்டம் (ஷரீஆ) அமல்படுத்தப்படுவதில்லை, மேலும் முஸ்லிம்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படுவதில்லை. அல்குர்ஆனில் இந்தக் கருத்து வெளிப்படையாகக் குறிப்பிடப்படவில்லை என்றாலும், இடைக்கால முஸ்லிம் அறிஞர்களால் பிரதேசங்களை வகைப்படுத்துவதற்காக இது உருவாக்கப்பட்டது.

[28] தார் அல்-அமான், 'அமைதியின் வாழிடம்' அல்லது 'பாதுகாப்பின் இல்லம்' எனப் பொருள்படும் அரபு சொல்லாகும். இது முஸ்லிம்கள் தங்கள் மதத்தை சுதந்திரமாகப் பின்பற்றி, அமைதியுடனும் பாதுகாப்புடனும் வாழக்கூடிய பிரதேசம் அல்லது நாட்டைக் குறிக்கிறது. இந்தக் கருத்து, 'தார் அல்-ஹர்ப்' (போரின் பிரதேசம்) என்பதற்கு மாறாகப் பயன்படுத்தப்படுகிறது.

[29] உஸ்மானியப் பேரரசு, அதன் நிறுவனர் ஒஸ்மான் இன் பெயரால் அழைக்கப்படும், ஆறு நூற்றாண்டுகள் நீடித்த சக்திவாய்ந்த துருக்கிய பேரரசாகும். அனடோலியாவில் உள்ள அதன் தலைநகரிலிருந்து, இது தென்கிழக்கு ஐரோப்பா, தென்மேற்கு ஆசியா மற்றும் வட ஆப்பிரிக்காவின் பரந்த பகுதிகளை ஆட்சி செய்தது.

அடைந்தது. இதேவேளை, மேற்கத்திய உலகில் மதச்சார்பற்ற கொள்கைகள், தாராளவாதம், கட்டமைப்பியல் போன்ற நவீன சிந்தனைகள் மற்றும் முறைமைகள் முஸ்லிம் சிந்தனையுடன் ஒப்பிடுகையில் வளரத் தொடங்கின. இது இஸ்லாமிய அடிப்படையிலான சர்வதேச உறவுகளில் சிக்கல்களை ஏற்படுத்தியது (அபூ சுலைமான், **1993).** ஏனெனில் இஸ்லாமியக் கோட்பாடுகள் அல்-குர்ஆன், ஹதீஸ், இஸ்லாமிய வரலாறு மற்றும் சமயக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தன. ஆனால், மேற்கத்தியக் கோட்பாடுகள் பகுத்தறிவு, தனிநபர் சுதந்திரம் மற்றும் அரசியல் சுயாட்சி போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு, பெரும்பாலும் ஐரோப்பிய அனுபவங்களாலும் தத்துவங்களாலும் வடிவமைக்கப்பட்டிருந்தன **(Mohammed Nuruzzaman, 2018).**

எனவே, மத்திய காலத்தில் சர்வதேச உறவுகளுக்கான கொள்கைகள் இறைத்தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் ஆக்கபூர்வமான இஸ்லாமிய அரசியல் கொள்கைகளால் வழிநடத்தப்பட்டு, அக்கால சூழலுக்கு ஏற்புடையதாக இருந்தன. ஆனால், நவீன காலத்தில், முஸ்லிம்களின் சிந்தனை வீழ்ச்சி, மேற்கத்திய சிந்தனையின் தாக்கம் மற்றும் முஸ்லிம்களின் பலவீனம் ஆகியவை சர்வதேச உறவுகளுக்கான சிறந்த அணுகுமுறைகளைப் பேணுவதற்குத் தடையாக அமைந்தன. இதனால், அப்துல் ஹமீத் அபூ சுலைமான், மத்திய கால அல்லது மரபு ரீதியான சர்வதேச உறவு அணுகுமுறைகள் தற்கால முஸ்லிம் கொள்கைகளுக்கு இசைவாக இல்லை என்றும், நவீனத்துவ அணுகுமுறைகள் இஸ்லாமிய சிந்தனைக்கு புத்துயிர் அளிப்பதற்கு ஆதரவாக இல்லை என்றும் வாதிடுகிறார். மேலும், இவை தற்கால கால-இட பரிணாமத்திற்கு ஏற்ப ஆக்கபூர்வமான சர்வதேச உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கு பயனளிக்காது எனக் குறிப்பிடுகிறார்.

இதனை அடிப்படையாகக் கொண்டு, அப்துல் ஹமீத் அபூ சுலைமான் நவீன, ஆக்கபூர்வமான இஸ்லாமிய அமைப்புத் திட்டத்தை முன்வைத்து, அதற்கான அடி ப்படை நியமங்கள் மற்றும் பெறுமானங்களை விளக்குகிறார். இவ்வாறு, அவரது சர்வதேச உறவுகளுக்கான இஸ்லாமிய அமைப்புத் திட்டத்தை வடிவமைத்த விதம் மற்றும் அதற்கு முன்வைத்த அடிப்படை நியமங்கள், பெறுமானங்கள் ஆகியவற்றைப் பரிசீலித்து முன்வைப்பதை இந்த ஆய்வு நோக்கமாகக் கொண்டுள்ளது.

2. ஆய்வு நோக்கங்கள்

மேற்குறிப்பிட்ட அறிமுகத்தின் அடிப்படையில், இவ்வாய்வு பின்வரும் இரண்டு முக்கிய நோக்கங்களைக் கொண்டு அமைந்துள்ளது:

இஸ்லாமிய அடிப்படையில் சர்வதேச உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கு அப்துல் ஹமீத் அபூ சுலைமான் முன்வைத்த இஸ்லாமிய அமைப்புத் திட்டத்தை மீளாய்வு செய்தல்.

அப்துல் ஹமீத் அபூ சுலைமானின் இஸ்லாமிய அமைப்புத் திட்டத்தில் பயன்படுத்தப்பட்ட அடிப்படை நியமங்கள் மற்றும் பெறுமானங்களைப் பரிசீலித்தல்.

3. ஆய்வு முறைமை

இந்த ஆய்வுக் கட்டுரை, அப்துல் ஹமீத் அபூ சுலைமானின் இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் சர்வதேச உறவுகளுக்கான அமைப்புத் திட்டத்தை ஆராயும் நோக்கில், பண்புரீதியான ஆய்வு (Qualitative Research) முறைமையை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. இதில் விளக்க மற்றும் பகுப்பாய்வு அணுகுமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வு முழுவதும் இரண்டாம் நிலைத் தரவுகளை (Secondary Data) மையமாகக் கொண்டு, நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், மற்றும் நம்பகமான இணையத்தள ஆதாரங்கள் ஆகியவை பயன்படுத்தப்பட்டுள்ளன.

தரவு சேகரிப்பு, விரிவான இலக்கிய மதிப்பாய்வு மூலம் மேற்கொள்ளப்பட்டு, பல்வேறு அறிவுபூர்வமான கண்ணோட்டங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் முடிவுகளின் நம்பகத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இவ் ஆய்வில் பகுப்பாய்வு செயல்முறை, புள்ளியியல் மதிப்பீடுகளை விட, உள்ளடக்க விளக்கம் மற்றும் ஒருங்கிணைப்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம், அப்துல் ஹமீத் அபூ சுலைமான் முன்வைத்த கோட்பாடுகள் அடையாளம் காணப்பட்டு, அவற்றின் தற்கால சர்வதேச உறவுகளுக்கான பொருத்தம் மதிப்பிடப்பட்டு, முடிவுகள் தெளிவாகவும் ஒழுங்காகவும் வழங்கப்பட்டுள்ளன.

4. கலந்துரையாடல்களும் பெறுபேறுகளும்

அப்துல் ஹமீத் அபூ சுலைமான், ***20***ஆம் நூற்றாண்டின் குறிப்பிடத்தக்க இஸ்லாமிய அறிஞரும் கல்வியாளருமாவார். ***1936***ஆம் ஆண்டு மக்காவில் பிறந்த இவர், கெய்ரோ பல்கலைக்கழகத்தில் ***1959*** மற்றும் ***1963***ஆம் ஆண்டுகளில் வணிகவியல் மற்றும் அரசறிவியல் துறைகளில் பட்டங்களைப் பெற்றார். பின்னர், ***1973***ஆம் ஆண்டு பென்சில்வேனியா பல்கலைக்கழகத்தில் சர்வதேச உறவுகள் துறையில் முனைவர் பட்டம் பெற்றதுடன், சர்வதேச இஸ்லாமிய சிந்தனைக் கழகத்தின் (International Institute of Islamic Thought) நிறுவன உறுப்பினராகவும் பணியாற்றினார். மலேசியாவிலுள்ள சர்வதேச இஸ்லாமியப் பல்கலைக்கழகத்தின் (International Islamic University Malaysia) தலைவராகப் பத்து ஆண்டுகள் பணியாற்றிய இவர், அந்நிறுவனத்தின் பாடத்திட்டம், தத்துவம் மற்றும் மேம்பாட்டில் முழுமையாக ஈடுபட்டார். நவீன உலகச் சூழலில் இஸ்லாமிய தத்துவத்திற்கும் கற்றல் முறைகளுக்கும் புத்துயிர் அளிக்கும் வகையில், இஸ்லாமியப்படுத்தப்பட்ட அறிவு மற்றும் மானிட அறிவியல் (Islamic Revealed Knowledge and Human Science) பீடத்தை நிறுவினார். இப்பீடம், ஆன்மீக ரீதியான மனித வாழ்வியலை ஒருங்கிணைத்து, வாழ்க்கையின் ஏகத்துவ நெறிமுறையை வெளிப்படுத்தும் கற்றல் சூழலை உருவாக்கியது. இவரது அறிவார்ந்த படைப்புகள் மற்றும் தலைமைத்துவ முன்மாதிரிகள் மூலம், இரக்கமும் பணிவும் கொண்ட முன்னோடியாக முஸ்லிம் உலகில் திகழ்ந்தார் (Nurul Ain Norman, 2021).



புகைப்படம் 1: Dr. அப்துல் ஹமீத் அபூ சுலைமான் (1936-2021)

(மூலம்: https://iiit.org/en/dr-abdulhamid-ahmad-abusulayman-1936-2021/)

அப்துல் ஹமீத் அபூ சுலைமானின் படைப்புகள் இஸ்லாமிய சிந்தனை, சமூக சீர்திருத்தம் மற்றும் கல்வி முறைகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. அவரது முக்கிய நூல்களான முஸ்லிம் சிந்தனையின் நெருக்கடி *(1986)*இ சர்வதேச உறவுகளின் இஸ்லாமியக் கோட்பாடு *(1993)*இ மற்றும் இஸ்லாமியமயமாக்கல்: சமகால அறிவு சீர்திருத்தம் *(1994)* ஆகியவை இஸ்லாமிய சமூகத்தில் புதிய சிந்தனைத் திசைகளுக்கு வழிவகுத்தன. இஸ்லாமிய உலகில் அறிவியல் மற்றும் கலாசார பரிமாற்றங்களை மேம்படுத்துவதில் ஆர்வம் கொண்டவராக இருந்த அவர், ஐஐஐவு-இன் முன்னணித் தலைவராகவும் செயற்பட்டார். அவர் சர்வதேச உறவுகளின் மேம்பாட்டிற்காக இஸ்லாமிய ஒழுங்குகளையும், மாறுபட்ட கலாசாரங்களுக்கு இடையே புரிதலை ஊக்குவிக்கவும் பல முயற்சிகளையும் மேற்கொண்டார் *(*AbuSulayman, *1993)*. இதன் விளைவாக, அவர் மேற்கொண்ட ஆய்வுகள் சர்வதேச அமைதி, மனித உரிமைகள், மற்றும் நீதியை மையப்படுத்தி, நவீன உலகில் இஸ்லாமிய அடிப்படையில் சமாதானத்தை நிலைநிறுத்தும் வழிகளை ஆராய்ந்தன. இதன் மூலம், கல்வி மற்றும் அரசியல் சிந்தனைகளில் புதுமைகளை அறிமுகப்படுத்தி, பாரம்பரிய இஸ்லாமிய நோக்கங்களை நவீன கோணத்தில் விளக்கினார் *(*AbuSulayman, *1987)*.

இந்த நோக்கில், அவரது முக்கிய நூலான சர்வதேச உறவுகளின் இஸ்லாமியக் கோட்பாட்டை நோக்கி: இஸ்லாமிய முறை மற்றும் சிந்தனைக்கான புதிய திசைகள் (Towards an Islamic Theory of International Relations: New Directions for Islamic Methodology and Thought - 1993) எனும் நூல் சர்வதேச உறவுகளுக்கான இஸ்லாமியக் கோட்பாட்டைஇ இஸ்லாமிய அறிவாற்றல், வழிமுறை மற்றும் அறிவுசார் ஆதாரங்களின் அடிப்படையில் முன்வைப்பதற்கு ஒரு சிறந்த முயற்சியாக விளங்குகிறது. இந்நூல், இஸ்லாமிய வரலாற்றின் பின்னணியையும், சமகால மேற்கத்திய சமூக அறிவியலின் பங்களிப்பையும் ஒருங்கிணைத்து, சர்வதேச உறவுகளுக்கான அடிப்படையை இஸ்லாமிய முறைமையின் கீழ் விளக்குகிறது. இந்நூலின் முன்னுரையில், மர்ஹ_ம் இஸ்மாயில் ராஜி அல்-ஃபாரூக்கி குறிப்பிடுகையில், "அப்துல் ஹமீத் அபூ சுலைமான், அல்-குர்ஆன் மற்றும் சுன்னாவை அடிப்படையாகக் கொண்டு, சர்வதேச உறவுகளுக்கான ஒருங்கிணைந்த இஸ்லாமிய அணுகுமுறையை உருவாக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறார். இதற்காக, முஸ்லிம்களின் ஆரம்ப தலைமுறையினரால் உருவாக்கப்பட்ட வழிமுறைகளை விமர்சன ரீதியில் ஆய்வு செய்து, அவற்றை நவீன சூழலில் மீளாய்வு செய்கிறார். இதன் மூலம், சமூக அறிவியலில், குறிப்பாக சர்வதேச உறவுகளின் கொள்கைத் தளங்களில், இஸ்லாமிய நோக்கில் புதிய முறைமையை முன்வைக்கிறார். இந்நூல், இஸ்லாமிய அறிவுசார் மரபுகளையும் சமகால சர்வதேச உறவுக் கோட்பாடுகளையும் இணைத்து, இஸ்லாமிய அடிப்படையில் ஒரு புதிய கோட்பாட்டு கட்டமைப்பை உருவாக்குகிறது. இது, இஸ்லாத்தை மையமாகக் கொண்ட சர்வதேச உறவுகளைப் புரிந்து

கொள்வதற்கு விரிவான அடித்தளத்தை வழங்குகிறது. இதனால், இந்நூல் இஸ்லாமியக் கருத்து மேம்பாட்டிற்கும், சர்வதேச உறவுகள் தொடர்பான ஆய்வுகளுக்கும் முக்கியமான மேற்கோளாக விளங்குகிறது" (Berghout, 2022).

எனவே, இதனை அடிப்படையாகக் கொண்டு, அப்துல் ஹமீத் அபூ சுலைமான் முன்வைக்கும் இஸ்லாமிய சர்வதேச உறவுகளுக்கான ஆக்கபூர்வமான அமைப்புத் திட்டம் மற்றும் அதற்காக அவர் முன்வைத்த அடிப்படை நியமங்கள் மற்றும் பெறுமானங்கள் இங்கு விரிவாக ஆராயப்படுகின்றன.

4.1 அப்துல் ஹமீத் அபூ சுலைமானின் சர்வதேச உறவுகளுக்கான இஸ்லாமிய அமைப்புத் திட்டம்

அப்துல் ஹமீத் அபூ சுலைமானின் வரலாறு, சர்வதேச உறவுகள் தொடர்பான அவரது பங்களிப்புகள் மற்றும் சிந்தனைகளை ஆராய்ந்தால், அவரது சீர்திருத்தக் கருத்துக்கள் இஸ்லாமிய உம்மத்தின் அடையாளத்தை மீண்டும் வரையறுப்பதை நோக்கமாகக் கொண்டவை என்பது தெளிவாகிறது. முஸ்லிம்களின் சிந்தனைத் தேக்கநிலையே இஸ்லாமிய உலகின் தற்போதைய பின்னடைவிற்கு முக்கிய காரணம் என வாதிடும் அப்துல் ஹமீத் அபூ சுலைமான், ஆரம்பகால வரலாற்று முன்மாதிரிகளில் இருந்தும் கொள்கைகளில் இருந்தும் போதிய பயன்களைப் பெற முடியாத நிலையால், தற்காலச் சூழலில் இவற்றை மறு பரிசீலனை செய்ய வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறார். இதனடிப்படையில், சர்வதேச உறவுகளுக்கான ஆக்கபூர்வமான இஸ்லாமிய அமைப்புத் திட்டத்தை உருவாக்குவது தற்காலத்தின் முக்கிய தேவையாகக் கருதப்படுகிறது.

இதனால் அல்குர்ஆன் மற்றும் சுன்னாவின் அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு, அப்துல் ஹமீத் அபூ சுலைமான் நவீன சர்வதேச உறவுகளுக்கான ஆக்கபூர்வமான கோட்பாட்டை உருவாக்கி முன்வைத்துள்ளார். இது சமூக நீதி, ஒற்றுமை, மற்றும் சுதந்திரத்தை மையப்படுத்தி, இஸ்லாமிய சமூகம் சர்வதேச உறவுகளில் சமகால சவால்களை எதிர்கொள்வதற்கு ஒரு முழுமையான வழிகாட்டியாக அமைகிறது. இந்த அமைப்புத் திட்டம் முஸ்லிம்களின் இலட்சியங்களுக்கு வழிகாட்டுவதோடு, ஆக்கபூர்வமான பணிகளில் அவர்களை ஒருங்கிணைப்பதாகவும், காலம், இடம், மற்றும் பரிணாம மாற்றங்களுக்கு ஏற்ப தேவையற்ற அம்சங்களைக் களைந்து மேம்படுத்துவதற்கு உதவுவதாகவும் அமைய வேண்டும்.

முஸ்லிம்கள் எதிர்காலத்தில் சர்வதேச உறவுகள் தொடர்பான கொள்கைகளை வகுக்கும்போது, யதார்த்த சவால்களைச் சமாளிக்கவும், சிறந்த முறையில் செயல்படவும், அப்துல் ஹமீத் அபூ சுலைமான் மரபு ரீதியான மற்றும் நவீன மதச்சார்பற்ற அமைப்புத் திட்டங்களுக்கு மாற்றாக, நவீன ஆக்கபூர்வமான இஸ்லாமிய அமைப்புத் திட்டத்தை முன்வைத்துள்ளார். இந்தத் திட்டம், தற்காலச் சூழலுக்கு பொருத்தமான வகையில், சில அடிப்படை நியமங்கள் மற்றும் பெறுமானங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது.

4.1.1 மரபு ரீதியான அமைப்புத் திட்டம்



வரைபடம் 1: மரபுரீதியான அமைப்புத்திட்டம்

(மூலம்: அபூ ஸுலைமான், 2015)

மத்திய காலத்தில் உருவாக்கப்பட்ட (மரபு ரீதியான அல்லது ஆதி கோட்பாட்டு) இஸ்லாமிய சர்வதேச உறவுகளுக்கான அமைப்புத் திட்டம், அக்கால முஸ்லிம்களின் மனோநிலை மற்றும் சூழமைவிற்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டு, முஸ்லிம் மற்றும் முஸ்லிமல்லாத நாடுகளுக்கிடையேயான உறவுகளை விவரிக்கிறது. இத் திட்டத்தில், சர்வதேச உறவுகளுக்கான கோட்பாடானது இஸ்லாமியச் சட்டம் (ஷரீஆ) மற்றும் இஸ்லாமிய அரசியல் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு, மாநிலங்களை தார் அல்-இஸ்லாம் (இஸ்லாமிய பிரதேசம்) மற்றும் தார் அல்-ஹர்ப் (இஸ்லாத்திற்கு எதிரான பிரதேசம்) என இரு பிரிவுகளாகப் பிரித்து, முஸ்லிம் அரசுகள் மத்திய கால சர்வதேச உறவுகளுக்கான கொள்கைகளை வடிவமைத்தனர். இந்தக் கொள்கை உருவாக்கத்தில், அல்-குர்ஆன் மற்றும் சுன்னாவை அடிப்படையாகக் கொண்ட ஸியர் மற்றும் பிக்ஹ் ஆகியவை சர்வதேச உறவுகள் தொடர்பான சட்ட மூலங்களாகக் காணப்பட்டன (AbuSulayman, 1993). ஸியர் குறித்து ஆராய்ந்தால், ''ஸீரா'' என்னும் சொல்லின் பன்மையான ஸியர் என்பது நடத்தை, நடைமுறை, மற்றும் அணுகுமுறை போன்ற பல கருத்துகளைக் கொண்டதுடன், இஸ்லாமிய ஷரீஆ சட்டத்தில் ஸியர் என்பது தற்காப்பு தொடர்பான விதிகளைக் குறிக்கவும் பயன்படுத்தப்படுகிறது (Munir, *2007).* இந்த விதிமுறைகள் முஸ்லிம்களுக்கும் முஸ்லிமல்லாதவர்களுக்கும் இடையிலான உறவுகளைப் பேணுவதற்கான நெறிமுறைகளை விவரிப்பதோடு, போரின் போதான சட்டங்கள், சமாதான ஒப்பந்தங்கள், தூதரக உறவுகள், மற்றும் வர்த்தக நடவடிக்கைகள் போன்றவற்றையும் உள்ளடக்கியவையாகும் (Bashir, *2018).*

இமாம் முஹம்மத் இப்னு ஸஹ்ல் அல்-ஸரக்ஷீயின் கருத்துப்படி, ஸியர் என்பது ''எதிரிகளின் பிரதேசத்தில் வாழும் அவிசுவாசிகளுடனும், தற்காலிகமாக (முஸ்தஅமன் - முஸ்லிம் அரசுடன் யுத்தத்தில் ஈடுபட்டிருந்த முஸ்லிமல்லாத அரசின் பிரஜையாக இருந்து, முஸ்லிம் அரசின் எல்லைக்குள் பாதுகாப்பு பெற்றவர்) அல்லது நிரந்தரமாக (திம்மி - முஸ்லிம் அரசின் முஸ்லிமல்லாத பிரஜை) முஸ்லிம்களின் பிரதேசத்தில் வாழ்பவர்களுடனும், முஸ்லிம்கள் உடன்படிக்கை செய்தவர்களுடனும், மதம் மாறியோர்கள் (முர்தத்தூன்) மற்றும் கலகம் செய்பவர்களுடனும் (பாகூன்) முஸ்லிம்கள் கடைப்பிடிக்கும் உறவு முறைகளை விளக்குவது'' என்கிறார் (AbuSulayman, *1993).* இந்த விளக்கம், சர்வதேச உறவுகள் தொடர்பான ஸியர் சட்டத்தின் தன்மையை தெளிவுபடுத்துகிறது.

இதேபோல், பிக்ஹ் என்பது அல்குர்ஆன், சுன்னா, மற்றும் முஸ்லிம் அறிஞர்கள், உலமாக்கள், இஸ்லாமிய சட்ட அறிஞர்களின் விளக்கங்கள், அனுமானங்கள், மற்றும் அபிப்பிராயங்களின் ஒருங்கிணைந்த கோவையாகும். இது மத்திய காலத்தில் முஸ்லிம் சிந்தனையிலிருந்து பிரிக்க முடியாத அம்சமாக இருந்ததுடன், அக்கால சூழமைவிற்கு ஏற்ப தெளிவான ஒருமைப்பாட்டை வழங்கியது (AbuSulayman, *1993).*

இந்த ஸியர் மற்றும் பிக்ஹ் ஆகிய இரு மூலங்களும் இஸ்லாமிய சர்வதேச உறவுகளின் முறைமைகளின் முக்கிய அங்கங்களாக விளங்கின. இருப்பினும், இவை இஸ்லாமிய சட்டவியலின் ஒரு பகுதியாக மட்டுமே செயல்பட வேண்டுமே தவிர, அனைத்து விவகாரங்களுக்கும் இவை மட்டுமே சட்டங்களாகக் கருதப்பட முடியாது. இதனால், மத்திய கால அமைப்புத் திட்டம் தற்கால காலம், இடம், மற்றும் பரிணாம சூழமைவிற்கு ஏற்புடையதாக இல்லை. தற்போதைய அரசியல் உலகில் இத்தகைய அணுகுமுறை மேலோட்டமானதாகவே உள்ளது. எனவே, தற்கால சர்வதேச உறவுக் கொள்கைகளை உருவாக்குவோருக்கு இந்த அமைப்புத் திட்டம் எவ்வித பயனையும் அளிக்காது என அப்துல் ஹமீத் அபூ சுலைமான் விளக்குகிறார் (AbuSulayman, 1993).

4.1.2 நவீனத்துவ மதசார்பில்லா அமைப்புத் திட்டம்

நவீனத்துவ மதசார்பில்லா அமைப்புத் திட்டம், தற்கால நவீனத்துவவாதிகளின் அரசியல் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு, சர்வதேச விவகாரங்களில் முஸ்லிம்களுக்கும் முஸ்லிமல்லாதவர்களுக்கும் இடையிலான உறவுகளை விவரிக்கிறது. இருப்பினும், இந்த அமைப்புத் திட்டம் ஆக்கபூர்வமான சர்வதேச உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கு பொருத்தமானதாக இல்லை என அப்துல் ஹமீத் அபூ சுலைமான் வாதிடுகிறார். இதற்கு முக்கிய காரணமாக, முஸ்லிம் நவீனத்துவவாதிகளின் இந்த அணுகுமுறையில் காணப்படும் குறைபாடுகளை அவர் சுட்டிக்காட்டுகிறார். இவற்றில் முதன்மையானது, முஸ்லிம் சிந்தனையின் வளர்ச்சியடையாத தன்மையாகும். இந்தத் தேக்கநிலைக்கு, முஸ்லிம் சிந்தனை நவீனத்துவவாதிகளின் செல்வாக்கின் கீழ் தக்லீத் (ஆராயாமல் கண்மூடித்தனமாகப் பின்பற்றல்) மற்றும் தல்பீக் (ஒன்றிணைத்துக் காணும் முறை) போன்ற சிந்தனை அணுகுமுறைகளுக்கு உட்பட்டிருப்பதே காரணம் என அப்துல் ஹமீத் அபூ சுலைமான் முன்வைக்கிறார் (AbuSulayman, 1993).



வரைபடம் 2: நவீனத்துவ, மதசார்பில்லா அமைப்புத்திட்டம்

(மூலம்: அபூ ஸுலைமான், 2015)

தக்லீத் என்பது ஒரு முஸ்லிம் சட்ட அறிஞரின் (முஜ்தஹித்) கருத்துகளை ஆராயாமல் பின்பற்றுவதைக் குறிக்கிறது. இது பொதுவாக மத்ஹப் (இஸ்லாமிய சட்டப் பிரிவுகள்) அடிப்படையில் உருவாக்கப்பட்டது (Hallaq, *1984*). தல்பீக் என்பது மத்ஹப் இமாம்களின் கருத்துகளைத் தேர்ந்தெடுத்து ஒருங்கிணைத்து தீர்வு காணும் முறையாகும். இவை முஸ்லிம் சிந்தனையின் வீழ்ச்சியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன (AbuSulayman, 1993).

இந்த அணுகுமுறைகளை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச உறவுகளின் கோட்பாடு, தற்காலச் சூழலுடன் இணைந்து முன்னேற்றமான செயற்பாடுகளையோ அல்லது முஸ்லிம்களின் பங்களிப்பையோ உறுதி செய்யவில்லை. முஸ்லிம்களின் சர்வதேச உறவுக் கொள்கைகளின் செல்வாக்கு குறைவாக இருப்பதற்கு, தக்லீத் மற்றும் தல்பீக் போன்ற சிந்தனைகளுக்கு உட்பட்டிருப்பதுடன், பொருளாதார அபிவிருத்தி மற்றும் அரசியல் வலிமையை மேம்படுத்துவதற்கு முஸ்லிம் மக்களின் நிலையை உயர்த்துவதில் கொள்கை உருவாக்குவோர் தவறியதே காரணம் என அப்துல் ஹமீத் அபூ சுலைமான் விளக்குகிறார் (AbuSulayman, 1993).

மேலும், மேற்கத்திய செல்வாக்கு சர்வதேச உறவுகளில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக அப்துல் ஹமீத் அபூ சுலைமான் இந்த அமைப்புத் திட்டத்தில் குறிப்பிடுகிறார். மேற்கத்திய அணுகுமுறை

மதச்சார்பற்ற கொள்கைகளையும், வர்க்கப்பேதத்தையும் அடிப்படையாகக் கொண்ட மார்க்சிய சிந்தனையை உள்ளடக்கியது. இவை இஸ்லாமிய ஷரீஆ சட்டத்திற்கு முரணாகக் கருதப்படுவதால், முஸ்லிம்கள் மீதான தவறான புரிதலையும், சர்வதேச உறவுக் கொள்கை உருவாக்கத்தில் சமத்துவமற்ற தன்மையையும் ஏற்படுத்துகின்றன (AbuSulayman, 1993).

எனவே, நவீனத்துவவாதிகளின் இந்த அமைப்புத் திட்டம், இஸ்லாத்திற்கு முரணான கொள்கைகளையும் மேற்கத்திய சிந்தனையின் தாக்கத்தையும் கொண்டிருப்பதால், தற்கால சர்வதேச உறவுகளுடனான இஸ்லாமியத் தொடர்புக்கு சவாலாக அமைகிறது. மேலும் இந்த அணுகுமுறை இஸ்லாத்தின் அடிப்படை அம்சங்களைக் கவனத்தில் கொள்ளாததால், அது முஸ்லிம்கள் சர்வதேச உறவுகளைக் கட்டியெழுப்புவதற்குத் தடையாக உள்ளது (AbuSulayman, 1993).

இதனால், தற்காலச் சூழலுக்கு இந்த நவீனத்துவ மதச்சார்பில்லா அமைப்புத் திட்டம் பொருத்தமற்றது என அப்துல் ஹமீத் அபூ சுலைமான் விளக்குகிறார். இதற்குத் தீர்வாக, அவர் நவீன ஆக்கபூர்வமான இஸ்லாமிய அமைப்புத் திட்டத்தை முன்வைத்து விரிவாக விளக்கியுள்ளார்.

4.1.3 இஸ்லாமிய அமைப்புத் திட்டம்

ஆக்கபூர்வமான இஸ்லாமிய அமைப்புத் திட்டம், தற்கால சர்வதேச உறவுகளுக்கான ஒரு முன்மொழிவு வரைவாக அமைந்துள்ளது. இது "மக்கள் கோட்பாடு" அதாவது மனித உரிமைகளை மையமாகக் கொண்டு, சர்வதேச உறவுக் கொள்கைகளை உருவாக்குவோருக்கு இஸ்லாமிய கோட்பாடு மற்றும் பெறுமானங்களை அடிப்படையாகக் கொண்டு வழிகாட்டும் அம்சங்களை உள்ளடக்கியது. முக்கியமாக, மத்திய கால (மரபு ரீதியான அல்லது ஆதி கால) சர்வதேச உறவுகளுக்கான அமைப்புத் திட்டங்களின் குறைபாடுகளை இது நீக்கியுள்ளது. குறிப்பாக, காலம் மற்றும் இடம் தொடர்பான "சர்வதேச உறவுகளுக்கான முறையான அனுபவபூர்வ அணுகுமுறையின்மை" என்ற குறைபாடு தீர்க்கப்பட்டுள்ளது. இது, நவீனத்துவ அணுகுமுறையில் காணப்படும் முஸ்லிம் மக்களையும் அவர்களது உணர்வுகளையும் ஈர்க்க இயலாத பலவீனத்தை நிவர்த்தி செய்யும் வகையில் அமைந்துள்ளது. மேலும், முன்னைய காலங்களில் மேற்கத்திய சிந்தனையின் தாக்கத்தால் முஸ்லிம்களின் தேக்கநிலையை கருத்தில் கொண்டு, தற்கால சர்வதேச உறவுகளில் எழும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் இந்த அமைப்புத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது (AbuSulayman, 1993).



வரைபடம் 3: நவீன, ஆக்கபூர்வமான இஸ்லாமிய அமைப்புத்திட்டம்
(மூலம்: அபூ ஸுலைமான், 2015)

இத்திட்டம், சர்வதேச கொள்கை உருவாக்குவோருக்கு இஸ்லாமிய வழிமுறைகளைப் பின்பற்றுவதற்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குவதால், அப்துல் ஹமீத் அபூ சுலைமான் இதனை சர்வதேச உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கான சமகால அணுகுமுறையாக விவரிக்கிறார்.

மேற்குறிப்பிட்ட வரைபுகளில் உள்ள கோட்பாடுகளும் வரலாற்று முன்மாதிரிகளும் அறநெறி சார்ந்தவையாக இருந்தாலும், அவை இஸ்லாமிய சர்வதேச உறவுகளுக்கான ஒழுங்கை முழுமையாக முன்வைக்கவில்லை. கொள்கை அமுலாக்கத்திற்குத் தகுந்த விதிமுறைகள் இல்லாததால், சமகால இஸ்லாமிய சர்வதேச உறவுகளுக்கான ஆக்கபூர்வமான இஸ்லாமிய அமைப்புத் திட்டம் அவசியமாகிறது. இதற்காக, அப்துல் ஹமீத் அபூ சுலைமான் முன்வைத்த அடிப்படை நியமங்கள் மற்றும் பெறுமானங்களைக் கவனத்தில் கொள்வது மிகவும் முக்கியமாகும்.

4.2 ஆக்கபூர்வமான இஸ்லாமிய சர்வதேச உறவுகளுக்கான அடிப்படை நியமங்களும் பெறுமானங்களும்

இஸ்லாமிய அறிஞரான அப்துல் ஹமீத் அபூ சுலைமான், இஸ்லாமிய சர்வதேச உறவுகளை வடிவமைப்பதில் நீதி, பரஸ்பர மரியாதை மற்றும் ஒத்துழைப்பு போன்ற இஸ்லாமிய நெறிமுறைகளில் வேரூன்றிய அடிப்படைக் கோட்பாடுகளின் (நியமங்கள்) முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். இத்தகைய உறுதியான கட்டமைப்பு அமைதியான மற்றும் பயனுள்ள உலகளாவிய தொடர்புகளை ஊக்குவிக்கும் என அவர் வாதிட்டார். மோதல்களுக்கு மாறாக, பேச்சுவார்த்தை, புரிதல் மற்றும் நெறிமுறை ஆளுமையை முன்னுரிமையாகக் கொண்ட பெறுமான அடிப்படையிலான இராஜதந்திர அணுகுமுறையை அவர் ஆதரித்தார். இஸ்லாமிய இலட்சியங்களைப் பேணிக்கொண்டு, ஒற்றுமையை மேம்படுத்தி, உலகமயமாக்கல் மற்றும் கலாசார பன்முகத்தன்மை போன்ற நவீன சவால்களை எதிர்கொள்ளும் வகையில், முஸ்லிம் நாடுகள் சர்வதேச சமூகத்துடன் ஈடுபட வேண்டியதன் அவசியத்தை அவரது பார்வை எடுத்துரைக்கிறது.

4.2.1 அடிப்படை நியமங்கள்

அப்துல் ஹமீத் அபூ சுலைமானின் இஸ்லாமிய சர்வதேச உறவுகளுக்கான கட்டமைப்பு, இஸ்லாமிய நெறிமுறைகளிலிருந்து பெறப்பட்ட முக்கிய கோட்பாடுகளில் வேரூன்றியுள்ளது. இவை பின்வருமாறு: கடவுளின் ஒருமையை அடிப்படையாகக் கொண்டு ஒற்றுமை மற்றும் நோக்கத்தை வழிநடத்துதல் (Tawhid)[30], உலகளாவிய தொடர்புகளில் நியாயத்தை (நீதி) உறுதிப்படுத்துதல் ('Adl)[31], அமைதி, பரஸ்பர ஆதரவு மற்றும் ஒத்துழைப்பு (ta'aawun)[32], இணக்கமான உறவுகளை ஊக்குவித்தல்; உறுதிமொழிகளை மதித்தல் மற்றும் நிறைவேற்றுதல், இராஜதந்திரத்தில் நம்பிக்கையையும் நம்பகத்தன்மையையும் வலியுறுத்துதல்; மற்றும் ஜிஹாத், ஆக்கிரமிப்புக்கு அப்பாற்பட்டு, நீதி மற்றும் சுயபாதுகாப்புக்காக பாடுபடுதல் எனப் புரிந்து கொள்ளப்படுதல். இந்தக் கோட்பாடுகள் ஒன்றிணைந்து, முஸ்லிம் நாடுகள் சர்வதேச சமூகத்துடன் ஈடுபடுவதற்கான தார்மீக மற்றும் நெறிமுறை அடித்தளத்தை வழங்குகின்றன, அத்தோடு அவை பரஸ்பர மரியாதை, அமைதி மற்றும் நெறிமுறை ஆளுமையை மேம்படுத்தி, சமகால உலகளாவிய சவால்களை எதிர்கொள்கின்றன.

4.2.1.1 தவ்ஹீத்

*தவ்ஹீத் என்பது அல்லாஹ்வின் ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்தும் இஸ்லாமிய மூலக் கோட்பாடாகும். "வஹ்ஹத" என்ற அடிச்சொல்லிலிருந்து பெறப்பட்ட இது "ஒர்மைப்படுத்தல்" எனப் பொருள்படுகிறது (*Ibn Manzur, 1993*). அல்லாஹ் ஒருவனே ஆட்சி புரிவதற்கும், வழிபாட்டிற்கும் உரிமையாளன் என்பதை வலியுறுத்துவதால், இஸ்லாமிய சட்டங்கள் அனைத்தும் இந்தக் கோட்பாட்டிலிருந்து உருவாகின்றன* Ibn Taymiyyah, 2001). *இதில், இஸ்லாமிய சமத்துவக் கோட்பாடும் தவ்ஹீதை அடிப்படையாகக் கொண்டு விவரிக்கப்படுகிறது* (Ibn Taymiyyah, 1991). *இது தொடர்பாக அல்-குர்ஆன் கூறுகிறது:*

"மெய்யாகவே நாம் ஒவ்வொரு சமூகத்தாரிடத்திலும், 'அல்லாஹ்வையே நீங்கள் வணங்குங்கள்; ஷைத்தான்களை விட்டும் நீங்கள் விலகிச் செல்லுங்கள்' என்று (போதிக்குமாறு) நம் தூதர்களை அனுப்பி வைத்தோம்;. எனவே அந்த சமூகத்தவர்களில் அல்லாஹ் நேர்வழி காட்டியோரும் இருக்கிறார்கள்;, வழிகேடே விதிக்கப்பெற்றோரும் அவர்களில் இருக்கிறார்கள்;. ஆகவே நீங்கள் பூமியில் சுற்றுப்பயணம் செய்து, பொய்யர்களின் முடிவு என்ன ஆயிற்று என்பதைக் கவனியுங்கள்." (அல்குர்ஆன், 16:36).

இது அல்லாஹ்வின் ஒருமைப்பாட்டை வலியுறுத்துகின்றது. அத்தோடு, முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் கூறியதாக, அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்;

> *"நிச்சயமாக, அல்லாஹ் உங்கள் முகங்களையோ, உங்கள் செல்வத்தையோ பார்ப்பதில்லை. மாறாக, அவன் உங்கள் இதயங்களையும், உங்கள் செயல்களையும் உற்று நோக்குகிறான்."* Sahih Muslim, Book 45: Hadith 2564c).

---

[30] *தவ்ஹீத், இஸ்லாத்தின் மையக் கருத்தாக விளங்குகிறது, இது அல்லாஹ்வின் முழுமையான ஒருமையை வலியுறுத்துகிறது. அல்லாஹ் ஒருவன், தனித்துவமானவன், பங்குதாரர்கள் அல்லது சமமானவர்கள் இல்லாதவன் எனும் இந்த அடிப்படை நம்பிக்கை, இஸ்லாமிய விசுவாசத்திற்கும் நடைமுறைக்கும் அடித்தளமாக அமைகிறது. இந்த நம்பிக்கை, "அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை, முஹம்மது அவருடைய தூதர்" என்று கூறும் ஷஹாதாவில் வெளிப்படுத்தப்படுகிறது.*

[31] *இஸ்லாத்தில், "அத்ல்" என்பது நீதி, நியாயம் மற்றும் சமநிலையைக் குறிக்கும் விரிவான கருத்தாகும், இது தனிநபர் மற்றும் சமூக நலனை உள்ளடக்குகிறது. இது அல்லாஹ்வின் பெயர்களில் ஒன்றான அல்-அத்ல் என்ற பெயராகவும் அமைகிறது, இது அல்லாஹ்வினுடைய பரிபூரண நீதியைப் பிரதிபலிக்கிறது.*

[32] *தஆவுன், "நன்மையிலும் நீதியிலும் ஒருவருக்கொருவர் உதவுதல்" அல்லது "பரஸ்பர ஒத்துழைப்பு" எனப் பொருள்படும் கருத்து, இஸ்லாமிய போதனைகளிலும் அல்குர்ஆனிலும் ஆழமாக வேரூன்றியுள்ளது. இது பொதுவான நன்மைக்காக இலக்குகளை அடைய, வளங்கள், அறிவு மற்றும் பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்ளுதலை உள்ளடக்குகிறது, இதற்கு பங்குதாரர்களிடையே நம்பிக்கை, மரியாதை மற்றும் திறந்த தொடர்பு அவசியமாகிறது. தனிநபர்கள் ஒருவருக்கொருவர் உதவ வேண்டும் என இந்தக் கோட்பாடு ஊக்குவிக்கிறது, இது ஆன்மீக வழிபாட்டுச் செயலாகக் கருதப்படுகிறது, இவ்வுலகிலும் மறுவுலகிலும் இணக்கத்தையும் வெற்றியையும் பங்களிக்கிறது.*

இந்த ஹதீஸ், இஸ்லாம் இனவாதத்தை நிராகரித்து சமத்துவத்தை வலியுறுத்துவதாக இப்னு தைமிய்யா (ரஹ்) குறிப்பிடுகிறார் (Ibn Taymiyyah, 1991). இந்தக் கோட்பாட்டின்படி, இஸ்லாம் மனிதனை இறைவனின் பிரதிநிதியாகக் கருதி, சமூக நலப் பொறுப்புகள் தனிமனிதனை மட்டும் சார்ந்திருக்காமல், ஒவ்வொரு மனிதனுக்கும் வழிகாட்டுதல்களை வழங்குகிறது. ஆகவே, ஆக்கபூர்வமான சர்வதேச உறவுகளை மேம்படுத்துவதற்கு, சமத்துவத்தை வலியுறுத்தும் தவ்ஹீத் ஓர் அடிப்படை நியமமாகக் கருதப்படுகிறது. இது முஸ்லிம்களின் சகிப்புத்தன்மையையும், அமைதிப் பண்பையும் சர்வதேச உறவுகளில் வெளிப்படுத்துகிறது (AbuSulayman, 1993).

4.2.1.2 நீதி

அரபியில் அத்ல் என அழைக்கப்படும் நீதி, சமநிலை மற்றும் முற்றிலும் சரியான தீர்ப்பு என்ற கருத்துகளைக் கொண்டுள்ளது. இது ஒவ்வொரு மனிதனுக்கும் சம உரிமைகளை வழங்கி, சமுதாயத்தில் சமத்துவத்தையும், நல்வாழ்வையும் நிலைநிறுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இஸ்லாமும் இதனை வலியுறுத்துகிறது. இது குறித்து அல்-குர்ஆன் கூறுகிறது:

"முஃமின்களே! நியாயத்தை நிலை நாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள், எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள்; இதுவே (தக்வாவுக்கு) - பயபக்திக்கு மிக நெருக்கமாகும்; அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை(யெல்லாம் நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான்." (அல்குர்ஆன், 5:8).

இவ்வசனம் நீதியை ஒருவரது உரிமைகளைப் பாதுகாக்கும் நெறிமுறையாக விளக்குகிறது (Kamali, 2019). மேலும், இமாம் இப்னுல் கையிம் கூறுகிறார்: *"நீதி என்பது ஒருவருக்கு உரியதை அவருக்கு வழங்கும் செயல்"* (Ibn Qayyim, 2012). இந்த நீதி, தனிமனிதனைத் தாண்டி, முஸ்லிம்களுக்கும் முஸ்லிமல்லாதவர்களுக்கும் இடையே இஸ்லாமிய உலகில் முஹம்மது நபி (ஸல்) அவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டது. உதாரணமாக, நஜ்ரான் பிரதேச நாட்டவருடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை (தலாஇலுன் நுபுவ்வஹ்: 5:389) மற்றும் கலீபா உமர் (ரலி) அவர்களின் ஜெருசல மக்களுடனான ஒப்பந்தம் (தாரீஹுல் உமம் 2:449) ஆகியவை இதற்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். இவை இன, மத, நிற, அல்லது சொத்து வேறுபாடுகளின்றி மனித உரிமைகளை நீதியின் அடிப்படையில் பாதுகாக்கின்றன. இந்தக் கொள்கை தற்காலத்திலும் அவசியமானது என்பதால்;, முஸ்லிம்கள் சர்வதேச சட்டங்களையும், மனித உரிமைகளையும் கருத்தில் கொண்டு, முஸ்லிமல்லாதவர்களுடன் நீதியான முறையில் செயற்பட வேண்டும் (Samih Salah Mohammed, 2024; மஸாஹிர் & ஹில்பான், 2017). அப்துல் ஹமீத் அபூ சுலைமானும் இதனை வலியுறுத்தி, சர்வதேச உறவுகளில் நேர்மையான மற்றும் நியாயமான ஒப்பந்தங்கள் மூலம் உலகளாவிய நலனையும் அமைதியையும் ஊக்குவிப்பது தற்கால அவசியமாகக் கருதுகிறார். இது தவ்ஹீதை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச உறவுகளின் சமூகப் பரிணாமமாகவும், உலகளாவிய நீதியின் அடையாளமாகவும் அமைகிறது (AbuSulayman, 1993).

4.2.1.3 சமாதானம், பரஸ்பர ஆதரவு, மற்றும் கூட்டுறவு

இஸ்லாமியப் பார்வையில், சமாதானம், பரஸ்பர ஆதரவு, மற்றும் கூட்டுறவு ஆகியவை சர்வதேச உறவுகளை மேம்படுத்துவதற்கு முக்கியமான அம்சங்களாகக் கருதப்படுகின்றன. அம்ன், சில்ம், சலாம், மற்றும் சுல்ஹ் போன்ற அரபுச் சொற்களின் கருத்தாக சமாதானம் விளக்கப்படுகிறது (Zargar, 2018; *மஸாஹிர் ரூ ஹில்பான், 2017). இது தொடர்பாக அல்-குர்ஆன் கூறுகிறது:*

"நிச்சயமாக முஃமின்கள் (யாவரும்) சகோதரர்களே. ஆகவே, உங்கள் இரு சகோதரர்களுக்கிடையில் நீங்கள் சமாதானம் உண்டாக்குங்கள்;. இன்னும் உங்கள் மீது கிருபை செய்யப்படும் பொருட்டு, நீங்கள் அல்லாஹ்வை அஞ்சுங்கள்." (அல்குர்ஆன், 49:10).

இந்த வசனம், சமாதானத்தை நிலைநாட்டுவதை நம்பிக்கையாளர்களின் கடமையாக வலியுறுத்துகிறது. முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் இதற்கு முன்னுதாரணமாக, குறைஷியர்களுடன் மேற்கொண்ட ஹ_தைபிய்யா உடன்படிக்கை போன்ற சமாதான முயற்சிகளை முன்னெடுத்து, அரசியல் நடவடிக்கைகளை அமைதியாக நடைமுறைப்படுத்தியுள்ளார்கள் (Samih Salah Mohammed, 2024).

அதேபோல், பரஸ்பர ஆதரவு, சமூக ஒற்றுமையை வலுப்படுத்தும் மூலக் கூறாக இஸ்லாத்தில் கருதப்படுகிறது. இது குறித்து அல்குர்ஆன் கூறுகிறது:

".... நீங்கள் வரம்பு மீறுமாறு உங்களைத் தூண்டி விட வேண்டாம்;. இன்னும் நன்மையிலும்; பயபக்தியிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுங்கள்;. பாவத்திலும், பகைமையிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ள வேண்டாம்;. அல்லாஹ்வுக்கே பயப்படுங்கள் - நிச்சயமாக அல்லாஹ் கடுமையாக தண்டிப்பவன்." (அல்குர்ஆன், 5:2).

இந்த வசனம் மனிதர்களிடையே பரஸ்பர ஆதரவை ஊக்குவிக்கிறது, இது சர்வதேச மட்டத்தில் நாடுகளிடையே மனிதாபிமான ஒத்துழைப்பை உருவாக்குகிறது (AbuSulayman, 1993).

அதேபோல், கூட்டுறவு என்பது மனிதர்களிடையே ஒத்துழைப்பு மூலம் சமூக நலனை அடையும் முறையாகக் காணப்படுகிறது. இது குறித்து அல்-குர்ஆன் கூறுகிறது:

"இன்னும், நீங்கள் எல்லோரும் அல்லாஹ்வின் கயிற்றை வலுவாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்; நீங்கள் பிரிந்தும் விடாதீர்கள்; அல்லாஹ் உங்களுக்குக் கொடுத்த நிஃமத்களை (அருட் கொடைகளை) நினைத்துப் பாருங்கள்; நீங்கள் பகைவர்களாய் இருந்தீர்கள் - உங்கள் இதயங்களை அன்பினால் பிணைத்து; அவனது அருளால் நீங்கள் சகோதரர்களாய் ஆகிவிட்டீர்கள்; இன்னும், நீங்கள் (நரக) நெருப்புக் குழியின் கரை மீதிருந்தீர்கள்; அதனின்றும் அவன் உங்களைக் காப்பாற்றினான் - நீங்கள் நேர் வழி பெறும் பொருட்டு அல்லாஹ் இவ்வாறு தன் ஆயத்களை - வசனங்களை உங்களுக்கு தெளிவாக்குகிறான்." (அல்குர்ஆன், 3:103).

இந்த வசனம், மனிதர்களிடையே கூட்டுறவு அடிப்படையில் அன்பும் ஒற்றுமையும் நிலைத்திருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

சமாதானம், பரஸ்பர ஆதரவு, மற்றும் கூட்டுறவு ஆகியவை இஸ்லாமிய சர்வதேச உறவுகளில் அடிப்படைத் தத்துவங்களாக அமைகின்றன. இவை முஸ்லிம் உலகம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவையை வலியுறுத்துவதுடன், போலியான ஒற்றுமையைக் கடந்து, யதார்த்தமான அரசியல் அமைப்பை உருவாக்க இஸ்லாமிய வழிகாட்டுதல்களாக விளங்குகின்றன. எனவே, இஸ்லாமிய சர்வதேச உறவுக் கொள்கைகளை உருவாக்குவோர், முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிமல்லாதவர்கள் மத்தியில் இவை

குறித்து தெளிவான புரிதலை ஏற்படுத்தி, ஆக்கபூர்வமான சர்வதேச உறவுகளைக் கட்டியெழுப்புவது அவசியமாகும் (AbuSulayman, 1993).

4.2.1.4 வாக்குறுதிகளை கௌரவித்தலும் நிறைவேற்றலும்

இஸ்லாத்தில், வாக்குறுதிகளை மதித்தல் மற்றும் நிறைவேற்றுதல் முக்கியமான நெறிமுறையாகக் கருதப்படுகிறது. இது சமூக உறவுகளையும், சர்வதேச உறவுகளில் நம்பிக்கையையும் நிலைநிறுத்துவதற்கு அவசியமான விடயமாகும் (Mukhtar Ahmad Qureshi, 2024). இது மனிதர்களின் பொறுப்புணர்ச்சியையும், சமூக நீதியின் வெளிப்பாட்டையும் பிரதிபலிக்கிறது. அப்துல் ஹமீத் அபூ சுலைமான் கூறுகிறார்: *"சர்வதேச உறவுகளில் ஒழுங்கும் நம்பிக்கையும் நிலைபெற வேண்டுமெனில், ஒப்பந்தங்களும் வாக்குறுதிகளும் மதிக்கப்பட வேண்டும்"* (AbuSulayman, 1993).

இது தொடர்பாக அல்குர்ஆன் கூறுகிறது:

"அநாதைகள் பிராயமடையும் வரை, (அவர்களின் பொறுப்பேற்றிருக்கும்) நீங்கள், நியாயமான முறையிலன்றி அவர்களுடைய பொருளை நெருங்காதீர்கள், இன்னும் (நீங்கள் அல்லாஹ்விடமோ, மனிதர்களிடமோ கொடுத்த) வாக்குறுதியை நிறை வேற்றுங்கள்; நிச்சயமாக (அவ்) வாக்குறுதி (பற்றித் தீர்ப்பு நாளில் உங்களிடம்) விசாரிக்கப்படும்." (அல்குர்ஆன், 17:34).

இந்த வசனம், *"எந்தவொரு உடன்படிக்கையும் மீறப்படக் கூடாது"* என்ற இப்னு கதீர் (ரஹ்) அவர்களின் விளக்கத்துடன் பொருந்துகிறது. மேலும்:

"இன்னும் எவர்கள் தம் அமானிதங்களையும் தம் வாக்குறுதிகளையும் பேணிக் கொள்கின்றார்களோ அவர்கள்." (அல்குர்ஆன், 70:32).

இந்த வசனம் வாக்குறுதி காப்பாற்றுதலின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. இந்தக் கொள்கை, முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிமல்லாதவர்களிடையேயான சர்வதேச ஒப்பந்தங்களில் பொறுப்புணர்வுடனும், நீதியுணர்வுடனும் செயற்படுவதற்கு வழிகாட்டுகிறது. முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் கூறியதாவது: அபூ ஹு_ரைரா (ரழி) அறிவித்தார்:

> *"நயவஞ்சகரின் அடையாளங்கள் மூன்று: பேசும்போதெல்லாம் பொய் பேசுகிறார், வாக்குறுதி அளித்தால் அதை மீறுகிறார், நம்பிக்கை ஒப்படைக்கப்பட்டால், காட்டிக் கொடுக்கிறார்."* (Sahih al-Bukhari, Book 78: Hadith 6095).

இதனால், இஸ்லாமிய அரசியல் ஒழுங்கமைப்பில் வாக்குறுதிகளை மீறுவதற்கு இடமில்லை. எனவே, இஸ்லாம் சர்வதேச உறவுகளில் நேர்மையையும், பொறுப்புமிக்க வாக்குறுதிகளையும் ஆதரிக்கிறது. இதனை அப்துல் ஹமீத் அபூ சுலைமான், சர்வதேச உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கு அடிப்படை நியமமாக முன்வைக்கிறார் (AbuSulayman, 1993).

4.2.1.5 அறப்போர்

இஸ்லாமிய வழிகாட்டுதலின்படி, ஜிஹாத் என்பது இறைவழியில் முழுமையான முயற்சியுடன் போராடுவதாக வரையறுக்கப்படுகிறது (சுயாஅயnஇ 1980; மஸாஹிர் ரூ ஹில்பான், 2017). இது ஆயுதப் போராட்டத்தை மட்டும் குறிக்காமல், நேர்மை, நியாயம், மற்றும் மார்க்கப் பற்றை நிலைநாட்டுவதற்கான முயற்சிகளையும் உள்ளடக்கியது. இது தொடர்பாக அல்குர்ஆன் கூறுகிறது:

"நீங்கள் சொற்பமான போர்த் தளவாடங்களைக் கொண்டிருந்தாலும் சரி, நிறையப் போர்த் தளவாடங்களைக் கொண்டிருந்தாலும் சரி, நீங்கள் புறப்பட்டு, உங்கள் பொருட்களையும், உயிர்களையும் கொண்டு அல்லாஹ்வின் பாதையில் அறப்போர் புரியுங்கள் நீங்கள் அறிந்தவர்களாக இருந்தால், இதுவே உங்களுக்கு மிகவும் நல்லது." (அல்குர்ஆன், 9.41).

இந்த வசனம், ஜிஹாத் என்ற சொல் இயலுமை, கடின உழைப்பு, விடாமுயற்சி, மற்றும் அர்ப்பணித்தல் ஆகிய கருத்துகளைப் பிரதிபலிக்கிறது *(அத்தவ்ரி, 2017).* இமாம் இப்னு தைமிய்யா *(ரஹ்),* ஜிஹாதை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தாக்குதல்களுக்கு எதிரான பாதுகாப்புக் கடமையாக விளக்குகிறார் (Ibn Taymiyyah, 1991). இமாம் அல்-கஸ்ஸாலி *(ரஹ்)* ஜிஹாதை உளத்தூய்மை மற்றும் ஆன்மீக உயர்வுக்கான அம்சமாகக் கருதுகிறார் (Al Ghazali, 2005). யூசுப் அல்-கர்ளாவி *(2009)* ஜிஹாதை மனதாலும், மொழியாலும், அறிவாலும் மேற்கொள்ளப்படும் முயற்சியாக வரையறுக்கிறார் (Al Qaradawi, 2009).

இவை அனைத்தும், ஜிஹாத் ஆயுதப் போராட்டத்தை மட்டும் குறிக்கவில்லை என்பதைத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன. இது நீதியும், நேர்மையும் கொண்ட உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கு ஒரு வழிமுறையாகவும், இஸ்லாமிய அரசியல் கொள்கையின் ஒழுங்குமுறையாகவும் அமைகிறது. எனவே, ஜிஹாத் தொடர்பான இந்தப் புரிதலை தற்காலத்தில் முஸ்லிம்கள் மற்றும் முஸ்லிமல்லாதவர்கள் மத்தியில் ஏற்படுத்துவது, சிறந்த சர்வதேச உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கு அடிப்படை நியமமாக அப்துல் ஹமீத் அபூ சுலைமான் முன்வைக்கிறார் (AbuSulayman, 1993).

4.2.2 அடிப்படைப் பெறுமானங்கள்

அப்துல் ஹமீத் அபூ சுலைமான், சர்வதேச உறவுகளுக்கான அடிப்படை நியமங்களைப் போலவே, இஸ்லாமிய மூலாதாரங்களிலிருந்து பெறப்பட்ட சில அடிப்படைப் பெறுமானங்களையும் முன்வைத்துள்ளார். இஸ்லாமிய வரலாற்று அனுபவங்களையும் மூலநூல்களையும் ஆழமாக ஆராயும்போது, முஸ்லிம்களின் செயல்பாடுகளிலும் மனோபாவங்களிலும் இந்தப் பெறுமானங்கள் ஆழமான செல்வாக்கு செலுத்துவதை அவதானிக்கலாம். ஆயினும், மத்திய காலச் சிந்தனையாளர்களின் கடினமான மனோபாவம் மற்றும் வரலாற்று அனுபவங்களின் தவறான புரிதல்கள் காரணமாக, இப்பெறுமானங்கள் எதிர்பார்த்த அளவு செயற்படவில்லை (AbuSulayman, 1993).

இந்நிலையை மாற்றி, முஹம்மத் நபி *(ஸல்),* அபூபக்ர் *(ரழி),* உமர் *(ரழி)* ஆகியோரின் திறமை, தியாகம், மற்றும் முன்மாதிரியை அடிப்படையாகக் கொண்டு இப்பெறுமானங்கள் மீளுருவாக்கம் செய்யப்பட வேண்டும். இது, சர்வதேச உறவுகளுக்கான கொள்கை வகுப்போருக்கு தெளிவான வரையறைகளைப் பேண உதவும் என அபூ சுலைமான் சுட்டிக்காட்டுகிறார் (AbuSulayman, 1993).

4.2.2.1 ஆக்கிரமிப்பு (உத்வான்) இல்லாமை

இஸ்லாம் ஆக்கிரமிப்புக்கு எதிரான கொள்கையையும் வலியுறுத்துகிறது. அல்குர்ஆனில் கூறப்பட்டுள்ளது:

"இஸ்லாமிய மார்க்கத்தில் எவ்வகையான நிர்ப்பந்தமுமில்லை; வழிகேட்டிலிருந்து நேர்வழி முற்றிலும் பிரிந்து தெளிவாகிவிட்டது; ஆகையால், எவர் வழி கெடுப்பவற்றை நிராகரித்து அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்கிறாரோ அவர் அறுந்து விடாத கெட்டியான கயிற்றை நிச்சயமாகப் பற்றிக் கொண்டார் - அல்லாஹ் யாவற்றையும் செவியுறுவோனாகவும் நன்கறிவோனாகவும் இருக்கின்றான்." (அல்குர்ஆன், 2: 256).

இவ்வசனம், இஸ்லாம் கட்டாய மதமாற்றத்தையும் ஆக்கிரமிப்பையும் எதிர்க்கும் மார்க்கமாக இருப்பதைத் தெளிவுபடுத்துகிறது. முஹம்மத் நபி (ஸல்) அவர்கள், ஹு_தைபியா ஒப்பந்தம் மற்றும் மக்கா வெற்றி போன்ற வரலாற்று நிகழ்வுகளில் ஆக்கிரமிப்பற்ற அணுகுமுறையைப் பின்பற்றி, சகிப்புத்தன்மை, மன்னிப்பு, மற்றும் பழிவாங்கல் இல்லாத பண்புகளை வெளிப்படுத்தியுள்ளார் (Samih Salah Mohammed, 2024). இத்தகைய வழிகாட்டல்கள், முஸ்லிம்கள் மற்றவர்களுடனான உறவுகளில் ஆக்கிரமிப்பு இல்லாமையை நடைமுறைப்படுத்துவதற்கு முன்மாதிரியாக அமைகின்றன. எனவே, இஸ்லாமிய சர்வதேச உறவுகளில் "ஆக்கிரமிப்பு இல்லாமை" முக்கியமான அடிப்படைப் பெறுமானமாக வலியுறுத்தப்படுகிறது (AbuSulayman, 1993).

4.2.2.2 அராஜகம் (துக்யான்) இல்லாமை

அராஜகம் என்பது முறையான அதிகாரமின்மையால் ஏற்படும் அரசியல் குழப்பநிலையைக் குறிக்கிறது (Havercroft & Prichard, 2017). இஸ்லாம் இதனை கண்டிக்கின்றது. அல்குர்ஆனில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

"நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள்; இன்னும் அல்லாஹ்வின் தூதருக்கும், உங்களில் நேர்மையாக அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள்; உங்களில் ஏதாவது ஒரு விஷயத்தில் பிணக்கு ஏற்படுமானால் - மெய்யாகவே நீங்கள் அல்லாஹ்வையும், இறுதி நாளையும் நம்புபவர்களாக இருப்பின் அதை அல்லாஹ்விடமும், அவன் தூதரிடமும் ஒப்படைத்துவிடுங்கள் - இதுதான் உங்களுக்கு மிகவும் சிறப்பான, அழகான முடிவாக இருக்கும்." (அல்குர்ஆன், 4:59).

இவ்வசனம், இஸ்லாத்திற்கு முரண்படாத சட்டபூர்வமான அதிகாரத்திற்கும் சமூக ஒழுங்கிற்கும் கட்டுப்படுவதை வலியுறுத்துகிறது. இப்னு கதீர் (ரஹ்) அவர்கள் இதற்கு விளக்கமளிக்கையில், இஸ்லாமிய ஆட்சியாளர்கள் மற்றும் அறிஞர்கள் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் முரண்படாமல் செயற்பட வேண்டும் என்றும், முரண்பட்டால் அவர்களுக்கு கட்டுப்படத் தேவையில்லை என்றும் குறிப்பிடுகிறார் (Ibn Kathir, 2003). அபூ சுலைமான், அராஜகம் இஸ்லாமிய உலகின் வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்ததாகவும், அராஜகம் இல்லாத நீதியை நிலைநாட்டுவதற்கு அல்குர்ஆன் மற்றும் ஹதீஸின் அடிப்படை அம்சங்கள் சர்வதேச உறவுகளில் மையமாக இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகிறார் (AbuSulayman, 1993).

4.2.2.3 விஷமம் (பஸாத்) இல்லாமை

விஷமம் என்பது பகைமை, சண்டை, மற்றும் குழப்பங்களைத் தவிர்ப்பதை அடிப்படையாகக் கொண்டது. இஸ்லாத்தில், விஷமத்தைத் தவிர்ப்பது சமூக அமைதிக்கு அடித்தளமாக அமைகிறது. இது குறித்து அல் குர்ஆனில் கூறப்பட்டுள்ளது:

"இன்னும், நீங்கள், வரம்பு மீறியோரின் கட்டளைக்கு வழிப்படாதீர்கள். 'அவர்கள் பூமியில் குழப்பம் உண்டாக்குவார்கள்; நன்மை செய்ய மாட்டார்கள்' என்றும் கூறினார்." (அல்குர்ஆன், 26:151-152).

இவ்வசனம், விஷமத்திற்கு வழிவகுக்கும் செயல்களைத் தவிர்த்து அமைதியைப் பேணுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. அப்துல் ஹமீத் அபூ சுலைமான், சர்வதேச உறவுகளில் அமைதியுடன் சமாதானமாக வாழ்வதற்கு விஷமம் இல்லாமையின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறார் (AbuSulayman, 1993).

4.2.2.4 வரம்பு மீறல் (இஸ்ராப்) இல்லாமை

இஸ்லாமியக் கொள்கை, வரம்பு மீறலைத் தவிர்க்க வேண்டிய முக்கிய அம்சமாகக் கருதுகிறது. அல் குர்ஆனில் கூறப்பட்டுள்ளது:

"உங்களை எதிர்த்துப் போர் புரிபவர்களுடன் நீங்களும், அல்லாஹ்வின் பாதையில் போரிடுங்கள்; ஆனால் வரம்பு மீறாதீர்கள்; நிச்சயமாக அல்லாஹ் வரம்பு மீறுபவர்களை நேசிப்பதில்லை." (அல்குர்ஆன், 2:190).

இவ்வசனம், இஸ்லாம் மனிதர்களுக்கு விதித்த வரையறைகளை மீறாமல், நெறிப்படுத்தப்பட்ட முறையில் செயற்பட வேண்டியதை வலியுறுத்துகிறது. இமாம் இப்னு கதீர் (ரஹ்) தனது தப்ஸீரில், வரம்பு மீறாமை சர்வதேச மட்டத்தில் நீதி, மதிப்பு, மற்றும் சமநிலை கொண்ட உறவுகளை உருவாக்க உதவும் என்று குறிப்பிடுகிறார் (Ibn Kathir, 2003). அபூ சுலைமான், இஸ்லாமிய சர்வதேச உறவுகளில் வரம்பு மீறாமையை முக்கியமான பெறுமானமாக வலியுறுத்துகிறார் (AbuSulayman, 1993).

எனவேஇ அப்துல் ஹமீத் அபூ சுலைமான் முன்வைத்த இஸ்லாமிய சர்வதேச உறவுகளுக்கான அடிப்படைப் பெறுமானங்கள் - ஆக்கிரமிப்பு இல்லாமை, அராஜகம் இல்லாமை, விஷமம் இல்லாமை, மற்றும் வரம்பு மீறாமை போன்ற அனைத்தும் நீதி, அமைதி, மற்றும் சமநிலையை அடிப்படையாகக் கொண்டவை. இவை, இஸ்லாமிய நெறிமுறைகளைப் பின்பற்றி, தற்கால முஸ்லிம் சமூகம் சர்வதேச உறவுகளில் ஆக்கபூர்வமான தீர்மானங்களையும் நிலைப்பாடுகளையும் உருவாக்க உதவும்.

5. முடிவுரை

உலக அரசியலில் சர்வதேச உறவுகள் முக்கியமான அம்சமாகத் திகழ்கின்றன. இதனடிப்படையில், இஸ்லாமிய சர்வதேச உறவுகள் பற்றிப் பேசும்போது, இது சிக்கல்கள் நிறைந்ததாகவே இன்றும் கருதப்படுகிறது. இதற்கு முஸ்லிம் சிந்தனையின் வீழ்ச்சி, அந்நிய சக்திகளின் செல்வாக்கு, முஸ்லிம்களின் பலவீனம், மற்றும் இஸ்லாம் குறித்த தெளிவின்மை போன்றவை முக்கிய காரணங்களாக அமைகின்றன. எனவே, இஸ்லாம் தொடர்பான தெளிவை ஏற்படுத்தி, இஸ்லாமிய சர்வதேச உறவுகள் அல் குர்ஆன் மற்றும் சுன்னாவை அடிப்படையாகக் கொண்டவை என்பதை உணர்த்துவது காலத்தின் தேவையாக உள்ளது.

இவ்விடயத்தைக் கருத்தில் கொண்டு, 20ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அறிஞர் அப்துல் ஹமீத் அபூ சுலைமான், சர்வதேச உறவுகளுக்கான ஆக்கபூர்வமான இஸ்லாமிய அமைப்புத் திட்டமொன்றை முன்வைத்தார். அவரது இந்த அமைப்புத் திட்டத்தின்படி, மரபு ரீதியான அணுகுமுறைகள் தற்கால சர்வதேச விவகாரங்களுக்கு முஸ்லிம் கொள்கைகளுடன் பொருந்தாதவையாக உள்ளன. அதேவேளை, நவீனத்துவவாதிகளின் மதச்சார்பற்ற அமைப்புத் திட்டங்கள் இஸ்லாமிய சிந்தனைக்கு புத்துயிர் அளிப்பதாக இல்லாமல், இஸ்லாமிய கோட்பாடுகளுக்கு முரணாகவும் அமைந்துள்ளன.

இத்தகைய சவால்களைக் கவனத்தில் கொண்டு, அப்துல் ஹமீத் அபூ சுலைமான் காலம், இடம், மற்றும் பரிணாம அம்சங்களுக்கு ஏற்ப அடிப்படை நியமங்கள் மற்றும் பெறுமானங்களை உள்ளடக்கிய நவீன இஸ்லாமிய அமைப்புத் திட்டமொன்றை முன்மொழிகிறார். இத்திட்டம், இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடுகள், பெறுமானங்கள், மற்றும் இலக்குகளை வலியுறுத்துவதன் மூலம், முஸ்லிம் உலகின் உள்

மற்றும் வெளி உறவுகளில் இஸ்லாமிய அடிப்படையிலான கோட்பாட்டு அணுகுமுறையை மேற்கொள்ள உதவுகிறது. இதன் மூலம், முஸ்லிம்கள் தற்கால யதார்த்த நிலைமைகளைச் சிறப்பாக எதிர்கொண்டு, சர்வதேச உறவுகளில் ஆக்கபூர்வமான தீர்மானங்களையும் நிலைப்பாடுகளையும் உருவாக்க முடியும்.

References

மஸாஹிர், எஸ்.எம்.எம். ரூ ஹில்பான், எம்.எல்.எம். *(2017).* ***"இஸ்லாத்தில் சர்வதேச உறவுகள்"*** [International relations in Islam]. ***ஏறாவூர்: ஏறாவூர் வாசிப்பு வட்டம்.***

AbuSulayman, A.H. (1993) *Towards an Islamic theory of international relations: New directions for methodology and thought*. Herndon, VA: International Institute of Islamic Thought.

Adiong, N.M., Mauriello, R. and Abdelkader, D. (eds.) (2019) *Islam in international relations: Politics and paradigms*. Abingdon: Routledge.

al-Ghazali, I. (1993) *Ihya ulum-id-din: Revival of religious learnings*. Translated by F.U. Karim. Vol. 1. Darul-Ishaa.

Al-Qaradawi, Y. (2009) *Fiqh al-Jihad*. Baqara: Maktaba Wahia.

Al-Qurṭubi, A. (2006) *Al-Jāmiʿ li Aḥkām al-Qurʾān*. Vol. 10. Beirut: Dār al-Kutub al-ʿIlmiyyah.

Al-Qurtubi, I.A.M. (2014) *Al-Jami' li-Ahkam al-Qur'an*. Edited by S.M. Al-Badri. 4th edn. 21 vols. Beirut: Dar Al-Kotob Al-Ilmiyah.

Bachtiar, H. (2019) 'The contextualization of Siyar in the era of nation-states and globalization', *Journal AFKARUNA*, 15(2), pp. 140–164.

Berger, M. (2008) 'Islamic views on international law', in Meerts, P. (ed.) *Culture and international law*. The Hague: Clingendael, pp. 105–109. Available at: http://www.clingendael.nl/publications/2008/ (Accessed: 22 February 2025).

Berghout, A. (2022) 'Abdul Hamid AbuSulayman: Civilizational education for transformation', *Journal of Education in Muslim Societies*, 3(2), pp. 4–13.

Dorar.net (no date) 'Summary of ethics – cooperation'. Available at: https://dorar.net/en/akhlaq/12 (Accessed: 28 February 2025).

Glinchey, S. (2023) *E-International relations*. LibreTexts (Open Educational Resource). Available at: https://socialsci.libretexts.org/Bookshelves/Sociology/International_Sociology/Book%3A_International_Relations_ (Accessed: 06 March 2025).

Hallaq, W.B. (1984) 'Was the gate of ijtihad closed?', *International Journal of Middle East Studies*, 16(1), pp. 3–41.

Havercroft, J. and Prichard, A. (2017) 'Anarchy and international relations theory: A reconsideration', *Journal of International Political Theory*, 13(3).

Ibn Kathir, I. (2003) *Tafsir Ibn Kathir*. Vol. 5: Surah Hud to Surat Al-Isra, verse 38. Translated by S.S. Rehman. Riyadh: Darussalam.

Ibn Taymiyyah, T.A. (1991) *Majmu' al-Fatawa*. Edited by A.R.M. ibn Qasim. Riyadh: Dar al-Imam Muhammad ibn Saud Islamic University.

Islamic Uprising (2011) *'தவ்ஹீத்'*, *Islamic Uprising Blog*, 4 June. Available at: https://islamicuprising.blogspot.com/2011/06/blog-post_04.html?m=1 (Accessed: 26 March 2025).

Kamali, M.H. (2019) *Principles of Islamic jurisprudence*. Cambridge: Islamic Texts Society.

Kelsay, J. (2007) *Arguing the just war in Islam*. Cambridge, MA: Harvard University Press.

Law Library of Congress (2012) *International relations under Islamic law (Shari'a): Dar al-Harb (House of War) vs. Dar al-Islam (House of Islam)*. Washington, DC: Law Library of Congress, Global Legal Research Center.

Metcalf, B.D. (1996) *Islamic revival in British India: Deoband, 1860–1900*. Princeton, NJ: Princeton University Press.

Mohammed, S.S. (2024) 'Islamic view towards international relations', *Indonesian Journal of Islamization Studies*, 1(2), pp. 172–196.

Norman, N.A. (2021) 'Professor Emeritus Dato' Abdul Hamid A. Abu Sulayman (1936–2021)', *ICR Journal*, 12(2).

Nuruzzaman, M. (2018) 'Western and Islamic international theories: A comparative analysis', *International Studies*, 55(2), pp. 106–129.

Nye, J.S. (2011) *The future of power*. New York: PublicAffairs.

Perry, E. (1992) 'Islamic theory of international: New directions for Islamic methodology and thought by AbdulHamid AbuSulayman (Islamization of Knowledge, series 3, no. 1)', *American Journal of Islamic Social Sciences*, 9, pp. 178–179.

Qureshi, M.A. (2024) 'Opinion: Upholding promises: An Islamic obligation', *The Global Kashmir*, 27 December. Available at: https://globalkashmir.net/opinion-upholding-promises-an-islamic-obligation/ (Accessed: 18 March 2025).

Sibly, H. (2017) 'War, Islam, and the sanctity of life: Non-aggression in the Islamic code of combat', *Yaqeen Institute*. Available at: https://yaqeeninstitute.org/read/paper/war-islam-and-the-sanctity-of-life-non-aggression-in-the-islamic-code-of-combat (Accessed: 12 March 2025).

Simbar, R. (2008) 'The changing role of Islam in international relations', *Journal of International and Area Studies*, 15(2), pp. 55–68.

Solichah, N., Zakiyah, E. and Shofiah, N. (2020) 'Aggressive behavior psychological and Islamic perspective', *Proceedings of BIS-HSS 2020*, 18 November. Indonesia: EAI.

Ubaidillah, A. (2024) 'Actualization of international and Islamic world relations in the face of global peace', *Islamic Perspective on Communication and Psychology*, 1(1), pp. 44–56.

Young, A. (2014) 'Western theory, global world: Western bias in international theory', *Harvard International Review*, 36, pp. 29–31.

Zargar, N.A. (2018) 'Concept of peace in Islam', *International Journal of Creative Research Thoughts (IJCRT)*, 6(4), p. 137. Available at: https://www.ijcrt.org (Accessed: 01 April 2025)

சுவாமி விபுலாநந்தரின் இரசனைமுறை இலக்கியத் திறனாய்வு

Literary Critical Analysis of Swami Vipulanandar's Taste Methods

சி. சந்திரசேகரம்,

தமிழ் கற்கைகள் துறை,

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

santhirasegarams@esn.ac.lk

Abstract

Swami can be considered as one who developed the initial stage of modern Tamil criticism in the early twentieth century, namely, the appreciative criticism, to another level. He used this critical approach as a tool to reveal the greatness of Tamil literature. Vipulanandar, who showed great interest in the aesthetic aspects of poetry, largely followed the appreciative approach, which uses the help of the letters, words, music, and poetic structure used in poetry to perceive the poet's emotion and the taste of the poem. He believed that while enjoying a creation, one must understand and appreciate the creator's mind. His critique of even devotional literature from a critical perspective shows a primary characteristic of his criticism. Vipulanandar, who showed interest in the literary taste of ancient Tamil poems, also wrote about the literary taste of Bharathi's poems. Through this, he identified Bharathi's poetic skill and the power of his ideas and spread Bharathi's fame to the Tamil country. In that way, the objective of this study is to identify Swami Vipulanandar's contribution to Tamil appreciative criticism. This contribution is demonstrated based on the principle of appreciative criticism.
Keywords: Appreciative Method, Criticism, Aesthetics, Taste Appreciation, Conceptual Power.

ஆய்வுச் சுருக்கம்

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலப்பகுதியில் நவீன தமிழ் திறனாய்வின் தொடக்கநிலையாக இருந்த இரசனைமுறைத் திறனாய்வை இன்னொரு கட்டத்துக்கு வளர்த்தவராக சுவாமி விபுலாநந்தரைக் கொள்ளலாம். அவர் தமிழ் இலக்கியத்தின் பெருமையை வெளிக்கொணர இந்தத் திறனாய்வு அணுகுமுறையை ஒரு கருவியாகக் கொண்டார். கவிதையின் அழகியல் அம்சங்களிலே அதிக சிரத்தை காட்டிய விபுலாநந்தர் முக்கியமாக கவிதையில் பயின்று வரும் எழுத்துக்களின், சொற்களின், இசையின், கவிதை அமைப்பின் துணைகொண்டு புலவனின் உணர்வையும் பாடலின் சுவையையும் காண்கின்ற இரசனை முறை அணுகுமுறையையே பெரிதும் பின்பற்றினார். படைப்பை இரசிக்கும்போது படைப்பாளியின் உள்ளத்தை உணர்ந்து இரசிக்க வேண்டும் எனக் கருதினார். பக்தி இலக்கியத்தைக்;கூட திறனாய்வு நோக்கிலே பார்த்தமை அவரது திறனாய்வின் முதன்மையானதொரு பண்பைக் காட்டுகின்றது. பண்டைத் தமிழ்ச் செய்யுட்களின் இலக்கியச் சுவை நயப்பிலே ஈடுபாடு காட்டிய விபுலாநந்தர், பாரதி கவிதைகளின் இலக்கியச் சுவை குறித்தும் எழுதினார். இதன்மூலம் பாரதியின் கவித்திறனையும் கருத்து

வல்லமையினையும் இனங்கண்டு தமிழ் நாட்டுக்குப் பாரதியின் புகழைப் பரப்பினார். அந்தவகையில் தமிழ் இரசனைமுறைத் திறனாய்வில் சுவாமி விபுலாநந்தரின் பங்களிப்பை அடையாளப்படுத்துவது இந்த ஆய்வின் நோக்கமாக அமைகின்றது. இரசனைமுறைத் திறனாய்வுக் கொள்கையின் அடிப்படையில் இந்தப் பங்களிப்பு எடுத்துக்காட்டப்படுகின்றது.

திறவுச் சொற்கள்: இரசனைமுறை, திறனாய்வு, அழகியல், சுவை நயப்பு, கருத்து வல்லமை.

அறிமுகம்

சுவாமி விபுலாநந்தர் காலனித்துவ ஆட்சியின் பிற்பகுதியில் வாழ்ந்தவர். அக்காலம் தேசிய உணர்வு உச்சம் பெற்றிருந்த காலம். சமய, சமூக சீர்திருத்தங்களும் வளர்ச்சிகளும் எழுச்சி பெற்றுக்கொண்டிருந்த காலம். இப்பின்னணியில் தமிழுக்கும் சமயத்துக்கும் அரும்பணியாற்றியவர்களில் சுவாமி விபுலாநந்தர் மிக முக்கியமானவர். அவரின் தமிழ்ப் பணிகளிலே இலக்கியம்சார் பணிகளும் பிரதானமானவை. குறிப்பாக அவரது கலை, இலக்கிய ஆய்வுகள், திறனாய்வுகள் தமிழ் இலக்கியத்தின் பெருமையை வெளிப்படுத்துவது, வளர்ப்பது என்பவற்றை மையப்படுத்தியே அமைந்திருந்தன. இந்த நோக்கிற்கு வாய்பாகவே அவர் தனது திறனாய்வு அணுகுமுறையை இரசனை முறை சார்ந்ததாக வரித்துக்கொண்டிருக்கவேண்டும். இதற்கும் மேலாக இசைத் துறையில் கொண்டிருந்த பெரு விருப்பமும் இக்காலத்தில் தமிழகத்திலும் இலங்கையிலும் செல்வாக்குச் செலுத்தியிருந்த இரசனைமுறை அதாவது அழகியல் கொள்கையின் தாக்கமும் அவரிடத்தில் தாக்கத்தைச் செலுத்தியிருக்க வேண்டும்.

இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் தமிழில் நிலவிய இலக்கியத் திறனாய்வுகளில் முதன்மையானதொரு போக்காக இரசனைமுறை விளங்கியது. குறிப்பாக இத்தகைய நவீன திறனாய்வைத் தோற்றுவித்ததில் வ.வே.சு.ஐயருக்கு முக்கிய இடமுண்டு. அவர் *1920* களில் கம்பராமாயணம் பற்றி எழுதிய திறனாய்வுக் கட்டுரைகள் அவரது முன்னோடி முயற்சிகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்கள். அவர் இலக்கியம் ரசம் மிக்கதாக அமைய வேண்டும் என்பதை வலியுறுத்தினார். அவர் 'ஒரு திட்டவட்;டமான முறையில் சுவை, பேருணர்ச்சி ஆகிய இரண்டு தன்மைகளை அளவுகோலாகக் கொண்டு ரசிகப் பார்வையில் பார்த்தார்' என்று தி.சு. செல்லப்பா (மேற்கோள்: பஞ்சாங்கம்;,க., *2007: 93)* கூறுவார். அதேவேளை கம்பராமாயணத்தை வான்மீகி, ஹோமர், வெர்ஜில், தாந்தே, வியாசர்,மில்டன், முதலியோரின் காவியங்களோடு ஒப்பிட்டு ஒப்பியல் நோக்கையும் இந்த அணுகுமுறைக்குள் இணைத்தார். பின்னால் இரசனைமுறைத் திறனாய்வை வளர்த்தெடுத்ததிலும் பரவலாக்கியதிலும் டி.கே.சிதம்பரநாத முதலியாருக்குப் பெரும் பங்குண்டு. கவிதையில் உணர்ச்சியும் உருவமுமே உயிரானவை என அவர் கருதினார். இலக்கியத்தில் பொருள் முக்கியமல்ல எனவும் நயமான சொற்கள் இசைப் பண்புடனும் தாளத்துடனும் அமைந்து வருவதே பிரதானம் எனவும் அவர் கருதியதாக கைலாசபதி கூறுவார். அதேவேளை இக்காலத்தில் இலங்கையிலும் பண்டிதமணி கணபதிப்பிள்ளை முதலானோர் பாடல்களின் சொற்கள், அமைப்புமுறை, ஓசைநயம் ஆகியவற்றை இலக்கிய இரசனையின் அடிப்படைகளாகக் கொண்டு இலக்கிய நயம் காணுவதில் ஈடுபட்டனர். இவ்வாறு இரசனைமுறைத் திறனாய்வு செல்வாக்குற்றிருந்த தமிழ்ச் சூழலில் சுவாமி விபுலாநந்தரின் கவிதை மதிப்பீடுகளும் ரசனைமுறையின் தாக்கத்துக்கு உட்பட்டவையாகவே அமைந்தன.

அழகியல் கொள்கையின் தாக்கம்

இலக்கியப் படைப்பாளி, சுவைஞன் ஆகியோருக்கான பண்புகள், தகுதிகள் பற்றி விபுலாநந்தர் கூறும் விடயங்கள் அவரது திறனாய்வு அணுகுமுறையைத் தெளிவுபடுத்துகின்றன. இலக்கியம் தரும் அழகியல் அனுபவத்தை அவர் பிரதானப்படுத்தினார். கவிஞன் படைப்பாற்றலைத் தெய்வ அனுக்கிரகத்தாலேயே பெறுகிறான் என்ற அவரது மதிப்பீடு இத்தகைய ஈடுபாட்டின் வெளிப்பாடாகும். பாரதி பற்றி அவர் எழுதிய பாரதியார் கவிநயம், 'பாரதி பாடல்' ஆகிய கட்டுரைகளிலே இதனைத் தெளிவாகக் கூறுகின்றார். இறை வரம் பெற்ற உண்மைக் கவிஞனாலேயே நலம் மிக்க அழகுக் கவிகளை படைக்க முடியும் என்பது விபுலாநந்தரின் கருத்து. 'பாரதி பாடல்' என்ற கட்டுரையில் இவ்வாறு கூறுகின்றார்:

"உறுதிபயக்கும் உண்மைப் பொருளினைத் தெளிவுற ஆராய்ந்தறிதல், ஆராய்ந்ததனைப் பிறருக்குத் தெளிவு பொருந்த அறிவுறுத்தல், நினைப்போரது உள்ளத்திலே உவகையோடு கூடிய மனோ பாவங்களை உண்டாக்குதல், நெஞ்சினை உருக்கிக் கண்ணீர்த்துளி பொருந்துமாறு செய்தல், இவையெல்லாம் கலைவாணியின் அருட்டிறத்தினால் எய்துவதற்குரியன"(இரகுபரன், க.,2020:473-449)

என்று சீரிய பொருள் வெளிப்பாட்டோடும் நெஞ்சை உருக்கும் அழகியலோடும் கூடிய கவி புனையும் ஆற்றல் கலைவாணியின் அருளால் பெற்ற வரங்கள் என்று கூறும் அவர், அத்தகைய தன்மைகளெல்லாம் பாரதியின் பாடல்களிலும் காணப்படுவதனால் அவன் கலைவாணியின் அனுக்கிரகம் பெற்ற உத்தம புலவன் என்பதில் ஐயமில்லை என்று முடிவு செய்கின்றார்.

விபுலாநந்தரின் இத்தகைய புலவன் பற்றிய மதிப்பீடு இந்திய அழகியல் கொள்கையின் பாற்பட்டதாகும். அழகைக் கண்டனுபவிப்பதும் அதனை உணர்ந்து பிறருக்கு உணர்த்தி உளக்கிளர்ச்சியை ஏற்படுத்துவதுமே இலக்கியத்தின் பண்பு என்ற அழகியல் கொள்கையை உள்வாங்கியவராகவே விபுலாநந்தர் மேற்படி கூற்றை முன்வைக்கின்றார். 'பயிற்சியால் படைக்கும் தொழில் திறனாளன் அல்லன் கவிஞன். தெய்வீக சக்தியால் அதாவது, தெய்வ அனுக்கிரகத்தால் இலக்கியம் தோற்றுவிக்கப்படுகின்றது. இலக்கியம் படைப்போர் கருவிலே திருவுடையோர். அதாவது, பிறவி மேதைகள்' (கைலாசபதி,க., 1981;::61,68) என்ற கொள்கையைத் தழுவி இலக்கியங்களை மதிப்பீடு செய்திருக்கின்றார். அவ்வாறே, இலக்கிய வாசகன் இலக்கியச் சுவையில் ஈடுபடுவதற்கான நியமங்கள் பற்றி அவர் கூறுகின்ற விடயங்களும் அவர் அழகியல் கொள்கையை வரித்துக்கொண்டார் என்பதைக் காட்டுகின்றன. அவை பின்வருமாறு:

1. சந்தச் செய்யுட்களைச் செம்மையாக வாசிப்பதற்கு ஒரு சிறிது சந்த விருத்தத்தின் இலக்கணத்தை அறிந்திருத்தல்.

2. ஓசைக்காக ஒரு முறையும் பொருளுக்காக மற்றொரு முறையும் வாசித்தல்.

3. செய்யுட்களில் குறிப்பிட்ட இடங்கள், மக்கள், சந்தர்ப்பம், நிகழ்ச்சி என்பவற்றை அகக் கண்ணால் நோக்குதல்.

4. செய்யுட்களில் குறிப்பிட்ட பேச்சு, ஓசை என்பவற்றை அகக் காதால் கேட்டல்.

5. சுவையோடு கூடிய மெய்ப்பாடு வாசிப்போரது உடலத்தில் ஒரு சிறிது தோன்றுதல்.

6. உயர் குணங்களையும் செயற்கரும் செயல்களையும் நோக்கி உளம் உருகுதல்.

7. அரும்பொருளின் செவ்வியை ஆழ்ந்து நோக்கிப் பாராட்டுதல்.

ஆகவே, செய்யுளின் ஓசையின்பம், அது ஏற்படுத்தும் மனக்கிளர்ச்சி – மெய்ப்பாடு என்பவற்றை அவர் முதன்மைப்படுத்துகின்றார். புலவன், சுவைஞன் பற்றிய விபுலாநந்தரின் இத்தகைய கருத்துக்கள் இலக்கிய இரசனை மீதான அவரது ஈடுபாட்டை எடுத்துக்காட்டுகின்ற அதேவேளை டி.கே.சி முதலானவர்களின் உணர்ச்சியையும் உருவத்தையும் உயிராகக் கருதிய, பொருளைக் கவனியாத இரசனைமுறைத் திறனாய்வுப் போக்கிலிருந்து வேறுபட்டுச் செல்வதையும் காட்டுகின்றன. விபுலாநந்தர் கவிதையின் அழகியல் நயப்பு, பொருள் நயப்பு இரண்டிலும் அக்கறை காட்டினார். கவிஞன், சுவைஞன் பற்றிய அவரது மேற்கூறிய கருத்துக்களில் கவிதையின் உருவ, உள்ளடக்க இயைபு அழுத்தம் பெற்றுள்ளதை அவதானிக்கலாம்.

மரபிலக்கியத் திறனாய்வு

விபுலாநந்தரின் இலக்கிய நயப்பு பற்றிய கட்டுரைகளில் இலக்கியம் கற்றலும் இலக்கியச் சுவையில் ஈடுபடலும், பாரதி பாடல், பாரதியார் கவிநயம் முதலான கட்டுரைகளில் பொருளிலும் பார்க்கப் பொருள் பற்றிய உணர்ச்சியே முதன்மைப்படுத்தப்படுகின்றது. முதல் கட்டுரையில் மகாபாரதப் போரின் பதினேழாம் நாளன்று நடந்த காட்சியை அகக் கண்ணால் நோக்குவோமாக என்று கூறி வர்ணிக்கின்றார். கர்;ணன் உதிரவெள்ளத்தில் கிடந்த அக்காட்சியைத் தெய்வக்காட்சியாகப் பார்க்கின்றார். கர்ணன் அருச்சுனனின் ஆயிரம் அம்புகள் துழைத்து உதிர வெள்ளத்தில் கிடப்பதும் அப்போது கண்ணபிரான் வேதியன் வடிவில் வந்து வரங்கேட்க தனது புண்ணியமனைத்தையும் உதிரத்தால் தானம் செய்வதும் கண்ணபிரான் உளமுருகி தன்கண்ணீரால் கர்ணனை நீராட்டுவதும் குந்திதேவி அவனை மார்புறத் தழுவி அழுது அரற்றுவதுமான துன்பியல் காட்சிகளை உணர்வுபூர்வமாக எடுத்துக்காட்டி அத்தகைய தொரு காட்சியை ஹோமர் எழுதிய வீரகாவியங்களிலும் காண்பது அரிது என்று வியப்புறுகின்றார். அதாவது, வில்லிபாரதத்தில் வரும் இலக்கியக் காட்சிகளை அவர் கிரேக்க ஆதி காவியங்களுடன் ஒப்பிட்டு பாரதியை மேலுயர்த்திக் காட்டுகின்றார். அதேவேளை வில்லிபாரதத்தில் வரும் போர்க்கள, பூஞ்சோலைக் காட்சிகளையும் ஒப்பீடு செய்து பொருள் குறித்தெழுந்த சுவைபேதங்களை விளக்குகின்றார்.

விபுலாநந்தர் இசைத்தமிழில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தவர். இந்த ஈடுபாடு அவரது கவிதைகளில் மட்டுமல்ல கவிதை நயப்புகளிலும் மிகுந்த செல்வாக்குச் செலுத்தியது. இலக்கியத்தின் முதன்மை ஆக்கக் கூறுகளில் ஒன்றாக இசையை அவர் கருதினார் என்பதைப் பின்வரும் கூற்று புலப்படுத்துகின்றது:

"விபுலாநந்தர் கவிதைகளில் ஓசைநயம் மிகச் சிறந்து விளங்குவதைக் காணலாம். இயலின்றி இசையில்லை இசையின்றி இயலில்லை என்பது அவரது கொள்கை" (தில்லைநாதன், சி., 1997: 70)

என்று கூறுவர். விபுலாநந்தர் எழுதிய இலக்கிய நயப்புக் கட்டுரைகள் பலவற்றிலும் கவிதையில் ஓசைநயம் பெறும் வகிபங்கினை முதன்மைப்படுத்தியிருப்பது அவரை ஒரு இரசனைமுறைத் திறனாய்வாளராகக் காட்டுவதில் முக்கிய பங்களிப்புச் செய்திருக்கின்றது.

கவிதையில் ஓசைநயம் பொருந்திச் சிறப்பிக்குமாற்றினையும் ஓசை வேறுபாடுகளின் வாயிலாக உணர்ச்சி வேறுபாடுகளைத் தோற்றுவிக்கலாம் என்பதையும் 'இலக்கியம் கற்றலும் இலக்கியச் சுவையில் ஈடுபடலும்'இ லகர வெழுத்து முதலான கட்டுரைகளிலே விளக்கியிருக்கின்றார்.

கவிதையின் அழகியல் அம்சங்களிலே அதிக சிரத்தை காட்டிய விபுலாநந்தர் முக்கியமாக கவிதையில் பயின்று வரும் எழுத்துக்களின், சொற்களின், ஓசையின், கவிதை அமைப்பின் துணைகொண்டு புலவனின் உணர்வையும் பாடலின் சுவையையும் காண்கின்ற இரசனை முறை அணுகுமுறையையே பெரிதும் பின்பற்றினார். நாடும் நகரும், மலையும் கடலும், ஐயமும் அழகும், நிலவும் பொழிலும், லகர எழுத்து முதலான பல கட்;டுரைகள் அவரது இத்தகைய அணுகுமுறைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

'லகர எழுத்து' என்ற கட்டுரையில் லகர எழுத்தின் இயக்கம் கவிதையின் ஓசைக்கும் ரசப் புலப்பாட்டிற்கும் காரணமாக அமையும் நுணுக்கத்தை எடுத்துக் காட்டுகின்றார். உதாரணமாக அப்பரின் ''மாசில் வீணையும்'' என்ற தேவாரத்தில் மாசில், வீசு, மூசு, ஈசன் என வந்த நெடில் தொடராகிய சகரமும் மாசில், மாலை, வேனில், நீழல் என வந்த லகரவெழுத்தும் வல்லொற்று இடம்பெறாமையும் இப்பாடலின் இனிய ஓசைக்குக் காரணமாவதை எடுத்துக் காட்டுகின்றார். அவ்வாறே திருத்தக்க தேவரின்

''கலையின் பிணைகள் றிடுமென் றுகசிந்

திலையின் னிழலவ் வயினின் மையினால்...''

என்ற பாடலில் லகர வெழுத்து சிருங்கார ரசமும் கருணா ரசமும் தந்து நிற்பதையும்

''சொல்ல வல்லாயோ? கிளியே

சொல்ல நீ வல்லாயோ''

எனத் தொடங்கும் பாரதியின் பாடல் சிருங்கார, பக்தி ரசங்களை வருவிக்குமாறு லகர எழுத்தை அவர் உபயோகிக்கும் அற்புதத்தையும் தனது ''ஈசனுவக்கும் மலர்கள்'' என்ற செய்யுளில் பக்தி ரசத்தின் மென்னீர்மையாகிய இயக்கத்தினை லகரவெழுத்து தந்து நிற்பதையும் எடுத்துக் காட்டுகின்றார்.

ஐயமும் அழகும், வண்ணமும் வடிவும் ஆகிய இரு கட்டுரைகளும் ஓவியத்தை - படைப்பை இரசிக்கும்போது ஓவியனின் - படைப்பாளியின் உள்ளத்தை உணர்ந்து இரசிக்க வேண்டும் என்பதை விளக்குவன. 'ஓவியனின் உள்ளக் கருத்தே ஓவியத்துக்கு உயிர்' என்று கூறும் விபுலாநந்தர், ஓவியத்தை காட்சியாக மட்டும் இரசிக்காது ஓவியனின் உள்ளத்தைக் கண்டு வியத்தல் வேண்டும் என்கிறார்.

"வெறும் காட்சியாக மாத்திரம் ஓவியத்தை இரசிக்க முடியுமா? காட்சிக்குப் பின்னால் உள்ள ஓவியனின் உள்ளத்தைக் காண முயல வேண்டுமென்பது ஓவிய ரசிப்பின் இன்றைய கொள்கையாகும். இதுவே இந்திய மரபின் ரசக் கொள்கையுமாகும்" (மௌனகுரு.சி., 1991:23).

என்று ஆய்வாளர் குறிப்பிடுவர். பார்க்கும்தோறும் அறிவுடையோனுக்கு உவகை அளிக்கும் ஓவியமே அழகிய ஓவியம் என்று ஓவியத்துக்கு வரையறை கூறுகின்றார். விபுலாநந்தர் ஓவியத்தையும் கவிதையையும் ஒன்றாகவே காண்கிறார். உண்மைக் கவிதைகள் வண்ணத்தையும் வடிவத்தையும் காட்சிப்படுத்துவன. ஆகையால் அவை உண்மை ஓவியம் போன்று அகக் கண்ணுக்கு உவகையளிக்கும் மாண்பினைக் கொண்டவை என்பது அவர் கருத்து. 'சொற்களாலே கவி வல்லான் புனையும் ஓவியமானது கண்ணுள் வினைஞரும் மண்ணீட்டாளரும் புனையும் ஓவியத்திலும் சிறந்து இயங்கும் ஓவியமே கவிதை' என்கிறார்.

ஐயமும் அழகும் என்ற கட்டுரையில் ஐயமாகிய அற்புத ரசத்தின் வழியே எவ்வாறு அழகு பிறக்கின்றது என்பதை அகப்பாடல்கள், பாசுரங்கள். காவியங்களின ஊடாக எடுத்துக் காட்டுகின்றார். இங்கு காட்சியிலும் ஐயம் சிறப்புடையது என்பதை நிறுவுகின்றார். அதாவது, ஒரு காட்சியைக் காண்பவனுக்கு வேட்கையின் மிகுதியால் ஏற்படுகின்ற ஐயம் அதன்மீதான அழகு புதிதுபுதிதாக வளர்ந்து பொங்குவதற்கு இடமளிக்கின்றது என்பதை கவிஞனின் உணர்வு வெளிப்பாட்டினூடாக எடுத்துக் காட்டுகின்றார். கவிதையின் உண்மை அழகை அல்லது அழகின் பரிமாணத்தை காட்சியைக் காண்பவனின் உள்ளத்தில் அது பற்றி எழுகின்ற ஐயப்பாடே தோற்றுவிக்கின்றது என்கிறார். ஆகவே, கவிதையை இரசிக்கும்போது கவியிதயம் இதுதான் என்று ஆராய்ந்து மகிழ வேண்டும் என்பது அவரது கருத்து.

"ஐயமும் அழகும் என்ற வியாசத்தில் வரும் காட்சியில் ஐயம் மிக்கது. ஐயமே உண்மைப் பொருளை உணர்த்தும் என்ற கூற்றில் கலை ரசிப்பின் நவீன நோக்குகள் விபுலாநந்தரில் தொனிப்பதைக் காண முடிகின்றது" (மௌனகுரு.சி., 1991:23).

என்று ஆய்வாளர் கூறுவது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. விபுலாநந்தர் தனது இலக்கியக் கட்டுரைகள் பலவற்றில் இயற்கை வர்ணிப்பிலே புலவனின் திறமை வெளிப்பட்டுள்ள விதம் பற்றிப் பேசுகின்றார். நாடும் நகரும், மலையும் கடலும், நிலவும் பொழிலும் முதலான கட்டுரைகளை இதற்கு உதாரணமாகக் கூறலாம். நிலவும் பொழிலும் என்ற கட்டுரை நிலவும் பொழிலும் தருகின்ற இன்பத்தை அனுபவித்த புலவன் என்னென்ன கருவிகளாலே தான் நுகர்ந்த இன்பத்தை நாமும் நுகரச் செய்திருக்கிறான் என்பதைக் காட்டியிருக்கின்றார். உள்ளத்தின் தன்மைக்கேற்ப புறத்தே தோன்றும் பொருள் உரு வேறுபட்டுத் தோன்றும் என்பதற்கேற்ப சொல்லவரும் விடயத்துக்கேற்ப நிலவும் பொழிலும் புலவனது கண்;ணுக்கு வேறுபட்டுத் தோற்றமளிக்குமாற்றையும் அவை தனித்தும் ஒருங்கியைந்தும் நின்று செய்யுளுக்கு அழகு பயக்குமாற்றையும் காட்டுகின்றார்.

பக்தி இலக்கியத் திறனாய்வு

விபுலாநந்தர் சமயத் துறவியாக இருந்துகொண்டு பக்தி இலக்கியத்தை திறனாய்வு நோக்கிலே பார்த்தமை அவரது திறனாய்வுப் போக்கின் முதன்மையானதொரு பண்பைக் காட்டுகின்றது. 'உள்ளங்கவர் கள்வன்'

என்ற அவரது கட்டுரை திருஞான சம்பந்தர் சிவனோடு கொண்டிருந்ததாக சைவ மரபில் கூறப்பட்டுவந்த பக்தி மார்க்கத்தை மறுதலிப்பதாக அமைகின்றது. அவரது 'தோடுடைய செவியன்' என்ற முதல் பதிகத்தில் உள்ள 'உள்ளங்கவர் கள்வன்' என்ற தொடரின் அடிப்படையில் அப்பதிகம் தந்தையை நோக்கிப் பாடிய மொழி அல்ல என்றும் சிவனாகிய தலைவனைக் காமுற்று நின்ற தலைவி நிலையில் பாடியது என்றும் ஆதாரங்காட்டி நிறுவுகின்றார். தமிழ் இலக்கிய மரபில் காதல் வயப்பட்ட தலைவி காதலனை நினைந்து நிறையழிந்து அறிவு கலங்கிப் பாடும் நிலையை இத்தொடர் புலப்படுத்தி வந்ததைக் காட்டும் அவர், அதன் தொடர்ச்சியாகவே சம்பந்தரும் பாடினார் என்பார்.

மற்றும், சம்பந்தர் யோகநெறியின்; ஒடுக்கமுற்ற மனநிலையில் அவரது அகக் கண்முன் தோன்றிய தெய்வக் காட்சியினையே இப்பதிகத்தில் கூறுகின்றார் என்றும் திருமுலைப் பாலளித்தபோது பாடிய பதிகம் வேறொன்றாய் இருக்கலாம் என்றும் வேறுபட்டதொரு கருத்தை முன்வைக்கின்றார். சம்பந்தருக்கு அகக் கண்முன்தோன்றிய தெய்வக் காட்சியை சிவன் பவனி வருவதும் அந்த அழகில் இளமகளிர் காதல் கொள்வதுமாகக் காட்சிப்படுத்துகின்றார்.

ஆகவே, சிவனை இன்னுயிர்த் தலைவனாக்கி, அவனைக் காமுற்று நின்ற சன்மார்க்க ஞான நிலையே சம்பந்தரது நிலையென்று தெரிவதாகக் கூறுகின்றார். எனவே, இது தந்தை – மகன் உறவைச் சுட்டும் சற்புத்திர மார்க்கத்தைச் சார்ந்ததல்ல, காதலன் - காதலி உறவைச் சுட்டும் சன்மார்க்கத்தைச் சார்ந்தது என்கிறார். இறைவனுடனான அவரது சன்மார்க்க உறவை ஆதாரப்படுத்துவதற்கு மேலும் பல பதிகங்களையும் ஆதாரம் காட்டுகின்றார்.

எவ்வாறாயினும் விபுலாநந்தரின் திறனாய்வுகளில் அவரது சமய உணர்ச்சியும் செல்வாக்குச் செலுத்தியுள்ளதை நாம் அவதானிக்கலாம். கவிஞன் படைப்பாற்றலைத் தெய்வ அனுக்கிரகத்தாலேயே பெறுகிறான் என்ற மதிப்பீடும் சம்பந்தரின் அகக் கண்முன் தோன்றிய தெய்வக் காட்சியைக் கற்பனை பண்ணி நயப்பதும், பாரதப் போரில் கர்ணன் குருதி வெள்ளத்தில் கிடந்த காட்சியை தெய்வக் காட்சியாகப் பார்ப்பதும் இதன் வெளிப்பாடுகளேயாகும்.

பாரதியின் கவிதைகள் பற்றிய திறனாய்வு

பண்டைத் தமிழ்ச் செய்யுட்களின் இலக்கியச் சுவை நயப்பிலே ஈடுபாடு காட்டிய விபுலாநந்தர் புறநடையாக பாரதி கவிதைகளின் இலக்கியச் சுவை குறித்து எழுதியும் பேசியும் வந்திருக்கின்றார். இதன்மூலம் பாரதியின் கவித்திறனையும் கருத்து வல்லமையினையும் இனங்கண்டு தமிழ் நாட்டுக்குப் பாரதியின் புகழ் பரப்பினார்.

இந்த ஈடுபாட்டிற்கு முக்கிய காரணம் அப்பாடல்களின் பல்வேறுபட்ட சுவை விகற்பங்களும் நெஞ்சை உருக்கும் தன்மையுமாகும் என்பதை அவரது கருத்துக்கள் காட்டுகின்றன. இதில் பிரதானமானது அப்பாடல்கள் இசைப் பாடல்களாக இருந்தமையாகும். அவர் பாரதியின் பாடல்களை 'இன்னிசைப் பாடல்கள்' என்றே அடிக்கடி கூறுகின்றார். அதனாலேயே 'அழகிய சொற்களைக் கோத்து இன்னிசை உண்டாக்கும் பாரதியார் பாடல்கள் நெஞ்சையள்ளும் தன்மையன' என்றார். பாரதியின் பாடல்கள் பற்றிப்

பேசும்போது அவற்றின் சுவைபேதங்களைக் காட்டுவதிலேயே கூடிய கவனம் எடுத்துள்ளமை தெரிகின்றது.

தேசிய உணர்வும், தேசாபிமானமும் பொங்கும்படி கவிகளை இலகுவான நடையில் இன்னிசைப் பாடல்களாகப் பாடிய பாரதியின் கவித் திறனைப் போற்றுகின்றார். தமிழ், செந்தமிழ்த் தாய், தமிழ்த் தாய் முதலான பாடல்கள் தாய்நாட்டின் மீதும் தாய்மொழியின் மீதும் பாரதியாருக்குள்ள கரைகடந்த அன்பின் வெளிப்பாடுகளாகப் பார்க்கின்றார். குறிப்பாக பாரதியின் கண்ணன் பாட்டின் பல்வேறுபட்ட சுவை விகற்பங்கள், நெஞ்சை உருக்கும் தன்மை என்பன பற்றிப் பேசுகின்றார். ''நெஞ்சை உருக்கும் நீர்மை சான்ற கண்ணன் பாட்டு என்னும் கவித் தொகுதியானது பாரதியாருடைய ஏனைய பாடல்களைப் போல புதிய நடையும் புதிய கருத்துக்களும் நிரம்பியுள்ளது'' என்று மதிப்பிடுகிறார்.

பல்வேறு உறவுமுறைகளில் வைத்துப் பாடியுள்ள கண்ணன் பாடல்கள் பக்திச் சுவை ததும்புவையாக அமைந்துள்ளதைக் காட்டுகின்றார். கண்ணனைக் காதலனாகக் கொண்டு பாடிய பாடல்கள் சிருங்காரம், வீபத்ஸம், பயாநகம், அற்புதம், ரௌத்ரம் என்னும் ரசங்கள் ஒன்றும் பலவும் பொருந்தி வருகின்ற இச்செய்யுட்கள் கவிச் சுவை நுகர்வார்க்கு தெவிட்டாத தௌ;ளமுதாக அமையும் என்கிறார். பிரிவாற்றாமையால் எய்திய துன்பத்தை வர்ணிக்கும் பாடல்;களை எடுத்துக் காட்டி அவை மறக்கவொண்ணா நீர்மைய என்று நெஞ்சைப் பறிகொடுத்த நிலையை வெளிப்படுத்துகின்றார். பாரதி தன்னை அடிமைப் பறையனாகவும் கண்ணனை ஆண்டவனாகவும் வைத்துப் பாடுகின்ற செய்யுள் வியப்புச் சுவையும் கருணைச் சுவையும் ததும்புவதாக உள்ளதோடு நெஞ்சை உருக்குவதாகவும் கூறுகின்றார்.

'பாரதியார் கவிநயம்' என்ற கட்டுரை கண்ணன் பாட்டு, குயிற்பாட்டு, காட்சி, பாஞ்சாலி சபதம் ஆகிய பாடல்களின் அடிப்படையில் பாரதியின் கவிநயத்தை வியப்பதாக அமைந்துள்ளது. முக்கியமாக பாரதியின் கவிநயத்தை பிறமொழிக் கவிஞர்களில் இருந்து உயர்த்திப்பிடிக்கும் தன்மையைப் பல இடங்களில் அவதானிக்கலாம். இது வ.வே.சு ஐயர் இலக்கிய ஒப்பீடுகளின் வழியே கம்பனை ஏனைய உலகக் கவிஞர்களை விடச் சிறந்தவனாக உயர்த்திப்பிடித்த இரசனைமுறைத் திறனாய்வுக்கு ஒப்பானதாக உள்ளமை மனங்கொள்ளத் தக்கது. ஒப்பியலின் நோக்கு இதுவாக இல்லாதபோதும் இரசனைமுறைத் திறனாய்வில் இது ஒரு பொதுப்போக்காக இருந்துள்ளமை தெரிகின்றது.

இயற்கையில் உள்ள அழகையும் பசுமையையும் இனிமையையும் ஒருங்குதிரட்டி பாரதி பாடலாக்கியுள்ள அழகை அவர் விபரிக்கின்றார். முத்துச் சுடர் போன்ற வெண்ணிலாவும் பத்துப் பன்னிரெண்டு தென்னைமரமும் கீற்றும் இளநீரும் காதில் விழும் குயிலோசையும் பாட்டுக் கலந்திட்ட ஒரு பத்தினிப் பெண்ணும் பராசக்தியின் காவலும் இருந்தால் இவ்வையகத்தையே தன் பாட்டுத் திறத்தால் பாலித்திடக் கூடும் என்னும் பொருளமைத்து 'காணிநிலம் வேண்டும்...'' என்று தொடங்கும் பாடலைப் பற்றிக் குறிப்பிடும் விபுலாநந்தர், 'மனநிறைவு' என்னும் பொருள் பற்றிப் பிறமொழியார் எழுதிய பாடலெதுவும் இதற்கு இணையாகாது என்று பெருமிதம் கொள்கின்றார். இயற்கை அழகிலே பாரதி எப்போதும் ஆனந்தம் கண்டான் என்று கூறும் விபுலாநந்தர், அத்தகைய இயற்கை வர்ணிப்பிலே அவருக்கு நிகராக யாரைச் சொல்லலாம்? என்று வியப்புக் கொள்கின்றார். முக்கியமாக இத்தகைய வர்ணிப்பிலே கண்முன்னே தோன்றுமாறு காட்சிப்படுத்தும் திறத்தையும் எடுத்துக் காட்டுகின்றார்.

காதலருடைய மனோபாவங்களை அறிவதிலும் அம்மனோபாவங்களை வர்ணிப்பதில் உள்ள அழகை கண்ணன் பாடல்களின் துணையோடு காண்பிக்கிறார்.

கூடல் கூடல் கூடல்

கூடிப் பின்னே குமரன் போயில் வாடல், வாடல், வாடல்

என்ற குயில் பாட்டின் வரிகளை உலகத்திலுள்ள காதல் கதைகளுக்கெல்லாம் சாரமாகச் சொல்லலாம் என்று போற்றுகின்றார். இத்தகைய வர்ணனையில் அழகிய சொற்களைக் கோத்து இன்னிசை உண்டாக்குவதில் பாரதி சமர்த்தன் என்கிறார். கண்ணன் குழலிசையை அநேக கவிகள் வர்ணித்திருக்கின்றபோதும் பாரதியாரைப்போல "மாம்பழ வாயினிலே குழலிசை வண்ணம் புகழ்ந்திடுவோம்" என்று இவ்வளவு அழகாக யாரும் பாடினதில்லை என்றும் ஒரே வார்த்தையை மடக்காக எழுதி அவர் உண்டாக்கும் ஆச்சரியமான கவி இன்பத்தை பல்வேறு இடங்களிலும் காண்கின்றார்.

முடிவுரை:

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலப்பகுதியில் நவீன தமிழ் திறனாய்வின் தொடக்கநிலையாக இருந்த இரசனைமுறைத் திறனாய்வை இன்னொரு கட்டத்துக்கு வளர்த்தவராக விபுலாநந்தரைக் கொள்ளலாம். அவர் தமிழ் இலக்கியத்தின் பெருமையை வெளிக்கொணர இந்தத் திறனாய்வு அணுகுமுறையை ஒரு கருவியாகக் கொண்டார் எனலாம். பாரதியின் புகழ் பரப்பவும் இந்த அணுகுமுறையே அவருக்குக் கைகொடுத்தது. விபுலாநந்தரின் இரசனைமுறைத் திறனாய்வு கவிதையின் உருவ அழகியல் நயப்பு, பொருள் நயப்பு என்ற இரண்டினதும் இணைப்பைக் கொண்டதாக விளங்கியது.

உசாத்துணைகள்:

இரகுnரன், க. (பதி). (2020). விபுலாநந்தம் - சுவாமி விபுலாநந்தரின் ஆக்கங்கள். கொழும்பு: இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.

காமராசு. இரா. (தொகு). (2018). தமிழ் இலக்கியத் திறனாய்வுக் கோட்பாடுகள். புதுதில்லி: சாகித்திய அகாதெமி.

கைலாசபதி, க. (1981). இலக்கியமும் திறனாய்வும். சென்னை: குமரன் பப்ளி~ர்ஸ்.

தில்லைநாதன், சி. (1997). இலங்கைத் தமிழ் இலக்கியம். கொழும்பு: தேசிய கலை இலக்கியப் பேரவை.

பஞ்சாங்கம், க. (2007). தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு. தஞ்சாவூர்: அன்னம்.

நடராசன், தி.சு. (2012). திறனாய்வுக் கலை கொள்கைகளும் அணுகுமுறைகளும். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி: லிட்.)

மௌனகுரு, சி. (1991). விபுலாநந்த அடிகளாரின் சமூக. கலை இலக்கிய நோக்கு. மட்டக்களப்பு: விபுலாநந்தர் நூற்றாண்டு விழாச் சபை.

யோகராசா, செ., குமரன்,க. (தொகு). (2015) சுவாமி விபுலாநந்தர் பன்முகப் பார்வை. கொழும்பு – சென்னை: குமரன் புத்தக இல்லம்.

கரவெட்டிப் பிரதேசத்தில்; உள்ள வயற்பிரதேசத்து கிராமியத்தெய்வ வழிபாடு

Rural Deity Worship in the Agricultural (PaddyField) Regions of Karaveddy

[1]Mrs.Sivarupan Nigitha & [2]Vigneswary Pavaneshan.

[1]"M.Phil. Research Student, Department of Hindu Civilization, University of Jaffna.

[2]Department of Hindu Civilization, Council of Religions and Philosophies, Faculty of Graduate Studies." University of Jaffna

[1]Nigitha26@gmail.com [2]pvigneswary@univ.jfn.ac.lk

Abstract

Saivite people practice two types of worship: one is the agamic method of worship, and the other is the non-Agamic rural method of worship. These rural deities are also referred to as Kula Deivam (lineage deities), Naattar Deivam (folk deities), and Siru Deivam (minor deities), representing the worship practices of rural populations. The Karaveddy region is situated in the Vadamaradchi South-West part of the Jaffna Peninsula. In this context, this research focuses on the worship methods of farmers in the paddy fields of the Karaveddy region and the deity worship practices of the local community. This Karaveddy region comprises thirty-three Grama Niladhari divisions and contains 3,333.590 acres of paddy land (Agrarian Services Center Statistics, 2024). This traditionally maintained worship is currently being preserved by the people of this region in a natural and simple manner. Furthermore, these worship practices continue to be maintained without undergoing Agamization. The objective of this study is to bring out the significance of rural worship and to pass on the excellence of rural worship in the temples of this region to the younger generation. This study employs historical and comparative research methodologies. Historical books related to temples and field research are utilized as primary data. The study is conducted through field research methods, with some data based on historical research methodology. Additionally, conference souvenirs, journals, research articles, and Kumbhabhishekam souvenirs serve as secondary data. Interviews we are also conducted with relevant individuals regarding these worship practices when necessary. The hypothesis of this study is that the people of the Karaveddy region have maintained faith and worship through these methods from early times to the present, and it serves as the traditional ritual system of the people of this region.

Keywords: Male Deities, Female Deities, Rural Minor Deity, Karaveddy, Beliefs, Worships

ஆய்வுச் சுருக்கம்

சைவமக்கள் இரண்டு வகையான வழிபாட்டு முறைகளைக் கையாள்கின்றனர். ஒன்று ஆகம வழிபாட்டு முறையாகும். மற்றையது ஆகமம் சாராத கிராமிய வழிபாட்டு முறையாகும். இக்கிராமியத் தெய்வத்தினை குலதெய்வம், நாட்டார் தெய்வம், சிறுதெய்வம் எனவும் அழைக்கின்றனர்.அதாவது கிராமப்புற மக்களின் வழிபாடாகவும் காணப்படுகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடமராட்சி தெற்கு மேற்கு பகுதியாக கரவெட்டிப் பிரதேசம் அமைந்திருக்கின்றது. அந்தவகையில் கரவெட்டிப் பிரதேசத்தின் வயற் பிரதேசங்களில் உள்ள விவசாயிகளின் வழிபாட்டு முறைகள் மற்றும் பிரதேச மக்களின் தெய்வ வணக்க முறைகள் பற்றிய ஆய்வாக இவ்வாய்வு அமையப்பெற்றிருக்கின்றது. இக் கரவெட்டிப் பிரதேசம் முப்பத்து மூன்று கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இப்பிரதேசத்தில் வயற்காணிப் பிரதேசமாக 3333.590 ஏக்கர் நிலப்பிரதேசத்தினைக் கொண்டுள்ளது. இப்பிரதேசத்தில் பாரம்பரியமாக பேணப்பட்டு வந்த இவ்வழிபாடானது இன்று இயல்பான முறையிலும் எளிமையான முறையிலும் இப்பிரதேச மக்களால் சிறப்பாகப் பேணப்பட்டு வருகின்றது. மேலும் இவ்வழிபாடானது ஆகமமயமாக்கலுக்கு உள்ளாகாமல் தொடர்ந்து பேணப்படுகின்றது. இவ்வாய்வின் நோக்கம் இப்பிரதேச ஆலயங்களின் கிராமிய வழிபாட்டின் சிறப்பினை இளம் தலைமுறையினருக்கு கையளிப்பதுடன் கிராமிய வழிபாட்டின் சிறப்பினை வெளிக் கொணர்தலும் ஆகும். இவ்வாய்வானது வரலாற்றியல் ஆய்வு முறையாகவும், ஒப்பீட்டு ஆய்வு முறையாகவும் காணப்படுகின்றது. ஆலயங்கள் தொடர்பான வரலாற்று நூல்களும் கள ஆய்வும் முதனிலைத் தரவாக கொள்ளப்படுகின்றது. சில தரவுகள் வரலாற்றியல் ஆய்வு முறையியலை அடிப்படையாகக் கொண்டு; அமையப்பெற்றிருக்கின்றது. மேலும் மாநாட்டு மலர்கள், பருவ இதழ்கள், ஆய்வுக் கட்டுரைகள், கும்பாபிசேக மலர்கள் போன்றன இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் அமைகின்றன. .தேவையேற்படுகின்ற போது இவ் வழிபாடு பற்றி உரியவர்களிடம் செவ்வி காணலும் இடம்பெற்றது. இவ்வாய்வின் கருதுகோளாக கரவெட்டிப் பிரதேசத்தில் உள்ள மக்கள் ஆரம்ப காலத்தில் இருந்து இன்று வரை இத்தகைய வழிபாட்டு முறைகளில் நம்பிக்கை வைத்து வழிபாடு செய்வதுடன்; இப்பிரதேச மக்களின் பாரம்பரிய சடங்கு முறையாகவும் காணப்படுகின்றது.

திறவுச்சொற்கள்;: ஆண்தெய்வங்கள், பெண்தெய்வங்கள், கிராமியம் சிறுதெய்வம், கரவெட்டி, நம்பிக்கைகள், வழிபாடுகள்

அறிமுகம்

சைவமக்கள் இரண்டு வகையான வழிபாட்டு முறைகளைக் கையாள்கின்றனர். ஒன்று ஆகம வழிபாட்டு முறையாகும். மற்றையது ஆகமம் சாராத கிராமிய வழிபாட்டு முறையாகும். இக்கிராமியத் தெய்வத்தினை குலதெய்வம், நாட்டார் தெய்வம், சிறுதெய்வம் எனவும் அழைக்கின்றனர். அதாவது நல்லது நடந்தால் தெய்வத்தின் செயல் எனவும், தீயது நடந்தால் தெய்வத்தின் கோபம் எனவும் நம்புகின்றனர். இத்தெய்வங்கள் கிராமப்புற மக்களின் காவல் தெய்வமாகவும் நோய் நீக்கி நலம் தருவனவாகவும், வாழ்க்கைக்கு வளம் சேர்ப்பனவாகவும் விளங்குகின்றன. இவ்வழிபாட்டில் சடங்கு பிரதான இடத்தினை வகிக்கின்றது.

வடமராட்சிப் பிரதேசமானது யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடக்கு கிழக்கு பகுதியாகும். இப்பிரதேசம் வடமராட்சி தெற்கு மேற்கு, வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு எனும் மூன்று நிர்வாகப் பிரிவுகளை உள்ளடக்கிய எண்பத்து எட்டு கிராமசேவகர் பிரிவுகளைக் கொண்டுள்ளது. (வடமராட்சி தெற்கு மேற்கு புள்ளி விபரத்திரட்டு 2024). இப்பிரதேசத்தில் உள்ள கிராமங்கள் மிகத் தொண்மையான பண்பாட்டுப் பாரம்பரியங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. இப்பிரதேசங்களில் வடமராட்சி தெற்கு மேற்கு பகுதியே இக்கரவெட்டிப் பிரதேசம் ஆகும். கரவெட்டிப் பிரதேசமே இவ்வாய்விற்குரிய பகுதியாகும். இப்பிரதேசம் முப்பத்து மூன்று கிராமசேவகர் பிரிவுகளைக் கொண்டுள்ளது.

ஆய்வுப் பிரதேசம்

யாழ்ப்பாணப் பிரதேசத்தின் வடக்குக்கிழக்குப் பகுதியாக வடமராட்சிப் பிரதேசம் அமையப்பெற்றிருக்கின்றது. இவ்வடமராட்சிப் பிரதேசமானது வடமராட்சி தெற்கு மேற்கு, வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு எனும் பிரதேசங்களை தன்னுள் உள்ளடக்கியுள்ளது. இப்பிரதேசங்களில் தோட்ட நிலப் பயிர்ச் செய்கைக்குரிய காணியாக 924.97 ஏக்கரும், வயற்காணிப் பிரதேசமாக 3333.590 ஏக்கர் நிலப்பிரதேசத்தினையும் கொண்டுள்ளது. அதில் வயற்காணிப் பிரதேசங்களாக கரணவாய் தெற்கு 67.765ஏக்கர், கரணவாய் மேற்கு 134.780ஏக்கர், கரணவாய் 13.388 ஏக்கரினையும், கரணவாய் கிழக்கு 124.435 ஏக்கர்,உடுப்பிட்டி மத்தி 55.413 ஏக்கரினையும்,உடுப்பிட்டி தெற்கு 429.138 ஏக்கர்,இமையாணன் கிழக்கு 5.908 ஏக்கர், இமையாணன் மேற்கு 134.478 ஏக்கர்,கரணவாய் மத்தி 20.088 ஏக்கர்,மத்தொணி 57.833 ஏக்கர், கரவெட்டி மத்தி 109.458 ஏக்கர், கரவெட்டி கிழக்கு 13.505 ஏக்கர், கட்டைவேலி 33.663 ஏக்கர், துன்னாலை தெற்கு 478.008 ஏக்கர், துன்னாலை கிழக்கு 89.608 ஏக்கர், அத்தாய் 32.528 ஏக்கர் ,கப்பூது 1526.235 ஏக்கர் நிலப்பிரதேசங்களைக் கொண்டுள்ளது. (புள்ளிவபரத்திரட்டு கமநலசேவைகள் நிலையம் கரவெட்டி). இத்தகைய வயல் நிலங்களைக் கொண்டுள்ள இடங்களில் உள்ள மக்களால் வழிபடப்படுகின்ற வழிபாட்டு முறைகளை பற்றிய ஆய்வாக இவ்வாய்வு அமையப்பெற்றிருக்கின்றது.

இப்பிரதேசத்தின் சிறு தெய்வ வழிபாட்டு முறைகளுள் பெருந்தெய்வ வழிபாட்டு முறை காணப்படுவதனைக் கண்டுகொள்ள முடிகின்றது. அதாவது பெருந்தெய்வ வழிபாட்டு மரபுகளான பிராமணர் பூசை செய்தல், சமஸ்கிருத மந்திரங்கள் புகுத்தப்பட்ட வேளையிலும், சிறுதெய்வ வழிபாட்டு முறை மரபின் எச்சங்கள் பலவற்றை இன்றும் இப்பிரதேச சிறுதெய்வ ஆலயங்களில் வழிபாட்டுச்சிறப்புக்களில் இருந்து கண்டுகொள்ளலாம். சிறுதெய்வ வழிபாட்டிடங்களாக காளி, காத்தவராயன், நரசிம்மர் பூதவராயர், மாடன், முனி, வாலையம்மன், முதலிப்பேச்சி, வீரபத்திரர், நாகதம்பிரான், வைரவர், காத்தாசி, கன்னியம்மன், அம்மிணி, பிள்ளையார், ஐயனார். கண்ணகியம்மன், நாச்சிமார், அண்ணமார், முருகன், மாரியம்மன், சீதையம்மன், முனியப்பர், பெரியதம்பிரான், ஆஞ்சநேயர். விறுமர். முதலி, மோகினி, திரெபதியம்மன் போன்ற கோவில்கள் இப்பிரதேசத்தில் காணப்படுகின்றன.

இவ்வாலயங்கள் பெரும்பாலும் மரத்தடி, குளம், ஏரி போன்றவற்றுக்கு அருகில் அமைந்திருக்கின்றன. மேலும் திறந்த வெளியில் மரத்தடிகளில் தெய்வமாக கருதி வழிபடத்தக்க வேல், கல், கல்லாயுதம், சூலம் போன்றவற்றை வைத்து வழிபாடு செய்கின்றனர். சில இடங்களில் பீடங்கள் அமைக்கப்பட்டு வழிபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதாவது வழிபடுவோரின் பொருளாதார நிலைக்கேற்ப கோயில் அமைப்பும், தெய்வ உருவங்களும் வேறுபட்டுக் காணப்படுகின்றன.

இப்பிரதேசத்தில் கிராமிய தெய்வ வழிபாடானது எளிமையான வழிபாட்டு நடைமுறைகளைக் கொண்டுள்ளது. இவ்வழிபாட்டு முறைகள் முன்னோர் வழிபட்ட வழியே தொடர்ந்து நடைபெறுகின்றது. அதாவது விதிமுறை வகுத்து வழிபாடு நடாத்தப்படுவதில்லை. இத்தெய்வங்களுக்கு நாள் பூசை எனப்படும் ஆறு காலப்பூசைகள் நிகழ்த்தப்படுவதில்லை. மக்களின் விருப்பத்திற்கும், வசதிக்கும் ஏற்ப பூசைகளை நடத்துகின்றனர். மக்கள் தம் சமுகத்தின் விருப்பு வெறுப்புகளுக்கு தக்கவாறு வழிபாட்டு முறைகளை அமைத்துக்கொள்கின்றனர். இங்கு பிராமணர் அல்லாத சைவர் அல்லது அக்கிராமத்தில் ஒருவர் பூசகராகவோ, பராமரிப்பாளராகவோ விளங்குகின்றார். அதாவது இவ்வழிபாடு ஆனது இப்பிரதேச இனக்குழும முறைக்கேற்ப அமைவதைக் காணலாம்.

இங்குள்ள வழிபாட்டு முறைகளாக பொதுவாக செவ்வாய், வெள்ளி, ஞாயிறு நாட்களில் விளக்கு வைத்தல், மடைப்பண்டம் எடுத்தல், காய்வெட்டுதல், கலையாடுதல், கட்டுச் சொல்லல், பறையடித்தல், வெடிமுழங்குதல், மச்சப் படையல் படைத்தல், குளிர்த்தி, ஆண்டுதோறும் பொங்கல், வேள்வி, ஆலயத்தில் நேர்த்திக்கடனுக்காக விலங்குகளைத்தானம் வழங்கல், உயிர்ப்பலி கொடுத்தல், மடைபரவல், வடைமாலை சாத்துதல், தீமிதித்தல், கரகம் காவடி எடுத்தல், வில்வம் சாத்தி வழிபடல், அடுப்பு நாச்சிக்கு அடுப்படியில் வெற்றிலை பாக்குடன் உணவு படைத்தல், பாற்செம்பு கற்பூர சட்டி எடுத்தல், அங்கப்பிரதட்சனை செய்தல், பெரிதாக ஒரு மோதகம் அவித்துப் படைத்தல், கரகம் ஆடல். கஞ்சிவார்த்தல் போன்ற வழிபாட்டு முறைகள் சிறப்பிடம் பெறுகின்றது.

சிறுதெய்வ வழிபாட்டின் தோற்றம்

சிறுதெய்வம் என்ற சொற்றொடரின் தோற்றத்தை கி.பி 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசு நாயனாரால் பாடப்பட்ட "சென்று நாம் சிறுதெய்வம் சேரோம் அல்லோம்|| என்ற தேவாரத்தில் இருந்து அறியமுடிகின்றது (மௌனகுரு சி, 2003, மட்டக்களப்பு தமிழகத்தின் இந்துப் பண்பாடு 2ம் உலக இந்து மாநாடு, ப. 01)

மேலும், அவருக்கு பிந்தி வாழ்ந்தவராகக் கருதப்படும் திருநாளைப் போவார் நாயனார் சிறுதெய்வங்களான காடன், மாடன் ஆகியவற்றை வணங்கிப் பின்னால் பெருந்தெய்வமான சிவனைத் தேடி சிதம்பரம் புறப்பட்டார் என்பதிலிருந்து சிறுதெய்வங்களான காடன்,மாடன் முதலிய தெய்வங்கள் பற்றி அறியமுடிகின்றது.

"குருவை மறந்தாலும் குலதெய்வத்தை மறவேன்

குலதெய்வத்தை கும்பிட்டுக் கும்மியடி"

என குலதெய்வ வழிபாட்டின் சிறப்பினை இப் பாடலில் இருந்து அறியமுடிகின்றது.இத்தெய்வ வழிபாடானது முன்னோர் வழிபட்ட வழியே தொடர்ந்து நடைபெறுகின்றது. விதிமுறை வகுத்து வழிபாடு நிகழ்த்தப்படுவதில்லை. தம் விருப்பு வெறுப்புக்களுக்கு தக்கபடி வழிபாட்டு முறைகளை அமைத்துக் கொள்கின்றனர். கிராமவாசிகள் கடவுளுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளும் அன்புப் பிணைப்பை உருவாக்குகின்றனர். கிராமியத் தெய்வங்கள் பற்றி உளவியல் பேரறிஞரான சிக்மன் பிராய்டு (Sigmund Freud) விளக்கம் கூறுகையில்

இயற்கையிடமும் மரணத்தின் மீதும் மக்கள் கொண்ட அச்சமே இவ்வழிபாட்டிற்கு அடிப்படைக் காரணம் என்றார் (சக்திவேல்.சு, 1983, நாட்டுப்புறவியல் ஆய்வு, ப.224).

டாக்டர் சக்திவேல் நாட்டுப்புறத் தெய்வங்களை ஐந்தாக வகைப்படுத்தியிருக்கிறார். அத்தெய்வங்களினை ஆண்தெய்வங்கள், பெண்தெய்வங்கள், குலதெய்வங்கள், சாதித் தெய்வங்கள், ஊர்த்தெய்வங்கள் என வகைப்படுத்தியிருக்கிறார். (சக்திவேல்.சு, 1983, நாட்டுப்புறவியல் ஆய்வு, ப.224.)

டாக்டர் துளசி இராமசாமி நாட்டுப்புறத் தெய்வங்களை ஊர்த்தெய்வங்கள், இனத்தெய்வங்கள், குலதெய்வங்கள், மாலைத் தெய்வங்கள், சமாதித் தெய்வங்கள், துணைத் தெய்வங்கள் என்ற ரீதியில் வகைப்படுத்தியிருக்கிறார். இவ்வாய்வுக் கட்டுரையானது கரவெட்டிப் பிரதேசத்தின் சிறுதெய்வ வழிபாடு ஒரு நோக்கு எனும் தலைப்பில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

ஈழநாட்டின் வடபகுதியான யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடக்குக் கிழக்குப் பகுதியாக வடமராட்சிப் பிரதேசம் காணப்படுகிறது. இப்பிரதேசத்தின் தெற்கு மேற்குப் பகுதியாக, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசம் அமைந்துள்ளது. இப்பிரதேசத்தினையே கரவெட்டிப் பிரதேசம் என அழைக்கின்றனர். இப்பிரதேசமானது முப்பத்து மூன்று நிர்வாகப் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இப்பிரதேசமானது இந்துத் தமிழ்ப் பாரம்பரியத்தைக் கொண்டு விளங்குகின்றது.

ஆண்தெய்வங்கள்

இப்பிரதேசத்தில் ஆண் தெய்வங்களான வீரபத்திரர், வைரவர், காத்தவராயர், ஐயனார், அண்ணமார், அனுமர், விறுமர், பூதவராயர், முனியப்பர், பனிக்கர், பெரியதம்பிரான், மாடன், மதுரைவீரன், கறுப்பன், நரசிங்கர், வதனமார் முனித்தெய்வம் போன்ற தெய்வங்கள் வழிபடப்படுகின்றன

பெண் தெய்வங்கள்

பெண் தெய்வங்களாக முத்துமாரி, காளி, கண்ணகி, காத்தாசி, நாச்சிமார், பேச்சியம்மன், செவ்வாச்சி (அடுப்புநாச்சி), கடலாச்சி, முதலி, கொத்தி, ஆதிபராசக்தி போன்ற தெய்வங்களும் வழிபடப்படுகின்றன.

ஆய்வு முறையியல்

இவ்வாய்வானது கள ஆய்வு முறையில் மேற்கொள்ளப்படுகின்றது. சில தரவுகள் வரலாற்றியல் ஆய்வு முறையியலை அடிப்படையாகக் கொண்டு அமையப்பெற்றிருக்கின்றது.

ஆய்வின் கருதுகோள்

கரவெட்டிப் பிரதேசத்தில் உள்ள மக்கள் ஆரம்ப காலத்தில் இருந்து இன்று வரை இத்தகைய வழிபாட்டு முறைகளில் நம்பிக்கை வைத்து வழிபாடு செய்வதுடன்; இப்பிரதேச மக்களின் பாரம்பரிய வயல் நிலப்பிரதேச சடங்கு முறையாகவும் காணப்படுகின்றது.

ஆய்வின் நோக்கம் :

கரவெட்டிப் பிரதேசத்து வயல் நிலப்பிரதேச மக்களினால் பேணப்படும் வழிபாட்டு முறையினை வெளிக்கொணர்தல்.

இலக்கிய மீளாய்வு

தமிழகத்திலும் இலங்கையிலும் கிராமிய தெய்வ வழிபாட்டோடு தொடர்புடைய நூல்கள் கட்டுரைகள் பல வெளிவந்துள்ளன. இவை இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

என். சண்முகலிங்கம், எழுதிய இலங்கை இந்திய மானிடவியல் (2014)அண்ணமார் வழிபாடு பற்றிய செய்திகள் இவ்வாய்விற்கு பயன்படுத்தப்பட்டன.

வி. பவநேசன் எழுதிய இலங்கையில் கிராமிய தெய்வங்களும் வழிபாட்டு முறைகளும் எனும் நூலில் (2019) கிராமிய தெய்வங்கள், வழிபாட்டு முறைகள் பற்றிய விடயங்கள் இவ்வாய்விற்கு பயன்படுத்தப்பட்டன.

பத்மன் என்பவர் எழுதி வெளியிட்ட திக்கெட்டும் திருமுருகன் (2007) எனும் நூல் வாயிலாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் வழக்கில் உள்ள முருக வழிபாட்டு பாரம்பரியங்களை அறியமுடிகின்றது.

சண்முகதாஸ், மனோண்மணி சண்முகதாஸ் எழுதிய இத்திமரத்தான் (2020) எனும் நூலில் தும்பளை நெல்லண்டை பத்திர காளி அம்மன் ஆலயம் பற்றிய விடயங்கள் இவ்வாய்விற்கு பயன்படுத்தப்பட்டன.

தே. ஞானசேகரன் எழுதிய மந்திரம் சடங்குகள் சமயம் எனும் நூலில் (2000) கிராமிய சடங்குகள் பற்றிய விடயங்கள் இவ்வாய்விற்கு பயன்படுத்தப்பட்டன.

க. சண்முகலிங்கம் எழுதிய தமிழ் நாட்டார் வழக்காற்றியல் (1993) எனும் நூலில் நாட்டார் வழிபாட்டு முறைகள்,சடங்குகள் என்பன இவ்வாய்விற்குட்படுத்தப்பட்டன.

இரகுவரன் என்பவர் எழுதிய பருத்தித்துறையூராம் (2012) எனும் நூலில் பருத்தித்துறை நகரில் உள்ள கிராமிய ஆலயங்கள் பற்றிய விடயங்கள் இவ்வாய்விற்கு பயன்படுத்தப்பட்டன.

கு. கணபதிப்பிள்ளை என்பவர் எழுதிய ஈழத்து வாழ்வும் வளமும் எனும் நூலில் வடமராட்சிப் பிரதேச கிராமிய தெய்வங்கள் பற்றிய விடயங்கள்,வழிபாட்டு முறைகள் போன்ற விடயங்கள் இவ்வாய்விற்கு பயன்படுத்தப்பட்டன.

து. வீரகத்தி என்பவர் எழுதிய அபிராமி நவநீதகம் (1995) எனும் நூலில் உள்ள அத்துளு அம்மனின் வழிபாட்டு சிறப்புக்கள் இவ்வாய்விற்குட்படுத்தப்பட்டன.

கிராமியத் தெய்வங்களும் வழிபாட்டு முறைகளும்

இப்பிரதேசத்தின் கிராமிய வழிபாட்டின் தோற்றத்தை நோக்குகின்றபோது, இலங்கையில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் நாட்டு வழிபாடுகள் தடைப்பட்டுக் காணப்பட்டன. அவ்வேளையில் கிறிஸ்தவ வணக்கம் மேலோங்கிக் காணப்பட்டன. இப்பிரதேச மக்களின் வழிபாட்டிடங்கள் அழிக்கப்பட்டன. போர்த்துக்கேய கத்தோலிக்க தேவாலயங்கள் தோற்றம் பெற்றன.

அடுப்புநாச்சி வழிபாடு

இப்பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களில் பலர் கிறிஸ்தவ மதத்தினை கடைப்பிடித்தனர். அவ்வாறு மதம் மாற்றப்படாத இந்துக்கள் தங்கள் வழிபாட்டு முறையினை குடும்ப குல ரீதியான தெய்வ வழிபாடுகளில் ஈடுபடத் தொடங்கினர்;. (கணபதிப்பிள்ளை.க, 1962, ஈழத்து வாழ்வும் வளமும்.. ப.63)

வீட்டு வளவுகளில் உள்ள மரத்தையும் அம்மரங்களின் கீழ் கல், பொல் போன்றவற்றையும் தெய்வத்தின் குறியீடாகக் கொண்டு வணங்கினர். நாட்டில் நிலவிய தெய்வ வணக்கங்கள் மறைக்கப்பட்டு வந்தன. இவ்வேளையில் தான் இப்பிரதேசத்தில் நாச்சியார் வழிபாடு சிறப்படைந்திருந்தது. ஒவ்வொரு வீட்டிலும் அடுப்புநாச்சி எனும் தெய்வத்தை வணங்கினர். அதாவது வீடுகளில் நல்லதோர் பெருநாள் வந்தால் வீட்டிலே செய்யும் பலகாரத்தில் ஒன்றை அடுப்புநாச்சிக்கு நேர்ந்து அடுப்படியில் வைத்து செம்பினால் நீர் தெளித்து படைக்கின்ற வழக்கம் தற்காலத்திலும் காணப்படுகிறது. மேலும் வாய் அவிச்சல், கஞ்சி ஊற்றப்பட்டால் ஏற்படும் காயம் குணமடைய அடுப்புநாச்சியை நேர்ந்து வழிபாடு செய்வதனைக் காணலாம்.

செவ்வாச்சி வழிபாடு

இப்பிரதேச மக்கள் செவ்வாச்சி வழிபாட்டைச் செய்து வருகின்றனர். குடத்துள் உருவம் வைத்து வணங்கிய பாரம்பரியத்தின் தடயமாக இவ்வழிபாட்டினை செவ்வாச்சி வழிபாடு எனவும் அழைக்கின்றனர். செவ்வாச்சிக்கு மக்கள் நீர்க்கஞ்சி வடைகள், சுட்டமீன் போன்றன பொருட்களைப் படைக்கப்படுகின்றனர். இமையாணன் எனும் இடத்தில் நீருள்ள மண்குடம் வழிபடப்படுகின்றது. இவ்வழிபாட்டினை இப்பிரதேச மக்கள் பகவதியம்மன் என அழைக்கின்றனர். (இரகுவரன்,பா. 2001, ஊரும் வாழ்வும் தும்பனைக் கிராமம் பற்றிய சமூகவியல் ஆவணம்)

இவ்வழிபாட்டுக்குரிய தெய்வமாக கறுப்புநிற வண்ணம் கொண்ட வண்ணத்துப்பூச்சியை போன்ற பூச்சியினம் காணப்படுகின்றது. இப்பூச்சியின் செட்டையில் கண்களை போன்று இரு கண்கள் காணப்படுகின்றன. இப்பூச்சியை கண்டால் இத்தெய்வத்தினை நினைவுபடுத்துவதாக அமைகின்றது. இப்பிரதேச மக்கள் இப்பூச்சி காட்சி கொடுக்கும்போது அத்தெய்வத்திற்கு தேங்காய் எண்ணெய், கற்பூரம், பழம் போன்றவற்றைக் கொடுத்து தம் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுபவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

மேலும் இவ்வழிபாட்டினை வழிபடும்போது பிள்ளைப் பாக்கியம் ஏற்படுவதாகவும்; தமது பரம்பரையின் குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்கள் அல்ல எனவும் அறிய முடிகிறது. இங்கு

இத்தெய்வத்திற்கு பெண்களே பூசை வழிபாடுகளை மேற்கொள்கின்றனர். இவர்கள் தம் தாய்வழித் தோன்றலாக விளக்கு வைத்து வழிபாடுகளை மேற்கொள்கின்றனர்.

சின்ன செவ்வாச்சி அப்பிரதேசத்தில் தோன்றும்போது, தமக்கு நட்டம், வருத்தம், துன்பம் ஏற்படப் போவதாகவும், பெரிய செவ்வாச்சி அப்பிரதேசத்தில் தோன்றும்போது நன்மைக்காரியம் நடப்பதாகவும் அப்பிரதேச மக்கள் கூறுகின்றனர் (நேர்காணல் சின்னத்தம்பி,சி, வயது 58 ,இமையாணன் கிழக்கு,ஓய்வுபெற்ற நில அளவையாளர்.) இவ்வாலயத்தின் மூலஸ்தான அறையில் மூன்று கல் வைக்க அதன் மேல் பானை வைக்கப்பட்டுள்ளது. அப்பானையில் திருநீறு, சந்தனம் அணிந்து வழிபாட்டினை மேற்கொள்கின்றனர். தற்காலத்தில் சிறு சீமெந்து கட்டடங்கள் அமைக்கப்பட்டு சுவர்களில் வண்ணத்துப்பூச்சி கற்கள் வைக்கப்பட்டு சிறுகோயில் அமைப்பாக வழிபடப்படுகின்றது. இங்கு நிர்வாகம் இல்லை. இப்பிரதேசத்து மக்களின் ஒன்றிணைந்த வழிபாட்டு முறையாகக் காணப்படுகின்றது

மேலும் காணிக்கை செலுத்துதல், மிருகங்களை நேர்ந்து விடல், பொங்கல் வடை மாலை சார்த்துதல், மடைபரவுதல். போன்ற வழிபாட்டு முறைகளைக் கடைப்பிடிக்கின்றனர்.

கட்டு சொல்லுதல் எனும் சடங்கும் இடம்பெறுகின்றது. பூசை செய்கின்ற பெண்ணினால்; கட்டுச் சொல்லுகின்ற முறையும் காணப்படுகின்றது. அச்சமூக மக்கள் தம் நல்லது கெட்டதுகளை முற்கூட்டியே அறிந்து கொள்கின்றனர். ஊர் மக்கள் ஒன்று சேர்ந்து வருடத்தில் ஒரு நாளை விழாவாக கொண்டாடுகின்றனர்.

கொத்தி வழிபாடு

இப்பிரதேசத்தில் கொத்தி எனும் தெய்வத்திற்கு தனிச்சிறப்பிடம் காணப்படுகிறது. இத்தெய்வமானது பிரசவம் பார்க்கும் மருத்துவிச்சிக்கு உதவுவதாக நம்பப்படுகிறது. பிரசவம் பார்க்கும் நேரத்தில் கொத்திக்கு கழித்தல் எனும் சடங்கு இடம்பெறுகின்றது. கொத்தியை கொத்திப்பேய் என்ற நிலையிலும் பிரசவத்தில் வணங்கி உதவி பெறுவதும் கழிப்பு கழித்தல் எனும் சடங்கு இடம்பெறுகின்றது.

கண்ணகி வழிபாடு

கண்ணகி எனும் சிறுதெய்வ வழிபாடுகள் கரவெட்டிப் பிரதேசத்தில் காணமுடிகின்றது. வருடாந்த வேள்வி நிகழ்ச்சிகளுடன் தொடர்புபடுகின்றன. கப்பூது, அல்வாய் கரணவாய் எனும் பகுதிகளில் கண்ணகி கோவில்கள் அமைக்கப்பட்டு வழிபாடு செய்கின்றனர். சமஸ்கிருத வழிபாடு மேலோங்கிய நிலையில் நீண்டகால வழக்கில் காணப்பட்ட கண்ணகி, திரௌபதி என்ற பெண் தெய்வங்களுக்கு பதிலாக அவ்விடங்களில் புவனேஸ்வரி எனும் தெய்வத்தினை பிரதிஸ்டை செய்தனர். இதற்கு உதாரணமாக கரணவாய் கண்ணகை அம்மனுக்கு பக்கத்தே உச்சில் புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் குடத்தனை, மாளிகைத்திடல், காரையூர், நாகர்கோயில், வல்வெட்டி போன்ற இடங்களில் உள்ள கோவில்களிலும் இவ்வழிபாட்டின் சிறப்பினைக் காணமுடிகிறது.கரணவாய் கிழக்குப் வயற்பிரதேசத்தில் வைரவர், கண்ணகையம்மன் போன்ற ஆலயங்கள் காணப்படுகின்றன. இப்பகுதி மக்கள் பாற்கஞ்சி வார்த்தல், பொங்கல் மடை பரவல், பிட்டு மோதகம் அவித்தல் போன்ற வழிபாடுகள் மேற்கொள்வதன் மூலம் தம் நெல் அறுவடையைப் பெற்றுக் கொள்கின்றனர். இப்பகுதியில்

உள்ள வைரவருக்கு காவற்தெய்வம் என நம்பிக்கை கொண்டு அறுவடையின் போது நெல்லினை வைரவருக்கு வழங்குகின்ற தன்மையினைக் காணக்கூடியதாக இருக்கின்றது.ஆரம்ப காலத்தில் பேச்சியம்மன் காலப்போக்கில் கண்ணகை அம்மனாகவும், மாரியம்மனாகவும் வழிபடப்பட்டு வந்ததாகப் பெரியவர்கள் மூலம் அறியமுடிகின்றது. தம் இஸ்ர தெய்வமாக கண்ணகிக்கு புதுப் பானையில் புதிய நெல்லினை அறுவடை செய்து படைக்கின்ற வழக்கம் காணப்படுகின்றது.

சப்த கன்னியர் வழிபாடு

சப்த கன்னியர் கோவில்கள் இப்பிரதேசத்தில் காணப்படுகிறது. வெள்ளி தோறும் விளக்கு வைக்கப்பட்டு ஆண்டுக்கு ஒருமுறை பொங்கல் பொங்கி வழிபாடு செய்கின்றனர். இவ்வழிபாடு ஆனது கரணவாய் வடக்கு. நெல்லியடி, கரவெட்டிமத்தி, கட்டைவேலி போன்ற இடங்களில் உள்ள கோவில்களில் காணமுடிகின்றது.

நாகதம்பிரான் வழிபாடு

நாகதம்பிரான் வழிபாடு இப்பிரதேசத்தில் சிறப்படைந்து காணப்படுகிறது. நாகத்திற்கு மக்கள் வழிபாடு செய்வதுடன் தமது நேர்த்திக் கடன்கள் செலுத்துவதும் குழந்தைப்பேறு இன்மைக்கு நாகதோ~ம் என எண்ணி நாகத்திற்கு பல சிறப்பு வழிபாடுகள் மேற்கொள்கின்றன. இவ்வழிபாட்டிடங்கள் கரவெட்டி மேற்கு, வல்வெட்டித்துறை, கரணவாய் தெற்கு, நெல்லியடி கிழக்கு, கரணவாய் கிழக்கு போன்ற இடங்களில் உள்ள ஆலயங்களில் காணமுடிகின்றன. இவ்வழிபாடானது திராவிட மக்களின் பண்டைய வணக்கங்களில் ஒன்றாகும். ஆண்டுக்கு ஒருமுறை பொங்கல் சிறப்பாக நடைபெறுகின்றது.இவ் வழிபாடுகளினை தம் நெற்பயிர்ச்செய்கை தொடங்கி அறுவடை வரையான காலப்பகுதியில்; மேற்கொண்டு வழிபாடு செய்வதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அந்த வகையில் இவ்வழிபாட்டு முறைகளை நோக்கும்போது கப்பூது வயற்பிரதேசத்தில் அதிகமாக பாம்புகள் காணப்படுகின்றன. இப்பாம்புக் கடிப் பயத்தினால் மக்கள் வயற்பிரதேசங்களுக்கு செல்கின்ற அச்ச நிலை காணப்படுகின்றது. இதன் காரணமாக இப்பிரதேச மக்கள் வைரவர், நாகதம்பிரான் முதலிய தெய்வங்களை நிறுவி சிறு கோயில் அமைத்து வழிபாடு செய்து வருவதனைக் காணக்கூடியதாக இருக்கின்றது. உதாரணமாக விலங்கிவைரவர் கோயில், ஆண்டியப்பா நாகதம்பிரான் போன்ற ஆலயங்கள் உதாரணங்களாக அமைகின்றன. இவ்வயற் பிரதேசங்களில் பாம்புக்குப் பால் வைத்து வழிபாடு செய்த இடங்களில் சிறு ஆலயங்களை அமைத்து வழிபட்டு வருகின்றனர்.

பெரிய தம்பிரான் வழிபாடு

பெரிய தம்பிரான் வழிபாடு இப்பிரதேசத்தில் காணப்படுகின்றது. பெரிய தம்பிரான் கோயில்களில் வருடத்துக்கு ஒருநாள் மடை பரவுகின்றனர். கரவெட்டி, சண்டில் குளத்தடியில் பெரிய தம்பிரான் கோயிலில் நடக்கும் மடையில் தாழங்காயினை படைப்பார்கள். படைக்கப்பட்டவை அங்கு அழுகும்வரை இருப்பதாகவும் கூறப்படுகிறது. *(கணபதிப்பிள்ளை.க, 1962, ஈழத்து வாழ்வும் வளமும்.. ப.63)* இவ்வழிபாடு கட்டைவேலி, கரவெட்டி கிழக்கு அல்வாய், உடுப்பிட்டி, இமையாணன் போன்ற

இடங்களில் வழிபடப்படுகின்றன. உடுப்பிட்டிதெற்கு எனும் இடத்தில் பெரிய தம்பிரான் தெய்வம் வயல்களை காக்கின்ற பாதுகாப்புத் தெய்வமாக வழிபடப்படுகின்றன.

பூதவராயர் வழிபாடு

இடத்துக்கிடம் பூதவராயர் ஆலயங்களும் இப்பிரதேசத்தில் காணமுடிகின்றது. வீரபத்திரரின் மூர்த்தங்களில் இதுவும் ஒன்று. செவ்வாய், வெள்ளி தினங்களில் விளக்கு வைத்து வழிபாடு செய்கின்றனர். விளக்கேற்றுபவர்கள் இவ்வழிபாடு வீரவணக்க அடிப்படையில் அமைந்திருக்கலாம். இவை துன்னாலை, கரவெட்டி கிழக்கு போன்ற இடங்களில் உள்ள ஆலயங்களில் காணப்படுகின்றன.

காளி, வைரவர் வழிபாடு

மேலும் கரவெட்டிப் பிரதேசத்தில் வீடுகளில் சிறுசிறு கோயில்களாக வழிபடும் தெய்வங்களும் உள்ளன. இத்தெய்வங்கள் வீட்டுத் தெய்வங்கள் அல்லது குலதெய்வம் என்று அழைக்கப்படுகின்றன. ஈழத்தில் உள்ள தமிழ் மக்கள் வீடுதோறும் ஒவ்வொரு தெய்வத்தை வாலாயம் பண்ணி வணங்கி வருகின்றனர். இவ்வணக்கம் திராவிட வணக்கம் சார்ந்தது. காளி, வைரவர் போன்ற தெய்வங்கள் அதிகமாக வீடுகளில் வைத்து வழிபாடு செய்கின்றனர். இத் தெய்வங்களுக்கு செவ்வாய், வெள்ளி நாட்களில் விளக்கு வைத்து பழம், வெற்றிலை, பாக்கு படைத்து கற்பூர தீபம் காட்டுவர். தம் குடும்பத்தில் நடக்கும் துன்பங்கள், பில்லி சூனியம் போன்றவற்றை தீர்த்து அருள்வதாக இத் தெய்வங்களை நம்புகின்றனர். இவ்வழிபாடு பொதுவாக எல்லா இடங்களிலும் காணப்படுகிறது. கரவெட்டி, கரணவாய் மேற்கு, கரணவாய், இமையாணன், துன்னாலை, அல்வாய், அத்தாய், வியாபாரிமூலை போன்ற பல இடங்களில் வழிபடுவதைக் காணலாம்.துன்னாலை கிழக்குப் பிரதேசத்தில் கொடிக்காடு என்னும் காட்டு வயற் பிரதேசங்களில் காட்டு வைரவர் ஆலயம் காணப்படுகின்றது. இங்குள்ள மக்கள் தம் காவற் தெய்வமாகவும் ஒழுங்கு எனும் முறையில் இத்தெய்வம் மக்களினை கண்காணிப்பதாகவும் நம்புகின்றனர்.இவர்கள் பொங்கல் பொங்கியும் கற்பூரம் கொழுத்தியும் களி,புட்டு போன்றன படைத்தும் வழிபாடு செய்து வருகின்றனா.;

பேச்சியம்மன் வழிபாடு

பேச்சியம்மன் வழிபாடும் இப்பிரதேசத்தின் சிறப்பிற்குரியது. இப்பிரதேசத்தில் பேச்சி என்னும் தெய்வத்தை கண், வாய், மூக்கு என கீறப்பட்ட மரக்குற்றியில் அமர்த்தி அருகில் கருங்காலிக் கொட்டன் வைத்து வழிபாடுகள் செய்யப்படுகின்றன. மேலும் இப்பிரதேசத்தில் துன்னாலை எனும் இடத்தில் சிறிய சதுரவடிவ கொங்கிறீட் கட்டிடத்தில் பித்தளை செம்பு விளக்கும், திருநீற்றுத் தட்டும்; வைத்து அப்பகுதி மக்களால் நேர்த்திக் கடன்கள் செய்தும் பூசைப்பொங்கல், வேள்வி போன்ற வழிபாட்டு முறைகளுடன் வழிபாடுகள் மேற்கொள்கின்றனர்.

காத்தாசி வழிபாடு

மேலும், முதலிப்பேச்சி, காத்தாசி, வாலையம்மன், அம்மிணி, கன்னியம்மன் போன்ற தெய்வங்களின் வழிபாடுகளும் கரவெட்டிப்; பிரதேசத்தில் மட்டுமே காணப்படும் சிறப்பிற்குரியது. ஆனாலும் இங்கு

செம்பினால் ஆன கோளவடிவ சலங்கைகள் காப்பு, காற்சிலம்பு போன்றன வைத்து வழிபடப்படுகின்றன. இத்தெய்வத்திற்கு கரகம், பாற்செம்பு, பொங்கல் போன்ற வழிபாட்டு முறைகளில் ஈடுபடுகின்றனர். காத்தாசி தெய்வமும் அவ்வூர் மக்களின் குலத்தைக் காக்கும் ஆச்சியாக வழிபடப்படுகின்றது.

வாலையம்மன் வழிபாடு

இப்பிரதேசத்தில் வாலையம்மன் வழிபாடு சிறப்பாகக் காணப்படுகின்றது. கரவெட்டி மேற்கு பகுதியில் அம்மன் கோயிலுக்கு அருகாமையில் இலுப்பை மரத்தின் கீழ் சீமெந்தினாலான மேடைகட்டி செவ்வாய், வெள்ளி நாட்களில் பூசை செய்து விளக்கு வைப்பதுடன் ஆண்டுக்கு ஒருமுறை பொங்கல,; வேள்வி செய்து வழிபடப்படுகின்றனர்.

அம்மிணி வழிபாடு

அம்மிணி வழிபாடானது, கரவெட்டிப் பகுதியில் காணப்படுகின்றது. இங்கு இத்தெய்வத்திற்கு விக்கிரகம், சூலம், கல் ஏதும் இல்லை. இந்த மரத்தின் அருகில் கோயில் கட்டப்பட்டு விசேட வழிபாடுகள் இடம்பெறுகின்றன. வைகாசிப் பூரணை மடை, திருவெம்பா, நவராத்திரி, பூசை போன்ற வழிபாடுகள் இடம்பெறுகின்றன. இவ்வழிபாடு கரவெட்டிப் பிரதேசத்தில் சிறப்பிற்குரியதாகக் காணமுடிகின்றது.

கன்னியம்மன் வழிபாடு

கரவெட்டிப்; பகுதியில் கன்னியம்மன் வழிபாட்டின் சிறப்பினையும் காணமுடிகின்றது. இப்பிரதேசத்தில் கரவெட்டி மேற்கு நகரில் கன்னியம்மன் கோயில் காணப்படுகின்றது. வெள்ளைச் சேலையுடன் தெய்வப்படம் வைத்து வழிபடல், ஞாயிறு, வெள்ளி தினங்களில் வழிபாடுகள் மேற்கொள்வதுடன் சிறப்புப் பூசைகளும் நவராத்திரி, தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு போன்ற விசேட நாட்களில் வழிபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

காத்தவராயன் வழிபாடு

காத்தவராயன் வழிபாடானது இப்பிரதேச மக்களால் சிறப்பாக வழிபடப்படுகின்றன. இத்தெய்வம் முத்துமாரியம்மன் வழிபாட்டோடு தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. மாரி என்றால் மழைத் தெய்வமாகவும், வறட்சியை போக்குவதாகவும், அம்மை நோய்களில் வெப்ப நோய்களில் இருந்து பாதுகாப்பதாகவும் நம்பி மக்களால் இவ்வழிபாட்டினை வழிபடுகின்றனர். மாரியம்மன் கோயில்களில் மட்டுமன்றி ஏனைய பெண் தெய்வ கோயில்களான பத்திரகாளி, சக்தி, கண்ணகி, சாமுண்டேஸ்வரி, பண்டாரி அம்மன் போன்ற கோயில்களில் பரிவாரத் தெய்வமாக காத்தவராயர் காணப்படுகிறார். இவ்வழிபாட்டில் காத்தான், கல், கழுமரம் என்பவற்றில் அமர்த்தப்பட்டுள்ளார். கழுமரம் காத்தானின் அகோர நிலையான கழுவெறியைக் குறிப்பிடுகின்றது. இத்தெய்வத்திற்கு வல்வெட்டித்துறை மத்தி மாவடி என்ற இடத்தில் கழுவேறியும் (கழுமரம்) காத்தான் கோயிலும் காணப்படுகின்றது. (இரகுவரன்,பா. 2001, ஊரும் வாழ்வும் தும்பனைக் கிராமம் பற்றிய சமூகவியல் ஆவணம ப 63). மேலும்

கரணவாய் மேற்கு அம்மன் கோவிலில்; காத்தானை விக்கிரகம் நிலையில் உருவமாக வழிபடுகின்றனர் (இரகுவரன்,பா. 2001, ஊரும் வாழ்வும் தும்பனைக் கிராமம் பற்றிய சமூகவியல் ஆவணம் பக் 69-71).

கழுவெறியை ஞானக்காத்தான் என்று கூறி இதற்கு மச்சப்படையல் படைப்பர். மேலும் மச்சப்படையல் படையாத கோவில்களும் காணப்படுகின்றன. பண்டாரி அம்மன் கோயிலில் இருந்த காத்தானுக்கு மச்சப்படையல், சாராயம் படைக்கப்பட்டு இச்சாப்பாடு பலருக்கு பகிர்ந்தளிக்கப்படும். அவ்வூர் மக்கள் காசு கொடுத்து வாங்குவர். இதனை சிவமருந்து என்று அழைப்பர். இம்மருந்தானது நோய்களில் இருந்தும் ஆபத்தில் இருந்தும் இவ்வூர் மக்களைக் காப்பதாக நம்பப்படுகின்றது.

துன்னாலை தெற்கு தில்லையம்பலம் எனும் இடத்தில் உள்ள பிள்ளையார் ஆலயத்திலும் கிராமிய வழிபாட்டின் சிறப்பினை காணமுடிகின்றது. மக்கள் தங்கள் சந்ததி விருத்திக்காகவும், விலங்குகள் நன்மைக்காகவும் பெரிதாக ஒரு மோதகம் அவித்துப் படைப்பதுடன் அன்னதானம் பொங்கல் பொங்கியும் வழிபாடுகள் மேற்கொள்கின்றனர். ஆடு, மாடு, கன்றுகள் ஈன்றவுடன் இப்பிரதேசத்து மக்கள் முதலில் அப்பாலில் பிள்ளையாருக்கு அபிசேகம் செய்யும் பழக்கமும் காணப்படுகின்றது.

அண்ணமார் வழிபாடு

இப்பிரதேசத்தில் அண்ணமார் வழிபாடு சிறப்பிடம் பெறுகின்றது. இவ்வழிபாடானது இப்பிரதேசத்தில் ஊரின் எல்லைகளிலும் நடுப்பகுதியிலும் வழிபடப்படுகின்றது. இத்தெய்வத்தின் குறியீடாகக் கல்லும், பொல்லும் காணப்படுகின்றது. இத்தெய்வத்திற்கு ஆலயங்களும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் விசேட தினங்களில் பொல்லு கொண்டு வரப்பட்டு குறிப்பிட்ட இடத்தில் வைத்து வழிபாடுகள் மேற்கொள்கின்றனர் (நேர்காணல் அற்புதஅருந்தவராசா,சி, வயது 82 கரவெட்டி மத்தி).

பொங்கல் நாளன்று ஆடு, கோழி பலியிட்டும் சாராயம், முட்டை போன்ற படையல்கள் படைக்கப்பட்டும் இந்நாளன்று கட்டு சொல்லுதல், கலையாடுதல், சூனியம் நிவர்த்தி செய்தல் போன்றன செய்யப்படுகின்றன. இத்தெய்வ வழிபாடுகள் மந்திகை, நெல்லியடி கிழக்கு, அல்வாய், அல்வாய் வடமேற்கு, அல்வாய் கிழக்கு போன்ற இடங்களில் மேற்கொள்ளப்படுகின்றனர்.

வீரபத்திரர் வழிபாடு

இப்பிரதேசத்தில் வீரபத்திரர் வழிபாடு சிறப்பிடம் பெறுகின்றது. இத்தெய்வமானது சிவபெருமானின் உக்கிர வடிவம் என நம்பிக்கை கொண்டு வழிபாடுகளை மேற்கொள்கின்றனர்.. இத்தெய்வத்திற்கு கரவெட்டிமத்தி, கரவெட்டிகிழக்கு, கற்கோவளம், வேம்படி, புலோலிதெற்கு, போன்ற இடங்களில் கோவில்கள் காணப்படுகின்றன. இத்தெய்வத்திற்கு செவ்வாய், வெள்ளி, ஞாயிறு போன்ற நாட்களில் பூசைகள் இடம் பெறுவதுடன் விசேட தினங்களில் பொங்கல் மடை பரவி வழிபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

முனியப்பர் வழிபாடு

முனியப்பர் வழிபாடும் இப்பிரதேசத்தில் சிறப்பிடம் பெறுகின்றது. கரவெட்டிப் பிரதேசத்து வல்லைப் பகுதியில் மரத்தடியில் முனி உறைவதாக நம்பப்படுகின்றது. யாழ்ப்பாணம் செல்லும் பேருந்துகள் ஒவ்வொன்றும் அம்மரத்திற்கு பக்கத்தில் கற்பூரம் கொழுத்தி வழிபாடு செய்கின்றனர்.

மேலும் புறாப்பொறுக்கி எனும் கிராமத்தில் முனியானது ஆலமரத்தினை உறைவிடமாகக் கொண்டது. அவ்வாலமரம் தறிக்கப்பட்டதும் தற்போது மருத மரத்தில் உறைவதாக நம்புகின்றனர். உயிலங்கன்றடி முனி, திக்கத்து முனி, சக்கோட்டை முனி, தாமரைக்குளத்து முனி, புறாப்பொறுக்கி முனி போன்ற முனித் தெய்வங்கள் காணப்படுவதாக இங்குள்ள மக்களால் நம்பப்படுகின்றது (கணபதிப்பிள்ளை.க, 1962, ஈழத்து வாழ்வும் வளமும். ப 63). இத்தெய்வங்களுக்கு பொங்கல் பொங்கி, நேர்த்திக் கடன் செலுத்தி வழிபாடு செய்கின்றனர்.

பனிக்கர் வழிபாடு

கரவெட்டிப் பிரதேசத்தில் பனிக்கர் என்னும் தெய்வ வழிபாடு சிறப்பாக வழிபடப்படுகின்றது. இத்தெய்வத்திற்கு அல்வாய் வடமேற்கு பகுதியில் ஆலயம் காணப்படுகிறது. இத்தெய்வம் வெள்ளைக்காரர் காலத்தில் வாழ்ந்ததாகவும் அக் காலத்தில் அவர் அப் பகுதி மக்களுக்கு பொன், பொருள் வழங்கியதாகவும் அதனால் அவருக்கு ஆலயம் கட்டி வழிபாடு செய்வதாகவும் அவ்வூர் மக்கள் கூறுகின்றார்கள். இப்பனிக்கருக்கு இறைச்சி, மீன், முட்டை, சாராயம், பழவகைகள் போன்ற அனைத்து உணவுகளும் படைக்கப்படுகின்றன. ஒவ்வொரு வருடமும் குறிப்பிட்ட ஒரு நாளில் வேள்விக்காக ஆடு, மாடு, கோழிகள் ஏலத்தில் விடப்படுகின்றன. மேலும் வேள்வி பூசைகளும் இடம்பெறுகின்றன.

விறுமர் வழிபாடு

கரவெட்டிப் பகுதியில் விறுமர் வழிபாடு சிறப்பாகக் காணப்படுகின்றது. இங்கு விறுமருக்கு குறிப்பிட்ட நாட்களில் பூசை வழிபாடுகள் செய்வதுடன் வேள்விப் படையல்களும் இடம்பெறுகின்றன. புலோலி வடமேற்கு, கிழவிதோட்டம், முடக்காடு, நெல்லியடிகிழக்கு, கட்டைவேலி,கரவெட்டி கிழக்கு போன்ற இடங்களில் இவ்வழிபாடுகள் காணப்படுகின்றன. குறிப்பிட்ட இனக்குழு மக்களே அத்தெய்வத்தினை சிறப்பாக வழிபடப்படுவதனைக் காணமுடிகின்றது.

முதலி வழிபாடு

மேலும் இப்பிரதேசத்தில் வாழும் மக்கள் வழிபடும் தெய்வங்களுள் முதலி எனும் தெய்வம் சிறப்பிடம் பெறுகின்றது. இத்தெய்வத்திற்கு விசேட தினங்களான செவ்வாய், வெள்ளி நாட்களில் பொங்கல்கள், மடைபரவல், வேள்வி, கரகம், காவடி எடுத்து வழிபாடுகள் செய்யப்படுவதாகவும் அறியமுடிகிறது. மத்தொணி, கரவெட்டி கிழக்கு, புலோலி, கரணவாய், கரவெட்டி மத்தி போன்ற இடங்களில் இவ்வழிபாடுகள் இடம்பெறுகின்றன. முதலிகள் வணக்கம் வீரவணக்கத்தை சேர்ந்ததாக இருத்தல் வேண்டும் என்று பேராசிரியர் சி.கணபதிப்பிள்ளை தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்; சில இடங்களில்

புளி, பூவரசு போன்ற மரங்களுக்கு அடியில் உருவம் எதுவும் இன்றியும் தண்ணீர், பூ, வில்வம் சாத்தி வழிபாடுகள் செய்யப்படுகின்றன.

மேல்மருவத்தூர் அம்மன் வழிபாடு

மேலும் கரவெட்டிப் பிரதேசத்தில் மேல்மருவத்தூர் அம்மன் வழிபாடும் சிறப்பிடம் பெறுகின்றது. இத் தெய்வத்திற்கு கிளானை எனும் இடத்தில் கோயில் அமைத்து வழிபாடுகள் மேற் கொள்கின்றனர். இங்குள்ள மக்கள் செவ்வாடை உடுத்தி விரதம் இருந்து அம்மனை வழிபடுகின்றனர்.

ஐயனார் வழிபாடு,

ஐயனார் வழிபாடு, குறுப்பர் எனும் தெய்வ வழிபாடு, முருகன் வழிபாடு போன்ற வழிபாடுகளும் இடம்பெறுகின்றன. ஐயனார் என்ற தெய்வத்திற்கு வெற்றிலை மாலை கட்டி வழிபாடு செய்கின்றனர்.மேலும் ஐயப்பன் தோத்திரம் பாடி ஐயப்பன் நோன்பு இருந்து வழிபாடுகளை மேற்கொள்கின்றனர். நெல்லியடிப் பகுதியிலும் வல்லைப் பகுதியிலும் அல்வாய் கிழக்கு பகுதியிலும் இவ்வழிபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

குறுப்பர் வழிபாடு

குறுப்பர் எனும் தெய்வத்திற்கு கரவெட்டி மேற்கு பகுதியில் சிறு கோயில் அமைக்கப்பட்டு வழிபாடுகள் செய்யப்படுகின்றனர். இங்கு காத்தானையும் குடி அமர்த்தி குறுப்பர் எனும் ஆண்தெய்வத்தினை காவல் தெய்வமாகப் போற்றி வழிபாடு செய்கின்றனர். இங்கு குறுப்பருக்கு விசேட தினங்களில் விளக்கு வைக்கப்பட்டு, ஆண்டுக்கு ஒருமுறை பொங்கல், வேள்வி என்பன இடம்பெறுகின்றன.

துன்னாலை தெற்கில் உள்ள தம்பான், கரம்பான் வயற்கண்டங்களின் நடுவே பின்னையாரினை தம் விருப்புகளுக்கு ஏற்ற வகையில் பிரதிஸ்டை செய்து தில்லையம்பல பிள்ளையார் எனப் பெயரிட்டு வழிபாடு செய்வதனைக் காணலாம். இத் தெய்வத்திற்கு விவசாயிகள் தம் கால்நடை சிறக்கவும் வயல் விளைச்சல் பெறவும் வழிபாடுகள் மேற்கொள்கின்றனர்.மக்கள் தங்களது வீடுகளில் கால்நடைகளுக்கு கன்று பிறந்தால் தாம் குடிப்பதற்கு முன் முதற் கறக்கின்ற பாலை பிள்ளையாருக்கு அபிசேகம் செய்வதுவும் பெரிய மோதகம் அவித்துப் படைக்கின்ற வழக்கமும் இருக்கின்றமையை அவதானிக்ககூடியதாக இருக்கின்றது.மேலும் நெல் அறுவடை செய்த பின்னர் பிள்ளையாருக்குப் பொங்கல் பொங்கியும் வடை, முறுக்கு, மோதகம் போன்றன படைக்கப்படுவதனையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

மதிப்பீட்டுரை

தொகுத்து நோக்குகின்றபோது இப்பிரதேசத்து மக்களால் இக்காலத்திலும் தங்கள் இந்துப் பாரம்பரியத்தை கைவிடாது தொடர்ச்சியாக சிறு தெய்வ வழிபாட்டு முறைகளைப் பேணி வருகின்றனர் அதாவது அவர்களின் வழிபாட்டு முறைகளாக விசேட தினங்களில் விளக்கு வைத்தல், மடைப் பண்டம் எடுத்தல், கலையாடல், கட்டு சொல்லல், காய் வெட்டுதல், பறையடித்தல், வெடி முழங்குதல்,

மச்சப்படையல் படைத்தல், குளிர்த்தி, ஆண்டுதோறும் பொங்கல், உயிர்ப்பலி கொடுத்தல், மடைபரவல், தீ மிதித்தல், கரகம், காவடி, அடுப்பு நாச்சிக்கு அடுப்படியில் வெற்றிலை பாக்கு படைத்தல், கரகம் ஆடுதல் போன்றன பேணப்படுகின்றன. இப்பிரதேசத்து கிராமிய வழிபாட்டு முறைகள் இன்றும் இப்பிரதேசத்து மக்களால் போற்றி பேணப்படுகின்றன. மேலும் இத்தகைய வழிபாட்டு முறைகளை கரவெட்டிப் பிரதேச மக்கள் விருப்புடன் வழிபாடு செய்கின்றனர் என்பதனை இவ்வாய்வின் ஊடாக கண்டு கொள்ள முடிகின்றது. மேலும் கரவெட்டிப் பிரதேசத்தின் வயற்புறத் தெய்வ வழிபாடுகள் இன்றைய நவீன சூழலிலும் பின்பற்றப்படுவதோடு இச்சடங்கு முறைகளை இப்பிரதேச மக்கள் தற்காலத்திலும் பேணி வருவதனை அவதானிக்க முடிகின்றது. நவீன கால மாற்றத்தினால் இனி வரும் காலங்களில் இளைஞர்கள் இத்தகைய சடங்குமுறைகளை அழியவிடாது பேணுவதன் மூலம் வயற்புறத்தெய்வ வழிபாட்டினையும் பாரம்பரிய சடங்கு முறைகளையும் அழியவிடாது பேணமுடியும் என்பதனை இவ்வாய்வின் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது.

உசாத்துணைகள்

இரகுவரன்,பா. (2001). ஊரும் வாழ்வும் தும்பனைக் கிராமம் பற்றிய சமூகவியல் ஆவணம்

இரகுவரன,பா. (2012). பருத்தித்துறை யூராம். தீபன் பதிப்பகம். பருத்தித்துறை

இன்பமோகன், வ. (2012) கிழக்கிலங்கைச் சடங்குகள். குமரன் புத்தக இல்லம். கொழும்பு.

இராமசாமி, துளசி. (1985). நெல்லை மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள். உலக தமிழ் ஆராட்சி நிறுவனம். சென்னை.

கணபதிப்பிள்ளை,க. (1962). பாரி நிலையம். சென்னை.

கந்தையா, வி.சி. (1997). மட்டக்களப்பு சைவக்கோயில்கள். இந்து சமய கலாசார அலுவல்கள் தினைக்களம். கொழும்பு.

கிருஸ்ணராசா செ. (2012). இலங்கையின் பண்பாட்டு பரிணாமத்தின் அடிப்படைகள் AB creator and publishers. கொழும்பு.

குணபாலசிங்கம், வ. (2012). இலங்கையில் இந்து பௌத்த சமய மரபுகளில் சிறு தெய்வ வழிபாடு ஓர் நோக்கு. இந்து சமயமும் அவைதீக நெறிகளும். கலாசார அலுவல்கள் திணைக்களம்.

கைலாசநாதக்குருக்;கள், கா (1992). சைவதிருக்கோயில் கிரிகை நெறி. ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய நிதியம். யாழ்ப்பாணம்.

சண்முகலிங்கம், க ,(பதி) (1995). தமிழ் நாட்டார் வழக்காற்றியல். இந்து சமய கலாசார அலுவல்கள் தினைக்களம். கொழும்பு.

சக்திவேல், சு. (1983). நாட்டுப்புறவியல் ஆய்வு. மணிவாசகர் பதிப்பகம். சென்னை ப.63.

சக்திவேல், சு, டாக்டர். (1983). நாட்டுப்புறவியல். மணிவாசகர் பதிப்பகம். சென்னை.

சண்முகலிங்கன், என். (2008). சமூகவியல் கோட்பாட்டு மூலங்கள். கரிகரன் பதிப்பகம். யாழ்ப்பாணம்.

சிவலிஸ்கராஜா, எஸ். (1984). வடமராட்சியின் கல்விப் பாரம்பரியமும் இலக்கியவளமும். வடமராட்சி கல்வி வட்டம்.

சிவலிங்கராஜா, எஸ். (1996). யாழ்ப்பாணப் பண்பாடு மறந்தவையும் மறைந்தவையும். குமரன் புத்தக இல்லம்.

சிவத்தம்பி,கா, பேராசிரியர். (1993). யாழ்ப்பாணச்சமூகத்தை விளங்கிக் கொள்ளல். தர்~னா பிரசுரம்.

சிவசுப்பிரமணியம், வ. (2004). மட்டக்களப்பு நாட்டாரியல். லக்சுமி பதிப்பகம். கொழும்பு.

சிவானந்த சர்மா, பா. (1986). சைவாலயக் கிரிகைகள். திருமகள் பதிப்பகம். சுண்ணாகம்.

சுகந்தி, சு. (2006). மட்டக்களப்பு மாவட்டத்துக் கிராமிய வழிபாட்டுச் சடங்குகளும் அவை தொடர்பான பாடல்களும். ,இலண்டன் தமிழ் இந்துமன்றம்.

திருச்செல்வம், என், கே. (2010). தென் இலங்கையில் புராதன இந்துகோயில்கள்;. பாகம்1 இந்து கலாசார அலுவல்கள் தினைக்களம்;. கொழும்பு.

மகேஸ்வரலிங்கம், க. (1996). மட்டக்களப்பு சிறுதெய்வ வழிபாடு ஓர் அறிமுகம். தில்லை வெளியீடு. மகிழடித்தீவு.

மனோகரன், ம. (2000). கிராமிய வழிபாடு. சென்னை.

மௌனகுரு,சி. (2003). மட்டக்களப்பு தமிழகத்தில் இந்துப் பண்பாடு. 2ம் உலக இந்து மாநாடு. குமரன் புத்தக இல்லம்.

வித்தியானந்தம், சு. (1974). நான்காவது அனைத்துலக தமிழாராச்சி மாநாட்டு நிகழ்ச்சிகள். தமிழாராய்ச்சி மன்றம். சென்னை.

வீரகத்தி, க. (1995). அபிராமி நவநீதம். வாணிகலைக்கழகம். கரவெட்டி.

ஈழத்துச் சைவசித்தாந்த வளர்ச்சியில் கண்டன மரபு

Polemical Traditions in the Development of Saiva Siddhanta in Sri Lanka

N. Vaman

Department of Hindu Civilization,

Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.

vamann@esn.ac.lk

Abstract

Among the various schools within Saiva philosophies, Saiva Siddhanta possesses a distinct and well-established tradition. While *Saivam* denotes a faith-based religious way of life, *Siddhanta* refers to the systematic intellectual effort that transforms this faith-experience into a coherent body of philosophical thought grounded in knowledge. Thus, Saiva Siddhanta represents an integrated framework that harmonizes religious practice with philosophical inquiry. There is no evidence of chronological discontinuity between the origins and development of Saiva religious traditions and Saiva Siddhanta in Sri Lanka and their counterparts in Tamil Nadu. This continuity is supported by literary sources such as the *Ramayana*, *Mahabharata*, *Kandapurāṇam*, *Mahāvamsa*, and other historical records, which indicate that the indigenous peoples of Sri Lanka practiced liṅga worship. Sri Lanka's contributions to the development of Saiva Siddhanta are reflected primarily in its literary works. In addition, several cultural and religious activities have played a significant role in promoting Saiva Siddhanta among the people. Notable among these are Purāṇa recitation, preaching, polemical discourse, dramatic performances, and formal Saiva Siddhanta education. This article focuses specifically on the tradition of polemical discourse within the Saiva Siddhanta tradition.

Keywords: Saiva Siddhanta, Sri Lanka, Polemics, Arumuga Navalar

ஆய்வுச் சுருக்கம்

சைவ மெய்யியல்களில் ஒன்றான சைவசித்தாந்தம் தனக்கெனத் தனிப் பாரம்பரியத்தை உடையது. 'சைவம்' என்பது நம்பிக்கையுணர்வுசார் நெறி எனில் 'சித்தாந்தம்' அந்த நம்பிக்கையுணர்வினை அறிவுநிலையுடன் கூடிய மெய்யியற் சிந்தனையாக உருவாக்கம் செய்யும் முயற்சியின் செயற்றிட்டமாகும். எனவே, சைவசித்தாந்த மெய்யியலானது சமய வாழ்வையும், தத்துவத்தினையும் ஒன்றிணைக்கும் மெய்யியற் சிந்தனையாகும். இலங்கைச் சைவ சமய, சைவ சித்தாந்த மரபுகளின் தோற்ற வளர்ச்சிகளுக்கும் தமிழகத்துச் சைவ சமய, சைவ சித்தாந்த மரபுகளின் தோற்ற வளர்ச்சிகளுக்குமிடையே காலவிடைவெளிகள் எதுவும் இருந்ததற்கான ஆதாரங்கள் இல்லை. இவ்வுண்மையினை, இராமாயணம், மகாபாரதம், கந்தபுராணம், மகாவம்சம் முதலான இலக்கியங்களும் பிற வரலாற்றுச் சான்றுகளும், இலங்கையின் ஆதிக்குடிகள் இலிங்க வழிபாட்டையுடைய மக்கள் என எடுத்துக்காட்டுவதன் மூலம்

உணர்ந்துகொள்ள முடிகின்றது. சைவசித்தாந்த வளர்ச்சிக்கு இலங்கையரின் பங்களிப்புகள் என்ற வகையில் நூல்கள் பிரதான இடம் பெறுகின்றன. இவற்றுடன், சைவசித்தாந்தத்தை மக்கள்மயப்படுத்தும் நோக்கில் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவ்வகையில் புராணபடனம், பிரசங்கம், கண்டனம், நாடகம், சைவசித்தாந்தக் கல்வி முதலானவை குறிப்பிடத்தக்கவை. இவற்றுள் சைவசித்தாந்தக் கண்டன மரபு குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

திறவுச் சொற்கள் - சைவசித்தாந்தம், இலங்கை, கண்டனம், ஆறுமுகநாவலர்

அறிமுகம்

இந்திய தத்துவச் சிந்தனை மரபில் இன்றும் நிலைத்து வாழும் ஒரு சமய தத்துவமாக விளங்குவது சைவசித்தாந்தமாகும். சிவனை முழுமுதல் இறைவனாகக் கொண்டமைந்த சைவசித்தாந்தமானது தத்துவரீதியிலும், சமய நிலையிலும் செழுமைக்குரிய வகையில் அமைந்துள்ளது. சைவசித்தாந்த மெய்யியலானது உலகத்திலுள்ள – உலகத்துக்கப்பால் உள்ள பொருட்கள் அனைத்தையும் அறிவை அடிப்படையாகக் கொண்டு பதி, பசு, பாசம் என்னும் முப்பொருட்களாகப் பகுத்து நோக்குகின்றது. இம்முப்பொருளும் நித்திய உண்மை என்பதே அத்தத்துவத்தின் அடிப்படைக் கொள்கையாகும். ''சிவமே உயர்ந்த உள்பொருள்; ஜீவன் தன்மையில் சிவத்தைப் போன்றது; ஆனால், அதில் ஒன்றுபட்டதன்று; இறைவன் (பதி), ஆன்மா (பசு), தளை (பாசம்) என்ற மூன்று பதார்த்தங்களும் உலகினை அமைக்கும் முப்பத்தாறு தத்துவங்களும் உண்மையில் உள்ளவை'' என்பதைச் சைவசித்தாந்தம் எடுத்துரைக்கின்றது.

ஆரம்ப காலங்களில் ஆகமங்களின் ஞானபாதமே சைவசித்தாந்தம் என எடுத்தாளப்பட்டது. பின்பு அவற்றின் சாரமாக கருத்தியற் கோட்பாடாக சைவசித்தாந்தம் தோற்றம்பெற்றது. ஆகமசாரமான சைவசித்தாந்தச் சார்புடைய நூல்களாக வடமொழி அஷ்டப் பிரகரணங்களும் தமிழ் மொழியில் திருமுறைகள், ஞானாமிர்தம், பதினான்கு மெய்கண்ட சாஸ்திரங்கள், சிவநெறிப் பிரகாசம், தத்துவப் பிரகாசம் எனப் பல்வேறு நூல்களும் தோற்றம்பெற்றன. எது எவ்வாறாக இருந்தபோதும் மெய்கண்டாரது சிவஞானபோதமே தமிழில் சைவசித்தாந்தக் கோட்பாட்டின் மூலமாகச் சுட்டப்படுகின்;றது. தர்க்க அடிப்படையிலான கருத்தியலை முன்வைத்தமையே இதற்குக் காரணமாகின்றது.

சைவர்கள் எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் அவர்கள், தம் சமய நடைமுறைகளையும் தத்துவ மரபுகளையும் பின்பற்றுவது வழமை. அவ்வகையில் இலங்கையிலும் வாழ்ந்த மக்கள் இவ்வழக்கங்களைப் பின்பற்றியுள்ளமையினை வரலாற்றால் அறியமுடிகின்றது. இலங்கைச்; சைவசித்தாந்த மரபு தனக்கான தனித்துவப் பாரம்பரியத்தைக் கொண்டது. 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஞானப்பிரகாசருடன் தொடங்கிய இலங்கையின் சைவசித்தாந்த மரபு 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆறுமுகநாவலரால் புடம்போடப்பட்டு 20ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நாவலர் மாணவ பரம்பரையினராலும், ஏனைய புலமையாளர்களாலும் வளர்த்தெடுக்கப்பட்ட வரலாற்றைக் கொண்டது. சைவசித்தாந்தம் தொடர்பான நூல்கள், உரைகள், பதிப்புகள் என்பவற்றோடு புராணபடனம், பிரசங்கம், கண்டனம், சைவசித்தாந்தக் கல்வி, பத்திரிகைகள், சஞ்சிகைகள் எனப் பல்வேறு வழிமுறைகளுக்கூடாக சைவசித்தாந்தத்தை மக்கள் மயப்படுத்துவதற்கான முயற்சிகளும் ஈழத்தில் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் கண்டன மரபு குறித்து ஆராய்வதாகவே இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

கண்டனம்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழத்தில் ஏற்பட்ட கிறிஸ்தவ சமயப் பரம்பலும் திட்டமிட்ட மதமாற்றச் செயற்பாடுகளும் கண்டன மரபு தோற்றம்பெறுவதற்கு அடிப்படைக் காரணங்களாக அமைந்தன. குறிப்பாக, கிறிஸ்தவ மிஷனரிமார்கள் சைவத்தையும், அதன் கருவியாக விளங்கும் சைவசித்தாந்தத்தையும் உணர்ந்து கொள்ளாது பகைகொண்டு சைவத்தின் மீதும், சைவசித்தாந்தத்தின் மீதும் கண்டனம் செய்ய ஆரம்பித்தனர். கிறிஸ்தவ மிஷனரிகள் மட்டுமன்றி இராமலிங்க அடிகளார் மற்றும் வேலு முதலியார் போன்றோர் சைவசித்தாந்த கோட்பாடுகள் பற்றிப் பிழையாக வியாக்கியானம் செய்யத் தலைப்பட்டனர். இத்தகு சூழ்நிலையில் சைவசித்தாந்தத்தின் உண்மைகளை வெளிப்படுத்தும் வகையிலும் அவர்களால் முன்வைக்கப்பட்ட பிழையான கருத்துக்களை நிவர்த்தி செய்வதற்கும் பிரதிகண்டனங்கள் சைவசமயிகளால் முன்வைக்கப்பட்டன. அத்தகு சைவசமயிகளுள் ஆறுமுகநாவலர் முதன்மையிடம் பெறுகிறார்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்

ஆறுமுகநாவலர் மேற்கண்டவர்களின் கண்டனங்களை எதிர்த்தும் சுதேசிகளின் ஆகம விரோதச் செயல்களைக் கண்டித்தும் பிரதி கண்டனத்தினை மேற்கொண்டிருந்தார். எடுத்துக்காட்டாக, நாவலரின் சமகாலத்தவராக போற்றப்படும் இராமலிங்க அடிகளார் 'ஒழிவில் ஒடுக்கம்' என்ற நூலில் ''பிரளயாகலர் மும்மலங்களுள் ஒருமல நீத்தோர்'' எனக் குறிப்பிட்டதை நாவலர் வெகுவாகக் கண்டித்தார். அந்தவகையில்,

''பிரளயாகலராவார் இருமலமுடையவராகிய உருத்திரர்களென்பதும் சகலராவார் மும்மலமுடையராகிய பிரமவிட்டுணு முதற் கிருமியீறாக உள்ள உயிர்கள் என்பதும் சாதாரணமாகிய தத்துவக் கட்டளைகள் வாசித்தவளுக்கும் தெரியுமே! அஃதறியாது பிரளயாகலர் மும்மலங்களுள் ஒருமல நீத்தோர். அவர் பிரமன் முதலானோர் என்று ஒழுவிலொழுக்கவுரை புத்தக முதலிலே பதிப்பித்த இராமலிங்கப் பிள்ளையார் ஓதாதுணர்ந்தவர்'' (இரகுபரன்,க.(பதி.), 2016:100).

என்றவாறு பிரதிக் கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளார். மேலும், இராமலிங்க அடிகளாரின் மாணவராகிய வேலு முதலியார் திருவாவடுதுறை ஆதீனத்திற்குப் பயணம் மேற்கொண்டிருந்தபோது அங்குள்ள சைவப் பெரியார்கள் ''சிவஞானபோதம் அதிகாரம் - இயல் முதலானவைகளால் எத்துணை பகுப்புடையது?, முதன் மூன்று சூத்திரங்கள் முறையே திரிபதார்த்தங்களில் எவற்றைச் சொல்லுகின்றன?, விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலராவார் யார்? சொல்ல வேண்டும்'' என்று விண்ணப்பித்திருந்தனர். இவ்வினாவிற்கு வேலுமுதலியார்,

''சிவஞானபோதம் எட்டு பிரிவினையுடையது. பெயர்யாதில்லை, முதற்சூத்திரம் சங்காரத்தைச் சொல்லிச் சிருஷ்டிப்பதை சொல்லுமுகத்தாற் பதியுண்டென்று சொல்லுகின்றது. அது பயனுக்குப் பயனாகக் கொள்ள வேண்டும். இரண்டாம் சூத்திரம் பசுவுண்டென்று சொல்லுகிறது. மூன்றாஞ் சூத்திரம் பாசமுண்டென்று சொல்லுகிறது. விஞ்ஞானகலர் பிருங்கி முதலாயினோர் சிலர் சதாசிவவாதிகளாகச்

சொல்லுவர். பிரளயாகலர் பிரமன் முதலாயினோர். சிலர் சதாசிவவாதிகளாகச் சொல்லுவர். பிரளயாகலர் பிரமன் முதலாயினோர். சிலர் உருத்திரராதியாகச் சொல்வர். இவை மூலாகமபேதம்" (மேலது:100)

என்றவாறு விடையளித்தார். முதலியாரின் இவ்விடையை அங்குள்ள சைவப் பெரியார்கள் 'பாவச் செய்கை' எனக் கூறி நகைத்தார்கள். நாவலர் இம்மேற்கண்ட விடயத்தை எடுத்துக்காட்டுவதன் மூலம் சைவசித்தாந்தக் கோட்பாடுகளைப் பிழையாக விமர்சிப்போரையும் நகைப்பிற்கு உள்ளாக்கினார். தொடர்ந்து, கிறிஸ்தவர்கள் சைவத்தில் காணப்படும் பல வழிபாட்டு முறைகளையும் சிவசின்னங்களையும் சக்தி கோட்பாடுகளையும் ஆலயக் கிரியைகளையும் மூர்த்தி தத்துவங்களையும் எள்ளி நகையாடிக் கண்டித்து வந்தனர். அதன்விளைவாக சிறுசிறு பிரசுரங்களும், நூல்களும் வெளிவரலாயிற்று. எடுத்துக்காட்டாக நன்கொடை, மும்மூர்த்தி லக்ஷணம், குருட்டு வழி ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இதில் மும்மூர்த்தி லக்ஷணம் எனும் பத்திரிகையின் மூலம் சிவனின் பரத்துவமும், நன்கொடை எனும் பத்திரிகையின் மூலம் முருகக் கடவுளின் பரத்துவமும் விமர்சனத்திற்கு உள்ளாகின.

கந்தசுவாமியிடத்தில் பதிலக்ஷணம் இல்லையென்பதற்கு பாதிரிகளால், "கந்தபுராணத்திற் கூறப்படும் அவருடைய சரித்திரங்களுள் அவர் சாகரங் கொண்டு பிறந்தமையும் தெய்வயானையம்மையை விவாகஞ் செய்தமையும் கன்னிகையாகிய வள்ளியம்மையிடத்திற் சென்று அவளைத் தம்மோடு புணர்தற்குடன்படும்படி பிரார்த்தித்து அவள் உடன்படாமை கண்டு தமது தமையனாராகிய விநாயகக் கடவுளை அழைக்க அவர், யானைவடிவங் கொண்டு வந்தமை கண்டு அஞ்சித் தம்மிடத்தே அடைக்கலம் புகுந்த அவளைப் புணர்ந்தமையுமேயாம். இம்மூன்று முடையார் பதியெனப்படுதல் கூடுமோ?" என்றும், சிவனின் பரத்துவம் பற்றி விமர்சிக்கும்போது 'பரமசிவன் பார்வதியைப் புணர்ந்தார் பிரிந்தார். ஆதலால் பரமசிவனை பதியெனப்படுதல் கூடுமோ" என்றும் வினாக்களை எழுப்பி கண்டனத்தைத் தெரிவித்தனர் (மேலது:101).

பாதிரிமார்களால் முன்வைக்கப்பட்ட இவ்வினாக்களைக் கண்டித்த ஆறுமுகநாவலர் சுப்பிரபோதம் எனும் நூலில் சிவப்பரத்துவம் பற்றி சிறப்புற விளக்கிச் செல்வதன் மூலம் பாதிரிமாரிகளின் கண்டனத்திற்குப் பிரதிகண்டனத்தைத் தெரிவித்து சைவம், சைவசித்தாந்த உண்மைகளை நிலைநிறுத்துகிறார்.

"ஆண், பெண், அலி என்னும் மூன்றுமல்லாத அநாதி மலமுத்த பதியாகிய சிவத்தையே சர்வான்மாக்களையும் தோற்றுவித்தலால் ஆண்பாற்படுத்தும் பிதாவெனவும், சூரியனுக்குக் கிரணம்போல அச்சிவத்துக்கு அபின்னமாயுள்ள சக்தியையே நிமித்த காரணமாகிய அச்சிவம் அத்தொழிலியற்றுதற்குத் துணைக் காரணமாயிருத்தலால் பெண்பாற்படுத்து மாதாவெனவும், அச்சிவம் அச்சக்தியோடு கூடி உத்தியோகித்துச் சங்கற்பித்தலையே அவ்வான்மாக்களது தோற்றத்துக்குக் காரணத் தொழிலாகையால் உகந்து புணர்தலெனவும் அச்சங்கற்பம் இல்லாமையையே பிரிதல் எனவும் சொல்லியதென்றறிக" (மேலது:101).

என்றவாறு சித்தாந்தப் புலமையோடு தன்னுடைய பிரதிகண்டனத்தை முன்வைத்துள்ளார். ஆறுமுகநாவலருக்குப் பின் சங்கர பண்டிதர் மற்றும் ஆறுமுகநாவலருடைய மாணவர் பரம்பரையினரான சபாபதி நாவலர், சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை, த. கைலாசப்பிள்ளை, சைவப் பெரியார்

சு.சிவபாதசுந்தரனார், பண்டிதர் ம.வே.திருஞானசம்பந்தப்பிள்ளை, பண்டிதர் மு.கந்தையா போன்ற புலமையாளர்களும் கண்டன முறையைக் கையாண்டு சைவசித்தாந்த வளர்ச்சிக்குப் பணியாற்றியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

சங்கர பண்டிதர்

ஆறுமுகநாவலரின் சமகாலத்தில் வாழ்ந்த இலங்கையின் ஆளுமைகளுள் ஒருவராக சங்கர பண்டிதர் திகழ்ந்தார். இவர் சமயநிரூபணம், சைவசித்தாந்தம், தர்க்கவியல், பிறசமய கண்டனம், சமஸ்கிருதக் கல்வி, உரை எழுதுதல், பிரசங்கித்தல் போன்ற தளங்களில் இயங்கிய ஒருவராக அடையாளப்படுத்தப்படுகின்றார். பண்டிதர் தன்மதத்தைக் குறைகூறிய மதகாரர்களையும் மதங்களையும் அவர்வழியிலேயே சென்று கண்டித்தார். தர்க்க அடிப்படையில் அவர் குறைபாடுகளைக் கூறித் தன்மதம் நிறுவினார். இதற்கு பிறசமயக் கடவுளரை சைவசித்தாந்த பதி பற்றிய கருத்தியல்வழி நிராகரித்தார். அவர்களின் பிரமாண நூல்களை அவைதம் கருத்தைத் தர்க்கவழி குறைகண்டார். தன் மதக் கருத்தினைக் கூறி நிறுவினார். மிலேச்சமதவிகற்பம், கிறிஸ்துமத கண்டனம், சிவதூஷணகண்டனம் ஆகிய கண்டன நூல்களை இயற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

சபாபதி நாவலர்

கிறிஸ்தவர்கள் சைவத்திற்கும், சைவசித்தாந்த தத்துவத்திற்கும் எதிராகப் பழிச்சொற்களை ஏற்படுத்திவந்த காலத்தில் வாழ்ந்த சபாபதி நாவலர், அவர்களின் பழிப்புரைகளுக்கெதிராகப் பல கண்டனங்களை வெளியிட்டார். அவற்றில் சைவசித்தாந்த தத்துவத்தினூடாக சைவத்தின் உண்மைகள் கிறிஸ்தவர்களுக்கும், கிறிஸ்தவத்தைத் தழுவிக் கொண்டிருந்த சைவர்களுக்கும் உணர்த்தப்பட்டன.

அந்தவகையில் *1879*ஆம் ஆண்டு வைகாசி மாதம் *168* செய்யுட்களைக் கொண்ட 'யேசு மத சங்கற்ப நிராகரணம்' எனும் கண்டன நூலை எழுதி வெளியிட்டிருந்தார். இந்நூல் கிறிஸ்தவர்களின் சைவ சமயக் குற்றச்சாட்டுகளுக்கெதிரான பதிலடியாக அமைந்தது. இதன் சிறப்புக் கருதி சி.வை.தாமோதரம்பிள்ளை இதற்கு சிறப்புப்பாயிரம் அளித்து போற்றினார். மேலும,; சைவசித்தாந்தத்தை அகக்கருத்துக்களாய்க் கொண்ட பெரியபுராணம், தணிகைப் புராணம், போன்ற சைவ நூல்களின் மகிமையறியாது அவற்றைத் தூசித்து 'சிந்தாமணி' போன்ற அவைதிக நூல்களை போற்றித் திரிவோரைக் கண்டித்து 'வைதிக காவிய தூஷண மறுப்பு' எனும் கண்டன நூலை எழுதினார்.

இத்தகு கண்டனங்கள் சைவத்தையும், சைவசித்தாந்தத்தையும் தூற்றிய புறச் சமயங்களையும், அகப்புறச் சமயங்களையும் நேரடியாகத் தாக்கின. சைவசித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்ட கண்டனங்கள் அனைவர் மனதிலும் ஆழமாகப் பதியும்படி இவரால் இக்கண்டன நூல்களில் விளக்கப்பட்டன *(வேதநாதன்,மா., 2017:772).*

சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை

கண்டன வெளிப்பாட்டில் தனித்துவமான ஆளுமையாக குறிப்பிடப்படுபவர் சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளையாவார். 'எதிர் வேல் இலாது உலவும் கதிரைவேல்' என்று அவர்

அழைக்கப்பட்டார். இதற்குக் காரணம் கருத்து முரண்பாடுகள் தோன்றி ஏற்படும் வாதங்களில் தனது எதிர் தரப்பினர் அனைவரையும் தன் விவாதக் கருத்துக்களால் வெற்றி கொண்டவர் கதிரைவேற்பிள்ளை என்பதேயாகும். 36 வருடங்களே மண்ணில் வாழ்ந்த இவர் கொள்கை ரீதியாக கண்டித்தவற்றுள்,

- மாயா வாதம்,
- திருமால் விபூதிதாரி அல்லர் எனும் கருத்து,
- பௌத்த தத்துவம்,
- வேளாளர் வைசியரே எனும் கருத்து,
- வள்ளலார் பாடல் அருட்பா எனும் கொள்கை,

எனும் கண்டனங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை (பிரசாந்தன்.ஸ்ரீ., 2009:11). இக்கண்டனங்களுள் இவரது சைவசித்தாந்த அறிவாற்றல் புலப்பட்டு நிற்பதைக் காணமுடிகின்றது. இக் கண்டனங்களை முன்வைப்பதற்கு சைவசித்தாந்தத்தையே அடிப்படையாகக் கொள்கின்றாரஇ; நா.கதிரைவேற்பிள்ளை. ஒருமுறை சிந்தாதிரிப் பேட்டையில் மாயாவாதிகளது கூட்டமொன்றிற்குச் சென்ற இவர் அம்மாயாவாதிகளால் பதில் வழங்கவொண்ணாக் கேள்விக் கணைகளைத் தொடுத்தார் எனப்படுகின்றது. அதேபோல இராயப்பேட்டையில் அமைந்திருந்த வேதாந்த சபையில் காலம் எனும் பொருள் பற்றி வடிவேற் செட்டியாரோடு விவாதத்தில் ஈடுபட்டார்.

காசிவாசி செந்திநாதையர் தலைமைதாங்கிய சபை ஒன்றில் வேதாந்திகளை நோக்கி கதிரைவேற்பிள்ளை கேட்ட கேள்விகளுக்கு அவர்கள் பதில் சொல்லத் தவறினர். இதைக் கண்ணுற்ற காசிவாசியவர்கள். இவருக்கு 'மாயா வாத துவம்ச கோளரி' எனும் சிறப்புப் பெயர் சூட்டி மகிழ்ந்தார் என்று அறியப்படுகின்றது.

மாயாவாதிகளுடனான இக்கண்டன விவாதங்களில் சைவசித்தாந்த உண்மைகளை அடிப்படையாகக் கொண்டே கதிரைவேற்பிள்ளை கேள்விகளை விடுத்தார் என்பர். சைவசித்தாந்தம் மாயா வாதங்களுக்கெல்லாம் காலத்தாற் பிந்தித் தோன்றிய தத்துவமாதலால் மாயாவாதக் கருத்துக்களிலுள்ள முரண்பாடுகளுக்கான விடை சைவசித்தாந்தத்தில் கூறப்பட்டுள்ளமை இயல்பே. அதன்படி சித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்டு கதிரைவேற்பிள்ளை கேட்ட கேள்விகளுக்கு மாயாவாதிகள் பதில் சொல்லத் தவறியமை யதார்த்தமேயாகும்.

ஆரணி சமஸ்தான வித்துவானாக இவர் பணிபுரிந்த காலங்களில் ஒருநாள் மாயாவாத போதகாசிரியராகவிருந்த சாஸ்திரியார் ஒருவரோடு வாதம் புரிந்து அவருக்கு அத்துவித இலக்கணத்தைப் போதித்தார். இதன்பொருட்டு 'அத்துவித சித்தாந்த மகோத்தாரணர்' எனும் கௌரவ விருதுப் பெயர் கைவரப் பெற்றவரானார்.

'சைவபூஷண சந்திரிகை' எனும் நூலில் விபூதி, உருத்திராக்கம் ஆகிய சிவசின்னங்களைத் திருமால் அணிபவர் என்று கதிரைவேற்பிள்ளை கருத்துப் பதிவு செய்திருந்தார். இதைக் கண்ணுற்ற வைஷ்ணவர்கள் கதிரைவேற்பிள்ளையோடு வாதிடத் தீர்மானித்தார்கள். சைவசித்தாந்த சஞ்சீவினி சபை வேதாந்தப் பிரசங்க சபை ஆகியனவற்றினால் பலமுறை ஒழுங்கு செய்யப்பட்ட உரையரங்குகளில் விபூதி, உருத்திராக்க விவாத சபை எனும் பெயரில் கூட்டப்பெற்ற கூட்டங்களில் விபூதி, உருத்திராக்கம் பற்றி வாதிட வருமாறு பிள்ளை அவர்கள் வைஷ்ணவர்களை அழைத்தபோதும் அவர்கள் யாரும் விவாதத்திற்கு முன்வரவில்லை என அறியமுடிகின்றது.

சைவசித்தாந்த சஞ்சீவினி சபை, வேதாந்தப் பிரசங்க சபை, நடராஜ பக்தஜன சபை, சுத்தாத்துவித சைவசித்தாந்த சபை, வாதபுரீஷ பாதசேகர பக்த ஜனசபை, வேதாகமோத்த சைவசித்தாந்தசபை ஆகியவற்றால் விஷ்ணுதாரண விபூதி, உருத்திராக்க விவாத நிகமன சபை எனும் கூட்டமொன்று சென்னை வேணுகோபால சுவாமி அரங்க மண்டபத்தில் கூட்டப்பெற்றது. இக் கூட்டத்தில் அத்தியாச்சிரம பால சரஸ்வதி ஸ்ரீலஸ்ரீ ஞானானந்த சுவாமிகள் தலைமை தாங்க கதிரைவேற்பிள்ளையவர்கள் உரையாற்றினார். அவ்வுரையில் வேதங்கள், ஆகமங்கள், புராண, இதிகாசங்கள், திருமுறைகள், திருவாய்மொழி, நாலாயிர திவ்விய பிரபந்தங்கள் முதலியனவற்றிலிருந்து ஆதாரம் காட்டி திருமாலும் சிவனடியாராக இருந்து விபூதி, உருத்திராக்கம் முதலிய சிவசின்னங்களை அணிந்தார் என்று திருவாய் மொழிந்தார். இதற்கு பாம்பன் குமர குருதாஸ சுவாமிகளும், ஆ.கிருஷ்ணையரும் கூட்டத் தலைவரும் கதிரைவேற்பிள்ளையின் உரையை அனுவதித்து கருத்துத் தெரிவித்தார்கள்.

விபூதி, உருத்திராக்கம் முதலிய சிவசின்னங்கள் சைவத்தின் அடையாளங்களாகும். அவற்றை முறையாகப் பேணுவது சைவசித்தாந்த வாழ்வியலுக்கும் அடிப்படையாகும். இவ்வுண்மையை வைஷ்ணவர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும், விஷ்ணுவும் தான் எடுத்த அவதாரங்களில் தன்னைச் சைவசமயியாகவே அடையாளப்படுத்துகின்றார,; எனவே வைஷ்ணவர்களும் அவரைப் பின்பற்றி சைவசித்தாந்த வாழ்வியலை ஏற்றுக்கொள்ள வேண்டும், இதற்கு மறுப்புத் தெரிவித்தல் கூடாது என்பதுவே கதிரைவேற்பிள்ளையின் உள்ளக்கிடக்கையாகும்.

முக்தி பெற்ற சிவனடியார்களைப் பௌத்தர்கள் ஏளனம் செய்து வந்தமையைக் கேள்வியுற்ற பிள்ளை அவர்கள் மயிலாப்பூரில் கூட்டப்பட்ட மறுப்புக் கூட்டத்தில் உரையாற்றிய பின் சென்னை இராயப்பேட்டையில் பௌத்த ஆச்சிரமம் ஒன்றிற்கருகிலே பெரிய பாளையத்து அம்மன் கோயில் மகாமண்டபத்தில் பௌத்தத்தின் தத்துவ செறிவின்மையை விளக்கி பிரசங்கம் மேற்கொண்டதன் பின்னர் தான் அப்பிரசங்கத்தில் மொழிந்த கண்டனக் கருத்துக்களை எல்லாம் நூலாக்கி 'புத்த மதக் கண்டனம்' எனும் பெயரில் வெளியிட்டார் (மேலது:14).

தேவாரம், திருவாசகம் முதலாகத் திராவிட மாபாடியம் வரையான பல நூல்களும் பௌத்தத்தைக் கண்டிப்பதாக அமைந்தாலும் தான் 'புத்த மதக் கண்டனம்' எனும் நூலை எழுத வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது என்பதை கதிரைவேற்பிள்ளையே இக்கண்டன நூலின் முகவுரையில் குறிப்பிட்டுள்ளமையைக் காணமுடிகின்றது.

"தென்னிந்திய சாக்கிய சங்கத்தாரும், கொழும்புத் தியசாபிக் கூட்டத்தாரும் வாயில் வந்தவாறு சைவ நிந்தைகள் புரிந்து புத்தமார்க்க வினாவிடை, இரவு பகலற்ற வொளி, புத்தாகம பாலபோதக வினாவிடை, புத்தாகமப் பிரகடனம், என்னும் தூஷண வழூஉச் சுவடிகளை வெளிப்படுத்தினமையால் புத்தமத தடத்த லக்கணங்களை எல்லாமெடுத்து அவர் நூல்களையும், வாக்கியங்களையும் கொண்டே அவற்றையெல்லாம் நிராகரித்து ஒழித்து சைவநிந்தைகளையும் ஒதுக்கிப் புத்தமதக் கண்டனம் எனும் பெயரோடு இந்நூல் செய்து வெளியிட்டோம்" (கதிரைவேற்பிள்ளை.நா., 1903:02).

பௌத்தம் இறைக்கோட்பாட்டையும், இந்துசமய வேதக் கருத்துக்களையும் ஏற்றுக்கொள்ளாத வைதிக சமயப் பிரிவின்பாற்பட்டது. இதன் கோட்பாடுகள் சைவசித்தாந்தத்தின் கோட்பாடுகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டவை. எனவே, கதிரைவேற்பிள்ளை சைவசித்தாந்தத்தை மறுக்கும் பௌத்த தத்துவங்களை முழுவதும் கண்டித்து இக்கண்டன நூலை எழுதினார்.

பௌத்த சமயத்தின் பழமையான நூல்களையும் கற்றுணர்ந்திருந்த அவர், அந்நூல்களில் விக்கிரகம், பூசை, உபசாரம், உற்சவம் என்பனவற்றை பௌத்தர்களும் கடைப்பிடித்தார்கள் என்பதற்கான ஆதாரங்கள் இருப்பதாகவும் எடுத்துக் கூறினார். அப்பழமையான நூல்களை அறியாத புதிதாக முளைத்த பௌத்தர்கள் எழுதிய புதிய புத்தகங்கள் சைவசமயத்தின் விக்கிரகம், கோயில், பூசை, விரதம் முதலியவற்றை இழித்துப் பேசுவது அறியாமையும், கொடும்பாவமுமாகும் என்று கண்டனங்களை முன்வைத்து சைவசித்தாந்த சைவத்தை மெய்நிலைப்படுத்தினார் (மேலது:35). மேலும், சைவசித்தாந்தத்தில் கூறப்படும் குரு, லிங்க, சங்கம வழிபாடுகள் எனும் ஆன்ம விடுதலைக்கான மார்க்கங்களில் சங்கமர் எனும் சிவனடியார் கூட்டத்தை பௌத்தம் இழித்துப் பேசியது. எனவே, அதற்கான பதில் கண்டனத்தை இந்நூலில் சிவனடியார்கள் குறித்த தூஷணங்களை நிராகரிக்கும் பகுதியினூடாக வெளிப்படுத்தினார்.

பௌத்த தத்துவங்களுக்கு ஆதாரமான பல கருத்துக்கள் உபநிடதங்களிலிருந்துதான் பௌத்தர்களால் பெறப்பட்டிருக்கின்றன என்பதனையும் வெளிப்படுத்தினார். அத்துடன் மாக்ஸ் முல்லர், ஒல்டன் பர்க், மானியர் வில்லியம்ஸ் முதலியோரது ஆய்வுக் கருத்துக்களையும் சான்றாதாரம் காட்டி தன் கண்டன நூலுக்கு மேலும் வலுச்சேர்த்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

'போலியருட்பா மறுப்பு' எனும் இவரது கண்ட நூலின் சிறப்பைக் கண்டு 'போலியருட்பா பிரபந்த நிர்க்கந்த கிஞ்சுக கண்டனப் பிரசண்ட மாருதம்' எனும் சிறப்புப் பெயரையும் அறிஞர்கள் இவருக்குச் சூட்டி மகிழ்ந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும் (ஞானகுமாரன்.நா.,1998:28).

த. கைலாசப்பிள்ளை

கிறிஸ்தவ மதப் போதகர்கள் மற்றும் பாதிரிமார் தமது சமயத்தை ஆதரித்தும், பிற சமயங்களைத் தூஷித்தும் மதம் பரப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதைக் கண்ணுற்ற கைலாசப்பிள்ளை அவர்களும் வேறு சில அறிஞர்களும் இணைந்து 1887ஆம் ஆண்டு கிறிஸ்து மதக் கண்டன சபையைக் கூட்டி அதன் மூலமாகச் சைவசித்தாந்த உண்மைகளை மக்களுக்கு எடுத்தியம்பி மக்களை விழிப்படையச் செய்துள்ளனர். இவர்களுள் த.கைலாசப்பிள்ளையின் பணிகள் தனித்துவமானவைகளாகச் சொல்லப்படுகின்றன.

பாதிரிமார்களுடன் நேரடியாகவே விவாதங்களில் ஈடுபட்ட அவர் அவர்களின் தவறுகளைக் கடுமையாகக் கண்டனம் செய்து கண்டனக் கருத்துக்களை வெளியிட்டார். கிறிஸ்தவப் பாதிரிமார்களுடன் சைவசித்தாந்த உண்மைகளை எடுத்துக் கூறி பதில் கண்டனங்கள் வழங்கி சைவத்தின் உண்மைகளை நிலைநாட்டினாரே ஒழிய ஒருக்காலும் கிறிஸ்தவ சமயத்தையோ, இயேசு நாதரையோ பழித்துரைக்கவில்லை என்று குறிப்பிடப்படுகின்றது (வேதநாதன்,மா.,2017:1171) இது அவரது சமத்துவ மனப்பான்மைக்குச் சான்றாகும். பெருமளவிலான துண்டுப்பிரசுரங்களைச் சைவசித்தாந்தத்திற்கு வலுச்சேர்க்கும் நோக்கில் எழுதி வெளியிட்டார்.

சைவப் பெரியார் கூ.சிவபாதசுந்தரனார்

கண்டன மரபை முன்னெடுத்த சைவசித்தாந்த ஆளுமைகளுள் அடுத்து குறிப்பிடத்தக்கவர் சைவப்பெரியர் சு.சிவபாதசுந்தரனாராவார். 1953ஆம் ஆண்டு ஈழகேசரியில் சைவப்பெரியார் எழுதிய கட்டுரை ஒன்றில் கிறிஸ்தவத்தில் நரகம் என்ற ஒன்றிருப்பதைக் காட்டி, அவர்களுடைய சமயத்தில் பாரபட்சம் காட்டப்படுவதாகக் கூறி சித்தாந்த சைவத்தின் மேன்மையை உணர்த்தத் தலைப்பட்டார் (மேலது:1064).

இவருடைய ஆங்கில நூல்களில் கண்டன நூல் இலக்கணத்தால் சிறந்ததாக An Outline of Sivagnanabodham with a Rejoinder to a Christian Critic என்ற நூல் குறிப்பிடப்படுகின்றது. செல்வி வயலட் பரஞ்சோதியின் சைவசித்தாந்தம் என்ற ஆங்கில நூலின் கருத்து முரண்பாடுகளை மறுக்கும் எதிரேற்று வகையீனதான கண்டன நூலாக இது அமைகின்றது.

சைவசித்தாந்தக் கருத்துக்களைத் திரித்தும், தவறாகக் கருதியும் பல ஆண்டுகளுக்கு முன் வெளிவந்த வயலட் பரஞ்சோதியின் ஆய்வேட்டினை அங்கீகரித்து தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகம் ஒன்று அவருக்குக் கலாநிதிப் பட்டம் கொடுத்துக் கௌரவித்தது. அவரது அவ்வாய்வேட்டிலுள்ள சைவசித்தாந்தத்திற்கெதிரான பிழைகளுக்கு மறுப்புத் தெரிவிக்க விழைந்த தருமபுர ஆதீனத்து வைத்தீஸ்வரன் கோயில் தம்பிரானாக இருந்த சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்இ சிவபாதசுந்தரனாரைக் கொண்டு அதற்கான மறுப்பு நூலொன்றை எழுதத் துணிந்தார். அதன்படி தம்பிரானின் வேண்டுதலைச் சுவீகரித்துக் கொண்ட சைவப்பெரியார் சிவஞானபோதச் சூத்திரங்கள் 12 இற்கும் பொழிப்புரையும், விளக்கமுந் தந்ததோடு, ஆங்காங்கே வயலட் பரஞ்சோதி குறிப்பிட்டிருந்த ஆட்சேபங்களுக்குத் திட்பநுட்பமான மறுப்பும் விடுத்தார்.

வயலட் பரஞ்சோதி சைவ சித்தாந்தம் தொடர்பான தனது ஆக்கங்களில் உள்ளார்ந்த உண்மை அர்த்தங்களைக் கொண்டு வருவதில் சிதைவு கண்டுள்ளதாக சிவபாதசுந்தரம் குறிப்பிடுகிறார். ஆழ்ந்த தத்துவங்கள் பொதிந்த தெய்வீக அருட்பனுவல்களை மொழிபெயர்க்கும்போது அதன் பொருள் நுட்பத்தில் மிகுந்த கவனம் செலுத்தப்பட வேண்டும். இங்கே மூன்று நிலைகளில் சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் பொருட்சிதைவைச் சுட்டிக்காட்டுகிறார்.

- சித்து, அசித்தை எவ்வாறு ஆழ்கிறது, அசித்து, சித்தை எவ்வாறு ஆழ்கிறது.

- மாயையில் ஏற்படும் மாற்றம் எத்தகையது.
- மாயை எங்ஙனம் ஆன்மாவை ஒளிரச் செய்கிறது.

முதலாவது சூத்திரத்துக்கு வயலற் பரஞ்சோதி கூறுவது, 'Existence is thus invariably associated with production and dissolution'. ஆனால் மெய்கண்டதேவர் உண்மையில் கருதுவது உலகம் என்பது உண்மையாதலால் அதற்கு மூலம் ஒன்று இருக்க வேண்டும். இதனை சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் 'Since there is a subject to the three operations of production, maintenance and dissolution, it is an existing thing that has been caused' எனத் தெளிவுபடுத்துகிறார் (மேலது:507). அதாவது படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் புரியும் பொருளொன்று உள்ளதால் அதுவே அனைத்துக்கும் காரணமாகும்.

இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் இடையிலான உறவைக் கூறும்போது 'The relations are either attributes of the terms to be related or they are independent' என்கிறார் வயலற் பரஞ்சோதி. அதனை சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் உதாரணம் மூலம் பின்வருமாறு விளக்குவார். ஐந்து இரண்டிலும் பெரியது. (5,2). ஆனால் இது ஐந்துக்கும் இரண்டுக்கும் உரிய உறவேயன்றி ஐந்து பெரியது என்றோ இரண்டு சிறியது என்றோ கூறிவிட முடியாது. ஏனெனில் 6 எனும் இலக்கத்தோடு பார்த்தால் 5 சிறிதே. அவ்வாறே இறைவனுக்கும் ஒவ்வோர் ஆன்மாவுக்குமான தொடர்பும் ஆகும்.

சித்தினை அசித்து ஆள முடியாது என்பது வயலற் பரஞ்சோதி என்பாரின் கருத்து. 'Chit cannot Act on achit, that Achit cannot act on Chit and so on' இதற்கு சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் அவர்களுடைய விளக்கம் பின்வருமாறு அமைகின்றது. "ஆன்மாவானது உடலை ஒரு கருவியாகக் கொண்டு தொழிற்படுகிறது. பஞ்ச பூதங்களாலான ஸ்தூல சரீரமும், மனமாகிய சூக்கும சரீரமும் அசித்தாக உள்ளன. ஆன்மாவின் இயக்கம் இன்றி அவற்றால் தொழிற்பட இயலாது என்பது வெளிப்படை. அந்த ஆன்மாவே சித்தாக உள்ளது. எனவே சித்து அசித்தை ஆழ்கிறது. மறுபுறம் ஆன்மாவின் இயக்கத்துக்கு அல்லது தொழிற்பாட்டுக்கு ஓர் ஊடகம் அல்லது கருவி அவசியம். உடலும் மனமும் அத்தகைய கருவிகளே. எனவே அசித்து சித்தினை ஆள்கிறது" (மேலது:508). இவ்வாறு உள்ளார்ந்த அர்த்தங்களைத் துல்லியமாகவும், தெளிவாகவும் விளங்கவைக்கிறார் சைவப் பெரியார் சிவபாதசுந்தரனார்.

இவ்வாறு சிவஞானபோத சூத்திரங்கள் 12 இல், முதலாம் சூத்திரத்தின் சார்பில் எட்டும், இரண்டாம் சூத்திரத்தின சார்பில் பதின்மூன்றும், ஏழாம் சூத்திரத்தின் சார்பில் ஆறும் என்று மொத்தமாக 38 ஆட்சேபங்களை வயலட் பரஞ்சோதி தன்னுடைய ஆய்வேட்டில் குறிப்பிட்டிருந்தார். இவ்வனைத்து ஆட்சேபங்களுக்கும் சைவப்பெரியார் திறம்பட கண்டன விளக்கம் செய்தார். பின் இம்மறுப்பு நூலை தமிழில் மொழிபெயர்த்து க.கணேசலிங்கம் மலேசியாவில் 2002 இல் வெளியிட்டார் (கணேசலிங்கம்.க., 2002:13).

ம.வே.திருஞானசம்பந்தப்பிள்ளை

சைவ, கிறிஸ்தவ சமயங்களுக்கிடையே கடுமையான போட்டி நிலவிய அக்காலச் சூழலில் கிறிஸ்தவப் பத்திரிகைகள் சைவசமயத்தின்மேல் அதீத கண்டனங்களை விடுத்தார்கள். அப்போதெல்லாம் சம்பந்தப்பிள்ளை இந்து சாதனம் பத்திரிகையினூடாக தனது கண்டனங்களை வெளிப்படுத்தினார். வட்டுக்கோட்டை அமெரிக்கமிஷன் கல்லூரியிலிருந்து வெளிவந்த மாணவர் இதழான 'இளஞாயிறு' எனும் சஞ்சிகையில் 'பரமசிவனுக்கோர் பகிரங்கக் கடிதம்' என்னும் தலைப்பில் கடிதமொன்றை மாணவர் எழுதியிருந்தார். அக்கடிதத்தின் அடிப்படையில் சிவமும், சித்தாந்த சைவமும் கேலிக்குட்படுத்தப்பட்டிருந்தன. அக்கடிதத்திற்கு எதிராகக் கடுமையான கண்டனங்களை சம்பந்தப்பிள்ளை வெளிப்படுத்தினார். இக்கண்டனங்கள் யாழ்ப்பாணத்தில் கடுமையான வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தின. அதன் விளைவாக வட்டுக்கோட்டைக் கல்லூரி அதிபரே அக்கட்டுரையைப் பிரசுரம் செய்ய அனுமதித்தது தவறு எனக்கருதி பொது மக்களிடம் மன்னிப்புக் கேட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது.

சம்பந்தப்பிள்ளை கிறிஸ்தவ சஞ்சிகையான சத்திய வேத பாதுகாவலனில் பலமுறை வாதப்பிரதிவாதங்களில் ஈடுபட்டார். இதனை, ''பாதுகாவலருடன் நீ பன்முறைகளிலே சமய விஷயமாய்த்; தர்க்கமாடியதுண்டு'' என்னும் அப்பத்திரிகை ஆசிரியரின் கூற்றிலிருந்து அறிந்து கொள்ள முடிகின்றது (மேலது:16). பிறமதக் குற்றச்சாட்டுக்களுக்கு எதிராகக் கண்டனங்களை வெளியிட்டதோடு அகச் சமயத்தினுள்ளே காணப்படும் குறைபாடுகளுக்கெதிராகவும் கண்டனங்களை முன்வைத்;தவராக அறியப்படுகின்றார். இக்கண்டனங்கள் அனைத்தும் சித்தாந்த சைவத்தின் பெருமையைப் பாதுகாக்கும் நோக்கிலேயே கட்டமைக்கப்பட்டிருந்தன.

பண்டிதர் மு.கந்தையா

இலண்டன் மெய்கண்டார் ஆதீனம், உலக சைவப் பேரவையின் ஆதீன கர்த்தா தவத்திரு சிவநந்தி அடிகளார் 'தத்துவ உலகில் தடம் பதித்த பண்டிதர் மு. கந்தையா' எனும் நூலுக்கு வழங்கிய வாழ்த்துரையில் பண்டிதர் மு.கந்தையாவைப் பற்றி,

''சீரிய சிவப்பணிக்குத் தன்னை அர்ப்பணித்தவர் கலாநிதி பண்டிதர் மு.கந்தையா அவர்கள். இவர் மும்மொழிப் புலவர், சைவசித்தாந்த வித்தகர், திருமுறைகளில் முழுகித் திளைத்தவர். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரைப் பின்பற்றி பல அரிய சைவநூல்களையும், கட்டுரைகளையும், கண்டனங்களையும் துணிந்து வெளியிட்டவர்'' (கணேசலிங்கம்,க., 2002)

என்று குறிப்பிட்டுள்ளமை அவர் கண்டனங்களை வெளியிடுவதற்குச் சற்றுந் தயங்காதவர் என்பதை உறுதிப்படுத்துவதாகின்றது. சைவவிரோதச் செயல்களைக் கண்டித்துப் பல கட்டுரைகளை அவர் எழுதினார்.

''சைவ சித்தாந்தத்திற் சங்கரர் கொள்கை ஊடுருவலும், சைவாலயக் கிரியை அமைதிக்குள் சாக்த ஊடுருவலும் நிரந்தர இன்னல்களாகப் (Standing Nuisance) பார்க்கப்படுகின்றன. இவற்றை

இனங்கண்டு களைந்து உண்மையை விளக்குதல், பயிர் வளர்ச்சிக்குக் களை பிடுங்கி நீர்ப் பாய்ச்சுதல் போலாம்" (மேலது:44) என்று கண்டன உரைகளை எழுதி சைவசித்தாந்தத்தைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தைக் கண்டனமாக எடுத்துரைத்தார்.

நிறைவுரை

சைவசித்தாந்தச் செல்நெறியில் ஈழத்தவர்களின்; பல்வகைமைச் செயற்பாடுகள் எனும் விடயத்தின் வழி சைவசித்தாந்தத்தை மக்கள்மயப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளாக புராணபடனம், பிரசங்கம், கண்டனம், நாடகம், சைவசித்தாந்த வகுப்புக்கள், பத்திரிகைகள், இதழ்கள் என்பன முக்கியம் பெறுகின்றன. இவற்றுள் கண்டன முறைமை தனித்துவமானதாக அமைகின்றது. கருத்து முரண்பாடுகள் தோன்றி ஏற்படும் வாதங்களில் எதிர்தரப்பினரைத் தம் வாதக் கருத்துக்களால் வெற்றி கொண்டமை, கண்டன நூல்களை தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிட்டமை என்பன சைவசித்தாந்த வளர்ச்சியில் ஈழத்தவர்களின் முக்கிய செயற்பாடுகளாக அமைகின்றன எனலாம்.

உசாத்துணை நூல்கள்

இரகுபரன்,க., பிரசாந்தன்,ஸ்ரீ., கௌரிகாந்தன்,மு.(பதி). (2016) நாவலர் நறுமலர். இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம். கொழும்பு.

வேதநாதன்,மா.(பதி). (2017). சைவசித்தாந்த மேன்மைகளும் இலங்கையரின் பங்களிப்பும். அனைத்துலகச் சைவமாநாடு. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பிரசாந்தன்,ஸ்ரீ. (2009). சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை. கொழும்புத் தமிழ்ச் சங்கம், கொழும்பு.

கதிரைவேற்பிள்ளை,நா. (1903). புத்த மதக் கண்டனம். கோள்டன் அச்சியந்திர சாலை. சென்னை.

கணேசலிங்கம்,க. (2002). தத்துவ உலகில் தடம்பதித்த பண்டிதர் மு.கந்தையா. உலகச் சைவப் பேரவை. இலண்டன்.

சிவபாதசுந்தரனார்,நா. (1978). சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரனார். சைவப்பெரியார் நூற்றாண்டு விழாச்சபை. யாழ்ப்பாணம்.

கணபதிப்பிள்ளை,சி. (1978). "சைவப் பெரியார் சு.சிவபாதசுந்தரனார் அவர்களின் உயர் தனிப்பெருமை," புலோலியூர் சைவப் பெரியார் சு.சிவபாதசுந்தரனார் நூற்றாண்டு மலர், சிவபாதசுந்தரனார் நூற்றாண்டு நிறைவு விழாச் சபையினர், யாழ்ப்பாணம்.

சைவசித்தாந்த அறிவாராய்ச்சியியலில் ஆகமப் பிரமாணம்

தி. செல்வமனோகரன்;

சைவசித்தாந்தத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

tselvan@univ.jfn.ac.lk

ஆய்வுச் சுருக்கம்

சைவ மெய்யியல்களுள் இன்றும் செல்வாக்குமிக்க ஒரு மெய்யியலாக நின்று நிலைத்திருப்பது சைவ சித்தாந்தம் ஆகும். இது சிவனுடன் சம்பந்தம் உடையது என்றும் சிவன் பற்றிய முடிந்த முடிவு என்றும் சைவத்தின் முடிந்த முடிவு என்றும் பலவாறு விளக்கப்படுகின்றது. சைவ சித்தாந்த நூல்களாக வடமொழி அஷ்டப்பிரகரண நூல்களும் மெய்கண்ட சாஸ்திரங்களும் பிற்காலத்தில் பண்டார சாஸ்திரங்கள் மற்றும் தத்துவப்பிரகாசம், சிவநெறிப் பிரகாசம் போன்ற பல நூல்கள் சுட்டப்படுகின்றன. இந்நூல்களில் தர்க்கவியல் முதன்மையுற்றுக் காணப்படுகிறது. சைவசித்தாந்த மெய்யியல் என்கின்ற வகையில் இந்நூல்கள் மெய்மை பற்றி அறிவதிலும் ஆராய்வதிலும் அதிக அக்கறையை காட்டி நிற்கின்றன. அந்த வகையில்இ அவை அறிவாராய்ச்சியியல் மரபுக்கு உரியவனாகின்றன. அறிவு பற்றிய ஆராய்ச்சியில் அளவைகள் எனும் பிரமாணங்கள் மெய்யியலில் முதன்மை பெறுகின்றன. அந்த வகையிலஇ; சைவசித்தாந்தமும் இந்திய மெய்யியலின் பத்து அளவைகளையும் உட்செரித்து காட்சி, அனுமானம், ஆகமம் எனும் மூன்று அளவைகளாக அவற்றை உள்வாங்கித் தனது கருத்துக்களை தர்க்கபூர்வமாக முன்வைத்துள்ளது. அந்த வகையில்இ இந்த ஆய்வுக் கட்டுரையானது சைவ சித்தாந்த அறிவாராய்ச்சியியல், தர்க்கவியல் பொருத்தப்பாடு மற்றும் ஆகமப் பிரமாணத்தின் வகிபங்கு என்பனவற்றை மதிப்பீடு செய்வதை நோக்கமாகக் கொண்டு அமைகின்றது. சைவசித்தாந்தம் அறிவாராய்ச்சியியலைத் தர்க்கவியலாகக் கோட்பாட்டுத் தளத்தில் முன்வைத்ததா என்பதும் அதற்கு எவ்வகையில் ஆகமப் பிரமாணத்தை அது முன்வைத்துப் பயன்படுத்தியது, முப்பொருள்கள் அவற்றுக்கிடையிலான தர்க்கவியைபு என்பவற்றை நிறுவ அது எவ்வாறு உதவியது என்பதுமே இங்கு ஆய்வுப்பிரச்சினையாகக் கொள்ளப்படுகிறது. இந்த ஆய்வில் விபரண முறை, வரலாற்று முறை, ஒப்பீட்டு முறை எனும் ஆய்வு முறைகளும் பயன்படுத்தப்படுகின்றன. இந்த ஆய்வு ஆகமப் பிரமாணத்தை அது சைவ சித்தாந்தத்தில் பெறும் தர்க்கவியல் பெறுமானத்தை சைவ சித்தாந்த மெய்யியல் மரபில் அது பெறும் முக்கியத்துவத்தை ஆராய முற்படுகிறவர்களுக்குப் பயனுள்ளதாக அமையும்.

திறவுச் சொற்கள் : ஆகமப்பிரமாணம், தர்க்கவியல், அறிவு, மெய்யியல், சைவசித்தாந்தம்

அறிமுகம்

இந்திய மெய்யியற் பரப்பில் தனித்துவ அடையாளம் பெற்றதாக சைவமெய்யியல் காணப்படுகிறது. இது காஷ்மீரசைவம், வீரசைவம், சைவசித்தாந்தம் என்பன முறையே காஷ்மீர், கன்னடம், தமிழ்நாடு எனுமிடங்களில் தனித்துத் தனித்து வளர்ச்சி பெற்றன. இவற்றுள்ளும் சைவசித்தாந்தம் ஆகமமரபோடு வேதமரபையும் ஏற்றுப் பயணித்து வருகின்றது. ஆகமங்களின் ஞானாபாத வெளிப்பாடாக,

ஆகமாந்தமாகச் சைவசித்தாந்தம் சொல்லப்படுகின்றது. வடநாட்டுப் பாரம்பரியமும் தென்னாட்டு - தமிழ்ப் பாரம்பரியமும் பன்மைவாத சைவசித்தாந்தத்தின் வழி ஒன்றுபடுகின்றன. தென்னக வரலாற்றில் பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களினூடும் நாயன்மார்களின் திருமுறைகளினூடும் வளர்நிலை பெற்ற சைவசித்தாந்தம்இ சோழர் காலப் பிற்பகுதியில் எழுந்த மெய்கண்டாரின் ஞான பரம்பரையின் வழி தோத்திர மரபினின்றும் மாறுபட்டு சாத்திர நிலை பெறுகிறது. கருத்துமுதல்வாதத் தளத்தில் இயங்கும் இம்மெய்யியல் பதி, பசு, பாசம் எனும் முப்பொருள்கள், அவற்றுக்கிடையிலான தர்க்கவியைபு என்பவற்றையும் ஆன்மாவுக்கான பேற்றையும் முன்வைக்கிறது. இதனைத் தர்க்கவியற்றளத்தில் கட்டமைக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

சைவசித்தாந்தம் தன் காலச் சூழல்இ தேவை மற்றும் கருத்துரு அடிப்படையில் தன்னைச் சமயமாகவும் மெய்யியலாகவும் தகவமைத்துக் கொண்டது. அதன்வழி தன்னை வாழும் சமயமாக நிறுவியதோடு முன்னோரளித்த மெய்யியற் புலமை மரபில் காலூன்றி தர்க்க அடிப்படையில் தன்னை மெய்யியலாகவும் கட்டமைத்துக் கொண்டது.

மெய்யியல் என்பது அறிவின் விசாரம் எனப்படுகிறது. இது அறிவின் பாற்பட்ட செயற்பாடாகிறது. 'அறிவு பற்றிய ஆராய்ச்சி' அறிவாராய்ச்சியியல் (Epistemology) எனப்படும். Epistme - அறிவு, Loges - முறைமை; இது அறிவின் மூலங்கள், வகைகள், இயல்புகள், வலிதுடைமை பற்றி; ஆராய்வதாக அமைகின்றது. இந்திய மெய்யியல் அறிவு, தர்க்கம், பிரமாணங்கள் என்பன பற்றியே எடுத்துரைக்கின்றது. மேலைத்தேய மெய்யியல்களே அறிவாராய்ச்சியியல் எனும் பதத்தை அறிமுகம் செய்தன. பிற்கால இந்திய மெய்யியலில் முற்சொன்ன அறிவு - தர்க்கம் - பிரமாணவியல் என்பவற்றை உள்ளடக்கியதாக அறிவாராய்ச்சியியல் எனும் சொல் வழங்கி வருகிறது. இது அறிவு பற்றிய முறைமை எனவும் அறிவு பற்றிய கருத்துக்களோடு கரிசனப்படுவதாகவும் எடுத்தாளப்படுகிறது (Kandaswamy, S.N.,2000:01). இந்திய மெய்யியலில் அறிவு என்பது ஞானம், வித்யா உள்ளிட்ட பல்வேறு பெயர்களால் சுட்டப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

அறிவாராய்ச்சியியல் அறிபவன், அறிபொருள், அறிகருவி என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டது. இவை முறையே பிரமாதா, பிரமேயம், பிரமாணம் எனப்படுகின்றன. அறிபவன் - ஆத்மன்இ அறிபொருளை அறிய உதவுவன அளவைகள் எனப்படுகின்றன. இந்திய மெய்யியலில் பிரமாணங்களாக பிரத்தியட்சம் (காட்சி), அனுமானம் (கருதல்), ஆப்தம் (உரை), அனுலப்தி (இன்மை), அருத்தாப்தி (பொருட்பேறு), உபமானம் (ஒப்பு), ஐதீகம் (உலகுரை), சம்பவம் (உண்மை), பரிசேடம் (ஒழிபு), சுபாவம் (இயல்பு) எனும் பத்தும் எடுத்தாளப்படுகின்றன. இவற்றுள் நியாய தரிசனம் பிரத்தியட்சம், அனுமானம், ஆப்தம், உபமானம் எனும் நான்கையும் ஏற்று நிற்கிறது. சைவசித்தாந்திகள் பிரத்தியட்சம், அனுமானம், ஆப்தம் எனும் மூன்று அளவைகளை மட்டுமே ஏற்கின்ற அதேவேளை ஏனைய ஏழு அளவைகளும் இம்மூன்றினுள் உள்ளடங்குகின்றன(சிவஞானசித்தியார்.7). இப்பிரமாணங்கள் அறிவைப் பெற வல்ல மூலங்களாகத் திகழ்கின்றன.

இன்றைய உலகமயமாதற் சூழலில் அறிவு - அறிவைக் கண்டடையும் முறைகள் என்பவற்றோடு அறிவுசார் பிரயோகமும் விஞ்ஞான அடிப்படையில் முதன்மை பெற்றுக் காணப்படுகின்றது. அந்த வகையில்;, அறிவுவாதத்தின் வழி தன்னைத் தகவமைத்து இன்றும் செல்வாக்குற்று விளங்கும்

சைவசித்தாந்தத்தை அறிவாராய்ச்சியியல் அடிப்படையில் ஆராய்தல் இந்திய அறிவாராய்ச்சியியல் மரபின் ஒரு பாகத்தைப் புரிந்துகொள்ள வாய்ப்பளிக்கும். ஒவ்வொரு மெய்யியற் பிரச்சினையும் முன்பு அங்கீகரிக்கப்பட்டதொரு கருத்தை ஐயுறுவதிலிருந்தே ஆரம்பமாகின்றது. இது வளர்நிலை பெற்று சிறிது சிறிதாக அறிவின் சாத்தியப்பாடு பற்றிய கருத்துருவுக்கும் பரவிற்றென்பர். சமய நம்பிக்கைகள், உண்மை என நிறுவப்பட்டாலன்றி அவை 'அறிவு' எனும் நிலையைப் பெறமுடியாது.

ஆய்வின் நோக்கம்

இந்திய அறிவாராய்ச்சியியல் சிந்தனைப் புலத்தில் சைவசித்தாந்த மெய்யியல் முன்வைக்கும் ஆகமப் பிரமாணம் பற்றிய கருத்துக்களை ஆராய்வதனூடாக அதன் கருத்தியற்புலம்இ தர்க்கவியற்புலம் என்பவற்றை மதிப்பிடவும் ஆகமப் பிரமாணம் சைவசித்தாந்த மெய்யியற்றளத்தில் பெறும் இடம் என்பவற்றை மதிப்பிடவும் முடியும். இதுவே இவ்வாய்வின் அடிப்படை நோக்கமாகும்.

ஆய்வுப் பிரச்சினை

சைவசித்தாந்தம் அறிவாராய்ச்சியியலைத் தர்க்கவியலாகக் கோட்பாட்டுத் தளத்தில் முன்வைத்ததா என்பதும் அதற்கு எவ்வகையில் ஆகமப் பிரமாணத்தை அது முன்வைத்துப் பயன்படுத்தியது. முப்பொருள்கள் அவற்றுக்கிடையிலான தர்க்கவியைபு என்பவற்றை நிறுவ, அது எவ்வாறு உதவியது என்பதுமே இங்கு ஆய்வுப்பிரச்சினையாகக் கொள்ளப்படுகிறது.

ஆய்வு முறையியல்

இந்த ஆய்வு விபரண ஆய்வாக முன்னெடுக்கப்படுகின்றது. தேவையான இடங்களில் வரலாற்று முறை, ஒப்பீட்டு முறை ஆகிய ஆய்வு முறைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

ஆகமப் பிரமாணம்

நியாயமும் சைவசித்தாந்தமும் ஏற்றுக்கொள்ளும் தனிப் பிரமாணங்களுள் மூன்றாவதாக இலங்குவது ஆகமப் பிரமாணமாகும். இதனை சப்தப்பிரமாணம், உரையளவை, ஆப்தஅளவை எனப் பலவாறு அழைப்பர்."ஆப்தோபதேசஹா சப்த" (Nyāya Sūtra,1.1.7) என நியாய சூத்திரம் ஆப்தத்தைக் குறிப்பிடுகிறது. பெயர் குறிப்பிடப்படாத மேலான நபரிடம் இருந்து பெறப்படும் அளவையாக இது குறிப்பிடப்படுகிறது.

'சத்தப்பிரமாணம் ஆத்தன் வாக்கியம். ஆத்தன் உரியோன் என்பன ஒரு பொருட்கிளவி. ஆத்தனானவன் உண்மைப்பொருளைக் கூறுவான். வாக்கியம் பதங்களின் கூட்டம்; அது 'ஆவைக்கொணா' என்பன முதலியனவாம். பதமாவது ஆற்றல் உடையது. ஆற்றல் இப் பதத்தால் இப்பொருள் உணர்த்துக என்னும் இறைவன் சங்கேதம்'(தருக்கசங்கிரகம், 69) என அன்னப்பட்டர் விபரிக்கிறார்.

சைவசித்தாந்தத்தில் ஆகமப் பிரமாணம்

சைவசித்தாந்தம் ஆகமப் பிரமாணத்துக்கு மிகுந்த முக்கியத்துவத்தைக் கொடுக்கின்றது. காட்சி, அனுமானம் என்பன தராத அறிவை ஆகம அளவை தருமென்கிறது. அதேவேளை காட்சி, கருதல் அளவைகளுக்கு உரியதே ஆகமப் பிரமாணம் என்கிறது (Ponniah, V.,1952: 259). ஆகமப் பிரமாணம், வாக்கியப் பொருளுணர்ச்சியின் கருவி என்றும் சிற்சக்தியோடு கூடிய சத்தமே வாக்கியப் பொருளுணர்ச்சியின் கருவியாகும் எனவும் சங்கர பண்டிதர் விளக்குகிறார் (செல்வமனோகரன், தி.,(பதி), 2016:67). நியாயத்தை ஒத்து வாக்கியப் பொருளுணர்ச்சியின் கருவியாம் என சைவசித்தாந்தம் கூறுவது குறிப்பிடத்;தக்கது.

நம்பிக்கைக்குரியவரின் கூற்று ஆப்தம். குறித்த துறையில் புலமைத்துவம் வாய்ந்தவர் ஆப்தன் ஆவார். அவர் உண்மையைப் பேசுபவர் (Tarkasamgraha.50). இந்த அடிப்படையில் நியாயம் வேதவாக்கியம், உலக வாக்கியம் என ஆப்தத்தை இரு வகைப்படுத்துகிறது. வேதவாக்கியம் இறைவனால் அருளப்பட்டது என்றும் அது அநாதி உண்மை என்றும் விளக்கப்படுகிறது. ஏனையவை உலக வாக்கியம்; அது புலமைத்துவம் உடையோர் வாக்கியமாகும் (Chatterjee, S.C., 1978:319). மேலும் இவற்றை லௌகிகம், அலௌகிகம் எனவும் சுட்டுவர் (சித்தாந்தகிரி,1907:84). இங்கு நியாயவாதிகள் மேற்படி இரு பிரிவுகளையும் வாய்மொழி என்றே கூறுகின்றனர்.

மீமாம்சர் வேதமே பிரமாணம் என்பர். ஆனால்;, சைவசித்தாந்திகள் வேத வாக்கியத்தோடு ஆகமம் முதலானவற்றையும் இறைவாக்கியமாகக் கொள்வர். திருமந்திரம்,

"வேதமோ டாகமம் மெய்யாம் இறைவ நூல்

ஓதும் பொதுவும் சிறப்பு மென்றுள்ளன" (திருமந்திரம், பா.2397)

என இறைவாக்கியமாக வேதாகமங்களைச் சுட்டுகிறது. சிவாக்கிரயோகிகளும் 'யாதொருவன் பிராந்த விப்ரலம்பகன் ஆகாதவனாக யாதொருவனுடைய சத்தத்தின்படியே அர்த்தமுண்டாகின்றதோ அத்தன்மையன் ஆப்தன் ஆகலின் அநாதி நின்மல நிரதிசயானந்த சொரூபியாய் சர்வஞ்ஞனும் சர்வ கருத்தாவுமாகிய சிவன் பரமாப்தன். அவன் வாக்கியம் ஆதலின் வேதமும் சிவாகமமும் பிரமாணமே";(அறுவருரை, 1900:213) என விளக்குகிறார்.

இப்பிரமாணநூல்களை அடிப்படையாகக் கொண்டு சிந்திக்கின் சைவசித்தாந்த கருத்தியல் வெளிப்பாட்டு நூல்கள் நியாயம் கூறும் உலக வாக்கியங்களாக அமைகின்றன. இவை துறைசார் புலமைத்துவம் மிக்க சம்பந்தர் முதலான நாயன்மார்களும் மெய்கண்டார் முதலான மெய்யியலாளர்களாலும் உருவாக்கப்பட்ட நூல்கள் ஆகின்றன. மேற்படிப் பிரிப்பை சிவவாக்கியம், மானிட வாக்கியம் என இரு பிரிவுகளாக பௌஷ்கர ஆகமம் கூறுகிறது (பௌஷ்கர ஆகமம், 1890:721). இதை,

"பழுதிலா மறை கண்ட நூல்பழு தின்றியுண்டது பாரின்மேல்

மொழிவர் சோதிட முன்னி யின்னது முடியுமென்பது முன்னமே

அழிவிலாதது கண்ட னம்அவை யன்றி யுஞ்சில ஆகமங்களின்

எழுதி யோர்படி என்று கொண்டிரு நிதியெடுப்பதும் எண்ணிடே"

(சிவஞானசித்தியார்இ பரபக்கம்.36)

என விளக்குகிறார்;, அருணந்தி சிவாச்சாரியார். இங்கு பதங்கள் அல்லது சொற்கள் பற்றிய ஆய்வு முதன்மை பெறுகின்றது. ஆப்தனால் உச்சரிக்கப்பட்ட வாக்கியத்தில் உள்ள அதிவியாத்தியை நீக்க 'ஆப்தனால் உச்சரிக்கப்பட்ட என்றும், 'சபகடத' முதலியவற்றில் உள்ள அதிவியாத்தி நீங்கும் வகையில் வாக்கியம் என்றும் கூறுகிறது. ஆப்தன் யதார்த்தஞானி; இங்கு பதஞானம் (சொல்லறிவு) கரணம் எனவும் பதார்த்த ஞானம் (பொருளறிவு) வியாபாரம் எனவும் சாத்தபோதம் (உரையறிவு) பலம் எனவும் சுட்டப்படுகின்றன (தர்காமிர்தம், ப.59). விருத்தி ஞானமின்றி சத்த ஞானத்தால் அந்நுவயபோதம் தோன்றாது. அவ்விருத்தியானது சக்தி (ஆற்றல்), இலக்கணை என இரு வகைப்படுகிறது.

சக்தி அல்லது ஆற்றல் என்பது பொருள் நினைவு நிகழ அனுகூலமான சொற்களுக்கும் பதார்த்தங்களுக்கும் (பொருட்கள்) உளதாய சம்பந்தம் எனப்படுகிறது. 'ஆ' முதலிய பதங்களால் சாதியே ஆற்றல் எனவும் பொருட் பெறுமதி கடா முதலியவற்றால் நிகழும் என்றும் கூறுதல் பொருந்தாது எனக் கூறும் நியாயம், 'ஆவைக்கொணா' என்பதை வைத்து இதனை விளக்குகிறது.

இலக்கணையாவது அன்னுவயமேனும் வினை, சார்பு, இடம் முதலியவற்றால் உணரப்படும் தாற்பரியமேனும் பொருந்தாதபோது வாசகத்தோடு ஆற்றலுடைய வாச்சியப்பொருட்குப் பிறபொருளோடு கொள்ளப்படும் சம்பந்தங்குறிப்பு' எனச் சைவப்பிரகாசனம் விளக்குகிறது (செல்வமனோகரன், தி., (பதி), 2016:71). ஆற்றலுடைத்தாகற் பாலதன் சம்பந்தம் இலக்கணை; அது "கங்கையின் கண் இடைச்சேரி" எனின் கங்கை எனும் சொல்லுக்குப் பொருளாகிய நீர் வெள்ளத்தின் சம்பந்தத்தால் கரை என்பது உணரப்படும். இச்சம்பந்தமே இலக்கணையாகும்(தருக்கசங்கிரகம், 69).

இது கௌணீ, சுத்தை என இருவகைப்படும். கௌணியாவது, சாதிருஷிய விசிட்டத்தின் கண் இலக்கணையாகும். அது சிங்கம் மாணாக்கன் என்;பதாகும். இங்கு சிங்க பதத்திற்குச் சிங்க சாதிருசிய விட்டத்தின்கண் இலக்கணை எனப்படுகிறது. சுத்தையானது விட்டலக்கணை, விடாதலக்கணை, விட்டும் விடாத இலக்கணை என மூன்றாக எடுத்தாளப்படும்(தர்க்காமித்தம்: 65). சொல்லின் பொருட்டு கொண்டுகூட்டு இல்லாதவிடத்து விட்டு இலக்கணை எனப்படும். இதற்குக் 'கட்டில் கரைகிறது' என்பது எடுத்துக்காட்டு. சொல்லின் பொருட்டும் கொண்டு கூட்டு உள்ளவிடத்து, விடாதலக்கணை எனப்படும். இதற்கு 'கவிகையாளர் செல்கிறார், பூனை குடியாமல் பாலைக் காக்குக' போன்றவை எடுத்துக்காட்டுக்களாகும். சொற்பொருளின் ஏகதேசத்தை விடுத்து ஏகதேசத்திற்குக் கொண்டு கூட்டுள்ளவிடத்து, விட்டுவிடாத இலக்கணை எனக் கூறப்படும். 'அது நீயாகின்றாய்' என்பது இதற்கு எடுத்துக்காட்டாகும்.

இப்பிரமாணத்தைப் பொறுத்தவரை பதமே அல்லது சொல்லே முதன்மை பெறுகிறது. ஆகாங்i~ (அவாய்நிலை), யோக்யதை (தகுதி), ஆசத்தி (அண்மை), தாற்பரியம் (கருத்து) போன்றவற்றினால் ஆப்தப் பொருளுணர்வு நிகழும் எனப்படுகிறது (தருக்கசங்கிரகம்: 70 - 72). அவாய் நிலையானது ஒருசொல் தான்

சுட்டும் பொருளை விளக்குவதற்காக பிறிதொரு சொல்லை அவாவி நிற்றலாகும். இதற்கு உதாரணம் 'ஆ கிடந்தது' என்பதாகும். யோக்யதையாவது ஒரு சொல் பிறிதொரு சொல்லைத் தழுவுவதற்கான தகுதியைப் பெற்றிருத்தலாகும். இதற்கு உதாரணம் 'நீரால் நனை' என்பதாம். அண்மையாவது சொற்களை இடையீடு இன்றி பொருளமையத்தக்கவாறு உரைத்தலாகும். தாற்பரியமாவது கூறப்படும் சொல்லின் உட்பொருள் குறிப்பாகும்(முருகவேள்,ந.ரா., 1960:33 - 35). இவற்றின்வழி சொற்பிரயோகம் நிகழின் அது உரிய தர்க்கக் கட்டமைப்பைப் பெறும் என்பர்.

பதப்பொருளுணர்ச்சியாவது ஆற்றலுணர்வு துணையாகப் பதத்தாலே தோற்றுவதாகிய பொருளுணர்ச்சி. 'ஆ' எனும் பதத்துக்கும் 'நடக்கிறது' என்னும் பதத்துக்கும் அந்த அந்தப் பொருளோடு உளதாய சங்கேதவாற்றலை உணர்ந்து கொண்டானொருவனுக்கு 'ஆ நடக்கின்றது' எனும் வாக்கியவுணர்ச்சி உண்டாகியபோது அவ்வாக்கிய சத்தத்தில் பதங்களின் சங்கேதவாற்றல் நினைவால் பதப்பொருளுணர்ச்சி உண்டாம். இவ்வண்ணமே சத்த உணர்ச்சியால் வாக்கிய பொருளுணர்ச்சியாகும்(செல்வமனோகரன், தி., (பதி), 2016:73),இங்கு வாக்கியத்தைக் கூறுவோன் ஆப்தன், பிராந்தன், வஞ்சகன் என மூவகையினராவர். பிராந்தன் திரிபுடையவன் என்றும், வஞ்சகன் - படிறன் என்றும் அமைய, 'தன்னிடம் மயக்கமின்மையால் பொருள்களை உள்ளவாறு உணர்ந்து, காமவெகுளிகள் இன்மையின் அவற்றை உணர்ந்தவாறே கூறுவோன் ஆப்தன் ஆவான் எனப்படுகிறது.

இதனை அடிப்படையாகக் கொண்டு வாக்கியம் வைதிகம், இலௌகிகம் என இருவகைப் படுத்தப்படுகிறது. அவற்றுள் வைதிகம் ஈஸ்வரனால் கூறப்பட்டமையின் சர்வமும் பிரமாணம். இலௌகிதத்தின் ஆப்தவாக்கியம் பிரமாணம்இ ஏனையது அப்பிரமாணம் ஆகும். நையாயிகர் முதலியோர் குடம் முதலிய உலகச்சொற்கள் பற்றி அவ்வப்பொருள்களையுணர்தலும் உரையளவை என்பர் என்றும் அவை காட்சியனுமானங்களில் அடங்கிடாப் பொருளைக் காட்டுவனவன்மையின், மாமரத்தைக் காட்டல் போலும் இயல்பது பற்றியறிவதாகிய அனுமான விசேடமாவனவன்றி உரையளவையாகாது. அவ்வாறே ஏனைய பிரமாணங்களுள்ளும் அவை அடங்காது என்கிறார் சிவஞான முனிவர். அதன் வழியேயே உரையளவைப் பகுப்பு சைவசித்தாந்தத்தால் முன்வைக்கப்படுகிறது.

அருணந்திசிவாசாரியார் ஆப்த வாக்கியத்தை மூன்றாக எடுத்துரைக்கின்றார் (அறுவருரை, 1900:;.228-229). "மாண்ட வுரைதந் த்ரமந்திரத்தோ டுபதேசச்சொ லென மூன்றாம்" (சிவஞானசித்தியார், பா.10) எனக் கூறப்படுகின்றன. இவற்றுள் ஆகமங்களின் சரியா, கிரியா பாதங்கள் தந்திவுரை, யோகா பாதம் மந்திரவுரை, ஞானபாதம் உபதேசவுரை எனச் சுட்டுவர் (அறுவருரை, 1900:20). மறைஞானசம்பந்தரின் கருத்தில் இருந்து வேறுபட்டு சாலிவாடிபுர ஞானப்பிரகாசர், சத்த சாமர்த்தியம், அர்த்த சாமத்தியம், வஸ்து சாமர்த்தியங்களால் பின்முன் ஆகமாந்தர விரோதமின்றிச் சரியா, கிரியா, கிருத்தியம் போதிப்பது தந்திரக்கலை என்றும் ஆசன, மந்திர செபத்தோடு பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை என்பவற்றால் சித்தேந்திரியங்களை நிறுத்தி தெய்வ வழிபாடு செய்தல் மந்திரவுரை என்றும் முப்பொருள்களின் இலக்கணங்களோடு. தனது உற்பத்தி நாசங்கள் காணானதிலக்கணங்களைப் போதிப்பது உபதேசவுரை என்றும் கூறுகிறார்(சிவஞானசித்தியார் ஞானப்பிரகாசருரை, 2017:29 - 30).

சிவஞானமுனிவர் வேதத்தை அடிப்படையாகக் கொண்டு, கருமகாண்டம் பற்றிப் பின்னொரு முன் மாறுகோளின்றி அனுட்டித்தலை உயிரினோடு உணர்வு தெரிவது தந்திரவுரை என்றும் உபாசனா காண்டம்

பற்றி மனாதிகளடக்கித் தெய்வம் வழிபடும் வாய்மையைப் உயிரினோடு உணர்வு தெரிவது மந்திரவுரை என்றும் ஞானகாண்டம் பற்றித் தனக்கு முதலும் முடிவுமில்லாத இறைவன் தன்னில் வேறல்லாத எண்குணமுடையனாதல் தன்னில் வேறாகிய பசு பாசங்களையும் உடையனாதல் முதலிய தன்மைகளைத் தான் உணருமாறும்; பிறர்க்கு உணர்த்துமாறும் உயிரினோடு உணர்வு தெரிவது உபதேச உரை என்றும் கூறுகிறார் (சிவஞானசுவாமிகள் (உரை), 1883:14 - 15).

சைவசித்தாந்தம் காமம் வெகுளி அற்ற, உண்மை அறிவைத் தரவல்லவனே ஆப்தன் என்கிறது. அவனே லௌகிக ஆப்தன.; சைவசித்தாந்தம் அலௌகிக ஆப்தன் என இறைவனுக்கே அதீத முதன்மையளிப்பது குறிப்பிடத்தக்கது.

ஆகமப் போலி

தகுதியின்மையாகிய குற்றத்தோடு கூடிய வாக்கியம் ஆகமப் போலி எனப்படுகிறது. வாக்கியத்தைக் கூறுவோருள் பிராந்தகன் கூற்றும் வஞ்சகன் கூற்றும் ஆகமப் போலியினுள் அடங்கும். பிராந்தன் மயக்கத்தால் பொருள்களை அல்லது விடயங்களை விபரீதமாக உணர்ந்து கூறுவான். வஞ்சகனோ அறிந்த பொருளை அல்லது விடயத்தைக் காமவெகுளிகளால் விபரீதமாகக் கூறுவான். வழுநிலை, பொருளின்மை, மீண்டுவரல், வீணே விரித்தல், பொய்மை, ஐயம், திரிபு, விரோதம், குறை, மிகை, பயனின்மை ஆகிய சொல், பொருட் குற்றங்கள் ஆகமப் போலிகளை உருவாக்குகின்றன(செல்வமனோகரன், தி., (பதி), 2016:75).

இக்குற்றங்கள் நிகழ்ந்தால் இப்பிரமாணமானது 'அப்பிரமாணம்' எனப்படும். ஆப்த நூல்களின் இரு வாக்கியங்களை முரண்படப் பிரயோகித்தல் ஆகமப் போலியை உருவாக்கிவிடும். ஆதனால் சுருதி நூல்களின் கருத்தியலை தெளிவுறப் புரிந்து பயன்படுத்துதல் அவசியமாகும்.

சில அவதானிப்புகள்

- *ஆகமப் பிரமாணம், வாக்கியப் பொருளுணர்ச்சியின் கருவி என்றும் சிற்சக்தியோடு கூடிய சத்தமே வாக்கியப் பொருளுணர்ச்சியின் கருவியாகும் எனவும் கூறப்படுகின்றது. அந்த வகையில,; இது இந்திய மெய்யியலின் மொழி மெய்யியல் சிந்தனை மரபுக்கு உரியதாக அமைகின்றது.*

- *சைவ சித்தாந்தம் பௌதிக ஞானத்தில் காட்சி, கருதலுக்கு முதன்மை அளித்தாலும் ஆகமப் பிரமாணத்திற்கும் உரிய முக்கியத்துவத்தை வழங்கியுள்ளது.*

- *அதேவேளை பௌதீகவதிதம் பற்றிய ஆராய்ச்சி நிறுவல்களுக்கு சைவ சித்தாந்த மெய்யியலாளர்கள் அனுமானத்தையே பிரயோகித்திருந்தாலும் அது வலிதிழந்து போகும் சந்தர்ப்பங்களில் எல்லாம் ''என்மனார் புலவர்'' என ஆகமப் பிரமாணத்தையே பயன்படுத்தி உள்ளமை இப்பிரமாணத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது.*

- *அந்த வகையில் சைவ சித்தாந்தம் இம்மூன்று அளவைகளுள் ஆகம அளவையே முதன்மைப்படுத்திப் பிரயோகித்து உள்ளமை குறிப்பிடத்தக்கது.*

- மனிதர்களின் கூற்றுகளுக்கு அப்பால் சென்று வேத ஆகமங்களை இறை கூற்றுக்களாக ஏற்று ஆகமப் பிரமாணமாக அவற்றைச் சைவ சித்தாந்தம் குறிப்பிடுகின்றது. கூற்றுக்கள் யாவும் ஆகமப் பிரமாணம் ஆகாது.

- நம்பிக்கையுடமை, புலமைத்துவம் மற்றும் உண்மைத்துவம் உடையவரது கூற்றுக்களே ஆகமப் பிரமாணமாகும். அவை தம்முள்ளும் இறை கூற்றுக்களே அதீத முக்கியத்துவம் பெறுகின்றன. ஆகமப் பிரமாணமும் காட்சி, கருதல் போல பாசஞானம் என்றே சைவ சித்தாந்தம் எடுத்துரைத்து நிற்பது கவனத்திற்குரியது.

நிறைவுரை

மெய்யியல்களின் நோக்கம் உண்மையறிதலாகும். அது அறிவு பற்றிய ஆராய்ச்சியாக அமைகின்றது. ஒரு மெய்யியல் தான் வரித்துக்கொள்ளும் கொள்கையைஇ தன்னளவில் உண்மை என ஏற்றுக்கொள்ளும் குறித்த விடயத்தைச் சங்கற்பிக்க அறிவாராய்ச்சியியல் தவிர்க்க முடியாததாகின்றது. குறித்த சமூகத்தின் - சமயத்தின் நம்பிக்கைகள் மெய்ப்பிக்கப்பட்டால் அன்றி அவை அறிவார்ந்தவை என்னும் தகுதியை அடையமுடியாது. இந்திய மெய்யியலின் முதனூல்களாகச் சுட்டப்படும் வேதங்கள் மற்றும் அவற்றின் ஞானகாண்டமாகத் திகழும் உபநிடதங்கள் என்பன அறிவு பற்றிய ஆராய்ச்சியைத் தொடக்கி வைத்தன. இப்பிரபஞ்சம் மற்றும் பிரபஞ்சத்தில் பெறும் அறிவு மட்டு;மல்லாது, வேத உபநிடத அறிவுகூட அபரஞானமே. பிரமம் பற்றிய அறிவே பரஞானம்; அதனை வாதங்களினாலோ, நியாயித்தலினாலோ அறிதல் சாத்தியமற்றது என்றும் வேத, உபநிடதங்களில் எடுத்தாளப்படுகிறது.

சைவசித்தாந்தம் ஆகமப் பிரமாணத்துக்கு மிகுந்த முக்கியத்துவத்தைக் கொடுக்கின்றது. காட்சி, அனுமானம் தராத அறிவை ஆகம அளவை தருமெனப்படுகிறது. நியாயத்தை ஒத்து வாக்கியப்பொருளுணர்ச்சியின் கருவியாம் ஆப்தம் என சைவசித்தாந்தம் கூறுகிறது. இப்பிரமாணத்தைப் பொறுத்தவரை பதமே அல்லது சொல்லே முதன்மை பெறுகிறது. அவாய்நிலைஇ தகுதி, அண்மை, கருத்து போன்றவற்றினால் ஆப்தப் பொருளுணர்வு நிகழும் எனப்படுகிறது. இங்கு வாக்கியத்தைக் கூறுவோன் ஆப்தன், பிராந்தன், வஞ்சகன் என மூவகையினராவர். இறைவன் அலௌகிக ஆப்தன் என்கிறது. சைவ சித்தாந்த முப்பொருள் நிறுவலில் ஆகமப் பிரமாணத்துக்கு கணிசமான பங்கு உண்டு. அந்த வகையில் சைவ சித்தாந்த அறிவாராய்ச்சியியல் மரபில் தவிர்க்க முடியாத பிரமாணமாக ஆகமப் பிரமாணம் திகழ்கின்றது. அதேவேளை ஆகமப் பிரமாணம் நம்பிக்கைக் கூற்றாக கருதப்பட்ட சந்தர்ப்பங்களும் அது தர்க்கவியல் புலத்தில் பலவீனமான வாதமாக பௌத்த, உலோகாய்த சிந்தனையாளர்களால் சுட்டப்படுவதும் கவனத்துக்குரியதாகும்.

உசாத்துணைகள்

அறுவருரை, (1900). சிவஞானசித்தியார் சுபக்ஷம், சிவஞானபோத யந்திரசாலை, சென்னை.

ஞானகுமாரன்,நா. (2017). இந்திய அறிவாராய்ச்சியியல், சேமமடுபதிப்பகம், கொழும்பு.

கிருஷ்;ணராஜா,சோ. (1995). சைவசித்தாந்த அறிவாராய்ச்சியில் ஓர் அறிமுகம். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

சிவாக்கிரயோகிகள், (1968). சிவநெறிப் பிரகாசம், திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை.

சிவானந்தமூர்த்தி, க. (2014). சைவசித்தாந்தம் - தமிழர் மெய்யியல், அம்பாள் வெளியீட்டகம், புத்தூர்.

செல்வமனோகரன்,தி. (பதி). (2016). சிவசங்கரபண்டிதம், சைவ வித்தியா விருத்திச் சங்கம், திருநெல்வேலி.

……....., (பதி). (2017). சிவஞானசித்தியார் ஞானப்பிரகாசருரை, சைவவித்தியாவிருத்திச் சங்கம், யாழ்ப்பாணம்.

திருவிளக்கம், மு., (உரை). (2010). சிவஞான சித்தியார் சுபக்கம், சிவதொண்டன் சபை, யாழ்ப்பாணம்.

Kandaswamy, S.N. (2000). *Indian Epistemology*, International Institute of Tamil Studies, C.I.T. campus, Chennai.

Piet, John H. (1952). *A Logical Presentation of the Saiva siddhanta Philosophy*, The Christion Literature Society, India.

Ponniah, V. (1952). *The Saiva Siddhanta Theory of Knowledge*, The Annamalai University, Annamalinagar.

பாடசாலைகளில் ஆசிரியர்களின் தொழில்சார் மன அழுத்தத்தை வினைத்திறனாக முகாமை செய்வதில் அதிபர்களின் வகிபங்கு: மட்டக்களப்பு கல்வி வலய மண்முனை வடக்குக் கல்விக் கோட்ட பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு

The Role of Principals in the Effective Management of Teachers' Occupational Stress in Schools: A Study Based on Schools in the Manmunai North Educational Division of Batticaloa Educational Zone

[1]Subakaran Sathees & [2]Velappan Pragash

[1]Department of Education and Childcare, Faculty of Arts and Culture

[2]Centre for External Degrees and Extension Course (CEDEC)

[1&2]Eastern University, Sri Lanka

Correspondence: [1]rockleo100@gmail.com & [2]vpragash66@gmail.com

Abstract

The efficiency and productivity of an organization improve when human resources are valued in the organization and the concerns of the employees are duly addressed by the organizational management. Teachers, who are human-resource creators in schools today, face many occupational problems globally and are consequently subjected to mental stress. Its creates educational setbacks in the field of education. Despite the prevalence of occupational mental stress among teachers in schools of the Manmunai North Educational Division of Batticaloa Educational Zone, which is a backward educational zone, formal activities for its management at the school level have been few. Therefore, with the objective of identifying the causes of teachers' occupational stress, actions by principals to reduce teachers' occupational mental stress, and proposing strategies to effectively enhance it, this study was undertaken under the title “The Role of Principals in the Effective Management of Teachers' Occupational Stress in Schools” For this, a sample of 20 schools (Four 1AB, Two 1C, Nine Type II and Five Type III) were selected from the total of 40 schools in the Manmunai North Educational Division of Batticaloa Educational Zone, using a 50% proportional allocation to ensure that each category is equally represented. In addition, the 20 principals of the said 20 schools and 155 teachers who were determined by the Slovin sampling method with a 7% margin of error from the total number of 628 teachers teaching in the said schools, were selected for the study by using the Simple Random Sampling method. The study utilized a mixed-methods research design. Data collection tools included a questionnaire, interview schedule, and documentary evidence. Quantitative data from the questionnaires was analyzed using Microsoft Excel for percentages and means. Tables and charts were used to classify and present the findings. Qualitative data from interviews were subjected to analysis, followed by various conclusions and recommendations. Based on the analysis, it was identified that 81.5% (High Occupational Stress - 43.6% & High Occupational Stress – 37.9%) of the teachers were suffering due to occupational mental stress. The root causes identified included internal conflicts, workload, student behavior, and ineffective internal communication. Conclusions drawn include that the Quality Circle activities were low along with poor SBPTD (School-Based Professional Teacher Development) activities. The recommendations put forward are to implement the subject development Quality Circle and carry out effective SBPTD activities along with effective implementation of Bi-Annual Workload Audit, conducting Regular one-on-one check-ins, and following the SWOT Analysis and the Eisenhower Matrix method.

Keywords: *Management, Occupational Stress, Principals, Schools, Teacher*

ஆய்வுச் சுருக்கம்

நிறுவனத்தில் ஆளணியானது சிறப்பாக காணப்படும் போதும் ஆளணியினரின் பிரச்சினைகளை நிறுவன முகாமையாளர்கள் சரியாக கையாளும் போதும் அது நிறுவனத்தின் வினைத்திறனிலும் விளைத்திறனிலும் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். உலகலாவிய ரீதியில் இன்று பாடசாலைகளில் மனித வளங்களை உருவாக்கும் ஆசிரியர்கள் தொழில் ரீதியாக பல பிரச்சினைகளை எதிர்கொண்டு அதனால் மன அழுத்தத்திற்கு உள்ளாகின்றனர். இது கல்விசார் பின்னடைவுகளை கல்விப்புலத்தில் உருவாக்குகின்றது. மட்டக்களப்பு கல்வி வலயத்தில் மண்முனை வடக்கு கல்விக் கோட்ட பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கு தொழில்சார் மன அழுத்தம் காணப்படுகின்ற போதிலும் பாடசாலை மட்டத்தில் அதனை முறையாக முகாமை செய்வதற்கான செயற்பாடுகள் குறைவாக காணப்படுகின்றது. எனவே ஆசிரியர்களின் தொழில்சார் அழுத்தத்திற்கான காரணங்களையும் அதிபர்களினால் ஆசிரியர்களின் தொழில்சார் மன அழுத்தத்தை குறைப்பதற்கான செயற்பாடுகளையும் கண்டறிந்து, அதனை வினைத்திறனாக மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை இனங்காணும் நோக்கில் இவ்வாய்வானது ''பாடசாலைகளில் ஆசிரியர்களின் தொழில்சார் மன அழுத்தத்தை வினைத்திறனாக முகாமை செய்வதில் அதிபர்களின் வகிபங்கு'' எனும் தலைப்பில்,' மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக மட்டக்களப்பு கல்வி வலய மண்முனை வடக்குக் கோட்டத்திலுள்ள 40 பாடசாலைகளுள் 50 சதவீத ஒதுக்கீட்டு மாதிரியின் அடிப்படையில் பாடசாலைகளை சமமாக பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் 20 பாடசாலைகள் (நான்கு 1AB, இரண்டு 1C, ஒன்பது வகை II மற்றும் ஐந்து வகை III) மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்டன. மற்றும் இப்பாடசாலைகளில் உள்ள 20 அதிபர்களும் பாடசாலையில் கற்பிக்கும் 628 ஆசிரியர்களில் Slovin (Margin of error 7%) மாதிரியெடுப்பு முறை மூலம் 155 ஆசிரியர்களும் கணிக்கப்பட்டு அவர்கள் இலகு எழுமாற்று மாதிரி மூலமும் ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்டனர். தரவு சேகரித்தல் கருவிகளாக வினாக்கொத்து, நேர்காணல் படிவம், ஆவணச் சான்றுகள் போன்றன பயன்படுத்தப்பட்டு கலப்பு ஆய்வு அணுகுமுறையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. வினாக்கொத்து மூலம் பெறப்பட்ட அளவுசார் தரவுகள் Microsoft Excel மூலமாக பகுப்பாய்வு செய்யப்பட்டு சதவீதம் மற்றும் இடை என்பன கணிக்கப்பட்டுள்ளதுடன்,' அட்டவணை, சலாகை வரைபுகள் என்பனவும் வகை குறித்துக் காட்டப்பட்டு, நேர்காணல் மூலம் பெறப்பட்ட பண்புசார் தரவுகளும் பகுப்பாய்வு செய்யப்பட்டு, பல்வேறு முடிவுகளும் விதப்புரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில் 81.5 சதவீதமான (அதிகளவான தொழில்சார் அழுத்தம் - 43.6%, குறைந்தளவு தொழில்சார் அழுத்தம் - 37.9 %,) ஆசிரியர்கள் தொழில்சார் மன அழுத்தமுடையவர்களாக காணப்படுகின்றனர். அதற்கு பிரதான காரணங்களாக உள்ளக முரண்பாடுகள், வேலைப்பளு, மாணவர்களின் நடத்தை, வினைத்திறனற்ற உள்ளகத் தொடர்பாடல் போன்றனவும் காரணமாக அமைவதுடன் தரவட்டம் மற்றும் SBPTD செயற்பாடுகள் குறைவு போன்ற முடிவுகளும் பாட அபிவிருத்தி தரவட்டம், SBPTD செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல், Bi-Annual Workload Audit இனை வினைத்திறனுடன் செயற்படுத்தல், Regular one-on-one check-ins இனை செயற்படுத்தல், SWOT பகுப்பாய்வு மற்றும் Eisenhower Matrix முறையினை பின்பற்றுதல் போன்ற விதப்புரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

திறவுச் சொற்கள்: தொழில்சார் மன அழுத்தம், முகாமைத்துவம், பாடசாலைகள், அதிபர்கள், ஆசிரியர்கள்

1. அறிமுகம்

பாடசாலைகளில்,' ஆசிரியர்களின் பணிகளில் அதிகமான சந்தர்ப்பங்கள் அழுத்தம் நிறைந்ததாக காணப்படும். அவ்வாறான அழுத்தம் நிறைந்த சந்தர்ப்பங்களில் அதற்கான வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கு சக்தியையும், தைரியத்தையும் வழங்குவதன் ஊடாக அவர்களை திருப்தி செய்யும் ஒரு முறையாக பாடசாலைகளில் அதிபர்களின் தலைமைத்துவம் காணப்பட வேண்டும் (Johnson et al, 2020). ஆனால் அது பாடசாலைகளில் முறையாக நடைபெறாத நிலையும் காணப்படுவதனால் ஆசிரியர்களின் தொழில்சார் மன அழுத்தமானது இன்று பலவகைகளில் அதிகரிக்கின்றது. அதனை அடிப்படையாகக் கொண்டு பாடசாலைகளில் ஆசிரியர்களின் தொழில்சார் மன அழுத்தத்தை வினைத்திறனாக முகாமை செய்வதில் அதிபர்களின் வகிபங்கினை ஆய்வு செய்வதாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தலைமைத்துவம் என்பது ஒரு தலைவர் மேற்கொள்ளும் நடைமுறை உத்திகளை மட்டுமன்றி பலரது கூட்டுச் செயல்களையும் குறித்து நிற்பதாகும். நிர்வாகத்தில் முறையான அதிகாரங்களும், பொறுப்புக்களும் அதன் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டாலும் அவை நிர்வாக நலன் கருதி பல மட்டங்களில் பலருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுச் செயல்படுத்தப்படுவதனால், அவற்றைப் பெறும் ஒவ்வொரு அதிகாரியும் தமக்கு கீழ் உள்ளவர்களைக் கட்டுப்படுத்திக் கடமைகளைப்

புரியவைக்கின்றனர். எனவே மற்றவர்களின் உழைப்பின் மூலம் குறிக்கோள்களையும், செயற்பாடுகளையும் முழுமையாக முற்றுப் பெற வைக்கும் சிறப்புச் செயலே தலைமைத்துவமாகும். தலைவர் என்ற வகையில் பாடசாலை அதிபரிடம் காணப்பட வேண்டிய முக்கிய பண்புகள் மாணவர்களாயினும் சரி ஏனையவர்களாயினும் சரி ஒருவர் சிறந்த தலைவராக மாறுவதற்கு அதற்கே உரிய பண்புகளை அவர் தன்னகத்தே கொண்டிருப்பது அவசியமாகும் (கமலநாதன், 2009).

பாடசாலையில் அதிபர்களது முகாமைத்துவத் திறன்களும், தலைமைத்துவத் திறன்களும் சரியான முறையில் பயன்படுத்தப்படல் வேண்டும். இவ்வாய்வானது தற்கால அதிபர்களின் தலைமைத்துவத் திறன்கள் கற்பித்தல் செயற்பாடு வினைத்திறனுடையதாக அமைவதற்கு ஆசிரியர்கள் எதிர்பார்த்த வசதிகள் அனைத்தும் அதிபரினால் எந்தளவிற்கு நிறைவேற்றி வைக்கப்படுகின்றது என்பதைப்பற்றிய கருத்தை முன்வைத்து எடுத்துச் செல்லப்படுகின்றது. வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னேற்றுவதற்கு ஆசிரியர்கள் அதிபரிடமிருந்து எதிர்பார்க்கும் வசதிகள், ஆசிரியர்களுக்கு அதிபர் ஏற்படுத்திக் கொடுத்த வசதிகள், ஆசிரியர்கள் எதிர்பார்க்கும் அனைத்து வசதிகளையும் அதிபரினால் ஏற்படுத்திக் கொடுக்க முடியாமைக்கான காரணங்கள், அதிபர் இவ்வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள், இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அதிபர் கையாண்ட உபாயங்களும் நுட்பங்களும், வினைத்திறன் மிக்க அதிபரின் வகிபங்கின் வழிமுறைகளுக்கான முன்மொழிவுகள் போன்றற்றினை கூறும் விதத்தில் இந்த ஆய்வு முன்னெடுத்து செல்லப்படுகின்றது.

2. ஆய்வுப் பின்னணி

ஒரு பாடசாலையினை விளைத்திறன் உள்ள பாடசாலையாக அபிவிருத்தி செய்வதில் அதிபரின் பங்கு இன்றியமையாதது. இவ்வாறான அபிவிருத்திக்கு சிறந்த தலைமைத்துவப் பண்பு அவசியமாகின்றது. பாடசாலையின் விளைத்திறனிற்கு ஆசிரியர்களின் தொழிலானது சிறந்த உள ஆரோக்கியத்தை தருவதாக அமைய வேண்டுமே தவிர மன அழுத்தத்தை ஏற்படுத்துவதாக அமையக் கூடாது. சிறந்த தலைமைத்துவம் என்பது ஒரு நோக்கை அடைய ஒரு சொல் அல்லது செயலினால் மற்றவர்களை அந்நோக்கை அடையச்செய்ய எடுக்கும் ஆற்றல் என்பதாகும். இந்த ஆற்றல் ஒரு பாடசாலை அதிபருக்கு முழுமையாக இருக்குமெனில் அப்பாடசாலையை அபிவிருத்தி செய்வதில் எவ்வித தடைகளும் ஏற்படமாட்டாது (செல்வராஜா, 2016).

ஆனால் ஆய்வுப் பிரதேசத்தில் ஆசியர்கள் தொழில் ரீதியான மன அழுத்தமுடையவர்களாக காணப்படுகின்றனர். அது மட்டுமல்லாது கல்வி முகாமைத்துவத்தில் பாடசாலை முகாமைத்துவம் மிக முக்கியமான அம்சமாகும். தேசிய கல்விக் கொள்கைகளையும், திட்டங்களையும் கள நிலையில் அமுலாக்குபவர்கள் பாடசாலை முகாமையாளர்களான அதிபர்களேயாவர். ஆகவே பாடசாலையினை பொறுத்தமட்டில் பாடசாலையின் முகாமையாளரான அதிபருக்கு முகாமைத்துவத் திறன்களோடு தலைமைத்துவத் திறன்களும் அவசியமாகும். பாடசாலைகளில் அதிபர்கள் ஆசியர்களின் கற்பித்தல் செயற்பாடுகளை மட்டுமன்றி ஆசிரியர்களின் தொழில்சார் மன அழுத்தங்களை சிறப்பாக கையாளவும் அதற்கான ஆலோசனை வழங்குபவராகவும் காணப்படுதல் வேண்டும். ஆனால் பல பாடசாலைகளின் அதிபர்கள் ஆசிரியர்களின் தொழில்சார் மன அழுத்தத்தை கவனத்திற் கொள்ளாத நிலை காணப்படுகின்றது. இதனை பிண்ணனியாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அருண், நிதூர்ஷா மற்றும் கஜவிந்தன் ஆகியோர் 2018 ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்தில் மேற்கொண்ட பாடசாலை ஆசிரியர்கள் எதிர்நோக்கும் தொழில்சார் மன அழுத்தம் எனப்படும் ஆய்வில் 60 சதவீதமான ஆசிரியர்கள் மிதமான தொழில்சார் மன அழுத்தத்திற்கும், 40 சதவீதமான ஆசிரியர்கள் மிக அதிகமாக தொழில்சார் மன அழுத்தத்திற்கு உள்ளாகியிருக்கின்றனர் எனவும் குறிப்பிட்டுள்ளனர். இதனை அடிப்படையாகக் கொண்டும் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3. ஆய்வுப் பிரச்சினை

கற்பித்தலில் ஈடுபடுகின்ற ஆசிரியர்கள் தனியார் வேறுபாட்டின் காரணமாக வித்தியாசமான மனப்பாங்குகளைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்களின் தேவைகள், எதிர்பார்ப்புக்கள் கிடைக்காமல் போகும்போது அதிபருடன் முரண்படும் நிலையில் காணப்படுவதோடு தொழில் சார்ந்த மன அழுத்தத்திற்கும் உள்ளாகின்றனர். இது சகல பாடசாலைகளிலும் காணப்படும் ஒரு பொதுவான பிரச்சினையாகும். இது வகுப்பறைச் செயற்பாட்டிலும் முகாமைத்துவத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதினால் ஆசிரியர்களின் தேவைகள், எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதில் அதிபர் முன்னிற்க வேண்டும். மாணவர்களின் அடைவு மட்ட முன்னேற்றமானது பாடசாலையின்

அபிவிருத்தியிலும், பாடசாலையின் அபிவிருத்தியானது ஆசிரியரின் தேவைகள், எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படும் பட்சத்திலுமே தங்கியுள்ளது (E-Lanka Education, 2022).

எனவே ஆசிரியர்களின் எதிர்பார்ப்பினை தீர்த்து வைப்பதும், வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பதும் அதிபரின் ஆற்றலிலும், அறிவிலும், மனப்பாங்கிலுமே தங்கியுள்ளது. இவ்வாறாக கற்பித்தலின் போது ஏற்படும் பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் பொறுப்பு அதிபரிடம் காணப்படுகின்றது. பாடசாலையின் அதிபர் அறிவுறுத்தும் தலைமைத்துவமுடையவர் என்ற வகையில் பல வகிபங்குகளை ஏற்கவேண்டியவராக இருக்கின்றார். ஆசிரியர்களின் எதிர்பார்ப்புக்கள், தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பவர் என்னும் வகிபங்கு மிகவும் முக்கியமானதொன்றாகும். இந்த வகிபங்கினை அவர் எவ்வளவு திறமையுடன் மேற்கொள்கின்றாரோ அவ்வளவிற்கு வகுப்பறைச் செயற்பாட்டையும் முன்னேற்றி ஆசிரியர்களின் தொழில்சார் திருப்தியையும் நிறைவேற்றி பாடசாலையின் வினைத்திறன் மற்றும் விளைத்திறனில் நிறைவு காண அதிபர்களின் வகிபங்கு முக்கியத்துவமுடையது. ஆனால் ஆசிரியர்களின் தொழில்சார் பிரச்சினைகள் தீர்க்கப்படாத நிலையும், ஆசிரியர்களிடையே முரண்பாடும் ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படுகின்றது.

Wickramasinghe et al *(2022)* கொழும்பு மாவட்டத்தில் மேற்கொண்ட Prevalence of Occupational Stress among Secondary School Teachers in Public Schools in the District of Colombo, Sri Lanka எனப்படும் ஆய்வில் ஒட்டுமொத்தமாக 83.5 சதவீதமான ஆசிரியர்கள் மிக அதிகளவான தொழில் சார் மன அழுத்தத்திற்கு உள்ளாகிள்ளனர் எனவும், அதனை முறையாக கையாள்வதற்கான உடனடி செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளனர். இதனை அடிப்படையாகக் கொண்டும் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

Thineskumar and Sulaiha Beevi *(2024)* என்போர் மட்டக்களப்பு கல்வி வலயத்தை மையமாகக் கொண்டு மேற்கொண்ட Work Life Balance Factors Influencing on Job Engagement of Teachers in Government Schools in Batticaloa Zonal Education எனப்படும் ஆய்வில் பிள்ளை பராமரிப்பு, குடும்ப ஆதரவு மற்றும் பணியில் நெகிழ்வுத் தன்மை என்பன தொழில் சார் ஆர்வத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன என கூறியுள்ளனர். இதனை அடிப்படையாக்க் கொண்டும் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்வுப் பிரச்சினைக் கூற்று

மட்டக்களப்பு கல்வி வலயத்தில் மண்முனை வடக்கு கல்விக் கோட்ட பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கு தொழில்சார் மன அழுத்தம் காணப்படுகின்ற போதிலும் பாடசாலை மட்டத்தில் அதனை முறையாக முகாமைத்துவம் செய்வதற்கான செயற்பாடுகள் குறைவாக காணப்படுகின்றது.

***4.* ஆய்வு நோக்கம்**

பொது நோக்கம்

பாடசாலைகளில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் தொழில்சார் மன அழுத்தத்தைக் குறைப்பதற்கும் நிர்வகிப்பதற்கும், அதிபர்களின் வகிபங்கினையும் செயற்பாடுகளையும் கண்டறிந்து, அதனை வினைத்திறனுடன் மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை முன்மொழிதல்.

சிறப்பு நோக்கங்கள்

1. பாடசாலைகளில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் தொழில்சார் மன அழுத்தத்திற்கான காரணங்களை அறிதல்.

2. பாடசாலைகளில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் தொழில்சார் மன அழுத்தத்தினை குறைப்பதற்கு அதிபரினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை இனங்காணல்.

3. பாடசாலைகளில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் தொழில்சார் மன அழுத்தத்தினை குறைப்பதற்கு அதிபரினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை வினைத்திறனாக மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை முன்மொழிதல்.

ஆய்வு வினாக்கள்

1. பாடசாலைகளில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் தொழில்சார் மன அழுத்தத்திற்கான காரணங்கள் யாவை?

2. ஆசிரியர்கள் எதிர்நோக்கும் தொழில்சார் மன அழுத்தத்தினை குறைப்பதற்கு பாடசாலை அதிபரினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் எவை?

3. ஆசிரியர்கள் எதிர்நோக்கும் தொழில்சார் மன அழுத்தத்தினை குறைப்பதற்கு பாடசாலை அதிபரினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை வினைத்திறனாக மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் யாவை?

5. ஆய்வு முக்கியத்துவம்

அதிபரின் வினைத்திறனான தலைமைத்துவம் ஒரு பாடசாலை திறம்பட இயங்குவதில் மிகவும் முக்கியமான ஒன்றாகும். தலைமைத்துவம் என்பது ஒரு நிறுவனத்தையும் அதன்; உறுப்பினர்களையும் நிர்வகிப்பதாகும். அந்நிறுவனங்களுக்குத் தேவையான பொருத்தமான நபர்களையும் பௌதீக உள்ளகக் கட்டமைப்பையும் பேணுவதன் மூலம் ஒழுங்கான மேற்பார்வை கண்காணிப்பு என்பனவற்றுடன் உறுப்பினர்களின் நலன்களைப் பாதுகாத்து பாடசாலையின் உச்ச வெளியீட்டை அதிகரிப்பது அதிபரின் தலைமைத்துவம் ஆகும். ஆசிரியர்களின் மன அழுத்தத்தைக் குறைப்பதில் அதிபரின் தலைமைத்துவம் முக்கிய பங்கு வகிக்கிறது. அதிபர்கள் ஆதரவாகவும், வளங்களை வழங்குபவராகவும் மற்றும் ஆசிரியர்களின் தேவைகளைப் புரிந்துகொண்டும் செயல்படும்போது அது ஆசிரியர்களின் தொழில்சார் மன அழுத்தத்தைக் குறைப்பதற்கு வழிவகுக்கும். ஆசிரியர்களுக்கு தொழில்சார் மன அழுத்தம் காணப்படுமாயின் அது கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை மட்டுமன்றி பாடசாலை எனும் நிறுவனத்தின் முகாமைத்துவச் செயற்பாடுகளையும் பாதிக்கும். ஆகவே ஆசிரியர்களின் தொழில்சார் மன அழுத்தத்தைக் குறைப்பதில் அதிபரின் முகாமைத்துவம் மற்றும் தலைமைத்துவம் என்பவற்றின் வகிபங்கினை ஆராயும் நோக்கில் ஆய்வு செய்யப்படுவதனால் இவ்வாய்வு முக்கியத்துவமுடையதாக அமைகின்றது

6. இலக்கிய மீளாய்வு

6.1 அதிபர்களின் தலைமைத்துவம்

Fauziah, Suryadi, & Zulaikha *(2021)* *வட ஜகார்த்தாவில் மேற்கொண்ட* The Role of Principal Leadership and Work Stress on Teacher Work Commitment *எனப்படும் ஆய்வில் அதிபர்களின் தலைமைத்துவமானது ஆசிரியர்களின் பணி ரீதியான பொறுப்புக்களிலும், பணி ரீதியான அழுத்தத்திலும் செல்வாக்குச் செலுத்தும் எனவும் வினைத்திறனுடைய பாடசாலை முகாமைத்துவமானது பாரிய அளவில் நிறுவன இலக்கிலும் செல்வாக்குச் செலுத்தும் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.*

Suailo (2025) *இந்தோனேசியாவில் மேற்கொண்ட* Relationship Between Principal Leadership Style, Work Stress and Teacher Work Motivation *எனப்படும் ஆய்வில் அதிபர்களின் தலைமைத்துவ பாணிகள் ஆசிரியர்களின் தொழில் ரீதியான ஊக்கத்தை ஏற்படுத்தும் எனவும் தொழில் ரீதியான ஊக்கப்படுத்தல்கள் தொழில் ரீதியான அழுத்தத்தில் செல்வாக்குச் செலுத்தும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.*

6.2 அதிபர்களின் முகாமைத்துவம்

Grissom, Loeb & Mitani (2015) *அமெரிக்காவில் மேற்கொண்ட* Principal Time Management Skills: Explaining Patterns in Principals' Time Use, Job Stress, and Perceived Effectiveness *எனப்படும் ஆய்வில் அதிபர்களின் வினைத்திறனான நேர முகாமைத்துவ திறனானது பணி ரீதியான அழுத்தத்தை குறைப்பதில் செல்வாக்குச் செலுத்துவதுடன் பாடசாலையின் வகுப்பறை முகாமைத்துவத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என குறிப்பிட்டுள்ளனர்.*

Gloria et el (2024) மேற்கொண்ட Principals' Stress Management Techniques as Correlates of Teachers' Task Performance in Public Secondary Schools in Anambra State, Nigeria எனப்படும் ஆய்வின் முடிவில் அதிபர்கள் பாடசாலையின் இலக்கினை அடைய பாடசாலையின் செயற்பாடுகள் தொடர்பாக நெகிழ்வுத்தன்மையுடையவராக காணப்பட வேண்டும் என குறிப்பிட்டுள்ளதுடன், ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் கற்றல் கற்பித்தலில் நேர முகாமைத்துவம் தொடர்பான அறிவுரைகளை வழங்க வேண்டும் எனவும், அதிபர் வினைத்திறனுடைய தொடர்பாடலினை மேற்கொள்வதுடன் ஆளணியினருக்கான அழுத்தம் தொடர்பான தொடர் விழிப்புணர்வுப் பயிற்சிகளை வழங்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

6.3 தொழில்சார் மன அழுத்தம்

Chen et al (2022)மேற்கொண்ட Work stress, Mental health, and Employee Performance எனப்படும் ஆய்வின் முடிவில் ஆளணியினரின் பணி தொடர்பான அழுத்தங்கள் அவர்களின் உள அழுத்தம் மற்றும் உள ஆரோக்கியத்திலும் பணியின் செயல்திறனிலும் செல்வாக்குச் செலுத்தும் எனவும் நட்பு ரீதியான உள்ளக தலைமைத்துவமும் வேலைச் சூழலும் பணி தொடர்பான அழுத்தத்தில் எதிர் மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

Manjeet Kaur, Rekha Khosla, & Masood Siddiqui (2024) இந்தியாவில் மேற்கொண்ட Impact of Job Stress on Psychological Well-Being of Teachers எனப்படும் ஆய்வின் அழுத்த முகாமைத்துவம் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்கள் ஆசிரியர்களின் அழுத்தத்தை குறைப்பது மட்டுமன்றி தொழில்சார் மன அழுத்தங்களை வினைத்திறனுடன் முகாமை செய்யவும் உதவுகின்றன என குறிப்பிட்டுள்ளனர்.

Chathuranga & Wijesooriya (2021) இலங்கையில் மேற்கொண்ட Job Stress and Organizational Level Factors: Sri Lankan Experience எனப்படும் ஆய்வில் தொழில்; சார் அழுத்தத்தில் முகாமைத்துவ உத்திகள், கொள்கைகள் மற்றும் பணிச் சூழல் என்பன செல்வாக்குச் செலுத்துகின்றன என கூறியுள்ளனர்.

7. ஆய்வு முறையியல்

7.1 ஆய்வு வடிவம்

கல்வியுடன் தொடர்புடைய பிரச்சினைகளை ஆய்வு செய்;வதற்காக ஆய்வு இலக்கியங்களில் அளவை நிலை ஆய்வு பயன்படுத்தப்படுவதனால் அவ்வகை ஆய்வு வடிவமே இங்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் அளவு மற்றும் பண்புசார் தரவுகளும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படுவதனால் கலப்பு அணுகுமுறை மூலம் ஆய்வு நோக்கம் முழுமையாக நிறைவு செய்யப்படக்கூடிய விதத்தில் ஆய்வு முறை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

7.2 ஆய்வுப் பிரதேசம்

ஆய்வுப் பிரதேசமாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களில்;' மட்டக்களப்பு கல்வி வலயத்திலுள்ள மூன்று கல்விக் கோட்டங்களில் ஒன்றான மண்முனை வடக்குக் கோட்டத்திலுள்ள பாடசாலைகள் ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்டன. அதிக மாணவர் தொகையினைக் கொண்டதாகவும், ஒப்பீட்டளவில் அதிக வினைத்திறன் கொண்டதாகவும், பண்முகத் தன்மை கொண்டதாகவும் காணப்படுதல் போன்ற காரணங்களினால் இப்பிரதேசம் ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்டது.

7.3 ஆய்வின் வரையறை

ஆய்வொன்றின் நிமித்தம் ஆய்வாளரால் முழுப் பிரதேசத்தையும் மற்றும் ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள அனைவரையும் ஆய்விற்குட்படுத்த முடியாது. ஆகையால் குறித்த ஆய்வுக்கு பங்கம் ஏற்படுத்தாத வகையில் ஆய்வுப் பிரதேசத்தின் பரந்த குடித்தொகையிலிருந்து முழுக் குடித்தொகையையும் பிரதிபலிக்கக் கூடிய வகையில் பொருத்தமான நுட்ப முறைகள் பயன்படுத்தப்பட்டு குறிப்பிட்ட எண்ணிக்கையானோர் மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அதாவது குறித்த பிரச்சினையுடன் தொடர்புடைய ஒரு பெருந்தொகை மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில்

குடித்தொகையிலிருந்து குறித்த ஒரு வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையானோரைத் தெரிவு செய்து அவர்களைக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

7.4 குடித்தொகையும் ஆய்வு மாதிரியும்

மட்டக்களப்பு கல்வி வலயத்தின் மண்முனை வடக்கு கல்விக் கோட்டத்திலுள்ள 40 பாடசாலைகளுள் எட்டு 1AB பாடசாலைகளும், நான்கு 1C பாடசாலைகளும், 17 வகை II பாடசாலைகளும், 11 வகை III பாடசாலைகளும் காணப்படுகின்றன. இவற்றுள் 50 சதவீத ஒதுக்கீட்டு மாதிரியின் அடிப்படையில் பாடசாலைகளை சமமாக பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் 20 பாடசாலைகள் (நான்கு 1AB, இரண்டு 1C ஒன்பது வகை II, ஐந்து வகை III) மாதிரிகளாக தெரிவு செய்யப்பட்டன. அத்தோடு இப் பாடசாலைகளில் உள்ள 20 அதிபர்களும், பாடசாலையில் கற்பிக்கும் 628 ஆசிரியர்களில் Slovin (Margin of error 7%) மாதிரியெடுப்பு முறை மூலம் 155 ஆசிரியர்களும் கணிக்கப்பட்டு அவர்கள் இலகு எழுமாற்று மாதிரி மூலமும் ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்டனர்.

7.5 ஆய்வுக் கருவிகளின் நம்பகமும் தகுதியும்

தரவுகளை சேகரிப்பதற்கான வினாக்கொத்து முறையானதும் பொதுவானதும், இலகுவானதும் மற்றும் நம்கத்தன்மையுடையதுமான முறையாக உள்ளது. வினா தெளிவாகவும் நோக்கத்தை மையப்படுத்தி கேட்கப்படுவதனால் வினாவின் சொற்கள் குறுகியதாகவும் காணப்படுவதனால் விடையளிப்பவர் சிறந்த முறையில் தரவுகள் வழங்குகின்றமையால் அவை நம்பகதன்மையுடையதாக காணப்படுவதனால் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கு வழங்கப்பட்ட வினாக்கள் வலுவாக எதிர்க்கின்றேன், எதிர்க்கின்றேன், நடுநிலைமை, ஏற்றுக்கொள்கின்றேன், வலுவாக ஏற்றுக்கொள்கின்றேன் எனும் தெரிவுடைய Likert Scale முறையிலமைந்த கூற்றுக்களையும், ஆம் அல்லது இல்லை போன்ற வினாக்களையும் கொண்டமைந்துள்ளது என்பதால் இக்கருவியானது நம்பகமும், தகுதியும் கொண்டதாக காணப்படுகின்றது. நேர்காணல் முறையின் மூலமாக தனிப்பட்டவர்களிடையே இடம்பெறும் வாய்மொழி மூலமான இடைத்தொடர்பு மூலமாக தேவையான தகவல்கள் தெளிவான முறையில் பெற்றுக்கொள்ள முடியும். எனவே இவ்வாய்வுக் கருவியானது நம்பகமும், தகுதியும் உடையதாகக் காணப்படுகின்றது.

7.6 தரவு சேகரிப்புக் கருவிகளும் தரவுப் பகுப்பாய்வு முறையும்

ஆய்வுப் பிரதேசத்தில் மாதிரிகளாத் தெரிவு செய்யப்பட்டவர்களிடமிருந்து தரவுகள், தகவல்கள் சேகரிக்கப்பட்டு, சேகரிக்கப்பட்ட அனைத்துத் தகவல்களும் விசேட குறிக்கோளுக்கு அமைவாக பகுப்பாய்வு செய்யப்பட்டது. Likert அளவுத்திட்ட வினாக்கொத்தின் மூலம் ஆசிரியர்களிடமும், அதிபர்களிடமும் பெறப்பட்ட தகவல்கள் எண்சார் தரவுகளாக மாற்றப்பட்டு Microsoft Office Excel மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டு சதவீதம், இடை என்பன கணிக்கப்பட்டுள்ளதுடன் அட்டவணையாக்கம், சலாகை வரைபுகள் போன்றனவும் வகை குறித்து காட்டப்பட்டு புள்ளிவிபர அடிப்படையில் அளவு ரீதியாக விளக்கப்பட்டுள்ளது. மூன்றாவது சிறப்பு நோக்கத்திற்கு அதிபர்களிடம் நேர்காணல் மூலமாக வினாவப்பட்ட வினாக்களுக்கான துலங்கல்கள் அளவு ரீதியாக மாற்றப்பட்டு சதவீதம் கணிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

8. தரவுப் பகுப்பாய்வும் கலந்துரையாடலும்

ஆசிரியர்கள் எதிர்நோக்கும் தொழில்சார் மன அழுத்தத்தைக் குறைப்பதற்கும் நிர்வகிப்பதற்கும், பாடசாலை அதிபர்கள் மேற்கொள்ளும் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவம் சார் செயற்பாடுகளை கண்டறிந்து, அதனை வினைத்திறனுடன் மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை முன்மொழிவதற்கேற்ப சிறப்பு நோக்கங்களினடிப்படையில் ஆய்வு மாதிரிகளிடமிருந்து ஆய்வுக் கருவிகளின் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. குறித்த தரவுகளின் பகுப்பாய்வுகளின் முடிவுகள் பின்வருமாறு அமைந்தன.

8.1 பாடசாலைகளில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் தொழில்சார் மன அழுத்தத்திற்கான காரணங்களை அறிதல்.

முதலாவது சிறப்பு நோக்கத்திற்கு அமைவாக ஆசிரியர்களிடமிருந்து Likert *அளவுத் திட்ட வினாக்கொத்துக்கள் மூலம் கூற்றுக்கள் கேட்கப்பட்டது. அதற்கான அவர்களது துலங்கல்கள் ஏற்றுக்கொள்கின்றேன் மற்றும் வலுவாக ஏற்றுக்கொள்கின்றேன் என்பவற்றிற்கு அமைவாக பின்வருமாறு அமைந்தன.*



உரு 1: ஆசிரியர்களின் தொழில்சார் மன அழுத்தத்திற்கான காரணங்கள்

இதன்படி ஆசிரியர்களின் துலங்கல்களில் 81.5 சதவீதமான ஆசிரியர்களுக்கு தொழில் ரீதியான மன அழுத்தம் காணப்படுகின்றமை அறியப்பட்டுள்ளதுடன் அவற்றுள் 73.4 சதவீதமான ஆசிரியர்களுக்கு ஏனைய ஆசிரியர்களுடனான முரண்பாடும், 87.3 சதவீதமான ஆசிரியர்களுக்கு அழுத்தமுடைய நேரசூசியும், 96 சதவீதமான ஆசிரியர்களுக்கு மாணவர்களின் நடத்தைகளும், 67 சதவீதமான ஆசிரியர்களுக்கு அதிபரின் வினைத்திறனற்ற தொடர்பாடலும், 87.3 சதவீதமான ஆசிரியர்களுக்கு பெற்றோரின் அதீத எதிர்பார்ப்பு என்பனவும் பிரதானமான ஆசிரியர்களின் தொழில்சார் மன அழுத்தத்திற்கான காரணங்களாக அமைகின்றன.

8.2 ஆசிரியர்கள் எதிர்நோக்கும் தொழில்சார் மன அழுத்தத்தினை குறைப்பதற்கு பாடசாலை அதிபரினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை இனங்காணல்.

இரண்டாவது சிறப்பு நோக்கத்திற்கு அமைவாக ஆசிரியர்களிடமிருந்தும், அதிபர்களிடமிருந்தும் Likert *அளவுத் திட்ட வினாக்கொத்துக்கள் மூலம் கூற்றுக்கள் கேட்கப்பட்டது. அதற்கான ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களது துலங்கல்கள் ஏற்றுக்கொள்கின்றேன் மற்றும் வலுவாக ஏற்றுக்கொள்கிள்கின்றேன் என பின்வருமாறு அமைந்தன.*

உரு 2: ஆசிரியர்களின் தொழில்சார் மன அழுத்தத்தினை குறைப்பதற்கு அதிபரினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள்

இதன்படி இரண்டாவது சிறப்பு நோக்கத்தில் மொத்தமாக அதிபரினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளில் அதிபர்களின் பதில்களின்படி ஏற்றுக்கொள்கிறேன், வலுவாக ஏற்றுக்கொள்கிறேன் எனும் துலங்கலாக $\overline{X} = 94.6\%$உம், ஆசிரியர்களின் எதிர்க்கிறேன், வலுவாக ஏதிர்க்கிறேன் எனும் பதில்களுக்கான துலங்களாக $\overline{X} = 36.1\%$உம் காணப்படுகின்றது. இங்கே ஆசிரியர்களதும் அதிபர்களதும் துலங்கல்களுக்கிடையே முரண்பாடான தன்மை காணப்படுவதனால் இரண்டாவது சிறப்பு நோக்கத்தின் பகுப்பாய்வின் அடிப்படையில் ஆசிரியர்களின் தொழில்சார் மன அழுத்தத்தினை குறைப்பதற்கு அதிபரினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளும் வகிபங்கும் மிகக் குறைவாக காணப்படுகின்றது என கண்டறியப்பட்டது.

8.3 பாடசாலைகளில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் தொழில்சார் மன அழுத்தத்தினை குறைப்பதற்கு அதிபரினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை வினைத்திறனாக மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை முன்மொழிதல்.

மூன்றாவது சிறப்பு நோக்கத்திற்கு அமைவாக ஆசிரியர்களின் தொழில்சார் மன அழுத்தத்தை குறைப்பதற்காக அதிபரினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை வினைத்திறனாக மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் ஆசிரியர்களிடமிருந்தும் அதிபர்களிடமிருந்தும் Likert அளவுத் திட்ட வினாக்கொத்துக்கள் மூலமும் நேர்காணல் மூலமும் கூற்றுக்கள் கேட்கப்பட்டது. அதற்கான ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களது துலங்கல்கள் ஏற்றுக்கொள்கின்றேன் மற்றும் வலுவாக ஏற்றுக்கொள்கிள்கின்றேன் என அமைவாக பின்வருமாறு அமைந்தன.

அட்டவணை 1: ஆசிரியர்கள் எதிர்நோக்கும் தொழில்சார் மன அழுத்தத்தினை குறைப்பதற்கு அதிபரினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை வினைத்திறனுடன் மேம்படுத்துவதற்கான வழிமுறைகள்

கூற்றுக்கள்	***ஆசிரியர்கள்***	***அதிபர்கள்***
பாடசாலை மட்ட வாண்மை விருத்திச் செயற்பாடுகளையும்' (SBPTD - School Based Professional Teacher Development) பாட அபிவிருத்திக்குரிய தரவட்டங்களையும் நடாத்துதல்.	100%	100%
ஆசிரியர்களுக்கு மேலதிக பாடச் சுமைகளை குறைத்தல்.	100%	100%
Bi-Annual Workload Audit இனை வினைத்திறனுடன் செயற்படுத்தல்.	100%	100%
முகாமைத்துவம் சார் செயற்பாடுகளுக்கான உரிய நேரத்தையும் காலத்தையும் வழங்குதல்.	100%	100%
Regular one-on-one check-ins இனை பிரதி அதிபர்கள், பகுதித் தலைவர்களினூடாக செயற்படுத்தல்.	100%	100%
ஆசிரியர்களிடையே ஏற்படும் முரண்பாடுகளை பக்கச்சார்பின்றியும் சிறந்த தொடர்பாடலினூடாகவும் முகாமை செய்தல்.	100%	100%
தேவை ஏற்படின் ஆசிரியர்களுக்கான வழிகாட்டல் ஆலோசனையினை உரிய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொடுத்தல்.	100%	100%
தனிநபர் விருப்பு, வெறுப்பு மற்றும் இயலுமை என்பற்றிற்கேற்ப பணிகளை பகிர்ந்தளித்தல்.	100%	100%
SWOT பகுப்பாய்வு முறையை பின்பற்றுதல்.	100%	100%
Eisenhower Matrix முறையினை முறையாக பின்பற்றுதல்.	100%	100%

இதன்படி மேற்குறிப்பிட்ட ஆலோசனைகளை ஆய்வு மாதிரிகள் முழுமையாக ஏற்றுக்கொள்கின்றனர் என துலங்கல்கள் வெளிக்காட்டுகின்றதனடிப்படையில் சிறப்பு நோக்கம் மூன்றின்படி ஆசிரியர்கள்

எதிர்நோக்கும் தொழில்சார் மன அழுத்தத்தினை குறைப்பதற்கு அதிபரினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளை மேம்படுத்த வேண்டும் என இனங்காணப்பட்டுள்ளது.

9. முடிவுகளும் விதப்புரைகளும்

பாடசாலைகளில் ஆசிரியர்களின் தொழில்சார் அழுத்தத்திற்கான காரணங்கள், அதிபர்களினால் ஆசிரியர்களின் தொழில்சார் மன அழுத்தத்தை குறைப்பதற்கான செயற்பாடுகள், அதனை வினைத்திறனாக மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் போன்றவற்றை இனங்காணும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வினூடாக பின்வரும் முடிவுகளும் விதப்புரைகளும் பெறப்பட்டன.

9.1 முடிவுகள்

ஆய்வினுடைய முடிவுகளாக 81.5 சதவீதமான ஆசிரியர்கள் தொழில் ரீதியான மன அழுத்தமுடையவர்களாக காணப்படுகின்றனர். இவர்களுள் 43.6 சதவீதமான ஆசிரியர்கள் அதிகளவான தொழில்சார் மன அழுத்தமுடையவர்களாகவும் 37.9 சதவீதமான ஆசிரியர்கள் குறைந்தளவு தொழில்சார் மன அழுத்தமுடையவர்களாகவும் காணப்படுகின்றனர். அதற்கான காரணங்களாக உள்ளக முரண்பாடுகள், மாணவர்களிடையே முறையற்ற செயற்பாடுகள் மற்றும் நடத்தைகள் காணப்படுதல், மாணவர்களின் கற்றல் தொடர்பாக பெற்றோரின் எதிர்பார்ப்பு அதிகமாக காணப்படுதல், வினைத்திறனற்ற உள்ளகத் தொடர்பாடல், அதிபர்களுக்கு ஆசிரியர்களின் உளநலம் தொடர்பான போதிய கவனமின்மை, பாடசாலை மட்ட வாண்மை விருத்திச் செயற்பாடுகள் மற்றும் பாட அபிவிருத்தித் தரவட்டச் செயற்பாடுகள் குறைவு, முறையான முரண்பாட்டு முகாமைத்துவமின்மை போன்றவை கண்டறியப்பட்டுள்ளன.

9.2 விதப்புரைகள்

ஆய்வினுடைய விதப்புரைகளாக பாடசாலை மட்ட வாண்மை விருத்திச் செயற்பாடுகளையும் (SBPTD - School Based Professional Teacher Development)பாட அபிவிருத்திக்குரிய தரவட்டங்களையும் முறையாக நடாத்துதல், முறையான முரண்பாட்டு முகாமைத்துவத்தினை பின்பற்றல், Bi-Annual Workload Audit இனை வினைத்திறனுடன் செயற்படுத்தல், ஆசிரியர்களுக்கான Regular one-on-one check-ins இனை பிரதி அதிபர்கள், பகுதித் தலைவர்களினூடாக செயற்படுத்தல், SWOT பகுப்பாய்வு முறையை பின்பற்றுதல், Eisenhower Matrix முறையினை முறையாக பின்பற்றுதல், தேவை ஏற்படின் ஆசிரியர்களுக்கான வழிகாட்டல் ஆலோசனையினை உரிய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொடுத்தல் போன்றனவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

உசாத்துணைகள்

அருண், அ., நிதூர்~h, ஜெ., ரூ கஜவிந்தன், க. (2018). பாடசாலை ஆசிரியர்கள் எதிர்நோக்கும் தொழில்சார் மன அழுத்தம் ஓர் ஆய்வு (மன்னார் மாவட்டத்தின் மடு கல்வி வலயத்தை அடிப்படையாக கொண்டது). 248.56.27. https://doi.org/978-955-0585-11-3.

கமலநாதன், தி. (2009). கல்வியியற் பதிவுகளும் பண்புசார் விருத்தியும், சேமமடு புத்தகசாலை, யுஜி.50, பீப்பள்ஸ் பார்க், கொழும்பு - 11.

செல்வராஜா, மா. (2016). பாடசாலை முகாமைத்துவம் இலகு அணுகுமுறைகள், எவகிறீன் அச்சகம், திருமலை வீதி, மட்டக்களப்பு.

Chathuranga, M.M.N. and Wijesooriya, R.M.R. P. (2021). Job Stress and Organizational Level Factors: Sri Lankan Experience. *Research and Review: Human Resource and Labour Management*, 2(2). doi: https://doi.org/10.46610/rrhrlm.2021.v02i02.004.

Chen, B., Wang, L., Li, B. and Liu, W. (2022). Work stress, Mental health, and Employee Performance. *Frontiers in Psychology*, [online] 13. doi: https://doi.org/10.3389/fpsyg.2022.1006580.

EP, *Wickramasinghe*., R DE A, *Seneviratne*., NS, *Gunawardana*., A, *Sumathipala*. and CD, *Mallen*. (2022). Prevalence of Occupational Stress among Secondary School Teachers in Public Schools in the District of Colombo, Sri Lanka. *Research in Health Science*, 7(3), p.p12. doi: https://doi.org/10.22158/rhs.v7n3p12.

Fauziah, S.E., Suryadi, S. and Zulaikha, S. (2021). The Role of Principal Leadership and Work Stress on Teacher Work Commitment. *AL-ISHLAH: Jurnal Pendidikan*, 13(1), pp.707–714. doi: https://doi.org/10.35445/alishlah.v13i1.562.

Gloria et el (2024). Principals' Stress Management Techniques As Correlates Of Teachers' Task Performance In Public Secondary Schools In Anambra State, Nigeria. *Educational Administration: Theory and Practice*. [Online] doi: https://doi.org/10.53555/KUEY.V30I5.7427.

Grissom, J., Loeb, S. and Mitani, H. (2015). Principal Time Management Skills: Explaining Patterns in Principals' Time Use, Job Stress, and Perceived Effectiveness. *Journal of Educational Administration*, [online] 53(6)(53(6)), p.773. Available at: https://cepa.stanford.edu/content/principal-time-management-skills-explaining-patterns-principals-time-use-job-stress-and-perceived-effectiveness.

Johnson, A. B., Lee, C. F., & Patel, D. R. (2020). *The global crisis of teacher burnout: A systematic review of stressors and organizational responses*. Educational Leadership Quarterly, 45(3), 112-135.

Manjeet Kaur, Rekha Khosla and Masood Siddiqui (2024). Impact of Job Stress on Psychological Well-Being of Teachers. *International Research Journal on Advanced Engineering and Management (IRJAEM)*, 2(03), pp.504–515. doi: https://doi.org/10.47392/irjaem.2024.0071.

Suailo, A. (2025). Relationship Between Principal Leadership Style, Work Stress And Teacher Work Motivation S D Cluster 3, Nusaniwe District, Ambon City I. Background. [online] 27, pp.55–61. doi: https://doi.org/10.9790/487X-2704045561.

Thineskumar, P. and Beevi, S. (2024). WORK LIFE BALANCE FACTORS INFLUENCING ON JOB ENGAGEMENT OF TEACHERS IN GOVERNMENT SCHOOLS IN BATTICALOA ZONAL EDUCATION. [online] 3(1), pp.16–30. Available at: https://www.seu.ac.lk/jhrm/publication/volume3/no1/Paper02.pdf

******